சைவப்புலவர் சு. செல்லத்துரையின்

# கலையும் வாழ்வும்




திருமதி சிவகாமசுந்தரி செல்லத்துரையின்
ஐந்தாவது ஆண்டு நினைவு நூல்



வெளியீடு
தெல்லிப்பழை - கலை இலக்கியக் களம்
03.07.2015

சைவப்புலவர் சு. செல்லத்துரையின்

# கலையும் வாழ்வும்

சைவப்புலவரின் கலைப்படைப்புகளுடன்
அவரைப் பற்றிய பன்முகப் பார்வை நூல்.

தொகுப்பாசிரியர்கள்

திருமதி கோகிலா மகேந்திரன்

திருமதி இராஜி கெங்காதரன்

துணைவியார் சிவகாமசுந்தரியின்
ஐந்தாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடு
03. 07. 2015

# காணிக்கை

சிந்தையினில் நிறைந்திருக்கும்
சிவகாமி! உமையிழந்து
ஐந்தாண்டு காலமின்று
அரைநொடிபோல் கழிந்ததுவே

ஆண்டுக்கு ஒருமலராய்
அகத்துணர்வை நூலாக்கி
ஆண்டாண்டு தோறும்உன்
அடியில்வைத்துப் போற்றிடுவோம்

கலைஇலக்கியக் களம்இந்த
**கலையும்வாழ்வும்** எனும்நூலை
நிலையாத எம்வாழ்வு
நிலைக்கவெனத் தந்திட்டார்

ஐந்தாவது மலராயுன்
அழியாத நினைவேடாய்
இந்தநூற் காணிக்கை
இன்றுசெய்தோம் இதில்வாழ்வீர்

செயற்கரிய இச்செயலைச்
செய்திட்ட கலைக்களத்தை
அயராது என்னாளும்
அகமகிழ்ந்து போற்றிடுவோம்

மக்கள்
செ. நாவரசன்
செ. மாவிரதன்
குடும்பத்தினர்

கணவர்
சு. செல்லத்துரை
2015.07.03

# சமூகநலன் பேணும் சான்றோனுக்கு வாழ்த்து

திருமதி. சாந்தி நாவுக்கரசன்
செயலாளர்,
நிதி இராஜாங்க அமைச்சு.

பிறருக்குச் சேவை செய்வதே பிறவி எடுத்ததன் பயன் என்பார்கள். நாட்டுக்காக ஊருக்காக தங்களை அர்ப்பணித்துச் சேவை செய்யும் மகான்களும், ஞானிகளும், அறிஞர்களும், தலைவர்களும் நம் நாட்டில் ஏராளமாக வாழ்ந்திருக்கிறார்கள்.

அந்தவரிசையில், ஒருவர் நம் கண் முன்னால் வாழ்ந்து கொண்டிருக்கும் எமக்கெல்லாம் கலங்கரை விளக்கமாக, ஊரின் நடுவே பயன்தரு விருட்சமாக விளங்கும் கலாபூஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள் என்றால் மிகையாகாது.

நம்மிடையே பன்முக ஆளுமையாளராகச் சான்றோராகத் திகழ்பவர். இளவாலை காடிவளை கிராமத்தில் இவர் வந்துதித்தது நாம் செய்த பெரும் பாக்கியமே. இளவாலை மெய்கண்டான் பாடசாலையில் அதிபராகப் பணிபுரிந்து, புகழ் பூத்து விளங்கி இன்றுவரை தொடர்ந்து சமூக நலன் கருதிப் பணிபுரிகிறார். தன் மாணவர்களைக் கல்வி கேள்விகளில் சிறக்க வைத்தது மட்டுமன்றி அறநெறிப் பண்புகளோடும் வாழ்பவர்களாக உருவாக்கினார்.

ஆலயத்தில் சிறுவர்களாக நாம் இருந்த காலத்தில் எமக்குச் சமய விழுமியங்களை ஊட்டி, பேச்சாற்றலையும் ஊக்குவித்து உயர்வடையச் செய்தார். மனம், வாக்கு, காயம் என்பவற்றால் தூய்மையான செயற்பாடுகளைக் கொண்டவராக வாழ்ந்து சிறப்பதற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார்.

இன்று நான் உயர் பதவி வகித்துப் பண்போடும் சிறப்போடும் மிளிர்வதற்கு நல்லாசானாகிய கலாபூஷணம், சைவப்புலவர் செல்லத்துரை ஐயா அவர்களின் வழிகாட்டல்தான் காரணம் என்று கூறிக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன்.

“மனிதர்களாகப் பிறந்தவர்களுக்கு எவ்வளவோ பாக்கியங்கள் உண்டு, எல்லாப் பாக்கியங்களுக்கும் மேலான பாக்கியம் பிறருக்குச் சேவை செய்வதே” என்பது காஞ்சிப் பெரியாரின் கூற்று. அக் கூற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்த அவரது வாழ்வு, அவர்தன் மனையாளைப் போற்றி இனிதே நடத்திய இல்லறம், என்றும் இணைந்தே செயற்பட்ட பாங்கு அனைத்தும் எமது வாழ்வுக்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன.

அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராகக் கொளல்

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப அவரைப் பேணி எம்முடைய வராய் எண்ணிப் பெருமிதங் கொள்கின்றோம். அவர் நலமாக நீண்ட காலம் வாழவும் அவரது அறிவொளியால் நம் சமூகம் மேலும் பயன்பெறவும் இறைவன் அருள் வேண்டி இப் பவளவிழாவின் போது மனம் நிறைந்து வாழ்த்துகிறேன்.

# பதிப்புரை

கலாபூஷணம் திருமதி. கோகிலா மகேந்திரன்
திருமதி. இராஜி கெங்காதரன்
இணைச் செயலாளர்கள்,
தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம்.

டயோஜீன்ஸ் என்ற கிரேக்க தத்துவஞானி துருக்கி நாட்டின் சினப் நகரில் பிறந்தவர். பகல் நேரத்தில் கையில் விளக்குடன் எதையோ தேடுவது அவரது இயல்பு. ஏன் பகல் நேரத்தில் கையில் விளக்குடன் நிற்கின்றீர் என்று கேட்பவர்களுக்கு "நான் நேர்மையான மனிதர்களைத் தேடுகின்றேன்" என்பதே அவரது பதில்.

ஆங்கிலக் கவிஞர் பைரன் ஒருமுறை உரை ஆற்றும் போது "மனிதர்களின் சிறுமையை நினைத்து உணர்ச்சிவசப்பட்டு "ஏ நாய்களே" என்று கூறிவிட்டாராம். உடனேயே மனிதரைவிட நாய் பண்பின் உயர்ந்தது என்று தெளிந்து. "ஏ மனிதங்களே" என்று மாற்றிக் கொண்டாராம்.

திருவொற்றியூர் நெல்லிக்காய்ப் பண்டாரத் தெருவில் ஒரு சித்தர் வசித்து வந்தார். ஒரு நாள் அவர் தனது வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். வீதியில் பலர் போய்வந்து கொண்டிருந்தார்கள் அதைப் பார்த்து அவர் "பாம்பு போகிறது, தேள் போகிறது, புலி போகிறது, நரி போகிறது, நாய் போகிறது" என்று முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அப்போது அந்த வழியால் வள்ளலார் வந்தார். அவரைக் கண்ட சித்தர், "இதோ ஒரு மனிதர் போகிறார்" என்றாராம்.

மேலே சுட்டப்பட்ட மூன்று சம்பவங்களும் வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலப்பகுதியில் நடந்தவை. ஆயினும் மனிதர்களுக்குள்ளே மனிதர்களை மிக அருமையாய்த் தேடவேண்டி இருக்கும் நிலையை எடுத்துச் சொல்பவை.

இந்த நூற்றாண்டில் உலகமயமாதல், தொழில்நுட்ப வளர்ச்சி, அறிவு விரிவாக்கம் ஆகியவற்றின் விளைவாக மனிதத் தேவைகள் அதிகரிக்க அதிகரிக்க உலகம் முழுவதும் பொருளாதார மையச் சிந்தனையும், சுயநலமும் மனித மனங்களை ஆட்டிவைக்கும் முக்கிய கருப்பொருள்கள் ஆகிவிட்டன. உலகில் பொதுவாகவும், நீண்ட கால அனர்த்தத்தின் பின் மீண்டெழ முனையும் எமது சமூகத்தில் சிறப்பாக வும் சான்றோர்களைக் காண்பது அரிதிலும் அரிதாகி விட்டது.

தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களத்தலைவர் சைவப்புலவர் கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் ஒரு சான்றோன் என்பதை அனைவரும் ஒரு மனதாக ஒப்புக்கொள்வர். பலமான மனச் சாட்சியுடன் நேர்மையாக வாழும் மனிதர்களின் வாழ்வுப்பணி பற்றிய விபரங்கள் எழுத்தில் ஆவணப்படுத்தப்பட வேண்டும். எதிர்கால சந்ததி அதைத் தேடித் திரியும்.

தமது வாழ்வில் வெற்றி பெறுகின்ற மனிதர்கள் அனைவரிலும் காணப்படும் பொதுப் பண்புகள் என்று உளவியல் சிலவற்றைக் கூறும். "தான் வேறு யாரையும் போல ஆக வேண்டும் என்ற அவா இன்றித் தான் தானாக இருத்தல்" அவற்றில் ஒன்று எமது தலைவரின் நடை, உடை, பாவனை, எண்ணம், உணர்வு, நடத்தை ஆகிய வற்றைக் கூர்ந்து அவதானிப்போர் இந்தப் பண்பு அவரிடம் சிறப்பாக அமைந்திருப்பதை ஏற்றுக் கொள்வர். தனது சொந்தத்திறன்களை விருத்தி செய்து கொள்ளல், எந்தக் காரியத்தை ஆற்றத் தொடங்கும் போதும் நேரான சக்தியை வெளிப்படுத்தல், மற்றவர்களின் கருத்துக்களுக்கு மதிப்புத் தந்து செவிமடுத்தல், வாழ்வில் எப்போதும் உரு ஒழுங்கைப் பேணுதல், சூழலுடனும் மற்றைய மனிதர்களுடனும் இயைந்து போதல், தனது செயற்பாடுகளுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்ளல், இலக்குகளில் தெளிவாக இருத்தல் என்று வெற்றி பெறும் மனிதர்களின் வேறு பல பண்புகளும் கூட இவரிடம் ஒருங்கே பொருந்தி அமைந்திருக்கக் காணலாம்.

ஆகவேதான் இவரது வாழ்க்கைக் கோலமும் கலைக்கோலமும் நூல் வடிவம் பெற வேண்டும் என்று நாங்கள் விடாப்பிடியாக நின்றோம். அவர் அதிகம் விரும்பாத போதும், நாமே கட்டுரையாளர்களை அணுகிக் குறித்த தலைப்பில் எழுதி உதவுமாறு பணிவுடன் வேண்டி நின்றோம். எம்மோடு ஒத்துழைத்து வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துப் பாக்கள், கட்டுரைகள் தந்துதவிய அனைவருக்கும் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த மலரின் கலைக் கோலம் பகுதி இதுவரை நூல்வடிவம் பெறாத அவரது கலைப் படைப்புக்கள் சிலவற்றைத் தாங்கி வருகிறது. அவை எல்லாமே அரங்கில் ஆற்றுகை செய்யப்பட்ட படைப்புக்கள். சிலவற்றை ஆசிரியரே நெறியாள்கை செய்துள்ளார். சிலவற்றை வேறு கலைஞர்கள், நெறியாள்கை செய்தனர். ஆரம்ப காலத்தில் அழிந்துவிட்ட போதிலும் இருப்பவற்றைப் பேணும் முயற்சியாக இது அமைகிறது. மலருக்கு அணிந்துரை வழங்கியுள்ள பேராளர் ஆர்.எஸ். நடராஜா அவர்களுக்கும் எமது நன்றி உரியது.

இந்த மலரை வெயிடுவதில் தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் பெருமை கொள்கிறது. திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினம் அநுட்டிக்கப்படும் காலத்தில் இம்மலர் வெளிவருவது சாலப் பொருத்தமானதாக அமைகிறது.

# அணிந்துரை

ஆர்.எஸ்.நடராசா
M.A., P.G.D.E., S.L.E.A.S
ஓய்வுநிலை அதிபர்
பலாலி ஆசிரிய கலாசாலை

கலாபூஷணம், சைவப்புலவர் திரு.சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்களின் பண்பும் பணியும் பற்றிய வரலாற்றுப் பதிவாக அவரது பவளவிழா வெளியீடாகத் தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தி னரால் வெளியிடப்பட்டுள்ள இந்நூல் தமிழர் பண்பாட்டுச் செழுமைக்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளமை உள்ளுதோறும் உவகை தரும் பணியாகும்.

''பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'' என்னும் தமிழ்மறையின் அருளுரைக்கமைய யாழ்ப்பாணப் பிரதேசத்தில் உரிமைப்போர் உக்கிர மடைந்து கொண்டிருந்த சூழலில் 1985ஆம் ஆண்டில் ஆன்றவிந்தடங்கிய கல்விச் சான்றோர் சிலரின் அறிவாற்றலால் உதயமானதே தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களமாகும். இது இலக்கியக் களத்தில் முன்னணியில் கலையரசு எ.ரி.பொன்னுத்துரை, அநு.வை.நாகராஜன், பேராசிரியர் சுப்பிரமணிய ஐயா, பண்டிதர் சி.அப்புத்துரை, சைவப்புலவர் சு.செல்லத்துரை, திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி இராஜி கெங்காதரன் முதலானோர் அயராது செயற்பட்டுள்ளனர். இவ்விலக் கியக்களத்தினர் முத்தமிழ் எழுச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளனர் எனினும் நாடகத் தமிழ் இலக்கியமே அதிக எழுச்சியுள்ள துறையாகத் துலங்கியது.

இவ்விலக்கியக் களத்தின் பணிக்காலத்தில் பவளவிழாக்காணும் பேராளருக்குப் பவளவிழா எடுப்பதைக் இக்களத்தார் செயல்படுத்தி வருவது தமிழ் இலக்கிய எழுச்சிக்கும் அதன் நீட்சிக்கும் பெரும் பங்களிப்பாகும். இத்தொடர்பணியின் பேறாக கலாபூஷணம் சைவப் புலவர் திரு.சு.செல்லத்துரை அவர்களின் **கலையும் வாழ்வும் நூல** வெளியிடப்பட்டுள்ளது.

இப்பவளவிழா நாயகரோடு அரை நூற்றாண்டுக்கு மேலாகப் பழகிப் பயன்பெற்று, எனது அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ள இறை அருள் கிடைத்தது.

எனது பட்டறிவும் உய்த்துணர்வும் கொண்ட என்மதிப்பீட்டில் இந்நூல் நாயகர் **கல்விச் செல்வத் துரை** என்றே எனது, மனதில் பதிவாய் உள்ளது. கற்பவை கற்றுக் கல்விச் செல்வத்தைப் பெற்றதால் வாக்கும் வாழ்வும் ஒன்றிக்க வாழும் கலைவல்லாளரானார். இறையருளால் இலங்கு நூல்கற்றுத் துலங்கியதே அவரது கல்வி வரலாறு.

தெய்வப்புலவர் திருவள்ளுவரின் கல்விக்கோட்பாட்டின் படியும் நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமானின் கல்விக் கோட்பாடுகளையும் செயற்பாடுகளையும் ஐயந்திரிபற ஏற்றுப்போற்றுபவராகவும், அகிம்சாமூர்த்தி அண்ணல் காந்தி அடிகளின் வாரதா கல்விக் கோட்பாட்டை வரித்துக்கொண்டவராயும், வீரத்துறவி விவேகானந்தரின் கல்விக் கருத்துக்களை உவந்து ஏற்றவராயும், இரவீந்திரநாத் தாகூரின் இயற்கையோடு இணைந்த இன்பக்கல்விச் சூழலை ஏற்றவராயும்

**''அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு ஐந்துசால்பு ஊன்றிய தூண்''** என உருவானதே சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களின் சீரிய ஆளுமையாக முகிழ்த்தது. அதனால் விளைந்தது நடுவூரில் நற்கனிமரமாய் பயன்தரும் அவரது வாழ்வியல் காப்பியம்.

இளமைக்காலத்தில் இவர் தனது சமூக இளைஞருக்குத் தன்னலம் மறுத்த தலைவராகத் திகழ்ந்துள்ளார். இவரது கலை இலக்கிய உள்ளார்ந்த திறன்கள் அவர் சொந்தக் கிராமத்தில் விருத்தியடைய ஆரம்பித்தன. குறிப்பாக நாடகத்தமிழ் அவரது முன்னுரிமை பெற்ற உந்தலாயிருந்தது. பற்பல வேடங்களில் நடித்துப் பாராட்டப் பட்டுள்ளார். ஏற்று நடித்த கதாபாத்திரங்கள் எழுதி, இயக்கி மேடை ஏற்றிய நாடகங்கள் அத்தனையும் சமூகநலன் பிரசார ஆற்றுகைகளாகவே அமைந்தன. அவர் ஆசிரியராய் அதிபராய் இருந்த காலங்களிலும் இவரது நாடகத்துறை ஆர்வம் புதிய பரிமாணங்களைப் பெற்றுப் பெரும்பயன் நல்கின.

இளவாலையில் இவரது வீடு எனது வீட்டிலிருந்து ஏறக்குறைய நூறு மீற்றர் தூரத்திலுள்ளது. இளவாலைக் கிராம, சைவசமய சமூக நிகழ்வுகளில் இருவரும் சந்தித்தோம். கல்வி, சமயம், சமூகம், தேசியம் பிரச்சினைத்தீர்வு பற்றி ஒரே மேடைகளில் பேசியுள்ளோம். நான்

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலையிலும் பலாலி ஆசிரிய கலா சாலையிலும் பணியாற்றிய காலத்தில் இவரை ''நல்லாசிரியர்'' என ஆசிரிய மாணவருக்கு எடுத்துக் கூறும் அளவுக்கு நான் இவரை இவரது கல்வி சமய சமூகப் பணிக்காக சிறப்புக்காக வாழ்த்தி மகிழ்ந்துள்ளேன்.

'' நீ இருக்கும் இடத்தினை நீ அந்த இடத்துக்கு வரும்போது இருந்ததைவிடச் சிறந்த இடமாக்கி விட்டுச்செல், என்பது ஒரு நயத்தக்க சமூகக் கோட்பாடாகும். இவர் பணியாற்றிய பாடசாலைகளின் வர லாற்றுப்பதிவுகள் மேற்கூறிய கோட்பாட்டினை எவ்வாறு கடைப் பிடித்துள்ளார் என்பதை இந்நூல் நன்கு விளக்கக் காணலாம்.

இந்நூலை வாசிக்க வரம்பெற்றோர் இத்துணை ஆற்றல் இவ ருக்கு உள்ளவரா இப்பவளவிழா நாயகன் சைவப்புலவர் சு.செல்லத்துரை என ஆச்சரியப்படவும் கூடும். என் மதிப்பீட்டில் பொய்யும் இல்லைப் புனைந்துரையும் இல்லை.

இந்நிலைக்கு இவர் உயர இவருக்கு உறுதுணை இருந்துள்ளது என்பதனை

*''ஏர்கொண்டு முன்னே செல்ல*
*எருக்கொண்டு பின்தொடர்ந்த*
*சீர்கொண்ட நாயகி சிவகாமசுந்தரி*
*செய்த பெருந் தொண்டால்*
*நேர்கொண்ட வாழ்வு நிறைவாகி*
*நீடு நிலைத்து நிற்கப்*
*பேர்கொண்டார் பேறு பெற்றார்*
*பெரும்பயனைப் பெற்றோமே''* என்பேன்

இந்நூலை ''ஆசான் செல்லத்துரை ஆற்றுப்படை'' எனக் கொள் ளுவதே எனது ஒட்டுமொத்த மதிப்பீடாகும். நல்ல மனிதராய் வாழ நாட்டம் கொண்டோர் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உயரிய உலக வாழ்வு வாழத் துணிவு பெறக் கலாபூஷணம் சைவப்புலவர் செல்லத்துரையின் பவளவிழா மலரைப் படித்துப் பயன்பெறுவீராக.

வாசிப்பீர் வளம் பெறுவீர்.

*30-5/3 நெல்சன் இடம்*
*வெள்ளவத்தை, கொழும்பு -06*
*112587376, 0729755528*

# சைவப்புலவர் சு.செல்லத்துரையின்
# கலையும் வாழ்வும்

## பொருளடக்கம்


1. காணிக்கை 02
2. வாழ்த்துரை 03
3. பதிப்புரை 05
4. அணிந்துரை 08
5. சான்றோர் கவியில் வாழும் சான்றோன்
   - i. கல்விச் செல்வத்துரை 14
     *ஆர்.எஸ்.நடராசா அவர்கள்*
   - ii. பழுத்த தமிழ்ப் பற்றாளன் 15
     *புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள்*
   - iii. நாலும் அறிந்த குரு 16
     *காப்பியக்கோ ஜின்னா செரிபுதீன் அவர்கள்*
   - iv. தவமாக வாழ்கின்ற புனிதன் 18
     *குறிஞ்சி நாடன் கி.வெள்ளைச்சாமி அவர்கள்*
   - v. நெறிபிறழா வாழ்வினுக்கோர் இலக்கணம் 22
     *பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் அவர்கள்*
   - vi. மங்கல வாழ்த்து 24
     *பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள்*
   - vi. எந்தையே குருவே வாழி 25
     *செல்லத்துரை நாவரசன் அவர்கள்*
   - viii. கோமாதா நல்கும் குஷி 26
     *கலாநிதி மு.கந்தையா அவர்கள்*


### கலைக்கோலம


6. அரங்கக் கலைகள்
   - i. உரை நாடகங்கள் 28
   - ii. இசை நாடகங்கள் 52
   - iii. நாட்டிய நாடகங்கள் 70
   - iv. சிந்து நடைக்கூத்துக்கள் 96
   - v. இசையும் கதையும் 108
   - vi. வில்லிசைகள் 122
   - vii. கலைப்படைப்புக்கள் 146

## வாழ்க்கைக் கோலம்


7. மரபுவழிக் கல்வியை நிறைவிக்கும் ஆளுமை வடிவினர் 150
*பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள்*

8. மாநிலத்தோர் மகிழ்ந்தேத்தும் ...... 156
*இசைக்கலாவித்தகர் ந.ஸ்ரீராம்குமார் அவர்கள்*

9. ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோன் 162
*சித்தாந்தரத்தினம் சா.பொன்னுத்துரை அவர்கள்*

10. சைவநெறி வாழ்வும் பணிகளும் 168
*சைவப்புலவர் கிருபாதேவி வீரசிங்கம் அவர்கள்*

11. அரங்கை ஆண்டவர் 172
*கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் அவர்கள்*

12. சொல்லும் வில்லும் 190
*திருமதி வானதி காண்டீபன் அவர்கள்*

13. மாண்புறு மனையாள் சிவகாமசுந்தரி 200
*திருமதி இராஜி கெங்காதரன் அவர்கள்*

14. வெல்லத்தமிழ் பேசும் செல்லத்துரை 206
*மேழிக்குமரன் க.க.அருந்தவராசா*

15. ஊருக்கெல்லாம் உறவுக்காரர் 214
*திரு. எஸ். யு. சந்திரகுமாரன் அவர்கள்*

16. சைவப்புலவர் சங்கப்பணியில் 218
*சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்*

17. இலக்கியக்களத்தை இயக்கும் இணையற்ற தலைவன் 221
*திருமதி இராஜி கெங்காதரன் அவர்கள்*

18. ஆன்மீக அறிவு புகட்டும் நல்லாசான் 229
*சைவப்புலவர் செ.நவநீதகுமார் அவர்கள்*

19. மங்கல மனைமாட்சி உடைய சைவப்புலவர் சிவகாமசுந்தரி தம்பதியர் 232
*சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன் அவர்கள்*

20. நூல் ஆக்கங்கள் 234

21. இணைந்து பணிசெய்த சமய சமூக நிறுவனங்கள் 239

# செல்லத்துரை சிவகாமசுந்தரி



மலர்வு - 1944.03.24 உதிர்வு - 2010.07.03


தொட்டிலிலே பாற்பசுவும்
    தோட்டத்தில் விளைபொருளும்
தொட்டியிலே நெற்குவையும்
    தொலையாத துணிமணியும்
அட்டிலில் பால் தயிர் நெய்யும்
    அடையா நெடுங்கதவும்
இட்டமுள்ள தாயே உன்னோடு
    இலட்சுமீகரமும் போய்
வெட்ட வெளியாயினவே
    வெறுங் கையாய்ப் போனோமே



கட்டுடலும் கலையாத பட்டுடையும் பரிமளிக்க
இட்டமுள்ள கணவனுடன் இனிதாக உலாவி வந்து
பொட்டுடனும் பூவுடனும் புன்னகையின் பொலிவுடனும்
பட்டெனவே உயிர்துறந்தாய் பத்தினிநீ பாக்கியவதி



செல்லத்துரை சிவகாமசுந்தரி தம்பதியரின்
மூத்தமகன் - நாவரசன்
மருமகள் - சுரேகா
மூத்த பேரன் - நிலான்
இளைய பேரன் - சுகான்




செல்லத்துரை சிவகாமசுந்தரி தம்பதியரின்
இளையமகன் - மாவிரதன்
மருமகள் - பிரகாஜினி
மூத்த பேர்த்தி - அட்சயா
இளைய பேர்த்தி - சிவகர்சா
பேரன் - அபிலோசன்




2005 இல் இந்து கலாசார அமைச்சு நடத்திய சேக்கிழார் மாநாட்டில்
"சிவநெறிப் புரவலர்" எனும் பட்டத்தையும் விருதினையும்
குருமகா சந்நிதானம் வழங்கும் காட்சி



2005 இல் இந்து கலாசார அமைச்சு நடத்திய சேக்கிழார் மாநாட்டில்
"சேக்கிழார் வாக்கில் கோமாதா" எனும் சொற்பொழிவுக்கு மகிழ்ந்து போரூர்
ஆதீன முதல்வர் கௌரவிக்கும் காட்சி



2013 தை மாதம் திருவாவடுதுறை ஆதீனத்தில் 23 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் சைவத்திருமுறை விரிவுரையாளராகக் கௌரவித்து ஆசி வழங்கும் காட்சி



2014 தை மாதம் திருவாவடுதுறை ஆதீனத்தில் 24 ஆவது குருமகா சந்நிதானம் அவர்கள் சைவசித்தாந்த விரிவுரையாளராகக் கௌரவித்து ஆசி வழங்கும் காட்சி



இணுவில் மத்திய கல்லூரியில் 2014 இல்
தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம் நடாத்திய
சிறுகதைப் பட்டறையில் தலைமையுரையாற்றும் காட்சி



சுகவாழ்க்கைப் பேரவையின் சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரனின்
"புற்றுநோய் தவிர்ப்போம்" நூல் வெளியீட்டு விழாவில் தலைமை தாங்கி
மங்கல விளக்கேற்றல் - 2015



இராமாயண நாடகத்தில்
தசரதர்



இளவாலை இந்து இளைஞர்
சங்க தனிநடிப்புப் போட்டியில்
பரிசு பெற்ற தரகர் சிவகாமி



மன்னார்க் கலா மன்றத்தின்
"சிதைந்த சிலை நாடகத்தின்"
நெறியாளர் சு. செல்லத்துரையும் ஒப்பனையாளர் மாட்டீன் மாஸ்ரரும்
பெண் நடிகர் தட்சணாமூர்த்தியும்.

# சான்றோர் கவியில்

# வாழும் சான்றோன்

i. கல்விச் செல்வத்துரை
**ஆர்.எஸ்.நடராசா அவர்கள்**

ii. பழுத்த தமிழ்ப் பற்றாளன்
**புலவர் பார்வதிநாதசிவம் அவர்கள்**

iii. நாலும் அறிந்த குரு
**காப்பியக்கோ ஜின்னா செரிபுதீன் அவர்கள்**


iv. தவமாக வாழ்கின்ற புனிதன்
**குறிஞ்சி நாடன் கி.வெள்ளைச்சாமி அவர்கள்**

v. நெறிபிறழா வாழ்வினுக்கோர் இலக்கணம்
**பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் அவர்கள்**

vi. மங்கல வாழ்த்து
**பண்டிதர் சி.அப்புத்துரை அவர்கள்**

vi. எந்தையே குருவே வாழி
**செல்லத்துரை நாவரசன் அவர்கள்**

viii. கோமாதா நல்கும் குஷி
**கலாநிதி மு.கந்தையா அவர்கள்**



# கல்விச் செல்வத்துரை

ஆர். எஸ். நடராசா
MASIP, MED, SLEAS
(பலாலி ஆசிரிய கலாசாலை அதிபர் - ஓய்வு நிலை)

நல்லவரென்றும் வல்லவரென்றும்
கல்விப்புலத்தில் கலங்கரை விளக்காய்
அர்ப்பணிப்போடு அரும்பணி யாற்றிய
அதிபர் என்றே அனைவரும் போற்ற
உழைப்பால் உயர்ந்த உத்தமநண்ப!
சிறந்தஇடமாய் விட்டுச்செல் என்ற
சீரிய குறிக்கோள் சிறந்திடச் செய்தனை
அதிபரின் ஆளுமைச் சிறப்பால் மெய்கண்டான்
அடைந்த வெற்றிகள் அளவில என்பதை
அறிதற்கு ஆய்வுகள் அவசியமின்றி
ஊரும் உலகும் உணரும் வகையில்
மாணவர் 'முழுஅபிவிருத்தி' பெற்று மகிழ்ந்து
வாழவழி செய்த வள்ளல் நீரே
என்பதால் வாழ்த்தி இன்புறுகின்றோம்
பிற்படுத்தப்பட்டோர் பிள்ளைகள் பெரிதும்
நற்பயன் பெற்றிட நாளும் உழைத்ததை
நயவாரிருப் பின்அவர் நன்றிகேட்டோரே
கண்ணியமாகக் கடமையைச் செய்தனை
எண்ணரும் சவால்களை எதிர்கொண்டு வென்றனை
பணியே அணியாய்ப் பணிசெய்து காட்டினை
வாக்கும் வாழ்வும் ஒன்றிக்க வாழ்ந்து
பாடசாலையே சிறந்த வீடென
மாணவர் மகிழ்ந்து மலர்ந்து பொலிந்திட
ஆசிரியரெல்லாம் அடியொற்றி நடக்க
மெய்த்தவம் செய்தனை மெய்கண்டான் ஒளிர்ந்து
நீடுவாழும் நின்புகழ் ஐயா! சேவையை
நாடுமறக்குமோ நல்ல அதிபரை
ஏடுபோற்றும் என்பது மெய்யே.

வணக்கம்!

# பழுத்த தமிழ்ப் பற்றாளன்

புலவர் ம. பார்வதிநாதசிவம்
செம்பியன் வீதி,
கொக்குவில்.

எழுத்தாலும் பேச்சாலும் என்றென்றும் தமிழ்தான்
ஏற்றமுற நன்றாற்றும் இதயத்தோய் நின்தன்
பழுத்ததமிழ்ப் பற்றாலே அரங்கத்தின் படையல்
படைக்கின்றாய் மனதார வாழ்த்துகின்றேன் நன்றே

இயலென்றும் இசையென்றும் நாடகமே என்றும்
என்றென்றும் அழகுசெயும் தமிழென்னும் பாவை
நயமுறவே பற்பலநூல் முன்படைத்ததேபோல்
நல்லரங்கப் படையலையும் நல்கினை நீவாழ்க

ஆசிரியத் தொழில் புரிந்த அக்காலம் முதலாய்
அதிபராய்த் தொழில் புரிந்த அக்காலம் வரையும்
பேசுமுயர் பெரும்பணிகள் முத்தமிழ்க்குச் செய்தாய்
பின்னுமதைத் தொடர்கின்றாய் வாழியவே நீடு

ஒண்டமிழ்க்குத் தொண்டு செய்வோர் உலகினிலே எந்த
மூலையிலே இருந்தாலும் அவர்தம்மை நாடிக்
கண்டவர்க்கு நன்றாற்றும் கண்ணியனே நின்றன்
கடும் உழைப்பும் பெரும்புகழும் என்றென்றும் வாழ்க

அன்பினுக்கு நீ ஒருவன் பசுவதையை நீக்கும்
அறத்தினுக்கு நீ ஒருவன் பழகுதற்கே இனிய
பண்பினுக்கும் நீ ஒருவன் என்பதனை அறிந்தே
பார்போற்றக் கண்டின்று நான் மகிழ்ந்தேன் நன்றே.

## வாழ்த்து

அருட்கவி
சீ.விநாசித்தம்பிப் புலவர்

சீர்பூத்த இளவாலை வாழும் சைவம்
திகழ் செல்லத் துரையென்னும் தெய்வசிந்தைத்
தார்பூத்த பண்பாளன் தமிழ் வல்லாளன்
சகம்பூத்த கற்பகமாய் வாழிவாழி

## நாலும் அறிந்த குரு

காப்பியக்கோ
ஜின்னாஹ் ஷரிப்புத்தீன்
பொதுச் செயலாளர்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

நல்லாரைக் காண்ப தெளிதில்லை இந்நாளில்
கல்வியிய லாளருள்ளுங் காண்பரில்லை - நல்லறிஞர்
செல்லத் துரைஐயா சீர்மை எடுத்துரைக்கச்
சொல்லில்லைச் செம்மொழியிற் றான்.

மனம்நோகப் பேசாதார் மூத்ததமிழ்ச் சான்றோன்
இனபேதம் நோக்காத ஏந்தல் - மனத்தூறும்
சத்தியத்தைச் சொல்லுதற்குந் தாமதியார் முள்ளகற்றும்
வித்தையிலும் வித்தகரே தான்.

நுண்மாண் நுழைபுலஞ்சீர் நுட்பவுயர் ஞானம்நற்
பண்பினுக்குஞ் சான்று பகர்தர்க்குரியார் - வெண்மனத்தார்
செல்லத் துரைஐயா சைவத்தமிழ்த் தொண்டாளர்
நல்லறிஞர் போற்றும் நபர்.

உள்ளம்போல் தூய உடைஐயா தோற்றமிளம்
பிள்ளைக் குணம்பொலிந்த புன்சிரிப்பு - எள்ளளவுங்
காழ்ப்புணர்வு கொள்ளாக் கடலொக்கும் பேருள்ளம்
தோழமைக்குந் தக்கபெரி யார்.

தளும்பாத நீர்ச்சுனைபோல் செம்மையவர் கொள்ஞானம்
அள்ளஅள்ளக் குன்றாப்பே ராழி - பழுத்தபழம்
கல்வி முதிர்ச்சியிலே கண்ணாம் தமிழவர்க்குச்
சொல்பிழையாச் செம்மலிவர்

எல்லோர்க்கும் ஆசான் எனக்குமவர் ஆசானென்
சொல்லில் வழுவுற்றால் தேடுவனே - கல்லகற்றிச்
சோறுபதஞ் செய்வதுபோல் சீராக்கி என்றமிழைப்
பாருவக்கச் செய்வதற்குத் தான்.

கற்ற தமிழைக் கற்க விளைவோர்க்குக்
கற்பித்துக் கற்பித்துக் களைகாணார் - சற்குருவாய்ச்
சேவைநலங் கொண்ட தருமத்தைக் கைக்கொண்டே
ஓய்வின்றி உழைக்குமுயர்ந் தோன்.

கற்பிக்கும் மேதமையில் கண்ட அநுபவத்தால்
கற்போர் தரமறிந்து கற்பிப்பார் - வெற்றிக்கு
வித்திட்ட கோன்மையினால் வெற்றிபெற்று வாழ்வியலில்
கொற்றமுற்றோர் பற்பலபேர் சீர்.

ஓதுவித்த கல்வியுயர் சந்ததி நன்னூல்கள்
ஈதனைத்தும் தர்மம் இறையோற்கும் - மேதினியில்
நீடுநாள் வாழ நிமலனருள் சேருதற்குக்
கூடுபவை ஐயா செயல்.

தேக நலமும் தெளிவான சிந்தனையும்
வாகா யிறையருள வேண்டும் - மீகாமன்
போலாவார் கற்கைப் படகுசீர் பெற்றோட
நாலும் அறிந்த குரு.

# தவமாக வாழ்கின்ற புனிதன்

கலாபூஷணம்
சைவப்புலவர் - சித்தாந்தரத்தினம்
''குறிஞ்சி நாடன்'' கி. வெள்ளைச்சாமி
பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஓய்வுநிலை

தித்திக்கும் செந்தமிழின் நாயகனே இன்றுனக்கு
எத்திக்கும் போற்றப் பவளவிழா - தித்திக்க
விண்ணவரும் பூப்பொழிந்து வாழ்த்திடவே இந்நாளில்
பண்ணிசையால் பாடுகின்றோம் பார்.
செந்தமிழைத் தேனாக்கிப் பேசுகின்ற பண்புடையீர்
நந்தமிழின் நாயகனே நாமருந்தச் - செந்தேனை
நாள்தோறும் தந்தெமக்கு நல்லாசி சொல்கின்ற
நாவலனே வாழ்த்துகிறோம் நாம்.

சுந்தரத் தமிழணங்கின் தூய திருமகனே!
செந்தமிழின் சுவையெல்லாம் சேர்த்துக் குழைத்தெடுத்து
மந்திரமாய்ப் பாடுகின்ற மாண்புள்ள கோமகனே!
மாதாவைப் பிதாவை மதியார்ந்த சோதரரை
எந்திரமாய்த் தானுழைத்து ஏற்றமுறச் செய்திட்ட
எழில் வேந்தே! குடும்பத்தைக் காத்திட்ட குலவிளக்கே!
அந்தரத்தில் வாழுகின்ற அனைவரும் சொந்தமென
ஆதரித்துக் கைகொடுககும் அற்புதனே வாழியென்றும்!

நெடிதுயர்ந்த திருமேனி நீலமணி வேங்கடன்போல்
நெற்றியிலே திருநீறு பட்டொளியாய்ப் பரிமளிக்கும்
நெடிமணக்கும் சந்தனமும் புருவத்தில் ஒளிவீசும்
நெஞ்சத்தில் அருட்கருணை கங்கைபோல் பெருக்கெடுக்கும்
மடிதவழும் வெண்வேட்டி மடிப்பகலா வெண்சட்டை
மார்பினிலே உத்தரியம் தான்விளங்க நிற்பதுடன்
கொடிசுற்றும் மரம்போல குலம்சுற்றத் தானிருந்து
குலம்காத்து நலம்காக்கும் கோமகனே வாழியென்றும்

தென்னையுடன் பலாமாவும் போட்டியிட்டுக் கனிவழங்கும்
தேனூறும் பொற்பதியாம் இளவாலைக் கிராமத்தில்
தொன்மைமிகு சைவக்கோயில்களும் உயர்ந்து நிற்கும்
தமிழ்மணமும் பண்ணிசையும் நாற்றிசையும் மணம்வீசும்
வண்மைமிகு சுப்ரமண்ய பத்தினிப்பிள் ளையர்க்கு
வாஞ்சையுடன் அவதரித்த நன்முத்தாம் செல்லத்துரை
நன்மகனாய் நாவலனாய் நாற்றிசையும் போற்றுகின்ற
பாவலனாய் பண்புள்ள திருமகனாய் வாழ்ந்திட்டார்

திருக்கோயில் பலசூழ்ந்து சைவத்தின் மாட்சியினை
திசையெட்டும் பரப்புகின்ற திருவூராம் இணுவிலிலே
கருக்கொண்ட திருமகளாம் சிவகாம சுந்தரியை
கைப்பிடித்து இல்லறத்தை நல்லறமாய் இனிதாக்கி
திருமுருகன் அருளாலே சீர்மலிர்ந்த புதல்வர்களாம்
நாவரசன் மாவிரதன் ஆகியோர் வந்தணைய
ஒருகுறையு மில்லாமல் ஊராரும் போற்றிடவே
உவப்புடனே சிவனடியைச் சிந்தித்து உயர்ந்திட்டார்

நாடுபோற்றும் நல்லாசிரியராய் அதிபராய்
மன்னார் தெல்லிப்பழை இளவாலை, கீரிமலை
காடுமலி மாங்குளம் பள்ளிகளில் பணியாற்றி
கற்றோரும் மற்றோரும் போற்றிடவே புகழ் பெற்றார்.
ஏடுகளும் எழிலான சேவையினை எடுத்துரைக்க
கவிஞனாய் நடிகனாய் நாடகாசி ரியனாய்
தேடற்கரிய திரவியமாய் திகழ்ந்திட்ட செல்வர்
சமூகத்தில் பணியாற்ற ஓய்வும் பெற்றார்

உடல்மண்ணுக்கு உயிர்சேவைக்கு என்றெண்ணி
இளைய சமுதாயம் கல்வியில் மேம்பட
கடலலைபோல் ஓய்வில்லாப் பணியாற்றி
கதிரவன் போல் அஞ்ஞான இருளகற்றி
கடகடென செல்லடிகள் விழுந்த போதும்
சளைக்காது தன்னிலைக் கிரங்காது நாளெல்லாம்
முடமாகும் சமூகத்தை உயர்த்த நெஞ்சின்
திடமோடு உழைத்திங்கு உயர்ந்து நின்றாய்

நிலையான வாழ்வினிலே நிலைத்து நின்று
நேர்மையுடன் தமிழ்மக்கள் தினமும் வாழ
மலைபோல துன்பங்கள் தொடர்ந்த போதும்
குலையாத நெஞ்சத் தோடிருப் பதற்காய்
தலையாய தமிழ்நூல்கள் இருபத்து ஆக
தருமத்தைப் பின்பற்றி சமூகம் வாழ
உளமார தந்திட்ட பெரும்புலவ நீ
உலகுய்ய நீண்டநாள் வாழ வேண்டும்

தெல்லிப்பழை கலைஇலக்கியக் களத் தலைவராகவும்
பசுக்கள் இடபங்களை பாதுகாப்புத் தலைவராகவும்
யாழ்சைவ பரிபாலனசபை உபதலைவராகவும்
அகிலஇலங்கை திருமுறை மன்றஉப தலைவராகவும்
வலிவடக்கு கலாமன்றத்தின் உபதலைவராகவும்
நகுலேஸ்வரக் குருக்கள் பவளவிழா செயலராவும்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலராயும்
அற்புதப் பணியாற்றி அளவில்லாப் புகழும் பெற்றார்

விதவிதமாய் விருதுகளும் பட்டங்களும்
விருப்போடு உனைநாடி வந்த தெல்லாம்
விதவிதமாய் நீசெய்த சேவைக்காக
வித்தகர்கள் மகுடத்தைச் சூட்டினார்கள்
இதமான உன்கவிதை மேன்மைக்காக
வில்லிசைக்கும் நாடகத்தின் நடிப்பிற்காகப்
பதமான உன்பண்புக் குணத்திற்காக
பார்புகழ அரங்கத்தில் பரிசும் தந்தார்

''கலைஞான கேசரி''யாம் விருதி னோடு
''கலாபூஷண'' விருதினையும் சேர்த்தளித்து
கலாசார அமைச்சதுவும் வாழ்த்துக் கூற
''கலைச்சுட''ராம் பட்டமதை வலிவடக்கு
கலாமன்றம் வழங்கிடவும் காரை வைத்தீஸ்வரர்
''சித்தாந்தச் செல்வர்'' எனும்விருது வழங்க இந்து
கலாசார அமைச்சதுவும் சேக்கிழார் அரங்கத்தில்
''சித்தாந்தப் புரவலர்'' பட்டம் சூட்டி மகிழ்ந்தது

கவியரங்கம் பலகண்ட கவிஞர் ஏறே!
பல்கலையும் கற்றளங்கள் கவிஞர் கோவே!
புவியரங்கம் பொலிவுபெற கவிதை சொல்லும்
புரட்சியினைக் கேட்டாலே வீரந் தோன்றும்
செவியரங்கம் புளகமுற முழங்கும் போது
மூச்செல்லாம் நின்றெமக்குப் போகும் ஐயா!
தவிப்புடனே உன்பேச்சைக் கேட்கக் கூட்டம்
தவமிருக்கும் பாங்கினையும் பார்த்தோம் ஐயா!

ஏரூரும் கிராமத்துப் பள்ளிதோறும்
எழிலான மாணவரின் உளமறிந்து
நாவூரும் கல்வியினைத் தான்புகட்டி
நல்லதமிழ் வல்லவராய் ஏற்றமுற
ஊரூராய்த் திரிந்தலைந்து உழைத்ததாலே
உத்தமராம் மாணவர்கள் உனைவணங்கி
நீரூரும் குளக்கரையின் ஆல்மரமாய்
நினைத்துன்னை நெஞ்சினிலே போற்றுகின்றார்

வளமார்ந்த கோயில்களைப் பாடி நித்தம்
வான்புகழ் வாழ்வதற்கு வழியும் கண்டாய்
வளமான கவிஞர்களின் பாட்டும் கேட்டு
வகைவகையாய்ப் பாயிரங்கள் யாவும் தந்தாய்
உளமார கலாசார மன்றங் கட்கு
உவந்தளித்துச் சேவையினை வாழ்த்தி நின்றாய்
களங்கமிலா கலைஞர்களும் விருது பெற்றால்
கரும்பாகக் கவிமாலை தொடுத்து நிற்பாய்!

வானவரை வாழ்த்துகின்ற வாயாய் வாழி!
தேன்தமிழால் பாட்டிசைக்கும் தூயோய் வாழி!
கூன்நிமிர நூல்தந்த குணத்தாய் வாழி!
கான்மலராய் சிரிக்கின்ற கண்ணாய் வாழி!
பவளவிழா காணுகின்ற முத்தே வாழி!
கவலைக்கு மருந்தளிக்கும் மன்னா வாழி!
தவமாக வாழ்கின்ற புனிதா வாழி!
சிவகாம சுந்தரியின் ஆருயிரே வாழி!

# நெறிபிறழா வாழ்வினுக்கோர் இலக்கணம்

பண்டிதர். ம.ந.கடம்பேசுவரன் M.A (Hons)
செயலாளர்,
ஆரியதிராவிட பாஷாபி விருத்திச்சங்கம்.
சிந்துபுரம், வட்டுக்கோட்டை.

உலகமெனும் திருவரங்கில் உயர்வாகும் மொழிகளிலே முதன்மை யாகி
குலவுமதன் வழிமொழிகள் பலதாகக் குமரியென நிலைத்து வாழும்
அலகிலாத்தொல் பழமையுடன் புதுமையாய அணிநலனும் வாய்க்கப் பெற்று
உலவிவரு தமிழ்த்தாயின் புதுவிளக்கே புலமையோனே பொலிந்து வாழி!

அருமைமிகு சாத்திரங்கள் அறிந்துநிதம் அமுதாக்கி அள்ளித் தரவே
பெருமையுடன் புவிமிசைத்தாம் பவனிவந்து பேருணவாய்ப் பிறங்கி நாளும்
உரிமையாகும் மாணவர்தாம் உவப்பாக அயின்றிடவே உவந்த நீதான்
திருவுடைநல் லாசிரியர் திருந்துணையே உரைக்கோவே, சிறந்து வாழி!

என்னுளத்தும் இடம்பிடித்தே இதஞ்சேர்க்கும் இனிதுரையால் நண்பும் முற்றி
நன்மாண்பால் எவரகத்தும் குடியாகி நுண்ணுரையிற் கருத்துங் கொண்டு
பின்னமிலா இறையோனைப் புகழ்ந்துபாடி பீடுபெறு உரைக ளாற்றி
நன்மதியாய் ஒளிவீசும் நலத்தோய்நின் நற்புலமை நாளும் வாழி!

அறிவுடையார் கரவுணர்வால் அகம்மறைக்க, அனைத்தையுமே தெரியப்பேசி
குறிதவறா மாண்பினர்தம் கொள்கைகளைக் குறித்துநிதம் குலவச் செய்து
எறிதிரைசெய் கடல்புடைசூழ் ஈழநாட்டில் எங்கணுமே உரைக்க வல்லோய்!
நெறிபிறழா வாழ்வினுக்கோர் இலக்கணமாய் நீயிருப்பாய் நிதமும் வாழி!

நாடுபுகழ் விளங்குகலைக் கோயிலெல்லாம் நடந்துநீதான் நலத்தைஉரைத்து
வீடுவரை அறிவொளியை விரித்துநீயும் வீணரையே கடிவாய் நாளும்
நீடுபுகழ் சைவநெறியும் தமிழ்நெறியும் நனியேற்றி விளக்கங் காண்பாய்
பாடுபுகழ் நாடகநூல் பலவாக்கிப் பாரறியப் படைத்தோய் வாழ!

பெரியோரைப் பேணிநிதம் பெருமையுடன் பேருறவாய்ப் பொதுமை காட்டி
அரிதாய மாண்புடனே அருமைகாத்து அன்புருவாய் அகத்தாற் பேசி
மரியாதை என்னவென மகிழ்ந்துரைத்து மனிதத்தை மதிப்பாய் நீயே
தெரியாத தெதுவுமே இல்லையென்பார் சித்தத்தைத் திறப்பாய் வாழி!

என்னுடனே இணைந்தொன்றாய்த் தொண்டாற்றி இன்புடனாம் பாடஞ் சொல்லி
தன்னறிவைத் தகைமையைத் தெரித்துநீயும் சால்புடனே பழகி நாளும்
இன்பமாக நண்பாக நலனோர்ந்தும் இடர்களைந்தும் உவப்பாய்ப் பேசி
தென்புமாகி தெளிந்தநல் அறிவுமாகி தினந்தினமும் உழைப்போய் வாழி!

இலக்கியமும் இறையியலும் இன்பியலும் எல்லாமும் இயையக் காட்டி
புலத்துறையும் திறத்துறையும் பண்பாடும் பொருத்தமுறப் புகன்று காட்டி
நிலத்துறையும் மாந்தர்தம் மாசுபோக நேரறிவை நிலைக்கச் செய்வோய்
நலத்துறையும் செயல்களாற்றி நாடுபோற்ற நலமுடனே வாழியூ வாழி!!

# மங்கல வாழ்த்து

கலாபூஷணம் பண்டிதர்
சி. அப்புத்துரை

தில்லைநட ராசனைச் சேவித்த சுப்பிரமணியம்
மெல்லியல்பத் தினிப்பிள்ளை வேண்டியே பெற்றெடுத்த
நல்லவன் செல் லத்துரை நன்றாம் நாடகநூல் நாட்டியுள்ளான்
எல்லோரும் அவனரங்கப் படையல்தனை அனுபவிப்போம்

பற்பலவாய் நூல்பலவும் வரவேண்டும் வாழ்த்துகிறோம்
நற்சுகத்தி னுடனாகி நமக்கவர்நூல் தரவேண்டும்
அற்புதநா டகங்களையாத் தனுபவித்து நூலாக்க
அற்புதனை வேண்டுகின்றோம் அவர்நீடு வாழியவே

உத்தமமாய் உளங்கொண்டு உலகுக்காய் உழைப்பவனே
சத்தியத்தை மதிப்பவனே தனிவழியைத் தேர்ந்தவனே
நித்தியநா டகத்தவனை நினைந்துவழிச் செல்வபனே
வித்தகனே நீவாழ்க விழைவதுவும் வாழியவே!

நாட்டியநா டகங்கூத்து சிந்துநடை கோலாட்டம்
பாட்டுடனாங் காவடியென் றிவற்றினது பதிவுகளும்
நாட்டிடுதல் நின்கடனே நன்றாம் வினைமுதலே
தீட்டுமற் றதுவேயெம் நினைவுடனாய் வாழியவே

சைவசித்தாந்தத் திருநெறியில் திகழ்பவனே
வையத் துனதுநெறி வாழ்வளிக்கும் எனவுணர்ந்தோம்
ஐயா உமதுவழி அமைதியினில் அகமகிழ்ந்தோம்
மெய்யுணர்வி னுடனாகி என்றென்றும் வாழியவே.

# எந்தையே குருவே வாழி

செல்லத்துரை நாவரசன்
44, UPHALL RD,
ILFORD ESSEX
IG1 2JF
U.K.

திண்ணிய மனமும் திருந்திய செயலும்
கண்ணிய நடையும் கலையுணர் வதுவும்
வாழ்விலே கொண்டு வாழ்வாங்கு வாழும்
ஆழ்மனம் படைத்த அற்புதக் குருவே!

இசையுடன் நாடகம் இயலும் வளர்த்து
திசைதொறும் புகழைத் தேடித்தந்த
எந்தையே உந்தன் சீரிய பணியை
சிந்தையால் போற்றும் பேறது பெற்றேன்

ஆண்டுதோறும் நாடகங்கள் அடுத்தடுத்து வெற்றிகண்டு
வீறுநடை போட்ட வேளையில் நடித்தவன் நான்
சொல்லுக்கு இசைகூட்டி வில்லுப்பாட்டிசைத்திசைத்து
சிந்து நடைபயின்று சிந்தை மகிழ்ந்தவன் நான்

ஆடலுடன் பாடல் எனக் கலந்து கல்வி பயிற்றுகின்ற
தேடலுடன் மேல்நாட்டுச் சிந்தனைக்கு வடிவமைத்து
எண்கோலம் வாயுக்கள் நிறையுணவு வலைப்பந்து
எல்லோர்க்கும் கல்விமுதல் புதுமைப்படையல் இவை

ஆற்றுகைக்கு ஏற்றவிதம் அடைவுகளை முன்வைத்து
அரங்கச் செயற்பாட்டுக்கு அற்புதமாய் வழிகாட்டிப்
பாத்திரங்கள் ஒப்பனைகள் காட்சிகளின் பாங்கெல்லாம்
சூத்திரமாய்க் காத்திரமாய் சொல்லுதலோ தற்புதுமை

எந்தையின் கலையரங்கப் படையல்நம் தமிழினத்தின்
சொந்தக் கலைவடிவப் பதிவுகளாய் நிலைபெற்று
இந்த உலகமெல்லாம் வலம்வந்து பயன்விளைக்கச்
சிந்தை மகிழ்ந்துவந்து செப்பிடுவேன் இதயமொழி

# கோமாதா நல்கும் குஷி

இலக்கிய கலாநிதி, பண்டிதமணி
மு. கந்தையா
ஏழாலை

ஏய்புலமை ஈன்றளித்த தாய்புலமை ஆக்கிக்காண்
சேய்புலமை ஊற்றத் திறனன்றோ - சேயகதிப்
போமாதா வின்வாய்ப் புதுக்கவிதை யாலெமக்குக்
கோமாதா நல்கும் குஷி.

பொருள்:

*ஏய்புலமை - தானாகவே வந்து வாய்க்கும் புலமையை;*
*ஈன்றளித்த தாய்புலமையாக்கி - பெற்றெடுத்த தாயின் புலமையாக்கி*
*காண்சேய் - காண்கின்ற மகனினது*
*புலமை ஊற்றத் திறனன்றோ - புலமை ஊற்றத்தினது திறமை யல்லவோ*
*சேயகதிப் போமாதாவின் வாய்ப் புதுக்கவிதையால் - தூரா தூரக் கதியை நாடிப்போகின்ற மாதாவின் வாயில் இட்டு உரைக்கும் புதுமைக் கவிதை மூலமாக*
*எமக்குக் கோமாதா நல்கும் குஷி - எமக்குக் கோமாதா என்னும் நூல்தரும் குதூகலம்.*

பேய்த்திறமை பேடிகை வாட்டிறமை ஆய்த்தன்றோ
தாய்த்திறமை பாடாத் தமிழ்த்திறமை - பூத்தபுகழ்
செல்லத் துரையனைவாய்த் தீட்டும் கவித்திறமை
எல்லை தெரிந்திட்ட பின்.

பொருள் :

*பூத்தபுகழ் செல்லத்துரையனைவாய்த் தீட்டும் கவித்திறமை - புகழ்பூத்த செல்லத்துரை அன்னையின் வாய்மூலம் ஆக்கிய கவித்திறமையின்*
*எல்லை தெரிந்திட்ட பின் - சிறப்பின் எல்லையைக் கண்ட பின்*
*தாய்த்திறமை பாடாத் தமிழ்த்திறமை - தாயின் திறமையைப் பாடாத தமிழ்த்திறமை;*
*பேய்த்திறமை - பேய்த்தனமான திறமை;*
*பேடிகை வாட்டிறமை ஆய்த்தன்றோ - பேடியின் கையில் கிடைத்த வாளின் திறமை போன்ற தன்றோ (பயனற்றது).*

# கலைக்கோலம்

## அரங்கக் கலைகள்

1. உரை நாடகங்கள்
   i. சகுந்தலை
   ii. தமயந்தி

2. இசை நாடகங்கள்
   i. அர்ச்சுனன் தவம்
   ii. இரண்டாம் சுயம்வரம்


3. நாட்டிய நாடகங்கள்
   i. சூதுப்போர்ச் சபதம்
   ii. நவக்கிரகங்கள்

4. சிந்துநடைக் கூத்து
   i. மாங்கனி
   ii. நிறையுணவுச் சத்து

5. இசையும் கதையும்
   i. ஔவையார்

6. வில்லிசை
   i. மங்கையர் மாண்பு
   ii. நாவலர் பெருமான்

7. கலைப் படைப்புக்கள்





# உரை நாடகங்கள்



1. சகுந்தலை
2. தமயந்தி

(2008இல் கொழும்பு – 07 மகளிர் கல்லூரி மாணவிகளுக்காக எழுதி நெறியாள்கை செய்து அரங்கேற்றப்பட்டவை)



# சகுந்தலை

# சகுந்தலை

**நாடக பாத்திரங்கள்:**

1. கண்ணுவர் – முதிய முனிவர்
2. துர்வாச முனிவர் – முதிய முனிவர்
3. சகுந்தலை – அழகிய கன்னிப்பெண்
4. பொன்மணி – மயில்
5. கண்மணி – மான்
6. துஷ்யந்தன் – அரசன்
7. சேவகன்
8. தளபதி
9. அமைச்சர்
10. மீனவர் (இருவர்)
11. குடிமக்கள் நால்வர்

காட்சி - **1: கண்ணுவர் ஆச்சிரமம்**

(கண்ணுவர், துர்வாசர், சகுந்தலை, கண்மணிமான்)

காட்சி - **2: துஷ்யந்தன் மாளிகை**

(துஷ்யந்தன், அமைச்சர், தளபதி, சேவகன்,குடிமக்கள்)

காட்சி - **3: கண்ணுவர் ஆச்சிரமம்**

(சகுந்தலை, துஷ்யந்தன், மான்,மயில், துர்வாசர்)

காட்சி - **4: துஷ்யந்தன் மாளிகை**

(துஷ்யந்தன், அமைச்சர், தளபதி, சேவகன்,மீன்வன் 2, கண்ணுவர், சகுந்தலை)

**ஒளிமாற்றத்தின் மூலம் காட்சிகள் மாறும்**

**அரங்க அமைப்பு**

| | |
|---|---|
| | |
| **காட்சி 2,4**<br>**துஷ்யந்தன் மாளிகை** | **காட்சி 1,3**<br>**கண்ணுவர் ஆச்சிரமம்** |

## காட்சி – 1 கண்ணுவர் ஆச்சிரமம்

(கண்ணவர், சகுந்தலை, துர்வாசர், மான், மயில்)

(கண்ணுவ முனிவர் முற்றத்தில் நின்று சூரிய நமஸ்காரம் செய்கிறார். பூபாளராகம் ஒலிக்கிறது. சகுந்தலை நறும்புகை ஊட்டுகிறாள்)

கண்ணுவர் (பாடல்) : சூரியதேவா போற்றி சுடர் ஒளிப்பிளம்பே போற்றி
நேரிய ஒளியினாலே நீணிலம் காப்பாய் போற்றி
ஆதியே அரனே போற்றி அகிலமும் காப்பாய் போற்றி
சோதியே சுடரே போற்றி தூயவா போற்றி போற்றி

குழந்தாய் சகுந்தலை! பூசைக்கு வேண்டுவன செய் தாயா?

சகுந்தலை : ஆமாம் அப்பா. பூ மட்டும் பறிக்க வேண்டும். இதோ பறித்து வருகிறேன்.
(சகுந்தலை பூக்கூடையுடன் போக மானும் மயிலும் துள்ளித் துள்ளிக் கூடவே போகின்றன. பராசர முனிவர் பார்த்துக் கொண்டுவருகின்றார்.)

துர்வாசர் : ஓம் சிவாயநம. கண்ணுவ முனிவரே! நலந்தானே.

கண்ணுவர் : ஓம் நமச்சிவாய. வரவேண்டும். துர்வாச முனிவரே. உங்களை வணங்குகின்றேன். இந்த மனோரம்மியமான காலை வேளையில் தங்கள் வரவால் மகிழ்ந்தேன்.

துர்வாசர் : நன்று, நன்று. கண்ணுவர் ஆச்சிரமத்தில் ஒரு கன்னிப் பெண் இருக்கிறாளே. அதெப்படி.

கண்ணுவர் : குழந்தை சகுந்தலையைக் கண்டீர்களோ?

துர்வாசர் : அதுதான் கேட்டேன். அழகிய தேவகன்னியாய் இருக்கி றாள். துறவியின் ஆச்சிரமத்திற்கு எப்படி வந்தாள்.

கண்ணுவர் : அதுபெரிய கதை. அப்படி அமருங்கள். ஆறுதலாய் சொல்கிறேன்.

(இருவரும் அமர்தல்)

எங்கள் இராஜரிஷி விஸ்வாமித்திரர் மீது தேவமாது மேனகை ஆசை கொண்டாள். ஒருகணம் முனிவர் மேனகையைக் கண்ணால் நோக்கினார். ரிஷிபிண்டம் இராத்தங்காது என்பார்களே. குழந்தையைப் பெற்ற மேனகை அந்த இடத்திலே கைவிட்டுப் போய்விட்டாள்.

துர்வாசர் : நீர் செல்லும் வழியில் குழந்தையைக் கண்டெடுத்து வளர்க்கிறீர் என்று சொல்லும். அதுசரி குழந்தைக்கு என்ன பெயர் சொன்னீர்.

கண்ணுவர் : சகுந்தலை. நான் குழந்தையைக் கண்டபோது ஒரு சாகுந்தலப் பறவை அவளுக்கு நிழல் கொடுத்துக் கொண்டு நின்றது. அதனால் சகுந்தலை என பெயரிட்டேன். அதோ சகுந்தலையே வருகின்றாள்.

சகுந்தலை : (காலில் விழுந்து வணங்கி) சுவாமி தங்கள் திருவடிகளை வணங்குகிறேன்.

துர்வாசர் : குழந்தாய் எழுந்திரு. சகுந்தலை நீ கண்ணுக்கினிய மகாராசனைக் கணவனாகப் பெற்று மங்கலமாய் வாழ்வாய். நான் வருகிறேன்.

(போதல்)

கண்ணுவர் : குழந்தாய் சகுந்தலா துர்வாச முனிவரிடம் ஆசிபெற்ற நீ பாக்கியசாலி. நான் அக்கினிகாரியத்துக்குச் சமித்துவகை தேடிவருகிறேன். நீ பறித்து வந்த மலர்களிலே மாலைதொடுத்துவை.

சகுந்தலை : (மாலை தொடுத்தபடி, இருபக்கமும் மானும் மயிலும் நிற்க)

இந்த மனதுக்கினிய காலைவேளை எவ்வளவு மகிழ்வைத் தருகிறது. பராசர முனிவரின் ஆசி, நான் பெற்ற பாக்கியம்.

## காட்சி – 2 துஷ்யந்தன் மாளிகை

(துஷ்யந்தன், சேவகன்,தளபதி, குடிமக்கள் நால்வர், அமைச்சர்)

சேவகன் : துஷ்யந்த மாமன்னருக்கு வணக்கம்.

துஷ்யந்தன் : வந்த காரியத்தைச் சொல்.

சேவகன் : குடிமக்கள் நால்வர் தங்களைக் காணவந்துள்ளனர்.

துஷ்யந்தன் : வரச் சொல்.

குடிமக்கள் : மாமன்னர் திருவடிகளை வணங்குகின்றோம்.

துஷ்யந்தன் : நன்று, நன்று, என்ன? உங்கள் முகங்களில் ஏதோ கலவரம் தெரிகிறதே.

குடி 1 : (தயங்கியபடி) ஆம் மன்னவா.

குடி 2 : காட்டுவிலங்குகள் வந்து எங்கள் பயிர்களை அழித்துவிட்டன.

குடி 3 : எங்கள் வீடுகளையும் சிதைத்துவிட்டன.

குடி 4 : எங்கள் துயர்தீர்க்க வேண்டும் பிரபு.

துஷ்யந்தன் : அஞ்சாதீர்கள். இப்பொழுதே அவற்றை வேட்டையாடப் புறப்படுவேன்.
அமைச்சரே, இவர்களுக்கு வேண்டியன கொடுத்தனுப் புங்கள்.
தளபதி! குடிமக்கள் சொன்னதைக் கேட்டீரா?

தளபதி : ஆமாம் பிரபு. நாம் நீண்ட நாட்களாக வேட்டைக்குப் போகாததால் காட்டுவிலங்குகள் நாட்டுக்குள் வந்துவிட்டன. தங்கள் கட்டளைப்படி இப்போதே புறப்படுவோம்.

துஷ்யந்தன் : யாரங்கே, கொட்டும் முழவதிர வேட்டைக்குப் புறப்படுங்கள். (வில்,அம்புடன், முழவதிரப் போதல்)

## காட்சி – 3 கண்ணுவர் ஆச்சிரமம்

(சகுந்தலை, மான், மயில், துஷ்யந்தன்)

சகுந்தலை : (முழவுச் சத்தம் கேட்கிறது) என்ன ஒரே ஆரவாரமாயிருக்கிறதே. காட்டு விலங்குகள் ஓட்டமாய் ஓடுகின்றனவே.
(சகுந்தலையின் மானும் மயிலும் ஓடிவந்து அவளருகே ஒதுங்குதல்) (அவள் அணைத்தபடி)
அஞ்சாதே கண்மணி, அவலப்படாதே பொன்மணி.
தஞ்சம் அளிப்பேன் நான், தளராமல் நில்லுங்கள்.

துஷ்யந்தன் : (வில்லேந்திய வண்ணம்) அந்தமான், இந்தப் பக்கம்தானே வந்தது. இது முனிவரின் ஆச்சிரமம் போலத் தெரிகிறதே. தெய்வீக அலை தவழ்கின்றதே. எவ்வளவு அழகான அமைதியான ஆச்சிரமம். எப்படியிருந்தாலும் நான் குறிவைத்த மான் இங்குதானே வந்தது. அதைவிடக்கூடாது. யாரங்கே!

சகுந்தலை : யார் அது. உள்ளே வராதீர். இது ஆச்சிரமம். அன்னியர்கள் வரக்கூடாது. அங்கே நில்.

துஷ்யந்தன் : ஆகா! என்ன அழகு, அப்சரஸ் அழகி மேனகை போலல்லவா இருக்கிறாள் இந்தக் கன்னி. அதிகாரமாக மிரட்டுகிறாளே. விடக்கூடாது. (கிட்டப்போய்)
அழகிய பெண்ணே நான் யார் தெரியுமா. இந்த நாடாளும் மன்னன்.

சகுந்த்லை : நாடாளும் மன்னனுக்குக் காட்டில் என்னவேலை. அப்பாலே செல்லுங்கள்.

துஷ்யந்தன் : பெண்ணே, நாடாள்பவனுக்குத்தான் காடும் சொந்தம். அதை நீ அறிய மாட்டாய். நான் தேடி வந்த மானை விட்டுவிடு.

சகுந்தலை : விடமாட்டேன். அது என் மான் கண்மணி. தந்தை கண்ணுவர் வந்தால் சாபத்துக்குள்ளாவீர். அப்பாலே சென்றுவிடும்.

துஷ்யந்தன் : (தனக்குள்) ஓகோ இவள்தான் கண்ணுவர் மகள் சகுந்தலையோ. நான் கேள்விப்பட்டது உண்மைதான். இவள் அழகு என்னைக் கொள்ளை கொள்கிறதே.

சகுந்தலை : (தனக்குள்) ஆகா! என்ன கெம்பீரமான வாலிபன். இவரல்லவா ஆணழகன். இவர்போல் ஒருவரை இதுவரை கண்டதில்லையே. என்னை அறியாமல் என் மனம் இவர்பால் செல்கிறதே.

துஷ்யந்தன் : (கிட்டவந்து இருந்து கொண்டு) அழகியே! நீ ஏன் என்மேல் கோபப்படுகிறாய். உனக்கு நான் கேடொன்றும் செய்யவில்லையே.

சகுந்தலை : என் கண்மணி, மானைக் கவரப்பார்த்தீர்களே.

துஷ்யந்தன் : உன் கண்மணியை நான் கவரமாட்டேன். என் கண்மணிதான் எனக்கு வேண்டும். பெண்ணே நான் வேட்டையாடிக் களைத்துவிட்டேன் தாகந்தீரத் தண்ணீர் தருவாயா.

சகுந்தலை : (தனக்குள்) இன்றுகாலை பராசர முனிவர் வாழ்த்தினாரே. 'மகாராசனை மணவாளனாகப் பெற்று மங்கலமாய் வாழ்வாய்' என்று. அதுதான் பலித்திருக்கிறதோ.

துஷ்யந்தன் : ஆச்சிரமத்தில் தாகத்துக்குத் தண்ணீர் கூடத் தரமாட்டீர்களோ.

சகுந்தலை : (நாணத்துடன்) இதோ தருகிறேனே.

துஷ்யந்தன் : (சகுந்தலையைப் பார்த்தபடி அருந்துதல்) தாகம் தீர்ந்தது. ஆனால்......

சகுந்தலை : என்ன இன்னும் தரவா?

துஷ்யந்தன் : உன்னையா?

சகுந்தலை : நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

துஷ்யந்தன் : அழகிய பெண்ணே சகுந்தலை. நான் இந்நாட்டு மன்னன் துஷ்யந்தன். உன்னழகில் என்னைப் பறிகொடுத்தேன்.

உன்னை என் இதயத்தில் வைத்தேன். என் பட்டத்து ராணியாக்கி மகிழ விரும்புகிறேன்.

சகுந்தலை : என் மனதும்............ உங்களை........... விரும்புகிறது. ஆனால்......?

துஷ்யந்தன் : என்ன ஆனால்.......... எனக்குத் தெரியாதா? பெண்களுக்கேயுரிய அச்சமும் நாணமும்....... தடுக்கின்றன. அப்படித்தானே.

சகுந்தலை : அதுமட்டுமல்ல.... தந்தையார் சம்மதம்................

துஷ்யந்தன் : அஞ்சாதே. உன் தந்தை கண்ணுவ முனிவரிடம் நான் முறைப்படி வந்து பெண்கேட்டு உன்னை மணம்புரிந்து மாளிகைக்கு மங்கலமாய் அழைத்துச் செல்வேன். இப்போ சம்மதந்தானே?

சகுந்தலை : (நாணத்துடன் பார்த்தல்)

துஷ்யந்தன் : வா, சிறிதுநேரம் அந்த மலர்ச்சோலையில் இருந்து பேசுவோம்.

(ஒளிமறைய இருவரும் போதல். காதல் ஓசை ஒலிக்கிறது)

மீண்டும் ஒளிவர இருவரும் வருதல்.

துஷ்யந்தன் : என் கண்மணி சகுந்தலை. நீயே என் உயிராவாய். இதோ என் அரசமுத்திரை பதித்த கணையாழி. எங்கள் இன்பவாழ்வின் அடையாளம் இது. விரைவில் வந்து அழைத்துச் செல்வேன்.

(துஷ்யந்தன் போகச் சகுந்தலை கணையாழியையும் அவன் போன திசையையும் மாறிமாறிப் பார்த்து மகிழ்தல். மானுடனும் மயிலுடனும் நடனம். துர்வாச முனிவர் வந்து நிற்றல்)

இராகம்: ஹிந்தோளம் தாளம்: திஸ்ரநடை

பாட்டு : துள்ளித்துள்ளிஓடிவரும் புள்ளிமானே கண்மணி என்னை
அள்ளியள்ளி அணைத்த மன்னன் அதோஅதோ பாரடி
கள்ளமில்லா ஆணழகன் மன்னவன் என்காதலன் - தன்னை

என்னிடமே தந்துவிட்டான் பாரடிநீ பொன்மணி
என்னினிய காதலனை எண்ணியெண்ணி ஆடுவோம்
பொன்மணியே கண்மணியே துள்ளித்துள்ளி ஆடுவோம்.

துர்வாச முனிவர் : (கோபத்துடன்) பெண்ணே சகுந்தலை நான் எவ்வளவு நேரம் காத்திருந்தேன். என்னை அலட்சியம் செய்த நீ - யாரை நினைத்திருந்தாயோ அவன் உன்னை மறப்பான் - இது என் சாபம் (போதல். சகுந்தலை தயக்கமடைதல். கண்ணுவர் வருதல்)

கண்ணுவர் : குழந்தாய் சகுந்தலை! ஏன் ஒருவித தயக்கத்துடன் நிற்கிறாய். அது என்ன கையில் கணையாழி.

சகுந்தலை : (நாணத்துடன்) தந்தையே என்னைக் கோபிக்காதீர்கள். எனக்குப் பயமாயிருக்கிறது.

கண்ணுவர் : என் உயிருக்குயிரான குழந்தையல்லவா நீ. உன்னை நான் கோபிப்பேனா. என்ன நடந்தது சொல்.

சகுந்தலை : (சகுந்தலை கணையாழியை காட்டி) வேட்டைக்கு வந்த துஷ்யந்த மகாராசா, தாகத்துக்கு நீர்கேட்டு ஆச்சிரமத்திற்கு வந்தார். நீர் கொடுத்தேன். என் கையைப் பிடித்து இந்தக் கணையாழியைப் போட்டார். நான் மறுத்தேன். தான் வந்து உங்களிடம் பெண் கேட்டு........................

கண்ணுவர் : உன்னை மணம்புரிந்து மாளிகைக்குக் கூட்டிப் போவ தாகச் சொன்னார். அதுதானே........ என் கவலையும் தீர்ந்தது. மீதியை நான் பார்க்கிறேன். மகிழ்ச்சியாயிரு.

## காட்சி – 4 துஷ்யந்தன் மாளிகை

(துஷ்யந்தன், அமைச்சர், சேவகன், கண்ணுவர், சகுந்தலை, மீனவர் 2, தளபதி)

துஷ்யந்தன் : அமைச்சரே, நாம் வேட்டைக்குப் போய்ப் பலமாதங்கள் ஆகிவிட்டனவே. இப்போது காட்டு விலங்குகள் நாட்டுக்குள்.....

அமைச்சர் : வருவதில்லை மன்னா. மக்கள் மகிழ்ச்சியாக வாழ் கிறார்கள்.

சேவகன் : மன்னவா, வணக்கம். யாரோ ஒரு முனிவர் ஒரு இளம் பெண்ணுடன் வந்திருக்கிறார்.

துஷ்யந்தன் : வரச்சொல். (கண்ணுவரும், சகுந்தலையும் வருதல்) வரவேண்டும் முனிவரே! ஆசனத்தில் அமருங்கள்.

கண்ணுவர் : வாழ்க நீ வேந்தே!

துஷ்யந்தன் : வணக்கம். வந்த காரணம்.

கண்ணுவர் : நான் கண்ணுவ முனிவர். இவள் என் குழந்தை சகுந்தலை. இவளை நீங்கள் அறிவீர்கள்.

துஷ்யந்தன் : என்ன, நான் அறிவேனா. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்.

கண்ணுவர் : பல மாதங்களின் முன் வேட்டைக்கு வந்த நீங்கள், நீர் கேட்டு என் ஆச்சிரமத்திற்கு வந்து இவள் மேல் காதல் கொண்டு காந்தர்வ மணம் புரிந்தீர்கள்.

துஷ்யந்தன் : முனிவரே! பெரியவர் நீங்கள். என்ன கற்பனைக் கதை சொல்கிறீர்கள். நான் இவளைக் காந்தர்வ மணம் புரிந்தேனா?

சகுந்தலை : மன்னவா, என்ன சொல்கிறீர்கள். எல்லாம் மறந்து விட்டீர்களா?

துஷ்யந்தன் : தந்தையும் மகளும் அற்புதமான கற்பனையுடன் வந்தீர்களோ. முனிவரே இதற்கென்ன சாட்சி.

கண்ணுவர் : நீங்கள் கொடுத்த அரச முத்திரை பொறித்த கணையாழியுண்டு.

துஷ்யந்தன் : என்ன? எங்கே காட்டுங்கள்.

சகுந்தலை : ஆற்றில் நீராடும் போது எங்கோ தொலைந்து விட்டதப்பா.

கண்ணுவர் : குழந்தாய் என்ன தவறு செய்துவிட்டாய்.

அமைச்சர் : தந்தையும் மகளும் நாடகமாடுகின்றீர்களோ?

துஷ்யந்தன் : நாடகமாட வேண்டாம். போய்விடுங்கள்.

சகுந்தலை : அப்பா நான் என்ன செய்வேன்.....

கண்ணுவர் : கலங்காதே குழந்தாய் காலம் வரும். உண்மை என்றோ ஒருநாள் வெளிவரத்தானே வேண்டும். அன்று சந்திப்போம் மன்னவா.
(இருவரும் வெளியேறுகிறார்கள்.)

சேவகன் : அரசே வணக்கம். மீனவர் இருவர் தங்களைக் காண்பதற்குக் காத்திருக்கிறார்கள்.

துஷ்யந்தன் : வரச்சொல்.

மீனவர் 1 : அரசே எங்கள் வழக்கைக் கேளுங்கள்.

மீனவர் 2 : இருவரும் சேர்ந்து ஒரு மீன் பிடித்தோம்.

மீனவர் 1 : அதை வெட்டும்போது அதற்குள் ஒரு மோதிரம் இருந்தது.

மீனவர் 2 : நான் அது எனக்கென்றேன்.

மீனவர் 1 : நான் அது எனக்குத்தான் என்றேன்.

மீனவர் 2 : எங்களை விலக்குப் பிடிக்க வந்தவர் இதில் அரச முத்திரை இருப்பதாகவும்

மீனவர் 1 : இது அரசனுக்கே சொந்தம் என்றும் சொன்னார்கள்

மீனவர் 2 : ஆதலால் இதைத் தரவே வந்தோம்.

அமைச்சர் : எங்கே மோதிரத்தைக் கொடுங்கள். (வாங்கிப் பார்த்து) அரசே இது உங்கள் முத்திரை மோதிரம். இதோ.

துஷ்யந்தன் : எங்கே! (பார்த்துவிட்டு) அமைச்சரே நான் மோசம் போய்விட்டேன். நான் துரோகம் செய்துவிட்டேன். இப்போ என்ன செய்யலாம்.

அமைச்சர் : விளக்கமாக சொல்லுங்கள் வேந்தே.

துஷ்யந்தன் : அமைச்சரே! இந்த மோதிரம் சற்றுமுன் இங்கு வந்த சகுந்தலைக்கு நான் கொடுத்த மோதிரம். இப்போது தான் நினைவு வருகின்றது. சில மாதங்களுக்கு முன்பு வேட்டைக்குப் போனபோது சகுந்தலையைக் கண்ணு வர் ஆச்சிரமத்தில் கண்டு காந்தர்வ மணம் புரிந்தேன். அதற்கு அடையாளமாக நான் கொடுத்த கணையாழி. அமைச்சரே, உடனே தேருடன் சென்று அவர்களைச் சகல மரியாதைகளுடனும் அழைத்து வாருங்கள்.

தளபதியாரே! இன்றே சகுந்தலைக்கு நான் மாலை சூடவேண்டும். ஆயத்தங்களைச் செய்யுங்கள்.


(அமைச்சருடன் கண்ணுவரும் சகுந்தலையும் வரல்)
(துஷ்யந்தன் கண்ணுவர் காலில் விழுந்து)

முனிவர் பெருமானே! என்னை மன்னித்தருளுங்கள். என் மறதியால் உங்களை அவமதித்துவிட்டேன்.

கண்ணுவர் : இல்லை மன்னவா இல்லை. தவறு உங்களுடை யதல்ல. நீங்கள் மறப்பீர்கள் என்று சகுந்தலைக்கு ஒரு சாபம் இருந்தது. அது கழிந்தது. நீங்கள சகுந்த லைக்குக் கொடுத்த கணையாழியே உங்களைச் சேர்த்து விட்டது. பார்த்தீர்களா.

சகுந்தலை இங்கே வா.

(துஷ்யந்தன் கையில் சகுந்தலையை ஒப்படைத்தல். மாலை மாற்றல்)



# தமயந்தி

# தமயந்தி

**நாடக பாத்திரங்கள்:**

1. நளன் – 1 அரச கோலம்
2. நளன் – 2 கறுத்த அலங்கோலம்
3. தமயந்தி – அரசி
4. ஏவலன் – நளனின் ஏவலன்
5. மகன் – இளவரசன்
6. மகள் – இளவரசி
7. காவலன் – வீமனின் காவலன்
8. வீமன் – அரசன்
9. அரசி – வீமன் மனைவி
10. அந்தணர் – முதியவர்
11. அயோத்தி மன்னன்
12. நடன மாதர்

**காட்சி - 1: வீதி**

(நளன்,தமயந்தி, மகன்,மகள், ஏவலன்)

**காட்சி - 2: வீமராசன் மாளிகை**

(வீமன், அரசி, ஏவலன், மகன்,மகள், காவலன். அந்தணர்)

**காட்சி - 3: வீதி**

(தமயந்தி, அந்தணர், நளன் 2)

**காட்சி - 4: வீமராசன் மாளிகை**

(வீமன், அரசி, தமயந்தி, அந்தணர்)

**காட்சி - 5: வீதி**

(அந்தணர், அயோத்தி மன்னன், நளன் 2)

**காட்சி - 6: வீமராசன் மாளிகை**

(வீமன், அயோத்தி மன்னன், நளன் 2, தமயந்தி, மகன்,மகள், நளன் 1, அரசி, அந்தணர், ஏவலன், காவலன், நடன மாதர்)

**காட்சி அமைப்புக்கள்:** வீமன் மாளிகை– 1. சிங்காசனம் 4. ஆசனங்கள்
வீதி – வீதிக்குரிய அடையாளங்கள்.

**ஒளிமாற்றத்தின் மூலம் காட்சிகள் மாறும்**

**அரங்க அமைப்பு**

| | |
|---|---|
| | |
| **காட்சிகள் 2,4,6**<br>**வீமன் அரண்மனை** | **காட்சி 1,3,5**<br>**வீதி** |

## காட்சி – 1 வீதி

(நளன், தமயந்தி, மகன், மகள், ஏவலன்)

நளன் : ஏவலா! என் விதிவசத்தால் மதியிழந்து புட்கரனுடன் சூதாடி நாடிழந்தேன். இனி நாம் இங்கிருப்பது முறை யல்ல. நீ எனக்கொரு உதவி செய்ய வேண்டும்.

ஏவலன் : நிடத நன்நாட்டின் வேந்தே! நளமகாராசனே. உங் களுக்கு இந்தக்கதியா? எதுவானாலும் சொல்லுங்கள் செய்கின்றேன்.

நளன் : என் துணைவி தமயந்தியையும், என் கண்மணிகளான மக்கள் இருவரையும் தமயந்தியின் தந்தை, விதர்ப்ப நாட்டு மன்னன் வீமராசனிடம் ஒப்படைத்து விடும். நான் காட்டுக்குப் போகிறேன்.

தமயந்தி : என்னுயிர் நாதா, உங்களை விட்டு நான் பிரியேன். நீங்கள் இருக்கும் இடமே எனக்குச் சொர்க்கம். பிள்ளை களை மட்டும் என் தந்தையிடம் அனுப்பி விடுவோம். ஏவலா! அவர்களை அழைத்துச் செல்.

மகன் : தந்தையே நாங்கள் உங்களை விட்டுப் பிரிவதா?

மகள் : அம்மா நான் போகமாட்டேன்.

தமயந்தி : என் அருமைப்பிள்ளைகளே மறுக்காமல் செல்லுங்கள்.

நளன் : இப்பொழுது செல்லுங்கள். பின்பு நாமும் அங்கு வரு வோம்.
(பிள்ளைகள் அழுதழுது ஏவலனுடன் போதல்)

தமயந்தி : நாதா எங்களுக்கேன் இந்த கதிவரவேண்டும்.

நளன் : எல்லாம் விதிப்பயன்தான். நேற்றுவரை பட்டத்து ராணி யாக இருந்த உன்னை இன்று பதைக்கும் வெயிலில், கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுவழியில் கால்நோக நடக்க வைத்தேனே.

தமயந்தி : நாதா, வெயிலோ, மழையோ, வேறென்ன துயரோ, எதுவந்தாலும் நீங்கள் இருக்கும் இடம்தான் நான் இருக்கும் இடம்.

நளன் : சிங்கம் புலி கரடிகளும், நஞ்சுமிழும் பாம்புகளும் குடி கொண்ட கொடுங்காட்டில் என்னாகுமோ? இறைவா நீயேதுணை.

## காட்சி – 2 வீமராசன் மாளிகை

**(வீமராசன், அரசி, அந்தணர், காவலன், பிள்ளைகள், ஏவலன்)**

காவலன் : மன்னர் மன்னவா வணங்குகின்றேன்.

வீமன் : வந்த காரியத்தைச் சொல்.

காவலன் : யாரோ ஒருவர் இரு பிள்ளைகளுடன் வாயிலில் காத்துள்ளார்.

வீமன் : வரச்சொல் (ஏவலன் பிள்ளைகளுடன் வருதல்)
யார் நீ? இந்தப் பிள்ளைகள் யார்?

ஏவலன் : நான் நிடதநாட்டு மன்னன் நளமாராசனின் ஏவலன். இவர்கள் உங்கள் பேரப்பிள்ளைகள்.

வீமன் : என்ன சொல்கிறாய் நீ.

அரசி : என் மகள் தமயந்தி பெற்ற என் கண்மணிகளா? (அணைத்தல்)

வீமன் : என்ன நடந்தது. நளனும் தமயந்தியும் எங்கே.

ஏவலன் : மன்னவா! நள மகாராசன் புட்கரனுடன் சூதாடித் தோற்றுக் காட்டுக்குப் போய்விட்டார். தமயந்தியும் கூடவே போயுள்ளார். பிள்ளைகளை உங்களுடன் ஒப்படைக்கும்படி சொன்னார்கள். பிள்ளைகள் பலநாளாய் வழிநடந்து களைத்துவிட்டார்கள்.

வீமன் : என்ன, இந்தப் பிஞ்சுகள், என் வாரிசுகள் கால்கடுக்க நடந்தார்களா?

அரசி : என் கண்மணிகளே வாருங்கள். (உள்ளே செல்லல், ஏவலன் போதல்)

வீமன் : (குறுக்கும் நெடுக்குமான நடந்து சிந்தித்துவிட்டு) என் இனிய அந்தணரே!
என் மருகர் நிடதமன்னன் நளன் தமயந்தியோடு கானகம் சென்றார். அவரைக் கண்டிட வழிதான் சொல்வீர்.

அந்தணர் : காடுதான் கதியே என்னக் கானகம் சென்றார் தம்மைத் தேடிநான் சென்றே உங்கள் செல்வங்கள் தமைச் சேர்ப்பிப்பேன். வாடிநீர் வருந்த வேண்டாம் வருவேன் நான் நற்செய்தியோடு.

## காட்சி – 3 காட்டுவழி

(தமயந்தி, அந்தணர், நளன், சேவகன்)

(தமயந்தி களைத்து விழுந்து அலங்கோலமாக வருதல்)

தமயந்தி : ஆடிவரும் மென்காற்றே, ஓடுகின்ற வான்முகிலே
காடுதனில் எனைப்பிரிந்த காதலரைக் கண்டீரோ,
தேடிவரும் என்துயரைத் தெரிவிக்க மாட்டீரோ.

அந்தணர் : சேவகா! அதோ, அபலைப் பெண் ஒருவர் அலங்கோல மாய் வருகிறார். அவள் யாரென்று பார்ப்போம். கூந்தல் அவிழ்ந்துவிழ குறுவியர்வை உடல் நனைய பொன் னான உன்மேனி புழுதிபடிந்திருக்க கால்கள் தடுமாறி வரும் காரிகை நீ யாரம்மா?

தமயந்தி : ஐயா அந்தணரே,
நான் வீமன் திருமடந்தை, விதர்ப்ப நாட்டு இளவரசி நிடத நன்நாட்டுராணி தமயந்தி என்பேர் காண்பீர்.

அந்தணர் : எங்கள் மன்னன் மகள் தமயந்தியா இந்தக் கோலத்தில். மகளே, வீமராசன் தூதுவர் நாம். அஞ்சாதே நீ, தாமதம் இன்றியுன்னைத் தந்தையிடம் சேர்ப்பிப் போம். உன் மணாளன் நளமாராசன் எங்கே அம்மா.

தமயந்தி : அந்தக் கொடுமையை எப்படிச் சொல்வேன் ஐயா. கானகத்தில், காரிருள் சூழ்ந்த ஒரு பாழ் மண்டபத்தில், நானும் நாதனும் ஒருநாள் படுத்திருந்தோம். மறுநாள் காலையில் எழுந்தபோது பாதி ஆடையுடன் நாதனை யும் காணவில்லை. காடெல்லாம் தேடிக் கதறி அழுதழுது நாட்கள் பலவாக நான் அலைந்து இங்கு வந்தேன்.

அந்தணர் : அஞ்சாதே தமயந்தி நெஞ்சம் பதறாதே, உன் நாயகன் இருக்குமிடம் நானறிந்து கொணர்ந்திடுவேன். ஏதும் தடயம் எனக்கு நீ சொல்வாயோ?

தமயந்தி : கானகத்தில் காதலியைக் காரிருளில் கைவிட்டுப் போனதுவும் வேந்தர்க்குப் போதுமோ என்றுநீர் செல்லும் வழியெங்கும் சொல்லியே சென்றிடுவீர். ஏதும் பதிலதற்குச் சொல்வாரை நீ கண்டால் வாதிட்டு அவர்பற்றி அறிந்தேநீர் வந்துரைப்பீர்.

அந்தணர் : ஆகட்டும். அதன்படியே அறிந்து நான் வந்திடுவேன். ஏவலருடன் நீங்கள் சென்றிடுவீர் தந்தையிடம். (பிரிந்து போதல்)

அந்தணர் : கானகத்தில் காதலியைக் காரிருளில் கைவிட்டுப் போனதுவும் வேந்தற்குப் பொருந்தும்செயலாமோ. (மீண்டும் மீண்டும் சொல்லிப் போதல்)

நளன் : (வேற்றுருவில், நடந்து வந்தவன் நின்று அவதானித்து விட்டு)

அந்தணரே நீர் ஏன் சஞ்சலப்படுகின்றீர். நடப்பதெல்லாம் பண்டை விதிப்படியேதான் நடக்கும். காதலியைக் கைவிட்டகதையும் விதிப்பயன்தான்.

அந்தணர் : என் சொல்லுக்கெதிர் மாற்றம் சொல்லும் நீர் யாரையா? பண்டை விதிப்பயனாற் பாதிக்கப்பட்டவரோ?

நளன் : அப்படியும் சொல்லிவிடலாம்.
அயோத்தி நகர் மன்னனுக்குத் தேரோட்டும் பாகன் நான். அவருக்கு மடப்பள்ளித் தொழிலும் நான் செய் திடுவேன். எல்லாம் என் தலைவிதிதான்.
(நளன் போதல், அந்தணர் தனிமையில்)

அந்தணர் : தமயந்தி சொல்லிவிட்ட தந்திரமும் நன்றாச்சு காத லியைக் கைவிட்ட கதையும் விதி என்கின்றார். தமயந்தி இடத்திற்போய்ச் சந்தேகம் தனைச்சொல்வேன்.

## காட்சி – 4 வீமராசன் மாளிகை

(வீமன், அரசி, தமயந்தி, அந்தணர்)

(சேவகனுடன் தமயந்தி வருதல், அவளைக் கட்டியணைத்தபடி)

வீமன் : என் மகளே! என்னுயிரே, எங்கள் குலக்கொழுந்தே, உன்னை நாம் காணாமல் உயிர் பதைத்துப் போனோமே.

அரசி : என் கண்ணே, பொன் மகளே, என்னம்மா கோலமிது. பொன்னான உன் மேனி வாடித்தளர்ந்தது ஏன். ஏன் இந்தக் கோலமம்மா.

வீமன் : கண்மணியே உனது கணவர் எங்கு போனாரோ.

அரசி : கணவனைப் பிரிந்து தன்னந்தனியே என்ன துயர்ப் பட்டாயோ.
(அந்தணர் வருதல்)

வீமன் : அந்தணரே வாரும். சென்ற செய்தி என்னாச்சு.

தமயந்தி : எங்கெங்கு சென்றீர் ஐயா, யாரும்பதில் சொன்னாரோ.

அந்தணர் : காதலியைக் காரிருளிற் கைவிட்ட கதையெல்லாம் பண்டை விதியின் பயனே காண் என்றொருவர் எதிர் மாற்றம் சொன்னார். என்றாலும் அவர் கோலம்? வாக்கி னால் மன்னவரை ஒக்கின்றார். ஆனாலும் ஆக்கையை நோக்கின் நளன்போல் தெரியவில்லை. கறுத்து சிறுத்து வாடி மெலிந்துள்ளார்.

தமயந்தி : எங்கே இருக்கின்றார்? என்னதான் செய்கின்றார் என்பதை நீர் அறிந்தீரோ?

அந்தணர் : கதை கொடுத்துப் பார்த்தேன். அயோத்தி மன்னருக்குத் தேரோட்டும் பாகராம். அத்தோடு அவருக்குச் சமைய லும் செய்பவராம். அவரைத்தான் ஐயுற்றேன் நீங்கள் ஆராய்ந்து அறிந்திடுங்கள்.

வீமன் : எப்படி அறிந்திடலாம். நான் நேரே செல்கின்றேன்.

தமயந்தி : வேண்டாம் அப்பா, நான் ஓர் உபாயம் சொல்கின்றேன். அந்தணரே நீர் போய்,
மீண்டோர் சுயம்வரத்தை வீமன் மகள் தமயந்தி பூண் டாள் என்று நீர் அங்கே போயுரைப்பீர்.
அப்போது அயோத்தி மன்னன் வருவான், அவனுடனே தப்பாமல் தேரோட்டியும் கூடவே வந்திடுவார். அவர் நளனோ என்று நாம் ஆராய்ந்தறிந்திடலாம்.

அந்தணர் : இது நல்ல உபாயமம்மா, இப்போதே செல்கின்றேன்.

## காட்சி – 5 வீதி

(அந்தணர், அயோத்தி மன்னன், நளன்)

அந்தணர் : வீமன் மகள் தமயந்தி மீண்டோர் சுயம்வரத்தைப் பூண்டாள் காண் மன்னவர்கள் நாளையே வந்திடுவீர்.

அயோத்தி மன்னன் : (உள்ளே இருந்து ஓடிவருதல்)
யாரையா நீ, என்ன செய்தி சொல்லுகிறீர்.

அந்தணர் : அயோத்தி நகர் வேந்தே! அரியதோர் செய்தி ஐயா. விதர்ப்ப நன்நாட்டு வேந்தன் வீமன் மகள் தமயந்திக்கு இரண்டாம் சுயம் வரம் என்று எங்கும் முரசறைந்தார். நன்மணமாலை சூடும் நாளுமே நாளையாகும். இன் னில வேந்தர்களெல்லாம் இது நல்ல செய்தி சொன் னேன்.

அயோத்தி மன்னன் : முன்னே நான் தோற்றுப் போன பொன்மகள் தமயந்தி மாது என்னையே விரும்பி இரண்டாம் சுயம்வரம் கொண்டாள் இப்போ. என்னரும் தேர்பாகா நீ இப்போதே கொணர்வாய் தேரை. பொன்மகள் மாலைகொள்ளப் போவோம்நாம் விதர்ப்ப நாடு.

(மன்னன் உள்ளே போக நளன் தனிமையில்)

நளன் : என்னுயிர்க்காதலிக்கு இரண்டாம் சுயம்வரமாம், தம யந்தி உன்னை நினைக்கையிலே உருகி உடல் கருகி உள்ளீரல் பற்றி எரிகிறதே என் செய்வேன். என்னையார் என்றே இங்கு எவரும் அறியாவண்ணம் என் உருவம் மாறிப்போச்சே. ஏது நான் செய்வேன் இப்போ. என் மனைவி தமயந்திக்கு அன்னியன் மாலை சூட நானே தேர்ஓட்டிச் செல்லும் விதி இதை வெல்வேனா நான். விதியின்கைப்பொம்மையானேன். வருவது வரட்டும் பார்ப்போம்.

(தேரோடும் குதிரைக்குளம்படிச் சத்தம் கேட்கிறது)

## காட்சி – 6 வீமன் மாளிகை

( அயோத்தி மன்னனும் நளனுடன் போதல்)

வீமன் : வருக நம் மன்னவா, உன் வரவு நல்வரவாகட்டும்.

அயோத்தி மன்னன் : இன்றும்மைக் காணுகின்ற ஆவலால் இங்கு வந்தேன். உன் மகள் தமயந்திக்கு இரண்டாம் சுயம் வரமாமே.

வீமன் : நன்றாக நும்வரவு நானும் மிக மகிழ்ந்தேன். இவ ருங்கள் தேர்ப்பாகர்தானோ. இங்கே இருந்திடட்டும்.

நீங்கள் உள்ளே வாருங்கள். விருந்துண்டு மகிழ்ந்திடலாம்.
(இருவரும் உள்ளே போக, நளன் தனிமையில் இருத்தல். பிள்ளைகள் வரல்)

மகன் : ஐயா நீங்கள் யார்?

மகள் : ஏன் இங்கு வந்தீர்கள்?

நளன் : (பிள்ளைகளை அணைத்து) என் மக்கள் போல்கின்றீர். நீர் யார் மக்கள் பிள்ளைகளே.

மகன் : நிடதநாட்டு மன்னன் நளமாராசன் மக்கள் நாம்.

மகள் : எந்தந்தை சூதில் தோற்று, எந்தைதாய் காட்டுக்கேக இன்னகர் வாழ்கின்றோம் நாம். எம்நாடு பிறன் ஆள்கின்றான்.

நளன் : உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிவந்து இங்கண் உறைதல் இழுக்கன்றோ இளவரசே.

மகன் : எங்கோமான்வாய்மை அறிவாயோ அடுமடையா?

நளன் : மன்னர் பெருமை மடையர் அறிவாரோ, உன்னை அறியாதுரை செய்தேன். என்னை மன்னிப்பீர். என் விதியும் இதுவாச்சே.
(மறைந்துநின்று பார்த்த தமயந்தி ஓடிவருதல்)

தமயந்தி : (தனக்குள்)இவர் என் நாயகரேதான். சந்தேகமே இல்லை. (நேரில்) தேர் ஓட்டி போல வந்த தேர்வேந்தே என் தலைவா (காலைப்பிடித்தல்)

நளன் : என்னுயிர்க்குயிரே தமயந்தி, விதியின் விளையாட்டைப் பார்த்தாயா?

தமயந்தி : பொன்போன்ற உங்கள் மேனி புகை மண்டிப் போனதென்ன? கன்னங்கரியதாய்க் கறுத்துச் சிறுத்ததுமேன்.

நளன் : தமயந்தி, கானகத்தில் உன்னை விட்டுத் தனிவழியே போகையிலே கானகத்தியில் வெந்த கார்க்கோடன்

என்னும் பாம்பைக் காப்பாற்றப் போனேன். அது கடித்ததால் இக்கோலமாச்சு.

தமயந்தி : பொன்மேனி கறுத்தாலும் உங்கள் நன்மனம் அதுவே போதும்.

நளன் : கவலைப்படாதே தமயந்தி. கார்க்கோடன் தந்த ஆடையொன்று இதோ. இதை விரும்பி அணிந்திட்டால் பழைய உருப்பெற வரமும் தந்தது. பொறுத்திரு. (உள்ளே ஆடையுடன் போதல். பழைய நளன் வருதல்)

தமயந்தி : பொன்னுடலும் முன்போலப் பொலிவுறுவே வந்தீர்கள். எல்லோரும் வாருங்கள். இன்று நன்நாளாச்சு. (நடனம்)

(தீபநடனம்)

பல்லவி

இருண்ட காலம் மருண்டு ஓட ஒளிபிறந்தது
எங்கள் மன்னன் நளனின் வாழ்வில் வழிதிறந்தது

சரணம்


விதிவலியால் மதியிழந்து காடுசென்றவன் - இன்று
மதிவலியால் விதியைவென்று நாடுவந்தனன் - இருண்ட

நிடதநாட்டை ஆள நளன் மீண்டும் வந்தனன் - இதோ
நிம்மதியாய் மனைவி மக்கள் சேர்ந்து கொண்டனர் - இருண்ட

நல்லகாலம் வந்ததின்று வருகவருகவே
நளமாராசன் கொற்றம் என்றும் வாழ்கவாழ்கவே - இருண்ட

# இசை நாடகங்கள்

1. அர்ச்சுனன் தவம்
2. இரண்டாம் சுயம்வரம்



# அர்ச்சுனன் தவம்

# அர்ச்சுனன் தவம்

**நாடக பாத்திரங்கள்:**

1. அர்ச்சுனன்
2. இந்திரன்
3. சிவன்
4. உமை
5. வேடன்
6. வேடுவச்சி

(கயிலை மலைச்சாரலில் அருச்சுனன் அம்பு வில்லுடன் உலாவுதல்)

அருச்சுனன் : வசனம் - ஆஹா! கயிலை மலையின் அழகே அழகு! தெய்வீக அழகு!

இராகம் : சண்முகப்பிரியா

பல்லவி

கயிலை மலையின் எழில் கண்டேனே - நானே
காணாத பேரின்பம் கொண்டேனே - நானே
கயிலை........

சரணம்

மஞ்சு தவழும் மலை கஞ்சமலர்க் குலங்கள்
தஞ்சமென வருவாரை அஞ்சலென வணைக்கும்
விஞ்சும் அருள் அலைகள் நெஞ்சை நெகிழவைக்கும்
கொஞ்சும் தெய்வீக நாதம் எங்கும் இசைந்தொலிக்கும்
- கயிலை

வசனம் : சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இக்கயிலை மலைச் சாரலுக்கு வியாச முனிவரின் கட்டளைப்படி வந்துவிட்டேன். இனி நான் செய்ய வேண்டியது, சிவனிடம் வரம் பெற வேண்டும்.)

இராகம் : சகானா

வரம் ஒன்று வேண்டியே வனம் பல தாண்டி வந்தேன்
வகை தெரியாமலே கரம் கூப்பி நிற்கின்றேன்
மூவரே தேவரே என் முன்னோரே இந்நேரம்
முன்னின்று உதவுவீர் முக்கண்ணன் அருள்பெற.....
வரம்.....

(இந்திரன் வருகின்றான்)

இந்திரன் : இராகம் : கானாடா
தெய்வீக அருள் தவழும் திருக்கைலை மலைதனிலே
கைவேலும் அம்புவில்லும் போர்ப்கோலமும் கொண்ட
தென்ன.

வசனம் : நீயார். சிவசாந்தி நிலவும் இக்கைலை மலைச் சார லுக்கு நீ போர்க் கோலத்துடன் வந்த காரணம் என்ன.

இந்திரன் : பந்தபாசம் துறந்த பற்றற்ற ஞானிகளில் பாணந் தொடுத்தே உனைப்பாழாக்க வந்தனையோ

அருச்சுனன் வசனம் : சுவாமி சிவதரிசனம் பெறவேண்டி இம்மலை அடிவாரம் வந்தேன்.

இந்திரன் வசனம் : இக்கோலத்திலா சிவனைத் தரிசனம் செய்ய வந்தாய். உன்செயல் விந்தையாய் இருக்கிறதே.

இராகம் : மலையமாருதம

இந்திரன் : ஐயன் சிவனுடனே போர் செய்தே அருள்பெறவோ
பொய்யாம் உலக நெறியினைப் பூண்டுவந்தவன் நீயார்.

அருச்சுனன் வசனம் : என்னைத் தப்பாக எண்ணிவிடாதீர்கள்

இராகம் : காபி

பஞ்சபாண்டவரிலே இளைய பார்த்தன் என்பவன் நான்
அஞ்சும்பகையழிக்கச் சிவ அஸ்திரம் பெற வந்தேன்

இந்திரன் வசனம் : அருச்சுனா. நீ வந்த காரணத்தை நான் அறிவேன். என்னை யாரென நீ அறிவாயா.

இராகம் : காபி

வில்லுக்கு விஜயன் என்ற வெற்றி வீரனே உன் புகழ் சொல்லிப் பெருமைபெறும் உன் தந்தை இந்திரன் நானே.

அருச்சுனன் வசனம : ஆகா! என்ன சொல்கிறீர்கள் என் கண்களை என்னால் நம்ப முடியவில்லை. நான் அதிஷ்டசாலியானேன்.

இராகம் : தன்னியாசி

தந்தையே உன்பாதம் தனையே தஞ்சமென்றே
யடைந்தேன் தந்திடுவாய் வரம் பகை அஞ்சியோடும்படி

இந்திரன் வசனம் : அருச்சுனா! வில்லுக்கு விஜயன் ஆன உனக்கு வேறு அஸ்திரம் எதற்கு. உனக்கு வேண்டியது எதுவானாலும் தருவேன். உன் குறைதீர்ப்பேன். வேண்டியது எதுவானாலும் கேள்.

இராகம் : நந்தனப்பிரியா

அஸ்திரம் பெற்றுநீயும் அடையும் பயன்தான் என்ன
இஷ்டமாம் போகம்தன்னை இன்றே நீ பெறுவாய்
எந்தெந்த லோகம்தன்னை என்மைந்தா நீகேட்பினும்
உன் தந்தை ஈந்திடுவேன் உரிமையாய்க் கேட்பாய் நீயே.

அருச்சுனன் : இராகம் : தன்னியாசி

சிந்தையே நொந்தவன் நான் இன்பம் எதுவும் வேண்டேன
தந்தையே தரணியிலே யாவும் இழந்தோம் யாமே
பஞ்சவர் தாரமாம் பாஞ்சாலி சபதம் தீர்க்கச்சிவ
அஸ்திரம் பெற்றேனானால் அகிலத்தை வெல்வேன் ஐயா,

வசனம் : தந்தையே கௌரவர் தலைவன் துரியோதனன் வஞ்சகச் சூதில் எங்கள் நாடு நகரெல்லாம் கவர்ந்து பாஞ்சாலியையும் அரச சபையில் துகிலுரிந்து அவமானப்படுத்திவிட்டான். அவனை வென்று எங்கள் மானம் காக்கச் சிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற வேண்டும். இதற்கு நீங்கள் தான் வழிகாட்ட வேண்டும்.

இராகம் : மாண்டு

இந்திரன் : சிவனையே சிந்தை செய்து ஐம்புலன் அடக்கி நின்று
தவம் புரிவாய் சிவன் தந்திடுவான் வரம்.

இராகம் : ஆனந்தபைரவி

அருச்சுனன் : ஐயனின் அறிவுரை என் அவலத்தை அகற்றிடுமே
கையது கூப்பிஎன் கருத்தினில் இருத்தி இந்த
ஞாலத்தில் கடும் தவம் நாளும் இயற்றியந்த
ஆலமுண்ட சிவனையென் அன்பாலே ஈர்த்திடுவேன்.

இராகம் : அரிகாம்போதி

இந்திரன் : மைந்தாநீ மாநித்தில் மாதுயர் கொண்டாயிப்போ
ஐந்தன் புலன் அடக்கி ஆவலோடு பற்றறுத்து
ஊணோடு உறக்கமின்றி உடமையில் கருத்துவிட்டு
தூணென நிலையாய் நின்று தூயவன் தாள் நினைந்து
ஆண்டாண்டு காலமாக அருந்தவம் புரிந்தாயானால்
வேண்டிய வரமும் பெற்று வெற்றியும் காண்பாய் நீயே.
(இந்திரன் அர்ச்சுனனுக்கு மாலை சூட்டி ஆசி வழங்கி மறைதல், அருச்சுனன் ஒற்றைக் காலில் தவத்தில் நிற்றல்)

இராகம் : சகானா

அருச்சுனன் : நம்பினோர்க்கருளும் தேவே நாதனே கைலைவாசா
வெம்பிடும் பகை முடித்தே வேதனை நீக்கி நாளும்
அம்புவிக்கரசர் ஆக்கி அறத்தினைக் காக்கும் பேறு
கும்பிடுகின்றேன் தேவா தந்திடுவாய் நீ நாதா.

வசனம் : அண்டசராசரமெல்லாம் காக்கும் இறைவா! சிவனே என்குறை கேளாயோ! வஞ்சகக் கௌரவர்களால் கவரப்பட்ட செல்வமெல்லாம் மீளப்பெற்றுப் பஞ்ச பாண்டவரின் மானம் காக்க பாசுபதாஸ்திரம் ஒன்று தாராயோ சிவனே.

இராகம் : சகானா

பல்லவி

வரம் ஒன்று தரவேண்டுமே - திவ்ய
அஸ்திரம் ஒன்றுபெற்று அறத்தினைக் காத்திடவே -
வர.....

அ.பல்லவி

பரனேசற் குருவான பரமேசப் பெருமானே
கரமேந்திச் சிரம்தாழ்த்திக் கதியென்றுவந்தேனே - வர

சரணம்

அறம்போற்றும் திருநாட்டின் திறம் போற்றுக் களமேகி
விறலோடு போராடி வரவே நான் விருதோடு - வர......
(ஒளிமங்க அருச்சுனன் விலகச் சிவனும் உமையும் தோன்றல்)

உமை : இராகம் : பெகாக்
அருச்சுனன் மாதவம் காணீரோ - சுவாமி
ஆண்டுகள் பலவாக அருந்தவம் புரிகின்றான் - அருச்.....
வேண்டும் வரம்தர வேண்டும் ஐயா - தவம்
விண்ணவரும் அச்சப் பண்ணுகிறான் - அருச்......

சிவன் : பார்த்தனின் தவநிலை பார்த்திடுவோம் - பெண்ணே
பக்குவம் அறிந்தருள் பூத்திடுவோம் - பார்த்..........
வேட்டுவர் போலுரு மாறிச் சென்றே அவர்
வேண்டும் வரம் தந்து காத்திடுவோம்- பார்த்..........

சிவன் வசனம் : தவம் செய்யும் அருச்சுனனுக்கு ஆபத்து ஒன்று வரப் போகின்றது. துரியோதனனால் ஏவப்பட்ட அசுரன் ஒருவன் பன்றி உருவில் வருகின்றான். நாம் வேட்டுவ வடிவுகொண்டு ஒரு திருவிளையாடல் செய்வோம் வா. (ஒளி மங்குகிறது. சிவனும் உமையும் மறைய அவ் விடத்தில் வேட்டுவனும் வேட்டுவிச்சியும் வருகின்றனர். அருச்சுனன் தவத்தில் நிற்கின்றான்.)

வேட்டுவர் : (பாட்டு : துரிதநடையில் பாடி ஆடிவரல்)
வில்லேந்தி வேடர்உருக் கோண்டோம் நாமே - இங்கு
வேங்கை புலி வேட்டையாட வந்தோம் நாமே
வல்லசிவன் கைலைமலை வேடர்நாமே - இங்கு
வந்தபகை முடிப்பதற்கு வந்தோம் நாமே.- வில்லேந்
நேரமொரு வேடம் போடும் வேடர்நாமே - எங்கும்
நித்தம் நித்தம் ஆடியுலாப் போவோம் நாமே
மால் அயனும் காணமுடியாதவேடர் - இந்த
மானிடரைக் காப்பதுவே எங்கள் வேலை.

வசனம் : பெண்ணே அதோ கொடிய விலங்குகளின் சத்தம்..... அங்கே பார்

வேடன் : (.....துரிதகதியில் வில்லேந்தி ஆடுதல்)
வேட்டைக்கு நல்ல விருந்தொன்று பார் பார்
வல்லொடு பொல் கொண்டு விரைந்திடு பின்னால்
காட்டிலே பன்றிகள் கூட்டமாய்க் கூடி
கும்மாளம் போடுது பாரடி பெண்ணே.

வசனம் : இது என்ன விந்தை. இங்கே வந்து பார் பெண்ணே. (அருச்சுனனைக் காட்டி)

வேடுவிச்சி : வேட்டை விலங்குகள் மூட்டம் கொள் காட்டில்
விந்தையாய்த் தோன்றிடும் மானிடன் யாரோ
வாட்டியே யுடலினை வருத்திநிற்கின்றவன்
வாதையைத் தீர்த்திட வாருமே போவோம்.
(பன்றி ஒன்று அருச்சுனனை நோக்கி அட்டகாசத்துடன் வருகிறது)

வேடன் : பாரடி பாரடி பன்றியொன்றாங்கே
பார்த்தனை நோக்கிப் பாயுது பெண்ணே

வேடுவிச்சி : காட்டுப் பன்றியொன்று கடிதே விரையுது
காத்திட வேண்டும் பார்த்தனை நாங்கள்

வேடன் : பாவிதுரியோதனன் பார்த்தனைக் கொல்ல
ஏவிய அசுரனே பன்றியாய் வந்தான்

வேடுவிச்சி : வஞ்சகத் துரியனின் நெஞ்சில் முளைத்த
நஞ்சு நினைவினை நாம் ஒழிப்போம்

வேடன் : பன்றியைப் பாரது பார்த்தனில் பாயுது
கொன்றிடவா அன்றிச் சென்றிடவா

வேடுவிச்சி : கொல்லுங்கள் கொல்லுங்கள் பன்றியைக் கொல்லுங்கள் நல்லவரைக் காத்தல் நம் கடனே.
(இருவரும் கலைத்துச் செல்லப் பன்றி அருச்சுனனில் பாய அருச்சுனன் தவம் கலைகிறது)

அருச்சுனன் : என் தவம் கலைத்தவன் யாரடா - இப்போ
என்கொழித்தானவன் யாரடா
பன்றியைக் கொல்லவோ வந்திட்டாய் - உன்னைக்
கொன்றிடுவேனிப்போ யாரடா.
(வேடனும் அருச்சுனனும் பற்றிக்கெய்ய இருவர் அம்புகளும் பட்டுப் பன்றி விழுகிறது. அருச்சுனன் பன்றி மீது மிதித்துக் கொண்டு நிற்கின்றான்)

வேடன் : நான் எய்த பன்றியின் மீதிலே - வேட்டையில்
நாட்டம் கொண்டவன் நீ யாரடா

வசனம் : யார் நீ, ஏன் வந்தாய். நான் எய்து வீழ்த்திய பன்றியை விட்டு அப்பாலே போய்விடு.

அருச்சுனன் : என்னம்பின் அடிபட்டே இறந்தது - வீணே
உன்மத்தம் பேசாதே போய்விடு.

வேடன் : வேட்டுவன என்றென்னை எண்ணியோ - நீயும்
விரட்டி அடித்திடப் பார்க்கிறாய்

அருச்சுனன் : வில்லுக்கு விஜயன்நான் அறிந்திடு - வீணே
விறாப்புப் பேசாதே போய்விடு
(இருவரும் வில்லால் அடிபடல்)

வேடன் : வென்றிட இனியுன்னால் முடியாது - எனது
பன்றியை விட்டுயிர் தப்பிடு.

அருச்சுனன் வசனம் : அடே வேட்டுவப் பயலே விலகிப் போய்விடு. என்குணம் அறியாத ஈனப்பயலே அப்பாலே சென்றிடு. இல்லையேல் உன்னைக் கொன்றுவிடுவேன்.

வேடன் வசனம் : ஆஹா என்னையா நீ கொல்லப் போகின்றாய். நன்றாக இருக்கிறது உன்பேச்சு, உன்சொல் வீரத்தைவிட்டு வில் வீரத்தைக் காட்டு.

அருச்சுனன் : உயிர் என்றால் எனக்கென்ன வெல்லமோ - உன் மயிர் பற்றிப் பிடித்துயிர் போக்குவேன்
(அருச்சுனன் வேடனுக்கு அடித்தல். வேடர் மறையச் சிவனும் உமையும் தோன்றுதல்)

சிவன் : **இராகம் : பாகேஸ்வரி**

கயிலையின் சாரலிலே கடுந்தவம் புரிந்தோனே
மயல்தெளி மனத்தோனே மாதவம் வென்றிட்டாய்
சொல்லுக்கு அடங்காத தூயதவம் செய்தாய்
வில்லுக்கு விஜயன் நீ வேண்டும் வரம் பெறுவாய்
(அருச்சுனன் சிவனின் திருவடியில் வீழ்ந்து வணங்கு தல்)

அருச்சுனன் : வசனம் எம்பெருமானே சிவபெருமானே. அடியேனுக்கு அருள் புரிந்த பரம்பொருளே. வேடனாக வந்து என்னை ஆட் கொண்ட தயாநிதியே. இறைவா கருணைக் கடலே. உங்கள் பெருமையை அறியாமல் வேடன் என் றெண்ணிப் பரம்பொருளை வில்லால் அடித்தேனே. பெருமானே என் பிழை பொருத்தருள்வீர்

இராகம் : கர்நாடக காந்தாரி

பல்லவி

கதிநீ உமாபதி எனைக்
காத்தருள்வாய் தயாநிதி - கதிநீ......

அனுபல்லவி

ஏழை என்பிழை பொருத்தருள்வாய்
துணை புரிவாய் கதிதருவாய் - கதிநீ..

சரணம்

ஒருகாலுமே தவறாமலே
உன்னடியே நான் தொழுவேன்
பாவி என்தனைக் காத்தருள்வாய்
வந்திடுவாய் வரம் தந்திடுவாய்.

சிவன் : (பாசுபதாஸ்திரம் கொடுத்தருளல்)

இராகம் : சிந்துபைரவி

பார்த்தனே உன்தவம் பார்த்தருள் பூத்தோம்
பாசுபதாஸ்திரம் நீபெறுவாய்
தீயவர் தீயவும் தீவினை மாயவும்
பாசுபதாஸ்திரம் நீபெறுவாய்
தந்தோம் வரம் தந்தோம்
பாசுபதாஸ்திரம் தந்தோம்.


மங்களம்

இராகம் : மத்தியமாவதி

கயிலை மலை நாதருக்கு மங்களம்
காருண்யசீலருக்கு மங்களம்
அம்மை அவள் மாதுமைக்கு மங்களம்
அன்பன் விசயனுக்கு மங்களம்
தேவேந்திரனுக்கு மங்களம்
தேவாதி தேவனுக்கு மங்களம்
மங்களம் சுபமங்களம்
மங்களம் சுபமங்களம்.

1980 இசை நாடகப் போட்டியில் முதற் பரிசுபெற்றது.

**இசையமைப்பு : செல்வி சிவரூபி கதிர்காமநாதன்**
**நெறியாள்கை உதவி : செல்வி மே. ப. சவரிமுத்து.**



# இரண்டாம் சுயம்வரம்

# இரண்டாம் சுயம்வரம்

**நாடக பாத்திரங்கள்:**

1. அந்தணன் – முதிய பிராமண வடிவு
2. வீமராசன் – அரசன் கோலம்
3. தமயந்தி – தலைவிரித்த துன்பக்கோலம்
4. பிள்ளைகள் ஆண் – வாலிபன் (12 வயது)
5. பிள்ளைகள் பெண் – கன்னி (10 வயது)
6. வாகுவன் – நளனின் கறுத்த குட்டை வடிவம்
7. அயோத்தி மன்னன் – அரசன் கோலம்
8. நளன் – அழகிய கோலம்
9. கலிபுருஷன் – கறுத்த வாட்ட சாட்டமான உருவம்
10. வீமன் அரசி – அரசிக் கோலம்

## காட்சி – 1 வீமன் அரண்மனை

(வீமராசன் அரண்மனையில் அந்தணன் வந்து சந்தித்தல்)

இராகம்: சண்முகப்பிரியா

அந்தணன் : மன்னவனே வீமராசா உன்னடிகள் போற்றி வேந்தே
என்னை நீர் அழைத்த செய்தி ஏதெனவே எடுத்து
ரைப்பீர்

வீமன் : என்னினிய அந்தணரே என்துயரம் கேளும் ஐயா
பொன்மகள் என்தமயந்தி என்மகளைக் காணேனையா

அந்தணன் : என்னதான் நடந்ததுவே எனக்கதனைச் சொல்லிடுவீர்
அன்னவளைத் தேடியுங்கள் பொன்னடியில் சேர்த்தி
டுவேன்

வீமன் : இராகம்- மோகனம்
நிடதநன் நாட்டின் வேந்தன் நீள்புகழான் நளமாராசன்
சுடர்க்கொடி தமயந்தியைச் சுயம்வரத்தில் மாலையிட்டு
விடலரும் காதல்வாழ்வில் வியன்மக்கள் இருவரோடும்
அடல்செறி புகழினோடும் அரசாட்சி செய்யுங்காலை

தொடரலரும் சூதில்தோற்று தூயதன் வாழ்வும் தோற்று
நாடுநல் நகரிழந்து நன்மக்கள் தமைப்பிரிந்து
காடுதான் கதியேயாகக் கானகம் சென்றார்என்று
கேடுசூழ் செய்திகேட்டு வாடிநான் வருந்தலானேன்.

அந்தணன் : வாடிநீ வருந்தவேண்டாம் வானுயர் காடும்நாடும்
தேடிநான் சென்றேயுங்கள் செல்வங்கள் தமைச் சேர்ப்பிப்பேன்.

## காட்சி - 2 காட்டுவழி

(காட்டுவழியில் அலங்கோலமாய்த் தமயந்தி தனித்துவர
அந்தணர் சந்தித்தல்

இராகம் :சகானா

தமயந்தி : ஆடிவரும் மென்காற்றே அசைந்துவிழும் பூங்கொடியே
ஓடுகின்ற வான்முகிலே ஒலியெழுப்பும் புள்ளினமே
காடுதனில் எனைப்பிரிந்த காதலரைக் கண்டீரோ
தேடியழும் என்துயரைத் தெரிவிக்கமாட்டீரோ

அந்தணன் : கூந்தல் அவிழ்ந்துவிழக் குறுவேர்வை உடல்நனைய
பூந்தா மரைபோன்ற பொன்மேனி வாடிவிழக்
காந்தள் மலர்க்கைசோரக் கால்கள்தடு மாறிவரும்
எந்திழையே நீயாரோ என்னதுயர் உற்றனையோ

தமயந்தி : வீமன்திரு மடந்தைநான் விதர்ப்பநாட்டு இளவரசி
நாமநெடு வைவேலான் நளராசன் பத்தினிநான்

பிராமணன் : வீமராசன் தூதுவன்நான் உன்னையே தேடிவந்தேன்
தாமதமேன் வாரும்வாரும் தந்தையிடம் சேர்ந்திடுவேன்

## காட்சி – 3 வீமன் அரண்மனை

(தமயந்தி வர வீமராசனும் அரசியும் பிள்ளைகளும்
கட்டியணைத்தல்)

இராகம்: முகாரி

பிள்ளைகள் : அன்னையேதாயே அம்மா எம் உயிர்க்குயிரே
உன்னைநாம் காணாமல் உயிர்துடித்துப் போனோமே

அரசிவீமன் : கானகத்தில் காரிருளில் கணவனுனை விட்டேக
யாரை நினைத்தாயோ என்னதுயர்ப் பட்டாயோ

தமயந்தி : கணவனை நான் காணாமல் கதறிவிழுந் தோடுகையில்
காட்டிலொரு கரும்பாம்பு கவ்வியெனை விழுங்கியதே
கானகத்து வேடனதைக் கண்டென்னைக் காப்பாற்றி
தன்னுடனே வாவென்று தப்பாகக் கைப்பிடித்தான்
நானவனைக் கோபித்துப் பார்க்கஅவன் நீறானான்
ஏனோ இவ் வவலமென எண்ணிவர இவர்வந்தார்.

வீமன் : அந்தணரே மீண்டும்போய் மருகன் நளமாராசன்
எங்கிருந்தாலும் தேடி இங்கே அழைத்துவாரும்

தமயந்தி : கானகத்துக் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தர்க்குப் போதுமோ என்றுசொல்வீர்
ஏதும்பதில் சொல்வாரை நன்றாயறிந்து வாரும்
நாமவரைக் கண்டிடவே நல்லவழி இதுவாகும்.

## காட்சி – 4 வீதிவழி

(தனிவழியே அந்தணன் நளனைக்காணல்)

இராகம்: அடாணா

அந்தணன் : கானகத்தில் காதலியைக் காரிருளில் கைவிட்டுப்
போனதுவும் வேந்தர்க்கும் போதுவதோ பொருந்து
வதோ

நளன் : இன்று நடப்பதெல்லாம் பண்டை விதிப்பயனே
என்றே அறிந்திடுவீர் இதற்கேன் புலம்புகின்றீர்

அந்தணன் : என் சொல்லுக் கெதிர்மாற்றம் சொல்லும் நீர்யாரையா
என்னஊர் என்னதொழில் எவர்நீரோ சொல்ஐயா

நளன் : அயோத்திநகர் மன்னனுக்குத் தேரோட்டும் பாகன்நான்
அவருக்கு மடப்பள்ளித் தொழிலும் நான் செய்திடுவேன்

## காட்சி – 5 வீமன் அரண்மனை

(அந்தணன் வரத் தமயந்தி கேட்டல்)

இராகம்: பைரவி

தமயந்தி : எங்கெங்கு சென்றீர்ஐயா யாரும் பதமில் சொன்னாரோ
என்னுயிர் நாயகனை எங்கேனும் கண்டதுண்டோ

அந்தணர் : வாக்கினால் மன்னவனை ஒப்பான் ஒருவனுள்ளான்
ஆக்கையே நோக்கும்போது அவனுருவம் இல்லையம்மா
அயோத்திநகர் மன்னனுக்குத் தேரோட்டும் சமையலாளாம
அவனையே ஐயுற்றேன்நான் ஆராந்தறிவீர் அம்மா

தமயந்தி : மீண்டோர் சுயம்வரத்தை வீமன் திருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைப்பாய் இப்பொழுதே
மாண்தேர் அயோத்தி மன்னன் வருவானெம் மாளிகைக்கு
காண்போம் தேர்ப்பாகனையும் கண்டுண்மை தெரிந்திடலாம

## காட்சி – 6 அயோத்தி அரண்மனை

இராகம்: கேதரகௌளை

(விருத்தம்)

அந்தணன் : நன்னகர் அயோத்தி வேந்தே நாளையே வீமன்செல்வி
பொன்மகள் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வர நாளென்று
இன்னகர் வேந்தர்க்கெல்லாம் இனியநன் முரசறைந்தார்
நன்மண மாலைசூட நயந்துநீர் வருவீர் இன்றே

அயோத்திமன்: முன்னே நான் தோற்றுப்போன பெண்மகள் தமயந்திமாது
என்னையே விரும்பிரண்டாம் சுயம்வரம் கொண்டாள் இன்றே
என்னரு:ம் தேர்ப்பாகா நீ இப்போதே கொண்ர்வாய் தேரை
அன்னகர் செல்வோம் வீமன் பொன்மகள் மாலை கொள்வேன்.

(தேரோட்டம் ஜதிக்கு ஆடிச் செல்லுதல்)

## காட்சி – 7 வீமன் அரண்மனை

(அயோத்தி மன்னனை வீமன் வரவேற்றல்)

இராகம்: கல்யாண வசந்தம்

அயோத்திமன்: இன்றுன்னைக் காணும் ஆவலால் இங்குவந்தேன்
மன்றல் மலர்த்தாராய் மகள்மற்றும் உள்ளோர் நலமோ

வீமன் : நன்றாகநும்வரவு நானும் மிக மகிழ்ந்தேன்
இன்றெந்தன் மாளிகையில் இன்பாய் இருந்திடலாம்

(இருவரும் உள்ளேபோக நளன் தனிமையில்)

இராகம் : பைரவி

நளன் : என்காதல் மனையாளுக்கு இரண்டாம் சுயம்வரம் என்று
என்காதில் நாராசம்போல் இச்செய்தி கேட்கலாச்சே
என்உடல் அரவம்தீண்டி என்கோலம் மாறிப்போச்சே
என்னையார் அறிவார்நானே நளனென்றால் நம்புவாரோ

(தமயந்தி பிள்ளைகளை நளனிடம் அனுப்பித்தான் மறைந்து நிற்றல்)

பிள்ளைகள் : ஐயா நீங்கள் யாரோ ஏன்இங்கு வந்தீரகளோ
மெய்யாய் உங்களைப்பார்க்க விருப்பாய் இருக்கிறதே

நளன் : (பிள்ளைகளை அணைத்து)
என்மக்கள் போல்கின்றீர் யார்மக்கள் பிள்ளைகளே
அன்பினாலே கேட்டேன் அறியவும் ஆவல்கொண்டேன்.

பிள்ளை : மன்னுநம் நிடதநாட்டு நளராசன் மக்கள் நாங்கள்
எம்நகர் சூதில் தோற்று எந்தைதாய் காட்டுக்கேகி
அன்னையைத் தனியேவிட்டு தந்தையும் எங்கோ சென்றார்
இன்னகர் தனில் வாழ்கின்றோம் எம்நகர் பிறன்ஆள்கிறான்

நளன் : உங்கள் அரசொருவன் ஆளநீர் ஓடிவந்து
இங்கண் உறைதல் இழுக்கன்றொ இளவரசே.

பிள்ளை : எங்கோமான் வாய்மை அறிவாயோ அடுமடையா
இங்கேவீண் வார்த்தை ஏதுக்குரைத்தாய் நீ

நளன் : மன்னர் பெருமை மடையர் அறிவாரோ
உன்னை அறியா துரைசெய்த என்னை நீ
மன்னிக்க வேண்டும் மன்னர் இளவரசே
என்னிதயம் கசிந்துருக உன்னைநான் போற்றுகிறேன்.

(தமயந்தி ஓடிவந்து காலில் விழுந்து)
**இராகம்: பைரவி**

தமயந்தி : தேர்ஓட்டி போலவந்த தேர்வேந்தா என்தலைவா
பார்போற்றும் உன்னுருவம் கறுத்துச் சிறுத்ததென்ன
யார்என்ன செய்தாரோ பழையவுரு எங்கொளித்தாய்
பார்வேந்தே பவளம்போல் பழையவுருக் காட்டாயோ

நளன் : கானகத் தீயில்வெந்த கார்க்கோடன் என்னும்பாம்பைக்
காப்பாற்றும் போதில்என்னைக் கடித்திடஇவ் வுருவமானேன்
கார்க்கோடன் தந்தஇந்த ஆடையை அணிவேனானால்
பார்வேந்தன் நளனேயாவேன் வரமுண்டு பாராய் நீயே

(ஆடையுடன் வெளியே போக அழகிய நளன் வரல்)

தமயந்தி : என்னுயிரே மன்னவரே என்னிடமே வந்தனையே
பொன்னுடலம் முன்போல பொலிவுறவே கண்டனமே
என்னுயிராம் பிள்ளைகளே அன்னையரே தந்தையரே
என்துயரம் தீர்ந்ததின்று எல்லோரும் சேர்ந்தனமே.

கலிபுருஷர் : கலியன்நான் உமைப்பிடித்துக் கனதுன்பம் செய்துவிட்டேன்
வலியெல்லாம் பொறுத்தமன்னன் வாய்மையும் மனையாள்கற்பும்
கலியென்னை வென்றதாலே கடுகிநீர் நிடதம் சென்று
பொலிவுடன் ஆட்சிபெற்று புகழ்பெற்று வாழுவீரே.

முற்றும்.



# நாட்டிய நாடகங்கள்



1. சூதுப்போர்ச் சபதம்

2. நவக்கிரகங்கள்




# சூதுப்போர்ச் சபதம்

# சூதுபோர்ச் சபதம்

**நாடக பாத்திரங்கள்:**

1. கர்ணன்,
2. துரியோதனன்,
3. துச்சாதனன்
4. வீமன்
5. அர்ச்சுணன்
6. நகுலன்
7. சகாதேவன்
8. தருமர்
9. பீஷ்மர்
10. கிருபர்
11. விதுரர்
12. சகுனி
13. திரௌபதி

## மேடை




## வீதி

திரை விலகும்போது மேலேகாட்டிய வண்ணம் எல்லோரும் உறை நிலையில் நிற்கிறார்கள். வீதியில் ஒரு ஆணும் பெண்ணும் பாடி ஆடி வருகிறார்கள்.

**ஆண் : இராகம்: சங்கராபரணம்** **சதுஸ்ரநடை**

அத்தினா புரத்தினிலே அழகிய மாளிகை நடுவினிலே
அரசர்கள் சபையினிலே சூதாட்டம் ஒன்று நடக்கிறதாம்.

துரிதகதி

பெண் :

சூதாட்டத்தால் என்ன மோசம் விளையுமோ
வாருங்கள் போயதைப் பார்த்திடலாம்.

(இவர்கள் வெளியே போகத்திடீரெனச் சகுனி, துரியோதனன், கர்ணன், துச்சாதனன் துள்ளியாடுதல் மற்றவர்கள் தலை கவிழ்ந்து நிற்றல்)

சகுனி : இராகம்: அடாணா திஸ்ரநடை

வெற்றி வெற்றி வெற்றியடா
வெற்றியின்மேல் வெற்றி
சுற்றி நின்ற பாண்டவரை
தோற்கடித்தேன் சூதில்

துரியோதனன் :

நீண்டகால ஆசைஇன்று
தீர்ந்ததெடா மாமா
பாண்டவரின் செல்வமெல்லாம்
வந்ததடா கையில்

நால்வரும் :

வெற்றி வெற்றி வெற்றியடா
வெற்றியின் மேல் வெற்றி
சுற்றி நின்ற பாண்டவரைத்
தோற்கடித்தோம் சூதில்

துரியோதனன் :

பாரதத்தின் மன்னனாக
என்னையாக்கி விட்டாய்
கோயில் கட்டிக் கும்பிடுவேன்
சகுனி மாமா உன்னை
(சகுனியைத் தூக்கி ஆடுதல்)

கர்ணன் : இராகம் : ஹிந்தோளம் சதுஸ்ரநடை

பாண்டவர்கள் எமக்கடிமை
ஆகிவிட்டார் பார்நீ – அவர்
பத்தினியாம் பாஞ்சாலியைக்
கூப்பிடுவாய் சபைக்கு

துரியோதனன் :இராகம்: ஹம்சத்துவனி திஸ்ரநடை

துச்சாதனா இதோ செல்லடா – அந்தத்
திரௌபதியைச் சபைக்கு இழுத்துவா
இச்சபை யோரெல்லாம் பார்த்திட – அவளை
எங்களுக்கே உரிமை ஆக்குவோம்

(துச்சாதனன் வெளியே போக ஏனைய மூவரும் ஆடுதல்)

மூவரும் :

வெற்றி வெற்றி வெற்றிடா
வெற்றியின் மேல் வெற்றி

(துச்சாதனன் திரௌபதியை மயிரில் பிடித்து இழுத்துவர அவள் அடம்பிடித்தல்)

துச்சாதனன் :இராகம் கல்யாணி கண்டநடை

ஆடிவிலைப்பட்ட தாதி நீ – அடி
வாடி என் அண்ணன் அழைக்கிறார்
பேடிகள்போல் உன்தன் கணவன்மார் – அதோ
நாடி தளர்ந்து தவிக்கிறார்.

துரியோதனன் :

வாடி என் தொடையிலே இருந்துநீ - இந்த
வேடிக்கை எல்லாமே பாரடி
ஐவர் சுவைத்திட்ட பெண்ணடி – உன்னை
நாங்கள் சுவைத்திடல் ஆகாதோ.

**வீமன் : இராகம் : அடாணா** திஸ்ரநடை

என்ன வார்த்தையடா சொல்கிறாய்
உன்னை இக்கணத்திலே கொல்லுவேன்

(வீமன் கதாயுதத்துடன் பாய்ந்து போகத் தருமர் தடுக்கிறார்)

தருமர் :

ஆகட்டும் தம்பி பொறுத்திரு - இவர்
ஆட்டத்தைப் பின்னே முடிக்கலாம்
(வீமன் அடங்குதல்)

பாஞ்சாலி : இராகம்: சுபபந்துவராளி கண்டநடை

பெண்ணென்றால் விற்பனைப் பண்டமாச்சோ - இது
பெண்களை விற்றிடும் சந்தையாச்சோ – தருமர்
தன்னை இழந்திட்ட பின்னாலே சூதிலே
என்னை வைத்தாடுதல் ஞாயமோ

பீஷ்மரே கிருபரே விதுரரே – நீங்கள்
வேதமறிந்தவர் அல்லிரோ
இந்தக் கொடுமையைத் தடுத்திட – நீங்கள்
எண்ணாதிருப்பது நீதியோஇ

விதுரன் :

பாவிகளே இந்தக் கொடுமைகள் - எங்கள்
பாரத நாட்டுக் கடுக்குமோ
பேய்களும் செய்திடாச் செயலிது – வீணே
மாய்ந்து மடிந்திடப் போகிறீர்

துரியோதனன் : இராகம்: கல்யாணி திஸ்ரநடை

சாத்திரம் பேசாதே விதுராநீ - இந்தச்
சபையில் நடப்பதைப் பார்த்திரு
அன்றென்னைப் பார்த்துச் சிரித்தவள் - இவளை
இன்றிந்த உலகமே சிரித்திடச் செய்வேன்

வேறு

கர்ணன் :

அடிமைகள் மார்பிலே ஆடை ஆகாதடா தம்பி
அடிமைப்பாண்டவரின் ஆடைகளைந்திடுதம்பி

(துச்சாதனன் பாண்டவர் பக்கம் போக அவர்களே மேலாடைகளைக் களைதல்)

பாஞ்சாலியுமெங்கள் அடிமைப் பெண் தானடாதம்பி
பாய்ந்துபோய் அவளுடை ஆடையும் களைந்திடுதம்பி

(பாஞ்சாலி பக்கம் பாய்ந்து போதல்)

பாஞ்சாலி : இராகம்: மோகனம் திஸ்ரநடை

துட்டனே எட்டியே நில்லடா என்தன்
கிட்ட வராதே முட்டனே.

துச்சாதனன் :

என்னடி சொல்கிறாய் தாசிநீ – உன்னை
என்ன செய்வேனென்று பாரடி

பாஞ்சாலி :

குலமகள் என்னைநீ தீண்டினால் - உங்கள்
குலம் நாசம் ஆக்கிடும் வேனடா

துச்சாதனன் :

ஆடைகளைந்திடு வேனடி – உன்னை
அலங்கோலம் செய்திடுவேனடி
அரசசபையில் உள்ளோரெல்லாம் - உன்தன்
அழகை ரசிக்கச் செய்வேனடி.

(சேலையை உரிதல், பாஞ்சாலி மல்லுக்கட்டி அவலக்குரலில் பாடி ஆடுதல்)

பாஞ்சாலி : இராகம்: சகானா சதுஸ்ரநடை

பாண்டவரே உங்கள் பத்தினியைப் பாருங்கள்
பாதகன் துகிலுரியப் பார்த்திருத்தல் நீதியோ
சபையிலுள்ள பெரியோரே சற்றும் இரங்கீரோ
அவமானத்தைத்தடுக்க யாரும்வர மாட்டீரோ

பெண்களைப் பெற்றோரே பெண்களுடன் பிறந்தோரே
பெண்பாவம் அல்லவோ பெரியபழி கொள்வீரோ
பெண்ணென்றால் அங்கே பேயும் இரங்குமென்பார்
பெருஞ்சபையில் எனக்கிரங்க ஒரு பேய்கூட இல்லையோ

வேறு

பாஞ்சாலி :

ஐயகோ தெய்வமே கண்பார்க்க மாட்டாயோ
தெய்வமே நான் தேம்பிஅழல் கேட்கலையோ

கண்ணா கண்ணா கண்ணா கோவிந்தா – என்
எண்ணமெல்லாம் நீ நிறைந்தாய் உன்பாதம் தஞ்சமையா
உன்னடிமை என்னைநீ உலகறியக் காத்திடுவாய்
கண்ணா கண்ணா கண்ணா ஓம்ஹரிஹரி கண்ணா.

(பின்னணியில் ஹரிஓம் ஹரிஓம் என வாத்தியங்கள் ஓங்கி ஒலிக்கின்றன. ஆடைவளர்கிறது. துச்சாதனன் மயங்கி விழுகிறான் எல்லோரும் திகைத்து நிற்றல்)

வேறு

துச்சாதனன் :

என்தலை சுற்றுதடா – அண்ணா
என்கண்கள் இருளுதடா
அறிவு மயங்குதடா – அண்ணா
அணைத்திடுவாயேடா

சபதம்

வீமன் : இராகம் : ஹம்சத்துவனி திஸ்ரநடை

என்கையில் கதைமீதில் - எம்மைக்
காக்கின்ற கண்ணல் கழல் மீதிலாணை
பாரதப்போர்வரும் காண்பீர் - இந்தக்
கௌரவர் ரத்தம் கடலெனப்பாயும்

மன்னவர்கள் சபைமுன்னே – எங்கள்
பொன்னான குலமகள் பாஞ்சாலி தன்னை
தொடைமீது வந்திரு என்றான் - கொடிய
துரியோதனன் தொடை பிளந்துயிர் குடிப்பேன்

துகிலை உரிந்திட்ட பேதை – கெட்ட
துச்சாதனன் தோள் இரத்தம் குடிப்பேன்
அதுவரை கையினால் நீரை – என்றும்
அருந்திட மாட்டேன் இது சத்தியம் காண்பீர்.

வேறு

அர்ச்சுனன் : இராகம் : ஹம்சத்துவனி திஸ்ரநடை

கண்ணன் கழல்மீதில் ஆணை – என்தன்
கையினில் காண்டீப வில்லினும் ஆணை
பாஞ்சாலி துகிலினை உரிந்திடச் சொன்ன - இந்தப்
பாதகன் கர்ணன் உயிரினைக் குடிப்பேன்
பாவச் செயலினைப் பார்த்துக் கொண்டிருக்கும்
பாவிகள் கூட்டத்தைப் பூண்டோடொழிப்பேன்
பாரதப் போர்வரும் காண்பீர் - இந்தப்
பார்த்தனின் போர்த்தொழில் வித்தைகள் காண்பீர்

வேறு


திரௌபதி : இராகம் ஹம்சத்துவனி திஸ்ரநடை

ஆதிபராசக்தி ஆணை - இந்த
அகிலத்தின்குல மங்கையர் ஆணை

பாவிதுச்சாதனன் செந்நீர்அந்தப்
பாழ்துரியோதனன் ஆக்கைஇரத்தம்
மேவிஇரண்டும் கலந்து - குழல்
மீதினில்பூசி நறுநெய்குளித்தே
சீவிக்குழல் முடிப்பேன்யான் - இது
செய்யுமுன்னே முடியேன் இது காண்பீர்

(ஓம் ஓம் ஓம் ......................................................
வான்இடிப்பது போல வாத்தியங்கள் ஒலித்து ஓயும்)

(2015 தமிழ்த்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில்
முதற்பரிசு பெற்றது)




# நவக்கிரகங்கள்

# நவக்கிரகங்கள்

## ஆடை ஆபரணங்கள்

1. சூரியன்

செம்பருத்தி நிறமேனி
சிந்தூர வர்ணஆடை
மாணிக்க மணிமாலை
ஏழுவர்ணக் குதிரைபூட்டிய தேர்வாகனம்

2. புதன்

பச்சைப்பட்டுடை
பச்சை மரகத மணிமாலை
வெள்ளைக்குதிரை
விஷ்ணு – பச்சைமலர்

3. சுக்கிரன்

வெள்ளைப்பட்டுடை
வைரமணிமாலை
வெள்ளை நிறக்காளை வாகனம்
மகாலட்சுமி – வெள்ளைமலர்

4. சந்திரன்

பால்போல் வெள்ளை
வெண்பட்டுடை
வெண்முத்துமாலை
முத்துவிமானம்
பார்வதி –

5. செவ்வாய்

சிவந்தமேனி
செம்பட்டுடை
சிவப்பு வைரமாலை
அன்னப்பறவை
சுப்பிரமணியர் – செம்மலர்

6. வியாழன்

பொன்மஞ்சள் நிறஆடை
புஷ்பராக மணிமாலை
தங்கத்தேர்
தட்சணாமூர்த்தி – பொன்மஞ்சள் பூ

7. சனி

கரியநிற ஆடை
கருநீல மணிமாலை
காகவாகனம்
விஷ்ணு – நீலமலர்

8. இராகு

கருமேனி
கரும்பட்டும் சித்திர ஆடை
கரிய ஆட்டுக்கடா
கரும்பாம்பு வடிவு
காளி

9. கேது

சிவப்பு புகைநிறமேனி
சிவப்புப் புள்ளி நிறஆடை
வைடூரியமணிமாலை
சிங்கவாகனம்
விநாயகர் – அறுகு

(ஒரு முனிவரும் அவர்களது ஆண் பெண் சீடர்களும் மேடையில் தோன்றிப் பாடுகின்றார்கள்)

## நவக்கிரக வணக்கம்

இராகம் : ஹம்சத்துவனி                தாளம் : ஆதி

பல்லவி

நன்மைதரும் நவக்கிரகங்கள் - இந்த
உண்மைதனை நெஞ்சில் உணருங்கள்

சரணம்

அறிவுக்குச் சூரியன் அழகிற்குச் சந்திரன்
அங்காரகன் இதம் புதன் கலைக்காம்

அருளுக்குக் குரு செல்வம் அளிப்பவன் சுக்கிரன்
அனுபவம் தருபவன் சனி பகவான்

போகத்தை ராகுவும் ஞானத்தைக் கேதுவும்
பூரணமாகத் தந்திடுவார்

ஆகமப்படியுள்ள ஆலயம் சென்று அவர்
அடிபணிந்தால் நல்ல வரம்பெறலாம்.

(பின்திரையில் சூரிய குடும்பக் காட்சி)

இராகம் : ஹம்சத்துவனி                தாளம் : ஆதி

ஆண் சீடர் :

ஆகாய வீதியிலே அதிசயம் பார் ஐயா
அற்புதஜாலக் கோலங்கள் ஏதையா

பெண் சீடர் :

எத்தனை வர்ணங்கள் எத்தனை வடிவங்கள்
அத்தனையும் அங்கே அந்தரத்தில் தொங்குதையா

முனிவர் :

அண்டவெளியில் இன்னும் ஆயிரம் கோடிகோடி
அதிசய கோலங்கள் அழவில சுழல்கிறதே

அண்ட வெளியிலுள்ள அந்தரங்கங்களெல்லாம்
அறிந்திட வாழ்நாளே போதாதே

வானத்தில் தெரியுமந்த சூரிய குடும்பத்தைப்பார்
வான்வெளி ரகசியங்கள் விளங்கிடுமே.

இராகம் : சாரங்கா　　　　　　　　தாளம் : ஆதி

சீடர்கள் :

கண்ணுக்குத் தெரியுமந்தச் சூரியகுடும்பத்தின்
கதையினைச் சொல்லிடுங்கள் கண்டுகளித்திடலாம்

முனிவர் :

சூரியனில் இருந்து பிரிந்திட்ட கோள்கள் இவை
சூரியனைச் சுற்றிச் சுழன்று வருதல் பாரீர்

சூரியன் புதன் சுக்கிரன் பூமி சந்திரன் செவ்வாய்
வியாழன் ராகுகேது சனிநவக் கிரகமிவை

சீடர்கள் :

எப்படி இவைகள் எல்லாம் எங்கிருந்து வந்தன
இப்படிச் சுழல்வதற்கு எப்படி முடியும்ஐயா

முனிவர் :

அந்தரத்தில் நின்று நவக்கிரகங்கள் சுழல்கின்ற
அந்தரங்கம் அந்த ஆடலில் தெரியுதுபார்.

ஜதிக்கு ஆடுதல்
(சிவன் - சிவதாண்டவம் ஆடுதல்)

இராகம் : கல்யாணி　　　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

முனிவர் :

ஆடுகின்றான் ஐயன் ஆடுகின்றான்
ஆனந்தமாநடம் ஆடுகின்றான்

அனுபல்லவி

பெண்சீடர் :

ஏனிந்தமா நடம் ஆடுகின்றான்
என்னேரமும் எதற்கு ஆடுகின்றான்

சரணம்

முனிவர் :

கோடானு கோடியண்ட கோளங்கள் அத்தனையும்
ஆடிச் சுழன்றுவர அண்டவெளியில் நின்று - ஆடு........

அண்டமெலாம் படைத்த அப்பனின் அற்புதத்தால்
அண்டபுவனமெல்லாம் அந்தரத்தில் ஆடுதல்பார் - ஆடு........

அனைத்திலும் கலந்துநின்று ஆடுகின்றான் அவன்
அவன்ஆட அனைத்துமே ஆடும் ரகசியம்பாராய் - ஆடு..........

அண்டத்தில் ஆடல் எல்லாம் பிண்டத்தில் ஆடுகின்ற
அதிசய ஆட்டத்தையும் அறிந்திடுவீர்.

இராகம் : தேஸ்　　　　　　　　　　தாளம் : ஆதி

ஆண் சீடர் :

அண்டத்தில் சுழன்றுவரும் நவக்கிரகங்கள் எங்கள்
பிண்டத்தை வாழவைக்கும் பேரதிசயம் என்னவோ

பெண் சீடர் :

பௌதிக மூலங்கொண்ட நவக்கிரகங்களுக்குள்
தெய்வீக ரகசியத்தை வைத்தவர்யார் ஐயா

முனிவர் :

விண்முதல் பூதங்களால் மண்ணுலகைப் படைத்து
எண்பத்துநான்குலட்சம் யோனி பேதங்கள் வைத்தான்

அனைத்தையும் படைத்துக்காத்து ஐந்தொழில் ஆடல்செய்வான்
வினைப்பயன் ஊட்டுதற்கு நவக்கிரகங்கள் வைத்தான்.

ஆண் சீடர் :

எப்படி நவக்கிரகங்கள் இன்பதுன்பங்கள் செய்யும்
அப்படிச் செய்வதற்கு அவற்றால்முடியு மாமோ

முனிவர் :

அவரவர் செய்தவினைப் பயன்களை அவரவர்க்கு
இறைவனின் ஆணைப்படி கிரகங்கள் ஊட்டுவிக்கும்

விருத்தம் - ஹிந்தோளம்

முனிவர் :

ஆகாயம் நிலம்நீர் காற்று தீயெனும் பஞ்சபூதம்
ஆயவற்றைப் படைத்து அவற்றினால் உலகையாக்கி
ஏகாந்தமாக நின்று யாவையும் இயக்குகின்ற
நாதாந்தப் பொருளாம் அந்த நாயகன் ஆடல்பாரீர்

**இராகம் : ஹிந்தோளம்** **தாளம் : திஸ்ரநடை ஏகதாளம்**

**சீடர்கள் :**

நவக்கிரகங்களின் இயல்பை - நாங்கள்
நன்றாய் அறிந்து விளங்கிட வேண்டும்.

முனிவர் :

அவரவர் செய்திட்ட வினையை - இங்கு
அவரவர் அனுபவித்திட வைத்தல்தானே
இவர்களின் கடமையே யாகும் - இதை
எல்லோரும் நல்லாக அறிந்திட வேண்டும்.

நல்வினைப்பயன்தரும் போது - கிரகம்
நல்ல இடத்திலே நின்றெமைப் பார்ப்பார்
தீவினை விளைகின்ற போது - இவர்கள்
தீய இடத்திலே நின்றெமைப் பார்ப்பார்

பயன்தருபவர் இவரல்லர் - வினைப்
பயனினை ஊட்டுதல் செய்வதே பணியாம்
மழைக்குக் குடைபோல இவர்கள் - தம்மை
வணங்கிடுவோருக்கு ஆறுதல் தருவார்.

இராகம் : பூபாளம்

விருத்தம்

முனிவர் :

பகலோடுஇரவும்தந்து பருவகாலங்கள் தந்து
ஒளியொடுமழையும் தந்து உலகினை வாழவைக்கும்
பகலவன் ஏழுவர்ணக் குதிரைகள் பாயும் தேரில்
தகதகவென்ன வான வீதியில் வருதல்பாரீர்

## சூரியன் வருகை

(ஏழுவர்ணக் குதிரைகள் பூட்டிய தேரில் சூரியன் வருகிறார்)

இராகம் : பூபாளம் தாளம் : திஸ்ரநடை

பல்லவி

செக்கச் செவேலெனத் திக்குகளெங்கணும்
செங்கதிர் வீசிய சூரியன் வாறார்.

சரணம்

தக்கத் தகதிமி தகதிமி தோமெனும்
தாளக்கதியிலே தாவித்தாவிப் பாய்ந்து
ஏழுவர்ணஜாலக் குதிரைகள் பூட்டிய
தேரிலே சூரிய தேவன் இதோ வாறார்

செம்பருத்திநிற மேனி ஜொலித்திடச்
சிந்தூரவர்ண ஆடை பளிச்சிட
மாணிக்க மணிமாலை மார்பில் ஒளிர்ந்திட
மாதமோர் ராசியில் வலமாய் வருகிறார்.

வேறு

மேடத்தில் உச்சம் பெற்றுநின்றே அவர்
மேலான அறிவொடு புத்தியும் தந்து
சொத்துச் சுகங்களும் உத்தியோகங்களும்
மெத்தக் கொடுத்தவர் மேன்மைப்படுத்துவார்.

## சூரியன்

சீடர் : இராகம்: பூபாளம்

வீரியமே மிகைப்படைத்த நவக்கிரக நாயகனாம்
சூரியனார் பல்லுடைந்து அவமானப் பட்டதுமேன்
பாரிலுளார் பழத்தினையே படைத்தவனை வணங்குவதேன்
தேவரீர்நீர் எமக்கதனைச் செப்பிடவே வேண்டுமையா.

முனிவர் :

பிரமனின் புத்திரன் தக்கனென் றொருவன்
பெரும்பெரும் தவஞ்செய்து வரம்பல பெற்றான்
சிவசக்தி உமையைத் தன்மகள் ஆகிட
சிவனிடம் வேண்டி வரமும் பெற்றான்
உமையும் தாட்சா யினியெனும் பெயருடன்
தக்கன் மகளாய் வளர்ந்து வந்தாள்
உமையின் தவத்தால் சிவனும் வந்து
தாட்சா யினியைக் கூட்டிச் சென்றார்.

தக்கன் தனது மருகன் சிவனெனக்
கர்வம் கொண்டு கயிலை சென்றான்
சிவனைக் காண முடியா தென்றவனை
தூதர் திருப்பி அனுப்பி விட்டார்
கோபங் கொண்ட தக்கன் சிவனை
நிந்தித் தபராத யாகம் செய்தான்
சிவனை நிந்தித்த அந்தயா கத்துக்கு
தேவர்கள் உடனே சூரியன் சென்றான்
வீர பத்திரர் யாகத்தை அழித்துத்
தக்கனின் தலையை வெட்டிய தோடு
சூரியன் பல்லையும் தகர்த்து விட்டார்
பல்லை இழந்த சூரியன் வருந்தி
பழத்தினை உண்டே வாழுதல் ஆச்சு.

## புதன் வருகை

இராகம் : ஹம்சானந்தி தாளம் : திஸ்ரநடை

முனிவர் :

பச்சைப் பசேலெனப் பட்டுடை உடுத்தி
பச்சை மரகத மணிமாலை பூண்டு
தக்கத்தக வெள்ளைக் குதிரையில் ஏறித்
தாமத குணத்துடன் வாறார் புதன்பார்

உச்சம் பெற்றுக்கன்னி ராசியில் நிற்பார்
வித்தையும் புத்தியும் விவேகமும் தருவார்
வாக்கு வன்மை பக்தி வியாபாரம் செல்வம்
வளம்தந்து மேன்மையாய் வாழ்ந்திட வைப்பார்

மாதமொருராசி சஞ்சாரம் செய்வார்
மாமா காரனாகி மங்கலம் தருவார்
சூரியன் பக்கத்தில் சுழன்று வருவார்
நேரிய கோள்களில் சிறியவர் இவர்தான்

விருத்தம்

புதனிவர் தன்பணி செய்ய என்றென்றைக்கும்
துணையாய் இருக்கின்ற அதிதெய்வம் விஷ்ணு
பச்சை மலர்கொண்டு பூசனை செய்தால்
புதன்தோசம் எல்லாமே நீக்கியருள் செய்வார்.

## சுக்கிரன் (வெள்ளி) வருகை

இராகம் : வசந்தா தாளம் : திஸ்ரநடை, ஏகதாளம்

முனிவர் :

வெள்ளை வெளேரென வெண்பட்டுடுத்தி
வைரமணிமாலை மார்பிலணிந்து
வெள்ளை நிறக்காளை மாட்டுவாகனத்தில்
வெள்ளி எனும் சுக்கிரன் வாறர் இதோபார்

மீனத்தில் உச்சத்தில் நிற்கின்ற போது
மேனிலைச் சம்பத்துத் திரவியம் தியாகம்
அள்ளித் தந்தே சுவாமி தரிசனத்தோடு
அழகான மனைவியும் மக்களும் தருவார்.

வேறு

மாதமொரு இராசியிலே சஞ்சாரம் செய்வார்
காதல் உணர்வூட்டிக் கைகூட்டி வைப்பார்
மனம் நிறைந்த வாழ்வு வளம் தந்தே
மதிப்போடும் புகழோடும் வாழ்ந்திட வைப்பார்

விருத்தம்

இராகம்: மாயாமாளவ கௌளை

சுக்கிரன் தன்பணியினையே செய்ய என்றும்
துணையாகும் அதிதெய்வம் மகாலட்மியாவார்
வெள்ளை மலர் கொண்டவரைப் பூசை செய்தால்
வெள்ளியின் தோசங்கள் நீக்கி அருள்வார்

சீடர் :

அள்ளிக் கொடுக்கும் வெள்ளியைப் பாரும்
அவர்க்கேன் ஒருகண் குருடாப் போனது
கொள்ளை அறிவும் கூரிய புத்தியும்
உள்ளவர் வெள்ளி ஏன்குரு டானார்

முனிவர் :

அசுரர் குலகுரு வெள்ளி அவரைச்
சுக்கிரன் என்றும் சொல்லிடு வார்கள்
மாபலிச் சர்க்கர வர்த்தியென் றேயொரு
அசுரர் குலமன்னன் ஆட்சி செய்தான்
எவர்எது கேட்டாலும் இல்லையென் னாமலே
ஈந்து பெருங்கர்வம் கொண்டு நின்றான்
அன்னவர் கர்வத்தை அடக்கிட விஷ்ணு
சின்னதோர் வாமன வடிவங் கொண்டே
மூன்றடி நிலத்தினைக் கேட்டு நின்றான்

சின்னவ னேஇதோ அளந்து எடுத்திடு
என்றே கெண்டியில் தாரை வார்த்தான்
வாமன னாய்நின்ற விஷ்ணுவும் மாபெரும்
விஸ்வரூ பத்துடன் அளக்க வந்தார்
வெள்ளி அதனைத் தடுத்திட வந்து
கெண்டியில் வண்டாகி அடைத்து நின்றான்
விஷ்ணுவோர் தர்ப்பையால் அடைப்பிலே குத்த
அடைத்திட்ட வெள்ளியின் கண்குரு டாச்சு.

## சந்திரன் வருகை

இராகம் : மாயாமாளவ கௌளை ' தாளம் : திஸ்ரநடை, ஏகதாளம்

சந்திரன் இதோவாறார் பாரும் இவர்
தாய்பூமி யிடத்திலே பிரிந்த குழந்தை
தாயைத் தினம் சுற்றி வருவார்
தண்ணென்ற குளிர்மையை அள்ளிச் சொரிவார்

பால்போல் நிறம் வெள்ளை யாவார் - நல்ல
வெண்பட்டு வஸ்திரம் பூண்டு வருவார்
வெண்முத்து மாலைவிளங்க - முத்து
விமானத்தில் பூமியை வலமாய் வருவார்

வேறு

உச்சமாய் இடபத்தில் நிற்பார் - அப்போ
மெச்சும் கவிஞனாய் மேன்மை கொடுப்பார்
பட்டுப் பீதாம்பரம் வைரநகைகள் - தந்து
எட்டுத்திசையிலும் எழில்பெற வைப்பார்.

காம்போதி - விருத்தம்

சந்திரன் தன்பணி செய்ய என்றென்றும்
தக்க உதவியாய்ப் பார்வதி இருப்பார்
பார்வதியைப் பூசை செய்து தொழுதால்
யார்க்குமே சந்திர தோசம் வாராதே

சந்திரன்

சீடர் இருவர் :

குளிர் நிலவைத் தந்திடும் குணம் உடைய சந்திரன்
வளர்வதும் தேய்வதுமாய் வருவதென்ன காரணமோ

குரு :

தக்கன் பெரிய தவம்செய்து புத்திரிகளையே பெற்றனனே
தக்கன் பெற்ற புத்திரிகள் இருபத்தேழு பேராவார்
அச்சு வினியே முதலாக ரேவதி என்பவர் ஈறாக
உருவம் திருவும் உடையவராய் உவந்து வந்து வளர்ந்தனரே
இருபத் தேழு பெண்களையும் சந்திரன் மணந்தான் அவர்களிலே
விருப்பத்தோடு ரோகிணியை மட்டும்கூடி வாழ்ந்திட்டான்.
மற்ற இருபத் தறுவரையும் ஒதுக்கித் தானே வைத்துவிட்டான்
மனைவி மாரை ஒதுக்கிவைத்த மாபா தகத்தைச் செய்ததனால்
தேய்ந்து தேய்ந்து போகவெனத் தக்கன் சாபம் இட்டுவிட்டான்
தக்கன் இட்ட சாபத்தால் சந்திரன் தினம்தினம் தேய்ந்து வந்தான்
தன்னைக்காத்து அருளுகென சிவனிடம் அழுது தொழுதுநின்றான்
வளர்வதும் தேய்வதும் ஆய்வாழ்நாள் முற்றும் ஆவாய் நீயென்றும்
பெண்களை ஒதுக்கி வைப்போர்க்குப் பெரிய பாடம் இது என்றும்
சிவனும் சாபம் போக்கியவன் குறையை நீக்கி அருள்புரிந்தான்
அன்று முதலாய் சந்திரனும் வளர்ந்து தேய்ந்து வருகின்றான்.

## செவ்வாய் வருகை

இராகம் : காம்போதி தாளம் : திஸ்ரநடை

அங்காரகன் செவ்வாய் வாரார் வாரார்
அன்னப் பறவையில் ஆனந்தமாக
செக்கச் சிவந்த வடிவில் - நல்ல
செம்பட்டு வஸ்திரம் பவளங்கள் பூண்டு

மகரத்தில் உச்சம் பெறுவார் - நல்ல
மாபெரும் பதவியும் வெற்றியும் தருவார்
வீடுமனை மக்கள் சோதரரோடு - செல்வம்
மேன்மையுடன் தந்து மேலாக்கி வைப்பார்

ஒன்றரை மாதமோர் ராசியில் - நின்று
உலகை வலம் வரும் செவ்வாய்க்கிரகம்
நன்றல்லாப் பார்வை பார்ப்பாரேல்
நமக்குப் பலதுன்ப சங்கடம் உண்டு

விருத்தம்

இராகம்: சண்முகப்பிரியா

செவ்வாய் தன் பணியினைச் செய்ய என்றும்
துணையாகும் தெய்வம் சுப்பிரமண்யரைச்
செம்மலர் கொண்டு பூசித்து வந்தால்
செவ்வாயின் தோசம் போய் சுகம்பிறக்கும்

## வியாழன் வருகை (குரு)

இராகம் : சண்முகப்பிரியா தாளம் : திஸ்ரநடை

பொன்மஞ்சள் நிறத்தியே ஆடைபுனைந்து
புஷ்பராக மணிமாலை அணிந்து
தங்கத்தேர் ஏறியே தகதகவென்று
சாந்தகுணக்குரு வியாழன் வாறார்பார்

கர்க்கட கத்திலே உச்சம் கொடுத்து
அற்புத பரிமள கந்தம் மணக்க
நற்குரு பதவியில் யாவரும் போற்ற
ஒப்பில் பெருமகனாகவே வைப்பார்

ராசியில் ஒருவருடம் சஞ்சாரம் செய்வார்
யாவர்க்கும் நீதி வழங்கியே வாழ்வார்
சென்மத்தில் சீதையைச் சிறைப்படவைத்தார்
மூன்றிலே துரியோதனன் தலைபறிபோச்சு

நாலிலே தருமராசன் வனவாசமே போனார்
ஆறிலே அரிச்சந்திரன் கால்தளைப் பட்டார்
எட்டினில் வாலிதன் பட்டம் இழந்தான்
பன்னிரண்டில் ராவணன் களத்திலே மாண்டான்.

விருத்தம்

வியாழன் தன் பணியினைச் செய்திட என்றும்
உதவும் அதிதெய்வம் தட்சணாமூர்த்தி
பொன்மஞ்சள் பூவினால் பூசித்து வணங்க
தன்னிலே குருதோசம் தானாய் விலகும்.

## சனி வருகை

**இராகம் : ஆபோகி** **தாளம் : திஸ்ரநடை**

கன்னங் கரியநிற ஆடை அணிந்து
காகம் எனும்பட்சி வாகனமேறி
கருநீல மணிமாலை மார்பிலிலங்க
கனசச்சிதமாகச் சனிபகவான் வாறார்

உச்சம் பெற்றேதுலா ராசியில்நின்று
உல்லாச வாழ்வுமனோ தைரியம் தந்து
அச்சமில்லா ஆயுள் பலத்தோடு வாழ
அதிசய ஆற்றலை அள்ளித் தருவார்

கெட்ட இடத்திலே நின்று பார்ப்பாரேல்
நட்டம் சிறை மோசம் மானபங்கம் வரும்
கட்டிய மாடிமனை விட்டுப் பிரிந்து
காடேக வேண்டிய கட்டமும் வருமே

இராகம் ஆனந்தபைரவி - விருத்தம்
சனிபகவான் தனது பணியினைச் செய்ய
துணையாக நிற்பார் மகாவிஷ்ணு மூர்த்தி
கருநீலமலராலே பூசனை செய்தே
எள்ளெண்ணெய் எரித்திடச் சாந்தி தருவார்

## சனி

**சீடர்கள் :**

கண்டவர் அஞ்சிடும் சனீஸ்வரனுக்குக்
கால்கள் ஏன்முடம் ஆனதையா
முடக்குச் சனியெனச் சொல்லிடக் கால்கள்
முடங்கிப் போகக் காரணமேன்

முனிவர் :

சூரியனும் சாயா தேவியும் பெற்ற
புத்திரன் இந்தச் சனீஸ்வரன் பார்
பெரிய தாயார் எடுத்து அணைக்க
அவளைக் காலால் உதைத்து விட்டான்
உதைத்த கால்முட மாகுக வென்று
இட்டாள் சாபம் கெட்டது காலே
முடக்குச் சனியின் பார்வை பட்டவர்
முடமாய்ப் போவார் என்பது உண்மை
காலால் எவரை உதைத்தாலும் மவர்
கால்முட மாகும் என்பதை அறிவீர்

## இராகு வருகை

இராகம் :ஆனந்தபைரவி தாளம் : திஸ்ரநடை

கரிய நிறமேனி நிழற்கிரகம் ராகு
கரும்பட்டுச் சித்திர ஆடையணிந்து
கரியநிற ஆட்டுக் கடாவிலே ஏறி
கரும்பாம்பு வடிவிலே வாரார் பார்ராகு

விருட்சிக ராசியில் உச்சம் கொடுப்பார்
விரும்பிய கல்விமனோ தைரியம் தருவார்
பெரும்பொருள் போகமும் பூமியால் லாபமும்
பலதல யாத்திரைப் பலனையும் தருவார்

வேறு

ஒன்றரை வருஷமோர் ராசியில் நிற்பார்
என்றும் இடமாகச் சுற்றியே வருவார்
காளிகா தேவியை அதிதெய்வமாகவே
கருதிவழிபடுவோர் துயர்தீர்ப்பார்

## இராகு கேது

**சீடர்கள் :**

இராகு கேது என்றிரு பாம்புக்
கிரகம் வலமாய் வருவதும் ஏன்
அசுரத் தலையும் பாம்பும் உடலும்
பாம்புத் தலையும் அசுர உடலும்
கொண்டவர் வானில் வருவதும் ஏன்

**முனிவர் :**

தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக்
கடைந்து அமுதம் பெறவே விரும்பி
மேரு மலையை மத்தாய் நாட்டி
வாசுகிப் பாம்பை கயிறாய் மாட்டி
இருபக் கத்தும் தனித்தனி நின்று
இழுத்து இழுத்துக் கடைந்த போதில்
அமுதம் திரண்டு வந்த வுடனே
அமுதத் தைத்தாம் தனித்தே உண்ண
எண்ணிய தேவர் கண்ணனை வேண்ட
கண்ணன் மோகினி வடிவாய் வந்து
அசுரரை மயக்கித் தேவருக் கமுதை
அள்ளி அள்ளிக் கொடுக்கும் போதில்
அதனைக் கண்ட அசுரன் ஒருவன்
இடையில் கையை நீட்டி அமுதை
வாங்கி வாயில் போட்டு உண்டான்
கண்ட கண்ணன் அவனது தலையை
வெட்டிப் பாம்பாய்ப் போவாய் என்றே
இட்டான் சாபம் அதுபலித்திடவே
அமுதம் உண்ட காரணத் தாலே
அசுரத் தலையும் பாம்பின் உடலும்
பாம்புத் தலையும் அசுரன் உடலும்
பெற்றே இராகு கேது வெனஇரு
கிரகங்கள் ஆகித் திரிதலைப பாரும்

இராகம் : ஆனந்தபைரவி தாளம் : திஸ்ரநடை

## கேது வருகை

சிவப்புப்புகைநிற நிழற்கிரகம்கேது
சிவப்புப்புள்ளிநிற ஆடையணிந்து
வைடூரியமணி மாலைதுலங்க
வெஞ்சினச்சிங்கத்தில் ஏறியேவாரார்

விருட்சிகராசியில் உச்சம்கொடுப்பார்
வேணடுமளவும்ஞான சம்பத்துத்தருவார்
குருவுக்கும்சனிக்கும் இடையிலேசெல்வார்
வருவதுஇடமாகச் சுற்றியேவருவார்

விருத்தம்

கேதுதன்பணியினைச் செய்வதற்குத்துணை
ஞானவிநாயகன் அதிதெய்வமாவார்
அறுகுமலர் கொண்டு அர்ச்சித்துத் தொழுதால்
அருந்துயர்போக்கிநல் ஞானந்தருவார்

(அடுத்தகாட்சி சிவபெருமான் நடுவில் நின்று ஆட நவக்கிரகங்கள் அவரை வணங்கிக் கொண்டு தங்கள் தங்கள் திக்கில் சென்று நின்று ஆடும் காட்சி வரும்)

இராகம் : மத்தியமாவதி தாளம் : சதுஸ்ரநடை

ஆடுகின்ற இறைவன் ஆடுகின்றான் அவன்
ஆட்டுவிக்க நாங்கள் ஆடுகின்றோம்

வாடிடும் பயிருக்கு மழையெனவே மக்கள்
வாட்டத்தைப் போக்கிட ஆடுகின்றான்
தேடிவருவோர்க்குத் துன்பம் துடைத்திடக்
கூடிய அருள்புரிந்து ஆடுகின்றான்.

அவரவர் செய்திட்ட வினைகளின் பயனை
அவரவர்க்கு ஊட்ட நாம் ஆடுகிறோம்
நல்லன செய்தே நீர் நன்மைகள் பெறுவீர்
நல்லவரை நாங்கள் காத்திடுவோம்.

வணக்கம்


*இசையமைப்பு: சங்கீதபூஷணம்: ஹம்சானந்தி தர்மபாலன்*



# சிந்துநடைக் கூத்து



1. மாங்கனி
2. நிறையுணவுச் சத்துக்கள்



# மாங்கனி

# மாங்கனி பெற்ற பிள்ளை

சிந்து நடைக்கூத்து

(கயிலாயத்தில் சிவனும் உமையும் இருக்க அங்கு நாரதர் மாங்கனியுடன் வருதல்)

(அம்மாவைத் தேடியல்லோ.... என்ற மெட்டு)

நாரதர் : சிவனாரைத் தேடியல்லோ நாரதரும் நானே - வெகு
சீக்கிரமாய் ஓடிவாறேன் நாரதரும் நானே
மூவுலகும் சஞ்சரிக்கும் நாரதரும் நானே -சிவனை
முடிசாய்த்துத் தெண்டனிட்டேன் நாரதரும் நானே
கயிலாய நாதரிடம் நாரதரும் நானே - ஒரு
காரியமாய் வந்து நின்றேன் நாரதரும் நானே.

சிவன் : வரவேண்டும் வரவேண்டும் நாரதரே வாரும் - இங்கு
வந்தசெய்தி என்ன சொல்வீர் நாரதரே நீரும்
கலகம் ஒன்றை மூட்டுதற்கோ நாரதரே நீரும் - இங்கு
கடுகதியாய் வந்து நின்றீர் நாரதரே வாரும்

நாரதர் : நாரதரின் கலகமென்றால் சிவனாரே கேளும் - அது
நன்மையில்தான் முடியுமன்றோ நாரதரே கேளும்
மூவுலகும் கிடைக்காத கனிகொண்டு வந்தேன் - அதை
முழுதாகச் சிவனார்க்கே அர்ப்பணிக்க வந்தேன்.

உமை : என்னகனி கொண்டுவந்தீர் நாரதரே நீரும் - அதை
எமக்கறியச் சொல்லிடுவீர் நாரதரே நீரும்
முக்கனியில் சிறந்தகனி என்னகொண்டு வந்தீர்-இப்போ
அக்கனியின் அருமையென்ன சொல்லிடுவீர் நீரே.

நாரதர் : ஆண்டுக்கொரு காய்காய்த்து அதிசயமாய்ப் பழுக்கும்
அதிமதுர மாங்கனியைத் தந்திடவே வந்தேன்
ஏழுலகும் கிடைக்காத இனியகனி தந்தேன் - இதோ
இக்கனியைப் பெற்றெனக்கு நல்லருளைத்தாரும்.

(நாரதர் மாங்கனியைச் சிவனிடம் கொடுக்கப் பிள்ளையாரும் முருகனும் ஓடிவருதல்)

(முத்தான வாய்திறந்து.... சின்னவாய் திறந்து.... மெட்டு)

பிள்ளை : இனிய நல்ல... நல்ல மாங்கனியை... நல்ல
மாங்கனியை என்னிடமே பெற்றோரே தந்திடுவீர்.

முருகன் : அதிமதுர இந்த மாங்கனியை... இந்த மாங்கனியை
அன்புடனே எனக்கே தந்திடுவீர்.

பிள்ளை : முந்திமுதல் வந்த மூத்தபிள்ளை... நானே
மூத்தபிள்ளை மாங்கனியை எனக்கே தந்திடுவீர்.

முருகன் : இளையமகன் நானே இனிய மகன் - உங்கள்
இனியமகன் இக்கனியை எனக்கே தந்திடுவீர்.

சிவன் : போட்டியொன்று நானும் வைத்திடுவேன்,
போட்டி வைத்திடுவேன், வென்றவர்க்கே
கனியைத் தந்திடுவேன்.

பிள்ளை
முருகன் : போட்டியென்ன அதைச் சொல்லிடுவீர் அதைச்
சொல்லிடுவீர். வென்று வந்தே கனியைப் பெற்றிடுவோம்.

சிவன் : இவ்வுலகைச் சுற்றி வந்தவர்க்கே முதலில் வந்தவர்க்கே
இக்கனியை நானும் தந்திடுவேன்

சென்றிடுவீர் சுற்றிவந்திடுவீர் - வலம்வந்திடுவீர்
வென்றுவந்தே கனியைப் பெற்றிடுவீர்

(முதலில் முருகனும் அவர் போகப் பிள்ளையாரும் புறப்படல்.) (அத்தரல்லோ அத்தர் மணக்குதடா... மெட்டு)

முருகன் : ஏறிடுவேன் மயில்வானகத்தில் - உலகை
இக்கணமே வலம் வந்திடுவேன்
ஆனைமுகன் எழுந்து அசையுமுன்னே - நானே
அக்கனியைப் பெற்று மகிழ்ந்திடுவேன்.

(முருகன் போதல். நாரதர் எழுந்து போக பிள்ளையார் நாரதரைப் பார்த்து)

பிள்ளை : அம்மையப் பர்க்குள்ளே உலகடங்கும் - அதனால்
அவரைவலம் வந்தால் வெற்றியன்றோ

நாரதர் : அப்படியே செய்வீர் வென்றிடுவீர் - வெற்றிக்
கனியுமக்கே இதோ சென்றிடுவீர்

(நாரதர் போகப் பிள்ளையார் சிவனையும் உமையையும் வலம் வந்து)

பிள்ளை : உலகைவலம் வந்தேன் பெற்றோரே - உங்கள்
இருவர்க்குள்ளும் உலகைக் கண்டுவந்தேன்
வென்றுவந்தேன் போட்டி வென்றுவந்தேன் - கனியைத்
தந்திடுவீர் எனக்கே தந்திடுவீர்.

சிவன் : தந்தைதாயே உலகம் என்ற உண்மை - காட்டி
வென்றுவந்தாய் மகனே வென்றுவந்தாய்
தந்திடுவேன் உனக்கே மாங்கனியை - இதோ
வென்றவன்நீ கனியைப் பெற்றிடுவாய்
(மாங்கனியைக் கொடுக்க முருகன் வருதல்)

முருகன் : வெற்றியல்லோ வெற்றி பெற்றுவந்தேன் - உலகைச்
சுற்றிவந்தேன் வெற்றி பெற்றுவந்தேன்
வெற்றிக்கனி எனக்கே தந்திடுவீர் - என்னைப்
பெற்றவரே வெற்றிக் கனிதருவீர்.

சிவன் : அண்ணன் எம்மைச் சுற்றி வந்தல்லவோ - வெற்றி
அப்பொழுதே பெற்றுக் கனியும் பெற்றான்

பிள்ளை : வெற்றிக்கனி நானே பெற்றுவிட்டேன் - தம்பி
வந்திடுவாய் உனக்கும் தந்திடுவேன்.

(முருகன் ஏமாற்றமும் கோபமும் அடைந்து வெளியேறுதல்.
வரமாட்டேன்.... நானும் வரமாட்டேன்... மெட்டு)

முருகன் : வரமாட்டேன் நானும் வரமாட்டேன் வரமாட்டேன்
என்னை - வஞ்சனை செய்த பெற்றோரிடம் எப்போதும்
வரமாட்டேன் வரமாட்டேனே.

(உமாதேவியார் முருகன் கையைப் பிடித்து)

உமை : விடமாட்டேன் உன்னை நான் விடமாட்டேன் விடமாட்டேனே
பெற்றவர் எங்களை விட்டு நீ போகவே
விடமாட்டேன் விடமாட்டேன்

முருகன் : வரமாட்டேன் உங்களிடம் வரமாட்டேன் வரமாட்டேனே
உங்கள் உறவினை இன்றே துறந்திட்டேன்
பழநிமலைக்கு நான் ஆண்டியாய்ப் போகிறேன்.
வரமாட்டேன் வரமாட்டேனே

(முருகன் கோபத்துடன் வெளியேறல்)

(அம்மாவைத் தேடியல்லோ.... மெட்டு)

சிவன் : நாரதனார் கலகமொன்றை மூட்டிவிட்டுச் சென்றார் - அதில்
நம் குடும்பம் குலைந்ததடி பெண்ணணங்கே பாராய்

உமை : நாரதரின் கலகத்திலே நன்மையுண்டு கண்டீர் - அந்த
நன்மையை நாம் சொன்னாலே நாடுநலம்பெறுமே
அம்மை அப்ப ரேயுலகமும் என்ற உண்மைதன்னை இந்த
அகிலமுமே அறிந்ததன்றோ விநாயகரினாலே

சிவன் : உலகமெல்லாம் நாமிருப்போம் என்றபெரும் உண்மை - இந்த
உலகமெல்லாம் அறிந்ததன்றோ முருகன் செயலாலே
எவ்விடத்தும் நாமிருப்போம் எம்மில் எல்லாம் அடங்கும் - இந்த
உண்மையறிந் துய்ந்திடுவீர் உலகோரே சுபமே.




# நிறையுணவுச் சத்துக்கள்

# நிறையுணவுச் சத்துக்கள்

(நிறையுணவுச் சத்துக்கள் போலப் பிள்ளைகள் வேடமிட்டு வந்து
மேடையின் வரிசையில் நின்று காப்புப் பாடுதல்.
பின் ஒருவொருவராக முன்வந்து பாடியாடி
முன்வரிசையில் நிற்றல்)

காப்பு

ஞான விநாயகனே ஜெயஜெய நன்மைகள் செய்பவனே
போசணைச் சத்துக்கள் நாம் பாடியே ஆட அருள்வாய் ஐயா
எங்கள் இயல்பறிந்தே உயிரினம் ஏற்றபடி வாழ்ந்திட
இங்குநாம் சொல்லவந்தோம் இதனை ஏற்க அருள்வாய் ஐயா.

**நீர் $H_2O$ WATER**

உணவினை ஆக்கிடுவேன் - உயிரின
உணவும் நான் ஆகிடுவேன்
உங்கள் உடலினிலே - மூன்றிலிரு
பங்காய் நான் தங்கிடுவேன்
நீர் எமைப் பாருமையா - என் பெயர்
நீர் என நீர் அறிவீர் - உணவினை.................

**காபோஹைதரேற்று $C_6H_{12}O_6$ CARBOHYDRATE**
(வைகைக் கரைதேடியல் ........... மெட்டு)

காபோஹை தரேற்று சத்துணவு நானே - என்னை
மாப்பொருள் என்றுலகில் சொல்லுவது முண்டு.

கிழங்குவகை காய்கறிகள் தானியங்களோடு - நல்ல
பழவகைகள் இனிப்புமுதல் பாலுணவில் இருப்பேன் -
காபோஹைத...........

சூரியசக்தி காற்று நீர் இவற்றைக் கொண்டு - மண்மேல்
தாவர இலைகள் என்னை உற்பத்தியாக்கும்

உடலுக்குச் சூடு சக்தி உணவுக்குச் சுவையும் - தந்தே
ஈரலைநான் தொழிற்படுத்திச் சமிபாடும் செய்வேன்
காபோஹைத..............

அளவிலே நான் குறைந்தால் மரஸ்மஸ் நோயுண்டாகும் - அதே
அளவிலே கூடிவிட்டால் உடல் பருமனாகும் -
காபோஹைத..................

## இலிப்பிட்டுக்கள் $C_{12}H_{22}O_{11}$ LYPIDES

(கண்டு வந்தேன் அம்மா கண்டு வந்தேன் .... மெட்டு)

இலிப்பிட்டுக்கள் என்னும் கொழுப்பு நானே - என்னில்
கொழுப்பமிலம் கிளிசரோல் பகுதியுண்டு

பாலாடை வெண்ணெய் எண்ணெய்வகை - இறைச்சி
மாசரீனும் பட்டர் மஞ்சட்கரு
என்பவற்றில் நிறைய நானிருப்பேன் - உடலில்
ஏ டீ ஈ கே சேர உதவிடுவேன் - இலிப்பிட்டு......................

உள்ளுறுப்பைச் சுற்றிப் படிந்திருப்பேன் - வெப்பம்
வெளியேறாமல் காத்து உதவிடுவேன்
தோல்படையின் கீழே படிந்திருப்பேன் - உடல்
அழகுதந்து குளிரில் காத்திடுவேன் - இலிப்பிட்டு................

நான் குறைந்தால் அழகு குறைந்துவிடும் - உமக்கு
இதய நோய்கள் வந்து தொல்லை தரும் - இலிப்பிட்டு...........

## புரதம் CHON PROTEIN

(ஆதிசிவன் மைந்தனல்லோ ...............என்ற மெட்டு)

நானும் புரதம் என்னும் போசாக்கல்லோ - என்னைச்
சூரியன் நீர் நைதரேற்றில் தாவரமாக்கும்
விலங்கும் தானுருவாக்கும் - நானும்

அவரைவகை பால் உணவு - முட்டை
வெள்ளைக்கரு தவிடுடைய தானியங்கள்
மச்சமாமிசங்கள் - நானும்

இழையங்களை ஆக்கிடுவேன் - அவை
சிதைந்தபோது புதிதாயுருவாக்கிடுவேன்
உடல் வளர்த்திடுவேன் - நானும்

நான் அளவில் குறைந்திருந்தால் - உடல்
நோயெதிர்ப்புச் சக்தி குன்றித் தளர்ந்துவிடும்
இதை யுணர்ந்திடுவீர் - நானும்

## கனியங்கள் MINERALS

(மலராய் மலரெடுத்து ..........என்ற மெட்டு)

கனியங்கள் என்னும் என்னை - அன்பர்களே நீங்கள்
கரிசனையாய்க் காத்திடுவீர்

இரும்பயடீன் கல்சியமும் - அன்பர்களே நல்ல
சோடியமாய் நானிருப்பேன் - கனியங்..........

பசியஇலை காய்கறியில் - அன்பர்களே முட்டை
பால்பழத்தில் நானிருப்பேன்

ஓமோன் சுரப்பதற்கும் - நரம்புகளும் கண்ணும்
குருதியுறைய உதவிடுவேன் - கனியங்...........

நான் குறைந்தால் கண்டமாலை - அன்பர்களே குருதிச்
சோகைமுதல் நோய்கள் வரும் - கனியங்............

**உயிர்ச்சத்து A, B, C, D, E, K VITAMINS**

(சத்தியத்தைக் கங்கை தட்டாதே............ என்ற மெட்டு)

உயர்ச்சத்துக்கள் ABCDEK - என்னும்
இவைகள் நாங்கள் போசாக் குணவிலுள்ளோம்

ADEK கொழுப்பில் கரைந்திடுவோம் - நீரில்
BC உயிர்ச்சத்து கரைந்திடுவோம்
இதனையுணர்ந்து சமையல் செய்திடுவீர் - உயிர்ச்
சத்தின்பலன் பெற்று வாழ்ந்திடுவீர் - உயிர்ச்சத்து......

உயிர்ச்சத்துக்கள் உடலில் குறைந்துவிட்டால் - உங்கள்
உடல் வலிமை குன்றி உருக்குலையும்
என்புருக்கு மாலைக்கண் ஸ்கேவி - முதல்
ஒஸ்ரியோ பொரோசிஸ் நோய்கள் வரும் - உயிர்............

(எல்லோரும் வரிசையில் நின்று
கண்டு வந்தேன்...... என்ற மெட்டு)

கண்டுகொண்டீர் எம்மைக் கண்டுகொண்டீர் - உங்கள்
உயிர் வாழ்வுக்கு நாமே உடல் கொடுப்போம்
எங்களைநீர் அளவில் உண்டுவந்தால் - உங்கள்
உடல் நலத்தைக் காத்தல் எம் கடனே.

மங்களம், மங்களம், மங்களம்
மங்களம, மங்களம், மங்களம்.

(1988இல் மேடையேற்றப்பட்டது)
கருப்பொருள் : திருமதி திருச்செல்வம்



# இசையும் கதையும்



## 1. ஔவையார்

2014 இல் மகளீர் தினத்தில் கொழும்பு மகளிர் மன்றத்தினால் இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் அரங்கேற்றப்பட்டது.



# ஔவையார்

# ஔவையார்

காப்பு
இராகம்: ஹம்சத்துவனி

பல்லவி

ஞான விநாயகனே வருவாய்
நல்லருள் புரிந்திடும் வள்ளலே அருள்வாய் - ஞான..

அனுபல்லவி

கானம் இசைத்து ஔவை கதைபாட
ஞானமும் கல்வியும் நீ தருவாய் - ஞான..

சரணம்

தேனிசைச் செந்தமிழ்ச் சொல்லெடுத்து
தித்திக்கும் கவிதந்த மூதாட்டி
ஞானத் தமிழினிலே அறமுரைத்த
எங்கள் ஔவைப் பாட்டி கதைபாட - ஞான...

அமுதத் தமிழ்ப் பாடல்தந்த ஔவையார் கதைகேட்க
ஆவலுடன் வந்திருக்கும் அழகுதமிழ்க் குழந்தைகளே!
அன்புநெஞ்சம் கொண்டுவந்த மங்கையரே சான்றோரே!
பெண்கள்குலப் பெருமாட்டி பெரும்புலவர் தமிழ்ப்பாட்டி
ஔவையார் கதைகேட்டால் அறியாமை நீங்கிவிடும்
செவ்வையாய் வாழ்ந்திடலாம் சிறப்பெல்லாம் கண்டிடலாம்
எல்லோர்க்கும் வணக்கம் சொன்னேன் இதோ கதையைக் கேளுங்கள

ஔவைப் பிராட்டி என்றும், தமிழ்மூதாட்டி என்றும், தமிழ் கிழவி என்றும் நல்லிசைப்புலமை மெல்லியலார் என்றும் பலவாறு அழைக்கப்படும் ஔவையாரை அறியாதவர்கள் இருக்க மாட்டார்கள்.

பாட்டு: அறிவிற் பெரியவர், வயதில் முதிர்ந்தவர்
அன்பில் சிறந்தவர் பண்பில் உயர்ந்தவர்
பெண்பாற் புலவரில் பெருமைக் குரியவர்
எண்ணில்லா ஆண்டுகள் வாழ்ந்து சிறந்தவர்

என்றெல்லாம் கேள்விப்படுகின்றோம். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முந்திய சங்ககாலம் முதலாகப் பிற்காலம் வரை வாழ்ந்தவர் என்று பேசப்படுகின்றார்.

ஔவையார் ஒருவர் அல்லப் பலபேர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். காலத்துக்குக் காலம் ஔவையார் எனும் பெயரில் பல பெண்பால் புலவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்று அறிகின்றோம்.

ஆனால் அவர்களுடைய வரலாறுகள் ஒன்றுமே எம்மிடம் இல்லை. தமிழ் இனத்தின் சாபக்கேடு இது. அப்படியானால் ஔவையாரைப் பற்றி அறிய வழி என்ன? வழி உண்டு.

பாட்டு : **ஔவையார் தந்த இலக்கியங்கள்**
**எத்தனையோ எம்மிடமுண்டே**
**அத்தனை இலக்கியமும் கொண்டு**
**அறிஞர்கள் ஆய்வு செய்தார்கள்**
மொழியின் நடையும் பொருள் வைப்பும்
**மொழியும் செய்தி வரலாறும்**
**பாடலில் வாழும் மாந்தரையும்**
**பகுத்து உணர்ந்து பார்த்தார்கள்.**

அதன்படி மூன்று வெவ்வேறு காலங்களில் மூன்று ஔவையார் வாழ்ந்தார்கள் என்ற முடிவுக்கு வந்தார்கள்.

முதல் ஔவையார் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த சங்கப்புலவராகிய ஔவையார. இவருடைய பாடல்கள் புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை எனும் நான்கு நூல்களில் 59 இடம்பெற்றுள்ளன.

இரண்டாம் ஔவையார் கி.பி.12ஆம் நூற்றாண்டில் கம்பர் காலத்தில் வாழ்ந்தவர். இவருடைய பாடல்கள் தனிப்பாடல் திரட்டில் 71 உள்ளன. அத்துடன் ஔவைகுறள் எனும் தத்துவநூலில் 310 குறட்பாக்கள் உள்ளன. அதனால் இவரைத் தத்துவப்புலவர் ஔவையார் எனலாம்.

மூன்றாவது ஔவையார் கி.பி.16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியர் காலத்தில் வாழ்ந்தவர். அறநூல்கள் ஆகிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி ஆகிய நூல்களைப் பாடியவர்.

இவற்றில் 273 பாடல்கள் உள. இவரை நீதி நூற்புலவர் ஔவையார் எனலாம்.

ஔவையாரின் உண்மையான வரலாறு தெரியாததனால் காலத்துக்குக் காலம் பல கற்பனைக் கதைகள் முளைத்தன. அவருடைய வரலாறு இல்லாவிட்டாலும் அவர் பாடிய பாடல்களைக் கொண்டு அவருடைய வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை அறிய முடியும். அவை மிகச் சுவாரசியமானவை.

## பிறப்பைப் பற்றிய ஒரு கதை:

தந்தை பெயர் பகவன். தாய் பெயர் ஆதி. இருவரும் தமக்குப் பிறக்கும் குழந்தையைப் பிறந்த இடத்திலே விட்டுச் செல்வதாகிய ஒப்பந்தம் உடையவர்கள். ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஒப்பந்தப்படி குழந்தையை அவ்விடத்திலேயே விட்டுச்சென்றார்கள். தாய் பிரிய மனமின்றி அழுதாள். பிறக்கும்போதே ஞானத்துடன் பிறந்த குழந்தை அது. அதுதான் ஔவை. அது பாடியது. அப்பாடல் ஒரு வெண்பா.

**இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி**
**விட்ட சிவனும் செத்து விட்டானோ - முட்டமுட்டப்**
**பஞ்சமே யானாலும் பாரம் அவனுக் கன்னாய்**
**நெஞ்சமே அஞ்சாதே நீ.**

'அன்னையே இப்படித்தான் நடக்கவேண்டும் என்று என்தலையில் எழுதிவைத்த சிவன் இறந்துவிடவில்லை. என்னைக் காப்பாற்ற அவர் இருக்கிறார். நீ அஞ்சாமற்போ' என்றது குழந்தை. அவர்கள் போய்விட்டார்கள்.

அநாதையாய் கிடந்த குழந்தையை பாணன் ஒருவன் கண்டெடுத்து வளர்ந்து வந்தான். பிறப்பிலேயே அறிவும் ஆற்றலும்,கவிபாடும் திறமும் கொண்ட குழந்தைக்கு ஔவையெனப் பெயரிட்டான்.

பாணர்குல வழக்கப்படி தேசாந்திரியாக வாழ்ந்த குழந்தை வளர்ந்து திருமணத்தையும் விரும்பாமல் இறைவனிடம் முதுமைக் கோலத்தை வேண்டிப் பெற்று உலகிற்கு அறிவு புகட்டலையே இலட்சியமாகக் கொண்டது.

இனி ஔவையின் வாழ்வில் நடந்த சில சம்பவங்களையும் அவர் பாடிய பாடல்கள் சிலவற்றையும் பார்ப்போம்.

## சங்கப்புலவர் ஔவையார் காலத்தில் நிகழ்ந்த செய்தி:

ஔவையார் தன் பாட்டுத்திறத்தாலே சேரசோழபாண்டியர் எனும் மூவேந்தர்களையும் வள்ளல்களையும் மிகவும் கவர்ந்து அவர்களுடன் அன்புபூண்டிருந்தார்கள்.

ஒருநாள் சேரநாட்டைச் சேர்ந்த தகடூரை ஆண்ட வள்ளலாகிய அதிகமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனையில் இருக்கும்போது ஒருமுனிவர் வந்தார். கையில் ஒரு நெல்லிக்கனியுடன் வந்தார்.

பாட்டு:

**உண்டாரைக் காக்கின்ற நெல்லிக்கனியொன்று**
**கொண்டு வந்தேன் மன்னா பெற்றிடுவாய்**
**உண்டு பல்லாண்டுகள் நல்லாட்சி செய்துநீ**
**என்றென்றும் இன்புற்று வாழ்ந்திடுவாய்**

என்று வாழ்த்திவிட்டு நெல்லிக்கனியைக் கொடுத்துச் சென்றார். முனிவர் போனதும் மன்னன் யோசித்தான். இதையுண்டு நான் பல்லாண்டு வாழ்வதிலும் பார்க்க ஔவையார் உண்டால் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்குப் பணி செய்வாரே என நினைத்து அவரிடமே கொடுத்து மகிழ்ந்தான். நெல்லிக்கனியை உண்ட ஔவையார் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் வளர்க்கும் பேறுபெற்றார்.

அதியமானின் அரண்மனையில் பல ஆண்டுகள் இருந்தார். அந்தநாளில் காஞ்சியை ஆண்ட மன்னன் தொண்டைமான், அதியமான் மீது போர்தொடுக்க வந்தபோது ஔவையார் தொண்டைமானுக்கு அறத்தை எடுத்துக் கூறித்தூது போய் போர் மூளாமல் தடுத்தார்.

பறம்பு நாட்டையாண்ட பாரிவள்ளல் மீது ஔவையாருக்கு அதிக அன்பு. பாரி காட்டில் படரக் கொழுகொம்பு இன்றிக் கிடந்த முல்லைக் கொடிக்குத் தன் தேரையே கொடுத்த வள்ளல். அவனுக்கு அங்கவை சங்கவை என இரு பெண்பிள்ளைகள். பாரியில் பொறாமை கொண்ட

மூவேந்தரும் பாரியை முற்றுகையிட்டு வஞ்சனையாற் கொன்றனர. இதையறிந்த ஔவை அங்குவந்து அப்பெண்பிள்ளைகளின் நிலைகண்டு துன்புற்று அவர்கள் சொல்வது போல் பாடினார்.

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்நிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே.

தானே இருவரையும் அழைத்துச் சென்று திருக்கோவலூர் மன்னன் தெய்வீகனுக்கு மணம் முடித்துக் கொடுத்தார். விருந்துக்கு மூவேந்தரையும் அழைத்தார்.

அவர்கள் ஔவையாரின் பாட்டுத் திறத்தை அறியவிரும்பி எங்களுக்குத் தரப்படும் விருந்தில் பனம்பழமும் தரவேண்டும் எனக் கேட்டனர். அப்போது பனம்பழம் இல்லாத காலம்.

ஔவையார் அவ்விடத்தில் வெட்டிப் போட்டுக்கிடந்த பனைமரத்துண்டு ஒன்றை எடுத்து நிறுத்தி மூன்று பழங்கள் தரவேண்டு மென்றுபாடினார்.

திங்கள் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிட வந்து நின்றார் மணப்பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குகள் முற்றி அடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தர வேண்டும் பனந்துண்டமே

பாடி முடியப்பனம் பழங்களும் வீழ்ந்தன. மூவேந்தரும் ஔவையை அடிபணிந்து வணங்கிப் போற்றினர்.

புறநானூற்றுக் காலத்திலே அரசவையில் உலகமேம்பாட்டுக்கு அடிப்படை என்ன என வினாவப்பட்டபோது ஆடவரது ஒழுக்கமே உலக மேம்பாட்டுக்கு அடிப்படை எனப் பாடினார்.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே

நாடானால் என்ன காடானால் என்ன, மேடானால் என்ன பள்ளம் ஆனால் என்ன. எவ்விடத்தில் ஆடவர் நல்லவராக விளங்குகின்றாரோ அவ்விடமே பெருமைக்குரியது எனப்பாடினார். இப்பாடலில் சங்கக்கால ஔவையாரின் சொல் ஆற்றலையும், பொருட் செறிவையும் காணமுடிகிறது.

## இனி இரண்டாவது ஔவையாராகிய கம்பர் காலத்து ஔவையாரின் சில செய்திகளைப் பார்ப்போம்.

அந்தக்காலத்தில் கம்பர் வாயால் பாடல் பெறுவது பெருமை எனக் கொள்ளப்பட்டது. சிலம்பி என்கின்ற தாசி கம்பரிடம் போய்த் தன்னைப் பாடும்படி கேட்டார். அவர் ஆயிரம் பொன் கேட்டார். அவள் தன்பொருள் எல்லாவற்றையும் விற்று 500 பொன் சேர்த்தாள். அவர் அவளுடைய சுவரில் அரைப்பாடல் எழுதிவிட்டுப் போய்விட்டார்.

> தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
> மண்ணாவதும் சோழ மண்டலமே

என்ற பாடல் வரிகளைப் பார்த்து இதில் தன்பேரும் இல்லை ஒன்றும் இல்லை எல்லாம் இழந்தேனே என்று வருந்தினாள். சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் தவிட்டுக் கூழ் ஆக்கிக் குடித்தாள். களைத்துப்போய் அவ்வழியால் வந்த ஔவையார் சிலம்பியிடம் வந்து பசிதாங்க முடியாமல் அவள் ஊற்றிய கூழைக் குடித்துவிட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். பாட்டைப் பார்த்தார். கம்பர் செய்தவம்பைச் சிலம்பி சொல்லி அழுதாள். ஔவையார் மீதி இரண்டு அடிகளையும் எழுதிவிட்டார்.

> பெண்ணாவாள் அம்பர்ச்சிலம்பி அரவிந்தத்தாள்
> அணியும் செம்பொற்சிலம்பே சிலம்பு

கம்பர் 500 பொன்னுக்குப் பாட ஔவை அரைவயிற்றுக் கூழுக்குப் பாடினார். சிலம்பியும் பொன்னுடையாள் ஆனாள்.

கம்பருக்கு ஔவையார்மேல் அளவில்லாத பொறாமையும் கோபமும். எப்படியாவது ஔவையை அவமதிக்க வேண்டுமென நினைத்தார்.

ஔவையாரை அடி என்று அழைக்க வேண்டுமென்று எண்ணி, 'ஒருகாலடி நாலிலைப் பந்தலடி' என்று விடுகதைபோல் சொல்லி அதன் பொருளை கூறுமாறு கேட்டார். இவர் ஆரைக்கீரையைக் குறித்து அடிஎன்னும் இழிவான சொல்காணப்படுவதற்கு விடையாக தாம் அடா என்று கேட்டு அவர் செருக்கை அடக்கவேண்டும் என நினைத்தார்.

உடனே

எட்டேகால் லட்சணமே எமனேறும் பரியே
மட்டில் பெரியம்மை வாகனமே - முட்டமேல்
கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே
ஆரையடா சொன்னாய் அடா.

என்ற பாட்டால் பதிலளித்தார். கம்பர் அடி என்றார் ஔவை யாரோ அவலட்சணமே, எருமைமாடே, கழுதையே, குட்டிச்சுவரே,குரங்கே நீ சொல்வது ஆரையடா (கீரை) என்று பாட்டிலே பலமுறை பழித்துப் பாடிவிட்டார். கம்பர் அடங்கிப் போனார்.

ஒருநாள் ஔவையார் வழியில் போய்க்கொண்டிருந்த போது புலவர்கள் பலர் ஏடும் எழுத்தாணியும் கொண்டு வாடியமுகத்துடன் வந்து கொண்டிருந்தார்கள். என்ன காரணம் எனக்கேட்டார் ஔவையார்.

புலவர்கள், அம்மையே! அரசன் நாளை விடியுமுன் நாலுகோடி பாடல் எழுதி வருமாறு கட்டளையிட்டான். விடியுமுன் எப்படி நாலுகோடி பாடல் எழுத முடியுமென ஏங்குகின்றோம் என்றனர்.

சோழமன்னன் புலவர்களின் புலமையை மதிப்பவன். இவர்கள் நினைப்பதைப் போலக் கட்டளையிட்டிருக்க மாட்டான் என நினைத்த ஔவையார் நான் சொல்கிறேன் எழுதுங்கள் என்று பாட்டைச் சொன்னார்.

முதலாவது கோடி

மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று
மிதியாமை கோடி பெறும்.

இரண்டாவது கோடி

உண்ணீர் உண்ணின் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்.

மூன்றாம்கோடி

கோடிகொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடிபெறும்

நாலாவது கோடி

கோடானுகோடி கொடுப்பினும் தம்முடைநா
கோடாமை கோடிபெறும்.

புலவர்கள் எழுதிச் சென்ற பாட்டை வியந்து மன்னன் பொன் கொடுத்தான். புலவர்கள் மகிழ்ந்து போற்றினர்.

ஔவையாருக்கென வீடில்லை, ஊரில்லை. மக்களோடு மக்களாகத் தேசாந்திரியாகத் திரிந்து மக்களை அறநெறிப்படுத்துதலையே இலட்சியமாக கொண்டு வாழ்ந்தார்.

ஒருநாள் வழிநடந்தகளை, நல்லபசி, எதிர்ப்பட்ட வீட்டுக்குப் போனார். அழைத்தார்,வீட்டுக்காரர் வந்தார். பசிக்கு ஏதாவது தருவாயா என்று கேட்டார். அவர் ஔவையை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளேபோனார். அவருடைய மனைவியோ, உலோபி. எச்சிற்கையால் கூடக்காக்கை துரத்தமாட்டார். இவர் அவளைத் தயவுப்பண்ணி, முகத்தைத் தடவிப் பேன் பார்த்து மகிழச் செய்துவிட்டு மெல்லமாக ஔவை வந்திருக்கும் செய்தியைச் சொன்னார். அவள் படமெடுத்த பாம்புபோலச் சீறிப்பாய்ந்து பழைய சுளகினை எடுத்து அவரை ஓடஓட அடித்து விரட்டினாள். இதனைப் பார்த்த ஔவை

இருந்து முகந்திருத்தி, ஈரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப்பழ முறத்தால்
சாடினாள் ஓடோடத்தான்

எனப் பாடிவிட்டு, வீட்டுக்காரனைப் பார்த்து இப்படிப்பட்ட கொடியவளோடு குடும்பம் நடத்துவதில் பார்க்கச் சந்நியாசியாகப் போகலாமே என

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடிவாழலாம் - சற்றேனும்
ஏறுமாறாக இருப்பாளே யாமாயிற்
கூறாமற் சந்நியாசம் கொள்

என்று பாடினார். அவன் அப்போதே மனைவியை விட்டுச் சந்நியா சியாகப் போய்விட்டான்.

ஒருநாள் வழிநடக்கையில் வழியில் ஒருநாவல் மரத்தின்கீழ் போயிருந் தார். அந்த நாவலில் மாடுமேய்க்கும் சிறுவன் ஒருவன் ஏறியிருந்து நாவற்பழங்களைப் பறித்துத் தின்பதைக் கண்டார். தம்பி எனக்கும் சிலபழம் போடு என்று கேட்டார். சிறுவன் 'பாட்டி சுட்டபழம் வேண்டுமா? சுடாதபழம் வேண்டுமா?' என்று கேட்டான். நாவற்பழத்திலும் சுட்ட பழமா? சரி சுட்டபழம் போடு என்றார். அவன் பழங்களைப் பறித்து மண்ணில் போட்டான். ஔவையார் அவற்றை எடுத்து மண்ணை ஊதி ஊதித் தின்றார். சிறுவன் 'பாட்டி பழம் சுடுகிறதா?' என்றார். கிழவி திகைத்துவிட்டார். இந்த ஔவையையே ஏமாற்றிவிட்டானே.

கருங்காலிக்கட்டைக்கு நாணாத கோடாரி
இருங்கதலித் தண்டுக்கு நாணும்

என்பது சரியாகப் போச்சே என்று வெட்கித் தலைகுனிந்து நீயார் என்று கேட்டார்.

சிறுவன் முருகனாக காட்சியளித்து ஔவையே உனது தமிழ்ப் பாட்டைக் கேட்க ஆவல் கொண்டு வந்து இந்த விளையாட்டைச் செய்தேன். கொடியது எது பாடு என்றார்.

ஔவை

கொடியது கேட்கின் எரிதவழ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடியது

எனத் தொடங்கி

அதனினும் கொடியது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடியது அவள்கையில் உண்பதுதானே

எனப் பாடினார். பாட்டுக்கு மகிழ்ந்த முருகன் இனியது எது எனக் கேட்டார்.

இனிது இனிது ஏகாந்தம் இனிது...
அதனினும் இனிது அறிவுளோரைக்
கனவிலும் நனவிலும் காண்பதுதானே

பெரியது எதுவெனக் கேட்டார்
பெரிதுபெரிது புவனம் பெரிது - எனத்தொடங்கி
.......................
இறைவனோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே என்றார்.

அரியது எதுவெனக் கேட்டார்
அரிது அரிது மானிடர் ஆவது அரிது
..............................
தானமும் தவமும் தான் பெறல் அரிது
தானமும் தவமும் தான் செய்வர் ஆயின்
வானவர் நாடு வழிதிறந்திடுமே.
எனப் பாடி முருகன் அருள் பெற்று மகிழ்ந்திருந்தார்.

ஔவை ஒருநாள் திருக்கோவலூர் விநாயகருக்கு
சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பல இசைபாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப.....

எனத் தொடங்கி விநாயகர் அகவல்பாடிப் பூசை செய்து கொண்டிருந்தார். அவர் மனத்தில் சுந்தரரும் சேரமானும் கயிலாயம் போகும் காட்சி தெரிந்தது. தானும் அவர்களுடன் செல்லவேண்டுமென ஆவல் கொண்டு விரைவாகப் பூசையைச் செய்தார். விநாயகர் அவரை ஆறுதல் படுத்தி உன்னை நான் அவர்களுக்கு முன் கயிலை சேர்ப்பிப்பேன் ஆறுதலாகப் பூசையைச் செய் என்றார். பூசை முடிந்ததும் தன் துதிக்கையால் தூக்கி அவர்களுக்கு முன் கயிலாயத்தில் விட்டார். ஔவை அதற்கும் ஒரு பாட்டுப் பாடினார்.

மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியை
முதிர நினையவல்லார்க் கரிதோ முகில் போல் முழங்கி
அதிர வருகின்ற யானையுந் தேரும் அதன் பின்வரும்
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே.
எனப் பாடிக் கயிலாயத்தில் இன்புற்றிருந்தார்.

**தத்துவஞானி ஔவையார்** எனப்படும் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஔவையார், ஔவைக் குறள் அல்லது ஞானக்குறள் எனும் நூலைப் பாடியுள்ளார். இது 310 குறள் வெண்பாக்களைக் கொண்டது.

முத்திநூல் எனப் போற்றப்படுவது.அதன் முடிவிலே

**முத்திக்கு ஔவையார் சொல் முன்னூற்றுப் பத்தும் உன்**
**சித்தத்தில் வைத்துத் தெளி**

என அவர் கூறியதைக் கொண்டே துணியலாம்.

திருவள்ளுவர் குறள் வெண்பாவில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என 1330 பாடல்களில் அருந்தமிழ் நூலைச் செய்தார். அவர் சொல்லாத முத்தி ஆகிய பேரின்பம் பெறும் வழியை ஔவையார் அதே குறள் யாப்பில் செய்தமை போற்றுதற்குரியது. அது முத்திப்பால் எனப்படும்.

## 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நீதிநூல் ஔவை

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி எனும் நான்கு நீதிநூல்களை இக்காலத்தவர்க்கேற்ற இலகு நடையில் பாடித் தந்திருக்கிறார்.

ஆத்திசூடியில்

**அறஞ்செயவிரும்பு ஆறுவது சினம்**
**இயல்வது கரவேல் ஈவதுவிலக்கேல்**

என அகரவரிசை ஒழுங்கில் தொடங்கி இரண்டு சீர்கள் கொண்டு

ஓரம் சொல்லேல்

என 108 வரிகளில் சின்னஞ்சிறு பிள்ளைகளும் ஓதி உணரக்கூடியதாகப் பாடியுள்ளார்.

கொன்றை வேந்தனில்

**அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
**ஆலயம் தொழுவது சாலவும் நன்று**

என நான்கு சீர்கள் கொண்டு அகரவரிசையில் தொடங்கி

**ஒத்த இடத்தில் நித்திரை கொள்**
**ஓதாதவர்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்**

என 91 வரிகளில் அமுதத்தமிழில் அறத்தைப் பாடியுள்ளார்.

வாக்குண்டாம் அல்லது மூதுரை எனும் நூல் முப்பது வெண்பாகக் களைக் கொண்டமைந்தது. இதில் காணும் செய்யுட்கள் எளிமையும் இனிமையும் நிறைந்தன. இதில் அரிய கருத்துக்களையும் நீதிகளையும் காணலாம்.

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

எனத் தொடங்கி அழகிய உவமைகளுடன் அமைந்துளது.

நல்வழி எனும் நூல் வாழ்வில் மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நல் வழிகளைக் கூறுகிறது. சைவசமயக் கருத்துக்களும் தத்துவங்களும் நிறைந்த நூல் - 40 வெண்பாக்களைக் கொண்டது. எல்லோர்க்கும் நன்கறியப்பட்ட

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும்தா

எனத் தொடர்கிறது.

சங்கக்காலம் முதல் பிற்காலம்வரை பலர் ஔவையார் எனும் பெயரு டன் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் காலத்துக்குக் காலம் பாடிய பாடல்களைக் கொண்டு சங்கக்காலத்தில் வாழ்ந்த ஔவையாரைச் சங்கப்புலவர் ஔவையார என்றும் கம்பர்காலமாகிய 12ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவரை தத்துவஞானி ஔவையார் என்றும் அதிவீரராம பாண்டியன் காலமாகிய 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரை நீதிநூல் ஔவை எனவும் அறிஞர்கள் இனங்கண்டிருக்கின்றார்கள்.

ஔவையார் பெயரில் அமைந்துள்ள பாடல்கள் எல்லாம் அழகுக்கு அழகுசெய்யும் ஆற்றல் பெற்றவை. கருத்துக் கருவூலங்களாக - கற்பனை நயம் மிக்கனவாக உண்மையும் உயர்ந்த உலகியல் அறிவும் கொண்ட தமிழ் அமுதப் பெருங்கடல் எனல் வியப்பில்லை.

அமுதத் தமிழ்க்கிழவி ஔவையின் பாடல்களை
அள்ளி அள்ளிப் பருகி அரும்பெரும் பயன்பெறுவோம்
அன்னை சரஸ்வதியின் அவதார மாகிவாழ்ந்த
பொன்மகள் ஔவையின் பாதமலர் தொழுவோம்.

வணக்கம்



# வில்லிசை



1. மங்கையர் மாண்பு
2. நாவலர் பெருமான்

மங்கையர் மாண்பு 2014 இல் கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த மகளிர் தினவிழாவில் சைவமங்கையர் வித்தியாலய மாணவிகளால் நிகழ்த்தப்பட்டது.



# மங்கையர் மாண்பு

# மங்கையர் மாண்பு

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசைப்பாட வில்லிசைப்பாட
வந்தருள்வாய் சரஸ்வதியே - வரம்நீ
தந்தருள்வாய் சரஸ்வதியே

வேறு

சபையிலுள்ள பெரியோரே தம்பியரே தங்கையரே
ஆமா தம்பியரே தங்கையரே
மங்கையர்கள் தினவிழாவில்
பங்குகொள்ள வந்திருக்கும்
உங்களுக்கு எங்களது
உளம் நிறைந்த வணக்கங்கள்

வேறு

நாடிலங்கை மாநகரில்
நல்லதமிழ் பாடவல்லார்
கூடிவளர் கொழும்பினிலே
குடியிருக்கும் மங்கையர் நாம்
தேடிநல்ல பாட்டெழுதித்
தித்திக்கும் இசைவகுத்துப்
பாடுகிறோம் வில்லுப்பாட்டு
பக்குவமாய்க் கேட்டிடுவீர்

உதவி 1 : ஆகா வில்லுப்பாட்டென்றால் நல்லாத்தான் இருக்கும். பாடுங்கோ கேட்போம்.

உதவி 2 : ஆமா, என்னகதை பாடப்போகிறீர்கள்.

முதல்வர் : எங்கள் கதையைத்தான் பாடப்போகிறோம்.

உதவி 1 : எங்கள் கதை என்றால்? பெண்கள் கதையோ?

முதல்வர் : ஆமாம் மங்கையர் மாண்பு என்னும் எங்கள் கதையை தான்.

பாட்டு : மங்கையர்கள் நாம் ஒன்றுகூடி இன்று
மங்கையர் மாண்பினைப் பாட
இங்கித மாகவில் லெடுத்தோம் இங்கு
இன்பமாய்க் கேட்டு மகிழ்வீர்

உதவி 1 : அதுசரி நாங்களும் மங்கையர்கள் தானே. எங்கள் கதையை நாங்கள் பாடுவது சரியோ?

உதவி 2 : ஆமாம். அது தற்புகழ்ச்சியாகுமே. தன்னைத்தான் பாடலாமோ.

முதல்வர் : தன்னை அறியாதார் மத்தியில் தன்னைப்பற்றித் தானே சொல்லுவது தகுதியாகும் என்று எங்கள் இலக்கண நூலே சொல்லுகிறது.
இந்த உலகம் பெண்களின் அருமை பெருமைகளை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

உதவி 2 : ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்.

முதல்வர் : இந்த உலகம் அன்றுமுதல் இன்றுவரை பெண்களுக் குச் செய்த, செய்கின்ற கொடுமைகளை நினைத்துப் பாருங்கள்.

பாட்டு : கற்பின் செல்வி அன்னை சீதையை
அக்கினிப் பிரவேசம் செய்ய வைத்தார்
கர்ப்பிணியாக இருக்கையில் அவளைக்
காட்டில் தனியே விட்டுவிட்டார்.

உதவி 1 : உண்மைதான். மிதிலைமா நகரின் அரசிளங் குமரியா யிருந்த சீதையை இராமன் காதலித்து வில்வளைத்து, மணம்முடித்துக் கொண்டுவந்து, அயோத்திக்குப் பட் டத்து ராணியாக்காமல் 14 வருடம் காட்டில் தன்னோடு அலையவைத்தாரே. அதுமட்டுமா அவளை இராவணன் சிறைவைத்ததற்காகச் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்க வைத்தாரே.

உதவி 2 : அதுமட்டுமா. கர்ப்பிணியாய் இருந்த அவளைக் காட்டில் தன்னந்தனியே கொண்டுபோய் விட்டாரே. இது கொடுமை அல்லவா.

முதல்வர் : இவர்களா மங்கையர் மாண்பைத் தெரிந்தவர்கள். இன்னும் கேளுங்கள்.

பாட்டு : காதல் கொண்ட சூர்ப்பனகைப்பெண்
மார்பும் மூக்கும் அறுத்தெறிந்தார்

இலக்குமணன்மேல் காதல் கொண்ட சூர்ப்பனகையை மார்பும் மூக்கும் அறுத்துக் கலைத்துவிட்டார்களே. அவளின் ஒருதலைக் காதலை விலக்க வேறுவழி இவர்களுக்குக் கிடைக்கவில்லையா. ஒரு பெண்ணின் மார்பையும் மூக்கையும் அறுப்பது மனிதாபிமானமற்ற கொடிய ஈனச்செயலல்லவா?

முதல்வர் : இதுமட்டுமா?

பாட்டு : அப்பாவி கோவலன் தலையை வெட்டிக்
கண்ணகியை கைம்பெண் ஆக்கிவிட்டார்.

உதவி 1 : கோவலன் செய்யாத குற்றத்திற்காக விசாரணை ஏதுமின்றி அவன் தலையை வெட்டிக் கொலைசெய்து காதல் மனையாள் கண்ணகியைக் கைம்பெண் ஆக்கிவிட்டார்கள். இவர்களா மங்கையர் மாண்பை அறிந்தவர்கள்.

முதல்வர் : இன்னும் கேளுங்கள்

பாட்டு : பத்தினிப் பெண்ணாள் பாஞ்சாலி மாதைப்
பணயப் பொருளாய்ச் சூதாடினார்
பல்லோர் அரசர் சபையின் முன்னே
இழுத்து வந்து துகிலுரித்தார்

இதெல்லாம அன்று செய்த கொடுமைகள் சில இன்று நடப்பதைப் பாருங்கள.

பாட்டு : பிறந்தது பெண்ணெனக் கண்டதும் உடனே
இறந்திடக் கள்ளிப்பால் ஊற்றுகின்றார்.
கழுத்தை நெரித்துக் கொல்கின்றார்
காட்டில் எறிந்து விடுகின்றார்.

உதவி 1 : இது பெரிய கொடுமை ஐயா.

முதல்வர் : இது அநியாயச் செயல். அறியாமையால் வந்த மூடத் தனம். தாயின் கருப்பையில் உருவாகும் குழந்தை ஆணோ பெண்ணோ என்பதைத் தீர்மானிப்பது, பெண்ணின் கருமுட்டையோடு சேரும் ஆணின் விந்தணுதான். இது விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானத்திலும் கண்ட உண்மை. பெண் குழந்தை பிறந்தால் தந்தை தான் அதற்குப் பொறுப்பு.

உதவி 2 : அப்படியா? இது தெரியாமல், பெற்ற தாயைப் பழி சொல்லிப் பெண் குழந்தையைக் கொல்கிறார்களே. எவ்வளவு மூடத்தனம்.

உதவி 2 : பெண் குழந்தையை பெற்றவளும் ஒரு பெண்தானே. அவளை ஏன் கொல்லாமல் விட்டுவிட்டார்கள்.

முதல்வர் : அதுமட்டுமா

பாட்டு : கட்டிய பெண்ணைச் சீதனம் கொண்டு
வாவென வதையாய் வதைக்கின்றார்
கட்டுவதற்கோ கோடி சீதனம்
கொண்டுவாவெனக் கேட்கின்றார்
வாழா வெட்டியாய் பெண்களை வைத்து
மங்கையர் மாண்பைக் கெடுக்கின்றார்.

உதவி 1 : சீதனக் கொடுமையோ கொடுமை
ஒரு பெண்பிள்ளையை டாக்டராகப் படிக்கவைக்க 50 இலட்சம் செலவு. அவளைக் கல்யாணம் செய்வதற்குக் கேட்கும் சீதனம் 50 இலட்சமும் காரும் வீடும். இதுதான் படித்த பெண்ணுக்கு எங்கள் சமூகம் செய்யும் மரியாதை.

முதல்வர் : இப்போ என்ன சொல்கிறீர்கள். மங்கையர் மாண்பை அறியாத இந்த உலகத்துக்கு மங்கையர் மாண்பை சொல்லத்தானே வேண்டும்.

உதவி 2 : சொல்லத்தான் வேண்டும். சொல்லுங்கோ. நன்றாகச் சொல்லுங்கோ. உறைக்க உறைக்கச் சொல்லுங்கோ.

முதல்வர் : பெண்கள் என்றால் கல்லும் மண்ணும் மரமும் கொண்டு செய்த உணர்ச்சியற்ற பிண்டமா. அல்லது பட்டும் பொன்னும் சூட்டிப் பார்க்கும் பொம்மையா.

மனித குலத்தை மகிழ்விக்க வல்ல நல்ல பண்புகளை எல்லாம் ஒன்றாய்த் திரட்டிப் பெண்ணுருவமாகப் பிரமன் படைத்து விட்டான்.

உதவி 1 : மங்கையர்களில் நிறைந்துள்ள அந்தப் பண்புகளை எல்லாம் சொல்லுங்கள்.

முதல்வர் : அன்பு, பொறுமை, அடக்கம், தியாகம்
பாட்டு
இன்பம், அழகு, இரக்கம், கருணை
மென்மை,தொண்டு மேலாம் அறிவு
என்னும் உயர்ந்த பண்புகள் எல்லாம்
ஒன்றாய்த் திரண்ட வடிவே பெண்மை

உதவி 2 : உண்மைதான், உண்மைதான்

முதல்வர் : அன்பர்களே இந்த உலகை உற்று நோக்குங்கள். உங்களுக்கு உண்மை தெரியும்.

பாட்டு : அழகிய உலகினைப் பாருங்கள்
அனைத்துமே ஆண்பெண் வடிவன்றோ
ஓரறிவுடைய புல்மரம் முதலாய்
ஆறறிவுடைய மனிதர்கள் ஈறாய்
அனைத்தும் ஆண்பெண் வடிவன்றோ
அனைத்தும் இயற்கையின் கூறன்றோ
ஆண்பெண் சேர்க்கையி னாலேதான்
அனைத்தும் பிறத்தல் காணீரோ.

உதவி 1 : உண்மைதான். எதைப் பார்த்தாலும் ஆணும் பெண்ணு மாகத்தான் இருக்கு.

உதவி 2 : ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் புதிய பிறப்புகள் பிறக்கின்றன. எல்லாம் ஆண்பாதி பெண்பாதியாகத்தான் இருக்கின்றன.

முதல்வர் : ஆணும் பெண்ணும் சரிபாதியாயிருந்தாலும்
ஆணால் தன்இனத்தைப் பெறமுடியாது
பெண்ணால்தான் பெறமுடியும்.

பாட்டு : பெண்ணில் இருந்தே எல்லாம் பிறக்கும்
பெண்ணில் லாமல் பிறப்பு முண்டோ
பெண்ணில் இருந்தே பிறந்தவர் பெற்ற
பெண்ணை வதைத்தல் கொடுமை யன்றோ
பெண்ணைப் போற்றுதல் தான் தர்மம்
பெண்ணால் பெருமை பெறவேண்டும்.

உதவி 2 : அப்போ நாம் எல்லோரும் பெண்பிள்ளைகள் என்று சொல்லுங்கள்.

முதல்வர் : பெண் பெற்ற பிள்ளைகள் பெண்ணின் பிள்ளைகள் தானே. பெற்ற தாயின் பெருமைதான் மங்கையர் மாண்புக்கு உரைகல்லாகும்.

உதவி 1 : ஆமா, இந்தப் பெண்ணியம் பேசுகிற பெரியவர்கள் பாலும் பால்நிலையும் என்கிறார்களே. அப்படியென்றால் என்ன?

முதல்வர் : பால் என்பது இயற்கையிலேயே ஆணாகவும் பெண் ணாகவும் அவயவ வேறுபாட்டுடன் இருப்பது. ஆண் பெண்ணாக முடியாது. பெண் ஆணாகவும் முடியாது. பெண்ணால்தான் பிள்ளை பெற முடியும். ஆணால் அது முடியாது. ஆனால் குழந்தைக்குரிய உயிரணு வைக் கொடுக்க முடியும். இது ஆண்பெண்பால் இயல்பு.

உதவி 2 : அப்போ பால் நிலை என்பது?

முதல்வர் : பால்நிலை எனப்படுவது ஆண் பெண் இருபாலார்க்கும் உரிய கல்வி, அறிவு, தொழில், திறன், மனப்பாங்கு முதலியன. இந்தப் பால்நிலை மாறக் கூடியது. கண்மூடித்தனமான பால்நிலைகள் மாற்றப்படவேண்டும். இதுதான் பெண்ணியம் பேசுவோரின் கருத்து.

உதவி 1 : ஆமா! ஆளப்பிறந்தவன் ஆண். பேணப்பிறந்தவள் பெண் என்கிறார்களே.

முதல்வர் : இது மூடத்தனம். பெண்கள் ஆளவில்லையா?

பாட்டு : இலங்கை நாட்டின் பிரதமராகச்
சிறீமாவோ இங்கு ஆளலையோ?
இந்திய நாட்டைப் பிரதமராக
இந்திரா காந்தி ஆளலையோ?
இங்கிலாந்தைப் பிரதமராக
மார்க்கிறட் தட்சர் ஆளலையோ?

உதவி 2 : உண்மைதான். பெண்கள் விமானம் கூட ஓட்டுகிறார்கள். றொக்கட்டில் போய் வானவியல் ஆராய்ச்சி கூடச் செய்கிறார்கள்.

உதவி 1 : தாய்க்குலத்தின் மாண்பைச் சொல்லுங்கள்.

முதல்வர் : நம்மை வாழவைக்கும் நாடும்,மொழியும்,கல்வியும், செல்வமும், ஞானமும், பூமியும் எல்லாம் தாயாகவே போற்றப்படுகின்ற உண்மையைப் பாருங்கள்.

பாட்டு : பிறந்த நாடு தாய் நாடு
பேசும் மொழியும் தாய்மொழியே
கல்வி தருபவள் சரஸ்வதித்தாய்
செல்வம் தருபவள் லக்குமித்தாய்

ஞானம் தருபவள் சக்தித்தாய்
நம்மைத்தாங்குவாள் பூமித்தாய்
எங்கும் எல்லாம் தாய்தானே
தாயாம் பெண்மை தெய்வமன்றோ

உதவி 2 : எங்கள் தாய்க்குலமாகிய மங்கையர் மாண்பை இன்னும் சொல்லுங்கோ.

முதல்வர் : எங்கள் வாழ்வில் பெண் எத்தனை பாத்திரங்களில் நின்று எங்களை மகிழ்விக்கிறாள்.

உதவி 2 : மகளாய், சகோதரியாய், மனைவியாய்

உதவி 1 : மாமியாய், பாட்டியாய் இன்னும் எத்தனையோ.

முதல்வர் பாட்டு : மகளாய்ப் பிறக்கையில் பெற்றவர்க் கின்பம்
பெண்ணாய் வளர்கையில் சகோதரர்க் கின்பம்
மனைவியாய் வாழ்கையில் கணவனுக் கின்பம்
தாயாய் மலர்கையில் பிள்ளைகட் கின்பம்
மாமியாய் வருகையில் மருகருக் கின்பம்
பாட்டியாய் அணைக்கையில் பேரருக் கின்பம்

பெண் எந்த உறவில் வந்தாலும் எல்லோருக்கும் இன்பம் தந்திடுவாள்.

உதவி 1 : அதுசரி. எங்கள் பழைய இலக்கியங்களில் பெண்களுக்கு ஏழுபருவங்கள் வகுத்துச் சொல்லி இருக்கிறார்களாமே.

முதல்வர் : ஆமாம் அதையும் பாருங்கள்

பாட்டு : பேதை,பெதும்பை, மங்கை, மடந்தை,
அரிவை, தெரிவை, பேரிளம் பெண்ணென
பெண்ணில் ஏழு பருவம் கண்டு
கண்ணெனப் போற்றினர் நம்முன்னோர்

உதவி 1 : பேதைப் பருவம் என்றால் என்ன?

முதல்வர் பாட்டு : பிறந்து வளர்ந்து தவழ்ந்து எழுந்து
தளர்நடை பயில்வது பேதைப் பருவம்

உதவி 2 : பெதும்பைப் பருவம் என்பது

முதல்வர் பாட்டு : புத்தகப் பையுடன் சிட்டாய்ப் பறந்து
நித்தமும் மகிழ்வது பெதும்பைப் பருவம்

உதவி 1 : மங்கைப் பருவம் என்றால்

முதல்வர் : பெண்மை மலரப் பூப்பினை எய்தி
கன்னிய ராவது மங்கைப் பருவம்

உதவி 2 : மடந்தைப் பருவம் என்றால்

முதல்வர் : திருமணம் கண்டு பொட்டும் பூவுமாய்
கணவனை அணைவது மடந்தைப் பருவம

உதவி 1 : அரிவைப் பருவம் என்றால்

முதல்வர் : மக்களைப் பெற்று மகராசி யாகித்
தாயாய்த் திகழ்தல் அரிவைப் பருவம்

உதவி 2 : தெரிவைப் பருவம் என்பது

முதல்வர் : பேரரைத் தோளிலும் மடியிலும் வைத்துத்
தாலாட்டுப் பாடும் பருவம் தெரிவை

உதவி 1 : பேரிளம் பெண் என்றால்

முதல்வர் : பல்லும் கழன்று சொல்லும் தளர்ந்து
பொல்லுப் பிடிக்கும் கிழவிப் பருவம்
எந்தப் பருவம் வந்தாலும்
எல்லாம் பிறர்க்கு இன்பந்தான்

உதவி 2 : எப்படிப் பார்த்தாலும் மங்கையர்தான் உயர்ந்தவர்கள் என்று சொல்லுங்கோ.

முதல்வர் : அப்படியில்லை. ஆணோ பெண்ணோ உயர்ந்தவர்கள் என்று எடைபோடக் கூடாது. இருவர் உயர்வை இருவரும் உணர்ந்து ஒருவரை ஒருவர் மதித்து வாழவேண்டும்.

பாட்டு : ஆணோ பெண்ணோ உயர்ந்தவர் என்று
ஆராய்வது நம் அறியாமை
ஆணின் உணர்வையும் பெண்ணின் உயர்வையும்
அறிந்து போற்றுதல் அறிவுடைமை
இரண்டு கண்களை இறைவன் தந்தான்
இரண்டும் இணைந்தே ஒன்றைப் பார்க்கும்
அதுபோல் ஆணையும் பெண்ணையும் படைத்தான்
இருவரும் இணைந்தே முழுமை பெறலாம்
ஆணைப் பெண்ணும் மதித்திட வேண்டும்
பெண்ணை ஆணும் மதித்திட வேண்டும்.

இந்த உலகு பெண்களுக்குரிய மதிப்பை இன்னும் பூரணமாக வழங்கவில்லை. பெண்களின் மதிப்பு பூரணமாக உயரும் போதுதான் உலகு உயரும் மனித குலம் மேம்படும்.

உதவி 1 : அது உண்மைதான். ஆனால் பெண்கள்தான் கற்புடை யவர்களாக இருக்கவேண்டும் என்கிறார்களே. ஆண் களுக்கு கற்புத் தேவையில்லையோ.

முதல்வர் : கற்பு என்றால் என்ன? கற்பெனப்படுவது சொல் திறம்பாமை என்றார் ஔவையார். சொல்திறம்பாமை என்பது முன்னோர் சொல்லி வைத்த அறநெறியில் வழுவாது வாழ்தல். அறநெறி தவறாது வாழும் நெறியே கற்புநெறி. இப்பொழுது ஆண்பெண் உற வையே கற்பு என மட்டுப்படுத்திப் பொருள் கொள்வது தவறு. அறநூல்கள் கூறும் வழியில் வாழ்தலே கற்பு. அது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவே.


பாட்டு : கற்பெனப்படுவது ஆணுக்கும் பெண்ணுக்கும்
பொதுவாய் உள்ள ஒழுக்க நெறி
ஒருத்தனுக்கு கொருத்தி ஒருத்திக்கு ஒருத்தன்
என்பதே ஆண்பெண் உறவாகும்
உனக்கு நானே எனக்கு நீயே
இருவர் நாங்கள் உணர்வால் ஒருவர்
என்றே ஒன்றாய வாழ்வதே கற்பு
நன்றாம் அறநெறி காப்பதே கற்பு.

உதவி 2 : மங்கையர் மாண்பைப் போற்ற வேண்டும்
என்றால், அதெப்படி,என்ன செய்ய வேண்டும்.

முதல்வர் : பெண்களைத் தாய்போல் போற்றிடுங்கள்
கண்களைப் போலவே காத்திடுங்கள்
பெண்களின் அறிவு ஆற்றல்கள் எல்லாம்
எங்கும் ஓங்கிட வழிவிடுங்கள்
காவியம் கவிதை கதை எதிலும்
கண்ணியமாகவே எழுதுங்கள்
மங்கையர் மாண்பை மதியுங்கள்
மாநிலம் உயர்ந்திடும் பாருங்கள்

மங்களம்

விருப்புடனே வந்திருந்து வில்லுப்பாட்டுக் கேட்டவர்கள்
எல்லோருக்கும் எங்களது வணக்கம் எங்களை
மதித்தவர்கள் எல்லோருக்கும் வணக்கம்
வணக்கம் வணக்கம் வணக்கம்.



# நாவலர் பெருமான்

# நாவலர் பெருமான்

தந்தனத்தோம் என்று சொல்லியே
வில்லிசைப்பாட வில்லிசைப்பாட
வந்தருள்வாய் கணபதியே - வரம்நீ
தந்தருள்வாய் கணபதியே

வேறு

வாணிசரஸ்வதியே - சரஸ்வதியே
மணிவாக்குத் தாருமம்மா
தேவிஉனைத் தொழுதோம் - உனைத் தொழுதோம்
சொல்வாக்குத் தாருமம்மா

வேறு

சபையிலுள்ள பெரியோரே, தாய்மாரே சன்றோரே
தம்பியரே தங்கையரே எல்லோருக்கும் எம் வணக்கம்

வேறு

ஈழத்திரு நாட்டினிலே இனிய தமிழ் பாடவல்லார்
வாழுகின்ற கொழும்புநகர் வாலிபர் நாம் வில்லெடுத்தோம
ஈழ நல்லூர் நாவலரின் இனிய கதை பாடிடுவோம்
வாழவைத்த தெய்வமவர் வாழ்வியலைக் கேட்டிடுங்கள்.

உதவி 1 : ஆமா யார் கதை என்று சொன்னீர்கள்

முதல்வர் : ஈழத்திருநாட்டின் மணிமுடியாகத் திகழ்கின்ற யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமானின் கதையைச்சொல்லுவோம்.
நாம் பேசுகின்ற இந்தச் செந்தமிழும், நமது சமயமாகிய சைவமும் எங்களுக்கு அவர் தந்த அரும் பெரும் சொத்துக்கள் தம்பி.

உதவி 2 : அதெப்படி நாவலர் தந்த சொத்தென்பீர்கள்

பரட்டு : அன்னியர் வந்து அடிமைப்படுத்தி
ஆண்டனர் எங்கள் திருநாட்டை
முன்னே வந்த போர்த்துக்கேயரும்
பின்னே வந்த டச்சுக்காரரும்
அடுத்துவந்த ஆங்கிலேயரும்
கெடுத்தே விட்டனர் நம் வாழ்வை.

முதல்வர் : அவர்கள் ஏறக்குறைய 450 வருடகாலம் நம்மவரை அடக்கியாண்டனர். ஆங்கிலம் அரசமொழி, கிறீஸ்தவம் மக்கள் சமயம் என்று நம்மவரை அடிமைப்படுத்தினர். தமிழும் சைவமும் நிலைகுலைந்தன. அந்தவேளையில் ஒரு விடிவெள்ளி தோன்றியது.

உதவி 1 : விடிவெள்ளியா அது என்ன?

முதல்வர் : அந்த விடிவெள்ளி யாழ்ப்பாணத்து நல்லூரிலே தோன்றியது. அதுதான் சிறீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் என்னும் விடிவெள்ளி.

உதவி 2 : அப்படியா அதை நாம் கேட்கத்தான் வேண்டும். அவர் கதையைச் சொல்லுங்கோ.

பாட்டு : மெத்தப்படித்தவர்கள் மேல்நிலையில் உள்ளவர்கள்
சுத்தசைவப் பெரியார்கள் வாழுகின்ற நல்லூரிலே
உத்தமர் கந்தப்பிள்ளை சிவகாமி தம்பதியர்
வித்தகர் ஆறுமுகம் பிள்ளையைப் பெற்றெடுத்தார்.

உதவி 1 : ஓகோ ஆறுமுகம் பிள்ளைதான் ஆறுமுகநாவலரோ.

முதல்வர் : அவரேதான். ஆறுமுகம் பிள்ளை ஆறுமுகநாவலரான கதை ஒரு தனிக்கதை.அதைப் பின்பு பார்ப்போம்.

உதவி 2 : இவர் எப்போது பிறந்தார்.

பாட்டு : சித்திரபானு ஆண்டு மார்கழி ஐந்து அவிட்டத்திலே
இத்திரை போற்றிடவே பிறந்தாரே நாவலரே

முதல்வர் : 1922 ஆம் ஆண்டு டிசம்பர் 18ம் திகதி புதன் கிழமை இரவு சிங்கலக்னத்தில் பிறந்தார்.

உதவி 1 : நல்லூரிலே கந்தப்பிள்ளை சிவகாமிதம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். அவருடைய முன்னோர் சிறப்பு என்ன?

முதல்வர் : கந்தப்பிள்ளை ஆங்கிலேயர் ஆட்சியிலே கச்சேரி முதலியாராகக் கௌரவ உத்தியோகம் பார்த்தவர். அவரின் சந்ததி பசுக் கொலைக்கு அஞ்சிப் பிரதேசம் போன ஞானப்பிரகாச முனிவர் சந்ததி.

உதவி 2 : அதென்ன பசுக் கொலைக்கு அஞ்சிப் பரதேசம் போன ஞானப்பிரகாச முனிவர் என்கிறீர்கள்.

பாட்டு : அந்நியப் பறங்கியர்கள்
ஆட்சியிலே அவர்களுண்ண
ஆளுக்கொரு பசு கொடுக்கும்
அநியாயம் தனக் கஞ்சியே
இந்நாட்டை விட்டகன்று
தென்னாட்டில் குடிபுகுந்த
பொன்னான ஞானி ஞானப்
பிரகாசர் வம்சத்திலே
வந்தே அவதரித்தார்
ஆறுமுக நாவலனார்

முதல்வர் : சுப்பிரமணிய உபாத்தியாயர் அவர்கள் ஏடுதொடக்கி வைத்தார். அவரிடமே ஆரம்பக்கல்வியைக் கற்றுத் தேறினார்.
சரவணமுத்துப் புலவர், சேனாதிராய முதலியார் ஆகியோரிடம் உயர் கல்வியையும், சமஸ்கிருதத்தையும் கற்றார். 12 வயதிலே பேர்சிவல் பாதிரியார் அதிபராயிருந்த கிறீஸ்தவக் கல்லூரிக்குப் போனார். கிறீஸ்தவராக மாறுபவருக்கே அங்கே கற்க முடியும். இவர் மதம் மாற மறுத்துவிட்டார். இவருடைய திற மையைக்

கண்ட பாதிரியார் இவருக்கு ஆங்கிலம் கற்பிக்க இணங்கினார். அதேவேளையில் இவரைத் தனக்குத் தமிழ் கற்பிக்கும் பண்டிதராகவும் ஏற்றுக் கொண்டார்.

உதவி 1 : ஓகோ நாவலருக்கு ஆங்கிலக் குரு பேர்சிவல் பாதிரியார். பேர்சிவல் பாதிரியாருக்குத் தமிழ்க்குரு நாவலர்.

முதல்வர் : அதுமட்டுமல்ல அக்கல்லூரியிலே மாணவர்களுக்கு தமிழும் ஆங்கிலமும் கற்பிக்கும் ஆசிரியரும் ஆனார்.

பாட்டு : பாதிரியாரிடம் ஆங்கிலம் கற்றார்
பாதிரி இவரிடம் தமிழைக் கற்றார்
இருதுருவங்கள் ஒருவருக் கொருவர்
குருவானார் இது அதிசயமே

முதல்வர் : கிறீஸ்தவர்கள் அல்லாதோர் போகமுடியாத அக்கல்லூரிக்கு நாவலர் திருநீறும் உருத்திராக்கமும் அணிந்து சைவவேடத்துடன் தான் போவார். பாதிரியாரும் இவரின் நுண்மாண் நுழைப் புலத்திறமையைக் கண்டு ''மம குரு'' என அழைத்தார்.

பாட்டு : பத்தொன்பதாவது வயதினிலே
பற்பலகலையும் கற்றுணர்ந்தார்
செந்தமிழ் ஆங்கிலம் சமஸ்கிருதம்
வேதம் ஆகமம் சித்தாந்தம்
அத்தனை கல்வியும் கற்றுணர்ந்தே
வித்தகராகப் புகழ் பெற்றார்.

முதல்வர் : கிறீஸ்தவ விவிலிய வேதம் ஆகிய பைபிளை இவர் மூலம் தமிழில் மொழிபெயர்ப்பித்தார் பேர்சிவல் பாதிரியார். அதனை அரங்கேற்றுவதற்கு நாவலரையும் அழைத்துக் கொண்டு சென்னைக்குச் சென்றார் பாதிரியார். அங்கு அக்காலத்தில் மகாவித்துவானாக இருந்த மகாலிங்கையர் நாவலரின் யாழ்ப்பாணச் செந்தமிழைக் கண்டு மெச்சிப்புகழ்ந்தார். இருவரும் மகிழ்ச்சியுடன் மீண்டனர்

பாட்டு : பைபிளைப் பெயர்த்ததனால்
கிறிஸ்தவத்தை நன்கறிந்தார்
மெய்யான சைவத்தின்
மேன்மையையும் நன்குணர்ந்தார்
சைவத்தையும் தமிழினையும்
காக்கவெனப் புறப்பட்டார்.

முதல்வர் : நாவலரின் கல்விவேள்வி அறிவுத்திறனைக் கண்டு பெற்றாரும் சகோதரர்களும் பெருமை அடைந்தார்கள். திருமணம் செய்யும்படியும், அரச உத்தியோகத்தில் சேரும்படியும் வேண்டினார்கள். நாவலர் மறுத்துவிட்டார்.

பாட்டு : உத்தியோகம் பார்க்கமாட்டேன்
திருமணமும் செய்யமாட்டேன்
நைட்டிகப் பிரம்மச்சாரி
ஆகவே நான் வாழ்ந்திடுவேன்.

என்று உறுதிபூண்டார். சைவத்தையும் தமிழையும் காப்பதே தனது வாழ்வின் இலட்சியம் எனக் கொண் டார். பேர்சிவல் பாதிரியாரின் கல்லூரியில் கற்பித்த லையும் துறந்துவிட்டார். சைவசமயத்தவர் களைப் பாதிரிமார் கிறீஸ்தவத்துக்கு மதமாற்றம் செய்வதை எதிர்த்துப் போராடத் தொடங்கினார்.

இதற்கு வழி சைவசமயத்தவர்க்குச் சைவத்தின் பெருமையை அறியச் செய்வதும் தமிழ்க்கல்வி அறிவை ஊட்டுதலுமே என எண்ணினார்.

பாட்டு : பள்ளிக்கூடம் கட்டவேண்டும் - அங்கு
பலகல்வி புகட்ட வேண்டும்
பிரசங்கம் செய்யவேண்டும் - அதில்
சமய அறிவு ஊட்டவேண்டும்
புத்தகங்கள் எழுதவேண்டும் - அதைப்
படித்திடவே செய்யவேண்டும்
அச்சுக்கூடம் வைக்கவேண்டும் - அதில்

அச்சடித்துக் கொடுக்கவேண்டும்
எல்லாம் இலவசமாகவே - இங்கு
எல்லோர்க்கும் செய்யவேண்டும்.

உதவி 1 : இதையெல்லாம் செய்தாரா?

முதல்வர் : எனத்திட்ட மிட்டுச் செயற்படத் தொடங்கினார். 1847 டிசம்பர் 31 வெள்ளிக்கிழமை வண்ணார் பண்ணைச் சிவன் கோயிலில் சைவப்பிரசங்கம் செய்யத் தொடங்கினார். வெள்ளிதோறும் தொடர்ந்து செய்தார். மற்றவர்களையும் மற்றக் கோயில்களிலும் பிரசங்கம் செய்யப் பழக்கினார்.

அக்காலத்தில் தமிழில் பாடப்புத்தகங்கள் இருக்க வில்லை. அதனால் தானே மாணவர்கள் இலகுவாகக் கற்கக்கூடியதான முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் பால பாடங்கள் முதலாம் இரண்டாம் சைவவினா விடைகளை எழுதினார்.

உதவி 1 : எழுதியவற்றை அச்சிட என்ன செய்தார்.

முதல்வர் : சென்னைக்குச் சென்று அச்சுக்கூடம் வாங்கிவந்து வித்தியானுபாலன அச்சுக்கூடம் எனப் பெயரிட்டு நல்லூரிலேயே நிறுவினார். அதிலே புத்தகங்கள் அச்சாகின.

பாட்டு : எண்ணிய தெல்லாம் எண்ணியபடியே
திண்ணிய நெஞ்சுடன் செய்திட்டார்
கண்ணியவான்கள் பிரபுக்கள் கூடி
புண்ணியச் செயலெனப் பொருளீந்தார்
நண்ணியே மாணவர் தோள் கொடுத்தார்
நற்பணி பலவும் தொடர்ந்தனவே

முதல்வர் : சைவத்தமிழ் மாணவர்கள் சைவப்பண்பாட்டுடன் கல்வி கற்கவென 1848ஆம் ஆண்டு தனது 26வது வயதினிலே வண்ணார் பண்ணையில் சைவப்பிரகாச வித்தியால

யத்தை நிறுவினார். அங்குப்படிக்கும் மாணவர்களுக்கு உடையும் உளவும் புத்தகங்களும் இலவசமாகவே வழங்கப்பட்டன.

பாட்டு : இலவசக் கல்வி இலவசப் புத்தகம்
இலவச உணவும் உடைகளுடன்
எல்லோர்க்கும் கல்வி என்னும் கொள்கையில்
ஏற்றத்தாழ்வின்றிக் கற்கவைத்தார்

உதவி 1 : அதுசரி இப்ப எங்கள் நாட்டிலும் இலவசக் கல்விதானே நடைமுறையில் இருக்கு.

முதல்வர் : ஆமாம். எங்கள் நாட்டில் டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா கல்வி மந்திரியாக இருந்த காலத்தில் 1944இல் இலவசக் கல்விமுறையைக் கொண்டு வந்தார். நாவலர் இதற்கு முன் ஏறக்குறைய 100 வருடங்களுக்கு முன்பே 1848 இல் இலவசக் கல்வியை அறிமுகம் செய்தார்.

உதவி 2 : அப்ப நாவலர்தான் இந்த நாட்டில் இலவசக் கல்வியை முதன் முதல் அறிமுகம் செய்தார் என்று சொல் லுங்கோ.

முதல்வர் : அதுமட்டுமல்ல இப்ப அரசாங்கம் செய்யுது. அப்ப நாவலர் தனியாக நின்று செய்தார்.
கல்விப்பணி தொடர்ந்து சென்னையிலும் ஒரு அச்சுக் கூடத்தை நிறுவினார். செய்யுள் நடையில் இருந்த பல நூல்களை வசனநடையில் எழுதி அச்சிட்டார். பல ஏட்டுப்பிரதிகளைப் பரிசோதித்து அச்சேற்றி னார்.

பாட்டு புதியனவாக எழுதி அச்சிட்ட
நூல்கள் இருபத்தாறாகும்
பதிசோதித்துப் பதிப்பித்த நூல்கள்
முப்பத் தொன்பதின் மேலாகும்
உரைகள் எழுதிப் பதிப்பித்த நூல்கள்

ஒன்பதின் மேலாம் அறிவீரே
நாவலர் பதிப்பில் ஒருபிழையும்
மருந்துக்கும் கண்டிட முடியாதே.

முதல்வர் : நாவலர் காட்டிய வழியில் ஊர்கள் தோறும் சைவப் பிரகாச வித்தியாலயங்கள் தொடங்கப்பட்டன. சைவக் கல்வியும் தமிழ்க்கல்வியும் பண்பாடும் தலைநிமிர்ந்தன.

நாவலர் பெருமான் இலங்கையுடன் மட்டும் நிற்க வில்லை. தமிழ் நாட்டிலும் பணியைத் தொடர்நத்ார்.

இவருடைய ஆழ்ந்த அகன்ற நுண்ணிய அறிவையும் பிரசங்க வன்மையையும் நேரிற்கண்ட திருவாவடுதுறை ஆதீன முதல்வர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் ''நாவலர்'' எனும் பட்டமளித்துக் கௌரவித்தார். ஆறுமுகம்பிள்ளை அன்றுமுதலே ஆறுமுக நாவலரானார்.

திருவண்ணாமலை ஆதீனம் உருத்திர சஞ்சிகை சூட்டிக் கௌரவித்தது. மதுரை ஞானசம்பந்தர் ஆதீனம் சுந்தர வேடம் சூட்டிக் கௌரவித்தது.

1864இல் சிதம்பரத்திலும் சைவபிரகாச வித்தியா சாலையை நிறுவினார். அது இன்றும் நடைபெறுகிறது. ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் இணையிலாப் பணிசெய்த நாவலர் பெருமான் தனது இறுதிப்பிரசங்கத்தை 1879 ஆடிச்சோதிநாளில் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நிகழ்த்தினார்.

உதவி 1 : இறுதிப் பிரசங்கம் என்கிறீர்களே.

முதல்வர் : ஆமாம். இறுதிப் பிரசங்கம்தான். சோதியில் பிரசங்கம் செய்தவர் நோயுற்றுக் கார்த்திகை மகத்தில் 1879 டிசம்பர் 5ந்திகதி தனது 57 ஆவது வயதில் சிவபதம் சேர்ந்தார்.

பாட்டு : நாவலர் செய்த நற்பணி - இந்த
நானிலம் உளவரை நிலைத்திருக்கும்
நாவலர் தோன்றாவிடில் எங்கள்
சைவமும் தமிழும் அழிந்திருக்கும்

உதவி 1 : இவ்வளவு பெரும்பணிகள் செய்த நாவலருக்கு நம்மவர் என்ன செய்தார்கள்.

முதல்வர் : 1968 ஆம் ஆண்டு நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்து நல்லூரில் கந்தசுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள அவரது காணியில் அம்மையப்பன் வளவில் நாவலர் மணிமண்டபம் கட்டப்படடு கொழும்பிலிருந்து நாவலர் சிலை ஊர்வலமாகக் கொண்டுபோய் நாட்டப்பட்டது.

தமிழர்வாழும் இடமெல்லாம் கார்த்திகை மகத்தில் குருபூசை செய்யப்படுகிறது.

உதவி 2 : இலங்கை அரசு ஒன்றும் செய்யவில்லையோ.

முதல்வர் : செய்தது. அவருக்குத் ''தேசியவீரர்'' எனும் கௌரவம் அளித்து 1971 அக்டோபர் 29 ஆம் நாள் முத்தரை வெளியிட்டு மேன்மைப்படுத்தியது.

உதவி 1 : அண்மைக் காலத்திலே பத்திகைகளில் நாவலர் சிலை திறப்புவிழாச் செய்திகள் அடுத்தடுத்து வருகுதே அது பற்றிச் சொல்லவில்லையே.

முதல்வர் : கொழும்பில் நாவலர் நற்பணி மன்றம் ஒன்று பெரியார் கருணை ஆனந்தன் ஐயா தலைமையில் இயங்கு கிறது.
அவர் இந்த நாட்டிலுள்ள பெரிய கல்லூரிகளில் நாவ லர் சிலைகளைத் தன் செலவில் நிறுவி வருகி றார்.சென்ற ஆண்டு றோயல் கல்லூரியில் தொடங்கிக் கொழும்புக் கல்லூரிகளில் நாட்டினார்.

இந்த ஆண்டு கடந்த மாதம் மலைநாட்டுக் கல்லூரி களில் நாட்டினார். இப்போது வடமாகாண கல்லூரி களில் நாட்டிக் கொண்டிருக்கிறார்.

உதவி 1 : இதெல்லாம் அவர்தான் செய்கிறாரோ.

முதல்வர் : ஆமாம், ஆமாம். அவர் செயற்கரிய செய்யும் பெரியார் எல்லாம் நாவலர் கடாட்சத்தால் நடக்கிறது.

உதவி 2 : நாவலர் தமிழுக்கும் சைவத்துக்கும் செய்த பணி களைச் சொன்னீர்கள். சமூகப்பணி ஒன்றும் செய்ய வில்லையோ.

பாட்டு : பஞ்சத்தில் வாடிய மக்களைக் காக்கக்
கஞ்சித் தொட்டித் தர்மம் செய்தார்
வைசூரியால் மக்கள் மாண்ட போதில்
அரசுடன் சேர்ந்து அவர்களைக் காத்தார்
நெல்வயல் எல்லாம் அழிந்திட்டபோது
விதைநெல் வருவித்துக் கொடுத்துக் காத்தார்.

உதவி 1 : இதெல்லாம் எப்ப நடந்தது.

முதல்வர் : 1877 பஞ்சம் வந்தபோது யாழ்ப்பாணம் சிறாம்பியடியில் தொட்டிகட்டிக் கஞ்சி காய்ச்சிக் கொடுத்து மக்களைக் காத்தார்.

அதே ஆண்டு யாழ் குருநகர் பாஷையூர் பகுதி களில் வைசூரி எனும் வயிற்றோட்டம் வந்து மக்கள் தொகை தொகையாக இறந்தபோது அரசாங்கத்தின் மூலம் நோய்த் தடுப்புச் செய்துகாத்தார்.

பாட்டு : நாவலர் பெருமான் பணிகளை நாங்கள்
சொல்ல நினைத்தால் சொல்லில் அடங்கா
நாவலரே எங்கள் காவலர் அவரை
நாளும் பொழுதும் நினைத்திடுவோம்
நாவலர் வழியில் நடந்திடுவோம்
நாவலர் சொற்படி நாம் வாழ்வோம்.

சைவப்புலவர் சு. செல்லத்துரையின்

# கலைப்படைப்புக்கள்

போரால் அழிந்தவைபோக எஞ்சியவை இவை.
அனைத்தும் அரங்கேற்றப்பட்டவை.

## உரை நாடகங்கள்

1. புதியதோர் உலகம் – சமூகம்
2. தக்கன் யாகம் – சமயம்
3. புலவர் புகழ் – இலக்கியம்
4. பரதன் – இலக்கியம்
5. சுனாமியாம் – சமூகம்
6. நாவலரானார் – சான்றோர்
7. மெய்கண்டார் – சமயம்
8. சகுந்தலை – இலக்கியம்
9. தமயந்தி – இலக்கியம்
10. கைகேயி – இலக்கியம்
11. அர்ச்சுனன் – இலக்கியம்
12. சுப்றீம் கோர்ட்டில் துரௌபதை – சமூகம்
13. வயோதிபர் தினம் – சமூகம்
14. சம்பூர்ண ராமாயணம் – இலக்கியம்
15. நாம் யார் – சமூகம்
16. பாற்கஞ்சி – சமூகம்

## இசை நாடகங்கள்

1. அர்ச்சுனன் தவம் – இலக்கியம்
2. பஞ்சவடி – இலக்கியம்
3. இரண்டாம் சுயம்வரம் – இலக்கியம்

## இசைச் சித்திரம்

1. தேடிவரும் சான்றோர் – இலக்கியம்
2. ஔவையார் – இலக்கியம்

## நாட்டிய நாடகங்கள்

1. யாருக்குச் சொந்தம் – சமூகம்
2. சரஸ்வதியே சம்மதம் தா – கல்வி
3. வள்ளி திருமணம் – சமயம்
4. எண் கோலங்கள் – கணிதம்
5. வாயுக்கள் – விஞ்ஞானம்
6. ஐந்திணை – இலக்கியம்
7. நவக்கிரகங்கள் – சமயம்
8. சூதுபோர்ச் சபதம் – இலக்கியம்
9. மதுரையம்பதி – இலக்கியம்
10. தாருகாவனம் – சமயம்
11. பஸ்மாசுரன் – சமயம்
12. கங்குலும் பகல்படவந்தான் – இலக்கியம்

## தாளலய நாடகங்கள்

1. மேலும் கீழும் – சமூகம்
2. வேண்டும் எனக்கு மூண்டுலட்சம் – சமூகம்

## சிந்துநடைக் கூத்துக்கள்

1. வள்ளல் ஏழூர் – வரலாறு
2. மலரொழுங்கு – மனைப்பொருளியல்
3. மாங்கனி – சிறுவர் – சமயம்
4. வலைப்பந்தாட்டம் – விளையாட்டு
5. நிறையுணவுச் சத்துக்கள் – சுகாதாரம்
6. அர்ச்சுனன் தவம் – இலக்கியம்
7. நியாயந்தான் அல்லது மன்னிப்பு – பைபிள்

## வில்லுப் பாட்டுக்கள்

1. விபுலானந்த அமுத வெள்ளம் – சான்றோர்
2. மெய்ப்பொருள் – சமயம்
3. மெய்கண்டார் – சமயம்
4. எல்லோருக்கும் கல்வி – கல்வி
5. சேர்ந்தாரைக் கொல்லும் சினம் – இலக்கியம்
6. மாற்றுவலுவுடையோர் – சமூகம்
7. மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் – இலக்கியம்
8. முறைமைக்கு மூப்பிளமைஇல் – இலக்கியம்
9. செய்நன்றி கொன்றார்க்கு உய்வில்லை– இலக்கியம்
10. நாவலர் பெருமான் – சான்றோர்
11. சங்கம் தந்த அகத்திணை – இலக்கியம்
12. நோதலும் தணிதலும் – சமூகம்
13. தன்நெஞ்சறிவது பொய்யற்க – சமூகம்
14. வயிரவசுவாமி – சமயம்
15. மங்கையர் மாண்பு – சமூகம்
16. பூம்பாவை – சமயம்

## தெருக்கூத்து

1. எழுத்தறிவு – சமூகம்

## பிரபந்தங்கள்

1. காரைக்கால் விஸ்வநாதசிவன் திருவூஞ்சல்
2. ஏழாலை புளியடி வயிரவர் திருவூஞ்சல்
3. பன்னாலை வரத்தலம்பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி
4. ஏழாலை தேவிகோயில் திருவூஞ்சல்
5. ஜேர்மனி சந்திரமௌலீஸ்வரர் திருவூஞ்சல்
6. ஒல்லுடை ஞானவயிரவர் ஆனந்தமாலை
7. சண்டிலிப்பாய் மத்திஅடைக்கள்ளிப்பதி காளியம்பாள் திருவூஞ்சல்
8. ஜேர்மனி டோட்மண்ட் சந்திரமௌலீசர் திருவூஞ்சல்



துணைவி சிவகாமசுந்தரியின்
நாலாவது ஆண்டு நினைவு விழாவில் (03.07.2014)
கணவனும் மகனும் அஞ்சலி செய்தல்



கொழும்பு - கொட்டாஞ்சேனை விவேகானந்தாக் கல்லூரி
முத்தமிழ் விழாவில் முதன்மை விருந்தினராக
மங்கல விளக்கேற்றும் காட்சி



13.06.2015 இல் கொழும்புத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பட்டயக் கற்கை நெறிப்
பட்டமளிப்பு விழாவில் தமிழ் விரிவுரையாளர்
சைவப்புலவர் சு.செல்லத்துரை யாழ். பல்கலைக்கழக
வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் கௌரவிக்கப்படும் காட்சி



கொழும்புத் தமிழ்ச் சங்கத் தமிழ்ப் பட்டயக் கற்கை நெறிப் பட்டமளிப்பு
விழாவில் பரிசளித்துக் கௌரவிக்கும் காட்சி




"அரங்கப்படையல்" நூல் வெளியீட்டு விழாவில் பன்மொழிப்புலவர்
த.கனகரத்தினம் அவர்களிடமிருந்து உடுவை தில்லைநடராசா
அவர்கள் சிறப்புப் பிரதி பெறும் காட்சி



கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் 2008 இல் நடந்த அரங்கப்படையல் நூல்
வெளியீட்டு விழாவில் நூலாசிரியரின் "யாருக்குச் சொந்தம்" எனும் நாட்டிய
நாடகத்தை ஆற்றுகை செய்த நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய
கல்லூரி மாணவிகளும், அதிபர், ஆசிரியர்களும்.




துணைவி சிவகாமசுந்தரியின் நாலாவது ஆண்டு நினைவு (20.07.2014) இன்பத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் கலாநிதி. மு.கதிர்காமநாதன் அவர்கள் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா அவர்களிடமிருந்து சிறப்புப் பிரதி பெறும் காட்சி



துணைவி சிவகாமசுந்தரியின் நாலாவது ஆண்டு நினைவு (20.07.2014) இன்பத்தமிழ் நூல் வெளியீட்டு விழாவில் அண்ணா தொழிலக முதல்வர் திரு.எஸ்.பி. நடராசா அவர்கள் சிறப்புப் பிரதி பெறும் காட்சி




2015 இல் வாடாமல்லிகை நூல் வெளியீட்டின் போது
அண்ணா தொழிலக முதல்வரினால்
கௌரவிக்கப்படும் காட்சி



திருவாவடுதுறை ஆதீனத்தில்
சொற்பொழிவு
28-01-2012



நீர்கொழும்பு இந்து இளைஞர் சங்கக் கலை விழாவில்
முதன்மை விருந்தினர்களாகத் தலைவருடன் - 2009



அகில இலங்கைப்பரிசு பெற்ற மெய்கண்டானின் "கர்வபங்கம்"
நாடகத்தில் நடித்த நாவரசனுடன் - 1977



நெறியாள்கை செய்த மன்னார்க் கலாமன்றத்தின்
"ஐயோ அம்மான்"
நாடகத்தில் ஒரு காட்சி



நெறியாள்கை செய்த
"இன்னல் சுமந்த அண்ணல்"
நாடகக் கலைஞர்கள்
ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மணவர்கள் - 1970



இளைய மகன் மாவிரதன் பிரகாஜினி
திருமண விழாவில்




மூத்த பேர்த்தி அட்சயாவின்
முதலாவது பிறந்த நாளில்

# வாழ்க்கைக்கோலம்

1. மரபுவழிக் கல்வியை நிறைவிக்கும் ஆளுமை வடிவினர்
   *பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள்*
2. மாநிலத்தோர் மகிழ்ந்தேத்தும் ......
   *இசைக்கலாவித்தகர் ந.ஶ்ரீராம்குமார் அவர்கள்*
3. ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோன்
   *சித்தாந்தரத்தினம் சா.பொன்னுத்துரை அவர்கள்*
4. சைவநெறி வாழ்வும் பணிகளும்
   *சைவப்புலவர் கிருபாதேவி வீரசிங்கம் அவர்கள்*
5. அரங்கை ஆண்டவர்
   *கலாபூஷணம் கோகிலா மகேந்திரன் அவர்கள்*
6. சொல்லும் வில்லும்
   *திருமதி வானதி காண்டீபன் அவர்கள்*
7. மாண்புறு மனையாள் சிவகாமசுந்தரி
   *திருமதி இராஜி கெங்காதரன் அவர்கள்*
8. வெல்லத்தமிழ் பேசும் செல்லத்துரை
   *மேழிக்குமரன் க.க.அருந்தவராசா*
9. ஊருக்கெல்லாம் உறவுக்காரர்
   *திரு. எஸ். யு. சந்திரகுமாரன் அவர்கள்*
10. சைவப்புலவர் சங்கப்பணியில்
    *சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள்*
11. இலக்கியக்களத்தை இயக்கும் இணையற்ற தலைவன்
    *திருமதி இராஜி கெங்காதரன் அவர்கள்*
12. ஆன்மீக அறிவு புகட்டும் நல்லாசான்
    *சைவப்புலவர் செ.நவநீதகுமார் அவர்கள்*
13. மங்கல மனைமாட்சி உடைய
    சைவப்புலவர் சிவகாமசுந்தரி தம்பதியர்
    *சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன் அவர்கள்*
14. நூல் ஆக்கங்கள்
15. இணைந்து பணிசெய்த சமய சமூக நிறுவனங்கள்



# மரபுவழிக் கல்வியை நிறைவிக்கும் ஆளுமை வடிவினரான சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா

பேராசிரியர் சபா. ஜெயராசா

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழியினதும் சைவ நெறியினதும் பாதுகாவலர்களாக விளங்கியவர்கள் தமிழாசிரியர்களே. கற்றவர்கள் இவ்வாறுதான் இருத்தல் வேண்டும் என்ற மாதிரிகை வடிவினராகவும் (ROLE MODEL) அவர்களே விளங்கினர். ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் ஒழுக்க மேம்பாடும் தமிழாசிரியர்களுக்கு அணிகலன்களாயின.

"நாவலர் மரபு" என்பதில் தமிழ் ஆசிரியர் மரபு உள்ளடங்கியது. ஆழ்ந்து அடங்கிய அறிவுத் தேட்டமும், சைவக்கோட்பாடுகளை நிலைநிறுத்தலும், பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தலும், பள்ளிக் கூடங்களை நிறுவிப்பராமரித்தலும், அறிவைப் பணத்துக்கு விற்காது தானமாக வழங்குதலும், இறவாத புகழுடைய நூல்களை எழுதுதலும், அறவழி வாழ்தலும் என்ற பன்முகப் பரிமாணங்களைக் கொண்ட நாவலர் மரபின் சமகாலத்தைய பிரதிநிதித்துவப்படுத்தலை மேற்கொண்டுவருபவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்கள்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் நாவலர் கல்வி மரபைக் கண்டு கொள்ளத்தக்க ஆளுமைவடிவினராக விளங்குபவர் சைவப்புலவர் ஐயா. தொடர் கல்வியும், தூயசைவ வாழ்வும் ஒன்றிணைந்த பரிமாணங்களுடன் உறவாடிக் கொண்டிருப்பவர்.

காலனித்துவ ஆட்சியில் "தமிழ்த் தேசியம்" எழுகோலம் பெறத் தொடங்கியது தாய்மொழியும், தாய்ச்சமயமும் ஒடுக்கு முறைகளுக்கு

உட்பட்டிருந்த வேளை ஒடுக்கப்பட்டோருக்கான கல்வியியலை உருவாக்கும் முயற்சிகள் உலகளாவிப் பரந்து மேலெழுந்த இந்திய விடுதலைப் போராட்டம், ஆபிரிக்காவின் கருமை இன மக்களின் எழுச்சி, தென் அமெரிக்காவில் போலோபிரேரி உருவாக்கிய "ஒடுக்கப்பட்டோர் ஆசிரியம்" (PEDAGOGY OF THE OPPRESSED) ஆகியவை ஒடுக்கு முறைக்கு எதிரான கிளர்ச்சி களாயின. ஆறுமுக நாவலர், அநகாரிக தர்மபாலா, சித்திலெப்பை ஆகியோரின் சமயமும் கல்வியும் தழுவிய செயற்பாடுகள் காலனித்துவத்துக்கு எதிரான எழுகோலங்களைக் கொண்டிருந்தன.

இளவாலைக் கிராமம் சைவமும் தமிழும் செழித்த கிராமம். அதேவேளை கிறீஸ்தவத்தின் வருகையோடு நவீன கல்வியையும் எதிர்கொண்ட கிராமம். தொன்மையான குருகுலக்கல்வி, திண்ணைப் பள்ளிக்கூடம், ஆகியவை பிரித்தானியர் ஆட்சியிலும் நீடித்திருந்த கிராமம். அத்தகைய பின் புலத்திலே தான் சைவப்புலவர் ஐயா அவர்களின் ஆரம்பம் மற்றும் இடைநிலைக் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற்றன.

ஆசிரிய கலாசாலைக் கல்வி ஒருவரின் பன்முக ஆற்றல்களைத் தூண்டியெழச் செய்யும் கலைத்திட்ட வடிவமைப்பைக் கொண்டது. அத்தகைய பின்புலமும் செல்லத்துரை ஐயா அவர்களின் பன்முக அறிவுக் கோலங்களுடன் சங்கமிக்கச் செய்தன.

சைவக்கல்விக் கோட்பாடுகளின் வழியிலும், நவீன மேலைப் புலக்கல்வி சிந்தனைகள் வழியிலும் தம்மை வளர்த்துக் கொண்ட அவர் பின்வரும் கல்வி இலக்குகளைத் தம்மிடத்தும் தமது மாணவரிடத்தும் நிலைபேறு கொள்ளச் செய்தார்.

அ) கற்பதற்காகக் கற்றலை முன்னெடுத்தல்

ஆ) வாழ்க்கை முழுவதும் கற்றுக் கொண்டிருத்தல்.

இ) கல்வியை ஒருவிற்பனைப் பண்டமாகக்கருதாது வேண்டுவார்க்கு வினை நலம் பெற வழங்குதல்.

ஈ) கல்விவழியாக ஒன்றிணைந்த கூட்டுமொத்தமான ஆளுமையை (TOTAL PERSONALITY) வளர்த்தெடுத்தல்.

உ) கல்வி முன்னெடுப்புக்களுடன் அன்னியப்படாது வாழ்ந்து, அநீதிகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் எதிராக வினைப்படல்.

ஊ) மனவெழுச்சிகளை ஒழுங்குற முகாமை செய்து, சமூகத்துடன் இசைவுபட வாழல்.

எ) கல்வி அனுபவங்களைச் சமூகம் பயனுறும் அழகியல் ஆக்கங்களுக்குப் பயன்படுத்துதல்.

ஏ) அறிவும், அனுபவமும் இணைந்த ஆற்றுப்படுத்தலை வேண்டுவார்க்கு வழங்குதல்.

ஐ) உடல், உள்ளம், ஆன்மா என்பவற்றை வளம்படுத்தவும் மேம்படுத்தவும் அறிவாற்றல்களைப் பிரயோகித்தல்.

ஒ) சைவகோட்பாடுகளுக்கும் நடைமுறைகளுக்கு மிடையே வேறுபாடில்லாது ஒழுகுதல்.

ஓ) கல்வியின் நிறைவு ஒழுக்கம் என்பதை நீட்சி கொள்ளச் செய்தல்.

சைவப்புலவர் ஐயா அவர்களின் கல்விப் பரிமாணங்களும் கல்வி வகிபாகங்களும் பன்மை நிலைகளைக் கொண்டுள்ளன. என்றும் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர், என்றும் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நல்லாசிரியர், தாம் பொறுப்பேற்ற கல்வி நிலை யங்களை உச்ச நிலைகளில் எழுச்சிபெறச் செய்த ஆற்றல் மிக்க அதிபர், மாணவர்க்கு ஆற்றுப்படுத்தலை வழங்கும் சீர்மியர், சமூகநோக்கும் அழகியல் நோக்கும் கொண்ட நாடக எழுத்துரு வழங்குனர், நெறியாள்கை செய்பவர், தயாரிப்பாளர், நடிகர், தமிழை வளஞ் செய்யும் பேச்சுக் கலைஞர், வானொலி உரைஞர், சைவப் பண்பாட்டை வினையாற்றலுடன் நிலை நிறுத்தும் சைவப்புலவர் சங்கத் தின் செயற்பாடுகளை முன்னெடுப்பவர், திருவாவடுதுறை ஆதீனச் சைவசித்தாந்த விரிவுரையாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பட்டயக் கற்கைநெறியின் விரிவுரையாளர் என்றவாறு பன்முக ஆற்றல்களுடனும் பரிமாணங்களுடனும் தம்மை நிலை நிறுத்திக் கொண்டவர்.

தாம் மேற்கொண்ட கல்விப் பணி எவற்றையும் குறைவின்றி நிறைவுபெற முன்னெடுக்கும் செயற்செப்பம் அவரிடத்தே காணப்படுகின்றது. அந்தச் செயற் செப்பத்தின் நீட்சியை அவரது மாணவர்களிடத்துக் கண்டு கொள்ள முடியும்.

சைவப்புலவர் ஐயா அவர்கள் தொகுத்த "கோமாதா" என்ற கருத்துக்களஞ்சியத்துக்கு இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்கள் வழங்கிய வாழ்த்து வெண்பா முக்கிய கருத்துப் பதிவாகின்றது. ஒரு புலமையாளர் இன்னொரு புலமை யாளரைத் தரிசிக்கும் வகையில் அமைந்த அந்த வெண்பா வருமாறு.

"ஏய்புலமை ஈன்றளித்த தாய்புலமை யாக்கிக்காண்
சேய்புலமை ஊற்றத் திறனன்றோ - சேயகதிப்
போமாதா வின்வாய்ப் புதுக்கவிதை யாலெமக்குக்
கோமாதா நல்கும் குஷி"

சைவப்புலவர் ஐயா அவர்களின் கல்விப்பேறு பின்வரும் நூல்களைச் சமூகத்துக்கு வழங்கியுள்ளது.

"கலைவாணி இசைப்பாடல்" (கீதம்) "சித்திரத்தேரில் சிவகாமி அம்மை" (பாடல்) "வாக்கும் வாழ்வும்" (வானொலிப் பேச்சு) "காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும்", "வள்ளல் ஏழூர்" (சிந்துநடைக் கூத்து) "அண்ணா பொன்ஏடு" (வரலாறு) "வாழ்வாங்கு வாழ்தல்", "அரங்கப்படையல்" (முத்தமிழ் நூல்) "சிவநெறி" (ஐரோப்பிய சிவநெறிக்கழகப் பாடநூல்) "கல்வளை அந்தாதி" (உரை விளக்கம்) "ஐயனார் புராண உரை", "பஞ்சபுராணம்" (உரை) "மங்கல மனையறம்", "மங்கலத்திருமணம்", "சிவகாமி தமிழ்" (கவிதை) "கோமாதா" (தொகுப்பு நூல்) "இன்பத்தமிழ்" (வானொலி யில் வந்தவை)

பண்டிதர் சி. அப்புத்துரை அவர்களுடன் இணைந்து "தொடக்கும் தொடர்பும்", "அபரக்கிரியை விளக்கம்", "பூப்புனித நீராடல்", "திருமணக்கிரியை விளக்கம்" முதலாம் நூல்களை எழுதியுள்ளார்.

பள்ளிக்கூட ஆசிரியராய் இருப்போர் தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் நூலாக்கும் மரபினைத் தமிழ்ச் சூழலிலே ஆறுமுக நாவலர் அவர்கள் தோற்றுவித்தார். அந்த மரபின் நீட்சியை சைவப்புலவர் ஐயாவிடத்துக் கண்டு கொள்ள முடியும்.

யாழ்ப்பாணத்துச் சூழலில் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் எத்துணை தியாகத்துடன் செயற்படுகின்றனர் என்பதைத் தமது புலக்காட்சியினூடாக அவர் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்.

"பிஞ்சுவயதில் எந்தை
பெருமான் கழல்சேர
அஞ்சாதீர் என்றெம்மை
அணைத்தே தனைஒறுத்துப்
பசுவளர்த்துப் பயிர்வளர்த்துப்
பக்குவமாய் எமைவளர்த்து
கல்விஅறி வொழுக்கம்
கடமை உணர்வூட்டி
மானம் பெரிதென்னும்
மந்திரத்தை நன்குணர்த்திச்
சந்தனமாய்த் தான்தேய்ந்து
சந்ததம் எம்புகழ்மணக்க
வறுமையிலும் செம்மையாய்
வாழவைத்த எம்அன்னை....."

கோமாதா என்ற நூலுக்குச் சமர்ப்பணமாக அமைந்த அந்தக் கவிதை யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் பெற்றோர் செயலியத்தின் (PARENTING) பண்பைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. அந்த ஆக்கம் ஒரு சமர்ப்பணமாக மட்டுமன்றி, பிள்ளைகளின் கல்வி மற்றும் ஒழுக்க உருவாக்கத்தில் பெற்றோர் சந்தனக்கட்டைகளாகத் தேய்ந்து பணி செய்தலையும் எடுத்துக் காட்டுகின்றது.

கற்பித்தலிலே தனக்கென உயரிய ஒரு முகிழ்கோலத்தை (STYLE) அவர் உருவாக்கிக் கொண்டார். அவருக்குரிய அரங்க அனுபவங்கள் கற்பித்தலிலே பயன்படுத்தப்பட்டு வளமான மகிழ்நிலைக்

கற்பித்தலை உருவாக்கியுள்ளன. சைவப்புலவர் தேர்வு, தமிழ்ப்பட்டயத் தேர்வு முதலியவற்றிலே பயிலும் மாணவர் அந்த மகிழ்நிலைக் கற்பித்தலோடு சங்கமிக்கின்றனர்.

அவரின் கல்வி நீட்சி பேச்சுக் கலையிலும் வெளிப்பாடு கொண்டுள்ளது. தெளிவான தமிழ் உச்சரிப்பு, ஆழ்ந்து அகன்ற உள்ளடக்க வீச்சுடன் பேசுதல், சபையோரின் ஈடுபாட்டை ஈர்த்த வண்ணம் பேசுதல், பேச்சுப் பொருளை விட்டு விலகிச் செல்லாது பேசுதல், முதலாம் பல்வேறு பரிமாணங்களை அவரது பேச்சு அளிக்கைகள் கொண்டுள்ளன. பேச்சில், நேரமுகாமைத்துவத்தைச் செப்பமாகக் கடைப்பிடிக்கும் ஆற்றல் அவருக்கு உண்டு.

இளவாலைக் கிராமம் மரபு வழிக் கூத்துக்களின் களஞ்சியமாக அமைந்திருந்தது. அத்தகைய மரபு வழிப் பின்புலமும் பள்ளிக்கூடத்தில் பயின்ற காலங்களில் நடிப்பில் ஈடுபட்ட அனுபவங்களும், நாடக நூற்பயில்வும் அவரிடத்து நாடகக் கல்வி ஆற்றல்களையும் அளிக்கைகளையும் மேம்படச் செய்தன. பள்ளிக்கூட மாணவர்களை நாடகங்களில் ஈடுபடவைத்து அவர்களின் ஆளுமை வளர்ச்சிக்கும் மனக்கோல இங்கிதங்களுக்கும் ஊக்குவிப்புச் செய்த சைவப்புலவர் ஐயாவின் அரங்கக் கல்விச் செயற்பாடுகள் தனித்துவமானவை.

கல்வியின் பரந்துபட்ட பரிமாணங்களோடு வாழ்ந்தும், அறிவுக் கையளிப்பை அறப்பணியாகக் கருதி இயங்கியும் வரும் அவரது செயற்பாடுகள் தமிழ்க் கல்விப் புலத்தின் நீடித்த பதிவுகளாகின்றன.

# மாநிலத்தோர் புகழ்ந்தேத்தும்
# தகை சான்ற பேராளன் சைவப்புலவர் சு. செல்லத்துரை.

**இசைக்கலாவித்தகர்**
**ந. ஸ்ரீராம்குமார்**
இளவாலை மெய்கண்டான் ம.வி.
பிரதி அதிபர் (ஓய்வுநிலை)

இந்த உலகமானது எத்தனையோ கோடி மனிதர்களை உற்ப வித்து தந்து கொண்டிருக்கிறது. வாழ்க்கைச் சக்கரமானது பிறப்பிற்கும் இறப்பிற்குமிடையே சுழல்கிறது. மானிடர்களின் வாழ்க்கை பயணத்தில் சிலர் வெற்றிகரமான முறையில் சீரியவழியில் பயணித்து தமது வாழ்வை அர்தமுடையதாக மாற்றிக் கொள்கின்றனர். இவர்களை செயற்கரிய செயலைச் செய்த புனிதர்களாக உலகம் அடையாளப் படுத்துகின்றது. இவர்கள் வாழ்க்கையில் இறுதி இலக்கை வெற்றி கரமாக பூர்த்தி செய்தவர்களாக சாதனைக்குரியராக பெருமைப்ப டுத்தப்படுகின்றனர். இருந்தும் எத்தனையோ பல மனிதர்கள் தமது இலக்கு நோக்கிய பயணிப்பில் தோற்றுப் போகிறார்கள். தமது இலட்சியப் பயணத்தில் வெற்றியடைந்தசாதனைமனிதர்களைஉலகம் என்றைக்குமே மறப்பதில்லை. மாறாக உலக மக்களின் ஆன்மாவில் நித்தியம் நிலைத்திருப்பர். இவர்கள் சரித்திர நாயகர்களாக என்றும் உயிர் வாழ்வர். இவர்களது புகழை காலம் அழித்து விடுவதில்லை. மாறாக தனது வரலாற்று பக்கத்தில் இவர்களின் சாதனைகளை பெருமைகளை நிரந்தரமாக எழுதியிருக்கும்.

> "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
> தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற தெய்வப்புலவரின் வாக்கினை மெய்ப்பிப்பது போல் அவ்வாறு சீரிய, ஒப்புயர்வற்ற வாழ்க்கையை வாழ்ந்து வருபவர்தான் எனது அன்பிற்கும் மதிப்பிற்கும் பாத்திரமாகவிளங்கும் சைவப்புலவர்

சு.செல்லத்துரை அவர்கள். தன்னடக்கம், புன்சிரிப்பு, நிமிர்ந்த நன்நடை, அனைவர் உள்ளங்களையும் வசீகரிக்கும் நேரியபார்வை, சற்று மெலிந்த உயரமான தோற்றம், அறிவின் ஆழத்தை வெளிப்படுத்தும் அகன்ற நெற்றி, உள்ளத்தின் தூய்மையை உணர்த்திநிற்கும் நெற்றிமேல் பூசிய வெண்ணீறு, வெள்ளைவேட்டியும் சேட்டும் அணியும் தமிழப்பண்பாட்டின் உறைவிடம் இத்துணை சிறப்புக்கூறுகளை தன்னகத்துள்ளே கொண்டு விளங்கும் இவரின் சாதனைகள் மற்றும் பணிகளை வார்த்தைகளால் வடிக்க முடியாது. இவர் சைவமும் தமிழும் செழிப்புற்று விளங்கும் ஈழ மணித்திருநாட்டில் வடபால் அமைந்துள்ள இளவாலை எனும் இயற்கை எழில் நிறைந்த மண்ணிலே பிறந்து கல்வி கற்றுயர்ந்தார்.

இவரது ஆசிரியப்பணியில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றியமை பொன்னெழுத்துக் களால் பொறிக்கப்பட வேண்டியது. இக் காலத்தில் ஏராளமான மாணவர்களை கல்வியிலும் அதனோடிணைந்த கலைத்துறை மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஊக்கத்துடன் ஈடுபடுத்தி தனக்கென தனிமுத்திரை பதித்தவர். மாணவர்களின் நலன்களில் ஆழமானஈடுபாட்டுடன்கண்டிப்பும் அதனோடுபரிவும் அரவணைப்பும் கொண்டு மாணவர்களை வளர்த்தெடுத்தார். பாடசாலையின் வளர்ச்சி யில் கண் துஞ்சாதுபசிநோக்காது இரவுபகல் பாராது உழைத்த உத்தமர். இவரது ஆளுமைபல் பரிமாணம் மிக்கது. சிறந்த நிர்வாகதிறனும் பேச்சாற்றலும் கவிபுனையும் ஆற்றலும் நடிப்புத்திறனும் படைத்தவர். பாடசாலையில் நடைபெற்ற கலை விழாக்களானாலும் சரி தமிழ் விழாக்களானாலும் சரி ஏனைய நிகழ்வுகளிலும் சரி மேற்கூறியதுறைகளில் அவரது ஆளுமை துலக்கமுறுவதை காண லாம். இவரால் இயற்றப்பட்ட பாடசாலைக் கீதம் காலத்தால் அழியாத வரலாற்று பெருமை மிக்கதாகும். அதுமாத்திரமன்றி நாட்டுப்புறக் கலைகளான வில்லுப்பபாட்டு கும்மி காத்தவராயன் சிந்து நடைக்கூத்து மற்றும் நாடகங்கள் போன்றவற்றிலும் நாட்டம் மிகுந்து விளங்கினார். சுமார் இருபத்தேழு ஆண்டுகள் வரை இப் பாடசாலையின் அதிபராக இருந்து ஒப்புயர்வற்ற சேவையை மாணவ சமூகத்திற்கு வழங்கி

அவர்களுக்கு கல்வி ஒளியூட்டினார். அதிபராக இருந்தகாலத்தில் உயர்ந்த பதவிகள் அவரை தேடி வந்த போதும் கூட அவற்றை யெல்லாம் புறந்தள்ளி, எந்த உயர் பதவிகளும் ஆசிரியப்பணிக்கு ஈடாக மாட்டா என்ற யதார்த்தத்தை உணர்ந்தவராக புனிதமான ஆசிரியப் பணியை விரும்பி வலிந்து ஏற்று சேவையினின்று ஓய்வு பெறும் வரையிலும் அதிபராகவே இருந்தார்.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் அத்திபாரமாக அமைவது கல்வியாகும். இத்துறையில் ஆழ்ந்த புலமையும் பற்றும் கொண்ட இவர் எண்ணற்ற மாணவர்களை கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க கலங்கரை விளக்கமாக திகழ்ந்த பேராசான். பாடசாலையையும் மாணவர்களையும் தன்னிருகண்களாக வரித்துக்கொண்டு சேவைபுரிந்தவர். இவரது சேவைக் காலத்திலேயே இப் பாடசாலை பல விதத்திலும் முன்னேற்றம் கண்டது எனில் மிகையல்ல. இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயமாக்கி க.பொ.த. உயர்தர வகுப்பையும் ஆரம்பித்தார், மாடிக்கட்டிடம் திறந்தவெளி அரங்கு, விளையாட்டு மைதானம், சிறுவர் பூங்கா, மின் இணைப்பு, நீர் இணைப்பு, நிறுவுனர் சிலை நாட்டல் முதலான மிகப்பெரும் பௌதீக அபிவிருத்திகளைச் செய்தார்.

பாடசாலையின் அதிபராக சேவையாற்றிய காலத்தில் தனதுவீட்டில் செலவழிக்கும் நேரத்தை விட பாடசாலையில் செலவிடும் நேரம் அதிகமானது. அந்தளவிற்கு பாடசாலையின் வளர்ச்சியிலும் மாணவர்களின் நலனிலும் அதீத அக்கறை கொண்ட இவர் எப் போதுமே தனது பணியை எல்லைப்படுத்தியது கிடையாது. போர் மேகங்கள் கவிந்திருந்த அந்தக் காலப்பகுதி மிகவும் கொடுமையானது. உயிரை பணயம் வைத்தேகற்க வேண்டியிருந்த காலமது. எப்போது என்னநடக்கும் என்ற நிச்சயமற்றதன்மை நிலவியதனால் மாணவர்கள் பலர் பாடசாலைகளுக்கு செல்வதற்கே அஞ்சினர். மேலும் இடப்பெயர்வுகளால் மக்களுடன் பாடசாலைகளும் இடம் மாறின. இருப்பதற்கே இடமின்றி அல்லலுற்ற போதும் கூட கல்வியினின்று மாணவர்கள் என்றுமே பின்வாங்கியதில்லை. மானிப்பாய் மெமோறியல்

காணியில் தற்காலிகக் கொட்டில்கள் போட்டுச் சிறப்பாகப் பாடசாலை நடத்தினார். தென்மராட்சி இடம் பெயர்வின்போது உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் 7 பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாக மெய்கண்டானை இணைத்துத்தன் தலைமையில் நடத்தினார்.

இக் காலத்தில் இவர் ஆற்றியபணிகளை ஒருபோதும் மறக்க முடியாது. பாடசாலையை தனது வீடாகவும் மாணவர்களை தனது பிள்ளைகளாகவும் கருதி தன்னலமற்ற சேவையை ஈந்தார். ஆசிரியர் களை தன் சகோதரர்களாகக் கருதி அவர்களுக்கு வேண்டிய உதவி கள் எல்லாம் செய்து கொடுத்துக் கௌரவமாக வழிநடத்தினார். இதற்கு அவரது மனைவியின் பங்களிப்பும் போற்றுதற்குரியது. மிகவும் இக்கட்டானவேளையிலும் மெய்வருத்தம் பாராது உழைத்தவர். இவரது காலத்திலேதான் இப்பாடசாலை பலவழிகளிலும் முன்னடைவு கண்ட தென்றால் மிகையாகாது. தன்னைப் பற்றியோ அல்லது தன் குடும்பத்தைப் பற்றியோ சிந்திக்காமல் எப்போதும் பாடசாலையும் மாணவர்களும் தான் அவரது சிந்தனை முழுவதுமாக இருக்கும். அந்தளவிற்கு பாடசாலையையும் மாணவர்களையும் ஆழமாக நேசித்த வர். அதுமட்டுமன்றி சைவசமய சொற்பொழிவுகளை நிகழ்த்துவதிலும் சைவ சமயம் சார் தத்துவக் கருத்துக்களை சுவைபடக் கூறுவதிலும் அவருக்கு நிகர் அவரே. குறிப்பாக சொன்னால் உண்மையாகவே சைவ-தமிழ் பண்பாட்டுடன் வாழ்பவர்களில் இவரும் ஒருவர். இவை தொடர்பான ஒருசில அரிய நூல்களையும் நம் சமூகத்திற்கு அளித்திருப்பது பெருமைக்குரியது.

ஒருவனின் வாழ்வானது அர்த்தமுடையதாக மாற்றமுறுவதானது அவனுக்கு வாய்க்கும் மனையாளைப் பொறுத்தேயாகும். மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்பார்கள். இல்லற வாழ்வு நல்லறமாக மணங்கமழ்வதற்கு மனைவியின் பங்கு காத்திர மானது. ஒருவனுக்கு நல்லமனையாள் அமைந்துவிட்டால் அவனது வாழ்க்கை சொர்க்கமாக மிளிரும். அந்தவகையில் இவருக்கு வாய்த்த மனைவியான சிவகாமசுந்தரி எனும் திருநாமம் கொண்ட திருமங்கை அவரது வாழ்க்கைக்கேற்ற நல் மனைவியாகவிளங்கினார்.

செல்லத்துரை ஐயா அவர்கள் அதிபர் சேவையிலிருந்தபோது அவர் பயணித்த பாதை மிகவும் கரடுமுரடானது. பல்வேறுதடைகள் சோதனைகள் நெருக்கடிகள் வந்தபோதெல்லாம் துவண்டுவிடாது தனது கணவன் பயணித்த இலட்சியப் பாதையின் வழி ஒன்றாகவே பயணித்தார். அவரின் நேரியபாதை வழியே குறுக்கீடுகளோ இடையூறுகளோ விளைவிக்காது அவருடைய பணிகள் செயல் களுக்கெல்லாம் ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். மனைவியாக மட்டுமன்றி தாயாக சகோதரியாக நற்தோழியாக சேவகியாக மொத்தத்தில் நடமாடும் தெய்வமாக அவரது வாழ்வுடன் ஒன்றியிருந்து இணைபிரியாது வாழ்ந்து வந்தவர். "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற முதுமொழியின்படி ஒருவனுக்கு மனையாளும் ஆசிரியரும் வாய்க்கும் பக்குவம் விதியின் பாற்பட்டதாகும். இவரது மாணாக்கர் தமக்கு வாய்த்த குருவை எண்ணி எவ்வாறு இறும்பூது எய்தினரோ அவ்வாறே இவரும் தனக்குவாய்த்த மனைவியை எண்ணிமகிழ்ந்தார். பாடசாலையில் இடம்பெறும் எந்த நிகழ்வானாலும் கண்டிப்பாக சிவகாமசுந்தரி அம்மாவின் பிரசன்னமும் நிச்சயம் இருக்கும். அந்தளவிற்கு அவரும் அப்பாடசாலையின் நலனில் உண்மையாக அக்கறை கொண்டவர். பாடசாலைக்கு அடிக்கடி வந்து போவதால் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியையோ என்ற சந்தேகம் மாணவர்கள் மத்தியிலும் எழுந்தது தவிர்க்க முடியாதது. அத்துடன் அவர் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் பழகும் விதம், அணுகும் முறை தனித்துவமானது. மலர்ந்தமுகம் புன்சிரிப்பு நன்றாக வார்ந்து பின்னிய கொண்டை நேர்த்தியாக உடுத்திய சாறி என அவரது தோற்றத்தை வர்ணிக்கலாம்.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"

என்ற வள்ளுவரின் வாக்குக்கமைய சிறந்த விருந்தோம்பல் பண்பும் பிறருக்குதவும், பரோபகாரசிந்தையும் அன்பும் மனங்கோணது அனுசரிக்கும் பண்பும் இவரது அணிகலன்கள். எத்துணை துன்பம் வந்தாலும் அதனை வெளிக்காட்டாது புன்முறுவலுடனிருப்பது அவரது

சிறப்புக் கூறுகளில் ஒன்று. இத்தகு சிறப்புக்களையெல்லாம் உடைய அன்னையவர்களின் வாழ்க்கையானது தனது அன்புக்குரிய கணவருடன் தொடர்வதற்கு இறைவன் அனுமதிக்கவில்லை. இப்பூவுலகில் அவர் செய்த பணி போதும் இனி விண்ணுலகில் இளைப்பாறட்டும் என்று இறைவன் எண்ணினான் போலும். அவனின் எண்ணப் படி, தான் போற்றிய கண்ணான கணவனை பிள்ளைகளை பேரப்பிள்ளைகளை விட்டு பிரிந்து மண்ணை முத்தமிட்டார். கணவருடன் உலாவிவந்து திடீரென இதயம் நின்றுவிட மரணவேதனையே இன்றி மலர்ந்த முகத்துடன் நீள்துயில் ஆனார். யாருக்கும் கிடைக்காத பேறுபெற்றார். அன்னாரது இழப்பானது கணவன், பிள்ளைகளுக்கு மட்டுமல்ல அவருடன் பழகிய அனைவருக்கும் பேரிழப்பாகும். அவருடன் கூடி மகிழ்ந்திட்ட பொழுது களையும் இலகுவில் மறக்க முடியாது. தற்போது செல்லத்துரை ஐயா தனது பாசத்துக்குரிய மனைவியை பிரிந்த சோகத்தில் தனது இளையமகனுடன் கொழும்பில் வசித்துவந்தாலும் அவர் நினைவுகள் அனைத்தும் தன் அன்பு மனைவியைச் சுற்றியே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக ஆண்டுதோறும் அவர் இறந்தநாளில் உலகிற்குப் பயன்தரும் நினைவு நூல்களை வெளியிடுவதும், தானதர்மங்கள் செய்வதுமே சான்று. இந்த நூல்கூட அவரது ஐந்தாவது ஆண்டு நினைவாக வெளிவருவது குறிப்பிடத் தக்கது.

இறுதி மூச்சுவரை தன் கணவரினது நன்மதிப்பிற்கும் நம்பிக்கைக் கும் பாத்திரமாக விளங்கினார். மொத்தத்தில் வள்ளுவனுக்கேற்ற வாசுகி அம்மையார் போல தன் வாழ்வின் இறுதிக்காலம் வரையில் தன் கணவனுக்கு பணிவிடை செய்வதிலும் பிள்ளைகள் மற்றும் சுற்றத்தினர் நலன்களை கவனிப்பதிலுமே செலவிட்டார். அமரத்துவ மடைந்த அன்னையவர்களின் நினைவுகள் எத்தனை ஆண்டுகள் கடந்தாலும் அழியாச் சிறப்புடையவை.

# ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றாண்மை மிக்க ஆசான்

சைவப்புலவர், தர்மாசிரியர்,
சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர்
சா. பொன்னுத்துரை **B.A. (Sp) B.T.I.**
ஓய்வுநிலை வங்கியாளர்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று

என்ற தெய்வப்புலவரின் திருக்குறளின்படி வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிப் புகழ்பூத்துக் குலுங்குபவர் எங்கள் ஆசான் கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்கள். ஆழ்ந்த அறிவினாலும், பண்புடைச் செயலினாலும் பல்லாயிரம் உள்ளங்களில் வாழ்ந்து கொண்டிருப்பவர். கல்வியறிவூட்டி வாழும் வழியைக்காட்டி மனிதன் மனிதனாக விளங்கச் செய்து கொண்டிருப்பவர் எங்கள் ஆசான் அவர்கள். சொல்லிலும் செயலிலும் தூய நெறியைப் பேணிவருபவர். சைவத்தையும் சைவசித்தாந்த நெறியையும் தமிழையும் இரு கண்களாகப் போற்றுவார்.

"என்கடன் பணி செய்து கிடப்பதே" என்ற நாவுக்கரசர் வாக்குக்குச் செயலுருவம் கொடுத்து வருபவர்.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் அமைத்தல்
அன்னசத்திரம் ஆயிரம் செய்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவிலும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

என்ற மகாகவி பாரதியாரின் எண்ணக்கருவுக்கு உயிரூட்டிக் கொண்டிருப்பவர். கல்வியில் ஏழைகளாய் இருப்பவர்களுக்கு, கல்வி கற்பதில் ஆர்வம் கொண்டவர்களுக்கு, அவர்களின் அத்தகைய அறிவுப் பசிக்கு எப்போதும் விருந்தளித்துக் கொண்டிருக்கும் பேராளர்.

மாட்டுவண்டியோட்டியும், கமத்தொழிலில் ஈடுபாடுகாட்டியும் வாழ்க்கையை நடாத்தியவர். பாமர மக்களோடு பழகி அவர்களுக்கு உதவி செய்து அவர்களுக்கிடையே ஏற்படும் பிணக்குகளுக்கு இணக்கத்தை ஏற்படுத்தி அவர்களில் ஒருவராக நின்று அவர்களின் சுகதுக்கங்களிலெல்லாம் பங்கு கொண்டவர். இத்தகைய பின்புலம், அனுபவம் அவரைப் பன்முக ஆற்றல் மிக்கவராய் மிளிரச் செய்ததில் வியப்பேதுமில்லை.

செல்லத்துரை ஐயா அவர்கள் ஒரு நல்லாசிரியர். நல்லாசிரியருக்குரிய நற்குணங்கள் அத்தனையும் அவரிடம் மலிந்து காணப்படுவது ஒரு தனிச்சிறப்பு. நல்ல குடிப்பிறப்பு, சீவகாருண்ணியம், கடவுள் நம்பிக்கை, வழிபாடுகள் மூலம் பெறப்படும் மேலாண்மை, கல்வி கேள்விகளில் திறமை, மாணவர்களுக்குத் தெளிவாகக் கற்பித்தல் வன்மை, நிலம் போல் பொறுமை, நிறைகோல் போல் நடுநிலை, மலைபோல் உறுதி, மலர்ந்த முகம், உலகோடு ஒத்துவாழும் இயல்பு போன்ற உயர் குணங்களை உடையவனே நல்லாசிரியன் என்பார் நன்னூலார்.

> **"குலன் அருள் தெய்வம் கொள்கைமேன்மை**
> **கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை**
> **நிலம் மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்**
> **உலகியல் அறிவொடு உயர்குணம் இனையவும்**
> **அமைபவன் நூல்உரை ஆசிரியனே"**

என்ற அவரின் ஆசிரியருக்குரிய இலக்கணம் அமையப்பெற்றவர் எமது ஆசான் அவர்கள். இவை அனைத்தும் அவரிடம் பரிபூரணமாகவும், நிலையாகவும் குடிகொண்டிருப்பதை அவரோடு நெருக்கமானவர்கள் நன்கு அறிவர்.

> **"ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவுசீலம்**
> **வழுக்கிலாத் தவத்தானங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை"**

என்று அருணந்தி சிவாசாரியார் குறிப்பிட்ட நற்பண்புகள் அனைத்தையும் அவரிடம் கண்டு கொள்ளலாம். சைவசமயமும் சைவஆசாரமும் அவரது வாழ்க்கையோடு ஒன்றியிருப்பவை.

> "கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
> நல்லான் அடக்கமுடையான் நடுச் செய்ய
> வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
> இல்லான் இயமத்திடை நின்றானே"

என்பது திருமந்திரம்.

அட்டாங்க யோகத்தில் காட்டியுள்ள விலக்கப்பட்டவற்றை நீக்கி விதிக்கப்பட்டவற்றைச் செய்தல் இயமம் ஆகும். இத்திருமந்திரத்தில் சொல்லப்பட்ட இயம ஒழுக்கத்தை வழுவாது கடைப்பிடிக்கும் விரதம் கொண்டராக இருப்பதையும் அறிந்து கொள்ளலாம். "பத்துடையீர் ஈசன் பழவடியீர்" என்ற மாணிக்கவாசகர் கூற்றும் "பத்துக்கொலாம் அடியார் செய்கைதானே" என்ற வாகீசர் கூற்றும் அமைய பத்து நற்குணங்கள் கொண்டவர்கள் சைவநெறி ஒழுகுபவர்கள். ஆசான் அவர்களும் அச் சைவநெறி ஒழுக்கத்தின்படி வாழ்பவர் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இத்தகைய பல்துறை ஆளுமையும், நற்குண நற்செய்கையும் கொண்ட ஆசான் அவர்கள் சிறந்தமுறையில் கற்பிப்பவர். தெளிவாகக் கற்பிப்பவர், ஆழமாகவும், அகலமாகவும், நுணுக்கமாகவும் கற்பிப்பவர். அயரா அன்பு கொண்டு அனைவரையும் கவர்ந்திழுக்கும் காந்தசக்தி மிக்கவர், மாணவர்களின் தன்மைக்கேற்ப அவர்களோடு இணங்கிச் செல்பவர்.

> "அன்னம் ஆவே மண்ணொடுகிளியே
> இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
> அன்னர் முதல் இடை கடை மாணாக்கர்"

என்ற நன்னூலின் கருத்துப்படி மாணவர்களின் ஆற்றலை இனங்கண்டு வேண்டியவிடத்துப் பின்னூட்டலை இடை, கடை மாணாக்கர்களுக்குச் செய்யும் உத்தியைக் கையாள்பவர்.

> "நன்றாற்ற லுள்ளும் தவறுண்டு அவரவர்
> பண்பறிந் தாற்றாக் கடை"

என்ற வள்ளுவத்தின் உட்பொருளை உள்வாங்கிச் செயலாற்றும் திறமை மிக்கவர். மாணவர்களின் குணவியல்புகளுக்கேற்ப உதாரணங்களைக் கையாள்வதோடு நகைச்சுவையோடும் கற்பிக்கும் பக்குவம் அவருக்குக் கைவந்தகலை.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

இந்தப் பொய்யா மொழியின் ஆணையை எங்கள் ஆசான் என்றும் மீறியதே இல்லை. அவர் கற்ற படி நடந்து வாழ்வாங்கு வாழ்ந்து மற்றையோருக்கு வழிகாட்டியாகத் திகழ்வதை நோக்கிவியப் படையாமல் இருக்க முடியாது.

ஆசான் அவர்களிடம் கற்கும் பெரும் பேறுக்கு அப்பரம்பொருளே காரணம் என்று எண்ணத்தோன்றுகிறது. திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த திருமுறைப் பயிற்சி மையக் கொழும்புக்கிளையில் ஆசானிடம் கற்று சித்தாந்தரத்தினம், திருமுறைநெறிச்செல்வர் பட்டங்கள் பெற்ற வாய்ப்பையும், அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் நடத்தப்பட்ட பரீட்சைக்கு ஆசானின் கற்பித்தல் மூலம் சைவப்புலவர் பட்டம் பெற்ற வாய்ப்பையும் என்றும் மறக்க முடியாது கொழும்புத் தமிழ்சங்கத்தினால் நடத்தப்படும் தமிழ் பட்டய கற்கைநெறி, கொழும்பு ஆரணியத்தில் நடைபெறும் திருமந்திர வகுப்புக்களில் ஆசானிடம் கற்கும் பேறு உயர்வான மதிப்புடையவை. பெருங்கொடையாக, கிடைத்தற்கரிய பாக்கியமாக என்போன்ற வர்களுக்கு அமைந்தது பெரிய வரப்பிரசாதமாகும்.

"மாதா பிதா குரு தெய்வம்" , "குருவில்லா வித்தை பாழ்", "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்ற முதுமொழிகள் குருவின் மேன்மையை விளக்க எழுந்தவை அந்தவகையில் செல்லத்துரை ஆசான் அவர்கள் குருவாக, தெய்வமாக, ஆலோசகராக, எங்களுக்கு அமைந்தது எமது நல்வினைப் பயனேயாகும்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே"

இத்திருமந்திரப் பாடலால் எங்கள் ஆசானை வித்தியா குருவாகவும், ஞானகுருவாகவும் பெற்றுக்கொண்ட அளப்பரிய வாய்ப்பை நாங்கள் பெற்றுக்கொண்டமை உறுதிப்படுத்தப் படுகின்றது.

செல்லத்துரை ஆசான் அவர்கள் பன்முக ஆற்றல் கொண்டவர் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அவர் ஒரு சிறந்த கவிஞர், நடிகர், நாடாகாசிரியர், வில்லுப்பாட்டு இயற்றுபவர், நாட்டிய நாடகம் எழுதுபவர், சிறந்த பேச்சாளர், வானொலி உரைஞர், நூலாசிரியர், ஆலோசகர் என்று அவரின் திறமைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவர் பல்வேறு பதவிகளைத் தற்போதும் வகித்து பலனை எதிர்பாராது செயற்பட்டுக் கொண்டு வருகிறார். தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தலைவர், சுகவாழ்க்கைப் பேரவைத் தலைவர், 'சைவநீதி' காலாண்டு சஞ்சிகையின் ஆலோசகர், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் உதவிக்காப்பாளர், இந்து சமய கலாசார திணைக்களத்தின் வளவாளர் என்பன அப்பதவிகளிற் சில. இரத்மலானை நந்தீஸ்வர ஆலயத்தில் முழுமதி தினங்களில் 'அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதலில் முழுமையான பங்களிப்புச் செய்து வருவதும் குறிப்பிடத் தக்கது. வானொலியில் ஆற்றிய அவரது உரைகள் "இன்பத்தமிழ்" என்னும் நூலுருப் பெற்றுப் பலருக்கும் பயன்படக்கூடியதாய் இருக்கின்றன. தமிழ்மொழியைப் பிழையற உபயோகிக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை காட்டுபவர் நம் ஆசான். எழுதும்போதும் பேசும்போதும் மொழி சரியாக அமைய வேண்டும் என்பதை வற் புறுத்திக் கூறுபவர். இதேபோல் சைவத்தையும் சைவக்கிரியை முறைகளையும் ஆகமவிதிப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறுபவர். இந்து சமயம் என்ற சொற்பிரயோகத்தை கண்டிப்பவர். சைவமும் தமிழும் உயிர் மூச்சு. இவரது நாவரசன் மாவிரதன் என்ற இரு புதல்வர்களும் பேரப்பிள்ளைகளும் இவரது மாபெரும் சொத்துக்கள்.

''தக்கார் தகவிலர் என்ப தவரவர்
எச்சத்தால் காணப் படும்"

என்ற வள்ளுவர் வாக்கின்படி இவரின் இம் மாபெரும் சொத்துக்கள் உன்னத நிலையில் இருப்பதால் எங்கள் ஆசான் "தக்கவர்" என்பது நிரூபணமாகின்றது. இவ் எச்சங்கள் மட்டுமல்ல, அவரது எச்சங்கள், அவரது பணிகள், ஆக்கங்கள், நூல்கள், பதவிகள் அனைத்தும் அவரது எச்சங்களே. இவை என்றும் நிலைத்திருக்கக் கூடியவையாதலால். ஆசான் தக்கவர் என்பதை அவை பறைசாற்றிக் கொண்டே இருக்கும்.

இத்தகைய பெருமையும், பெருந்தன்மையும், தன்னலம் கருதா செயற்திறமையும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வள்ளன்மையும், கல்விப்பயிர் வளர்க்கும் புண்ணியமும் அயரா அன்பும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றாண்மை மிக்க எங்கள் ஆசான் செல்லத்துரை ஐயா அவர்களுக்கு மட்டுமே உரித்தான அணிகலன்கள் என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடமே இல்லை. எங்களின் மதிப்புக்கும், மரியாதைக்கும், வணக்கத்துக்குமுரிய ஆசான் அவர்கள் நீடுழி நலமே வாழ இறைவனின் இன்னருளை இறைஞ்சுகிறேன்.

"கற்றோருக்குச் சென்றஇடமெல்லாம் சிறப்பு"

# சைவநெறி வாழ்வும் பணிகளும்

சித்தாந்தரத்தினம் சைவப்புலவர்
செல்வி. கி. வீரசிங்கம் B.A, B.Com M.Phil in Edu
ஓய்வுநிலை அதிபர்

பன்முக ஆளுமையைத் தன்னகத்தே கொண்டு கல்விப்பணி, கலைப்பணி, தமிழ்ப்பணி, சமூகப்பணி, சைவப்பணி எனப் பல்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் எம் ஆசான் கலாபூஷணம் சைவப் புலவர் செல்லத்துரை ஐயா அவர்களது சைவப்பணி பற்றிச் சில பதிவுகளைச் செய்யக்கிடைத்த வாய்ப்புப் பற்றி மகிழ்வடைகிறேன்.

"மனிதன் வாழமட்டும் பிறந்தவனல்ல வாழ்ந்து காட்டவும் பிறந்தவன்" என்ற பெருமொழிக்கிணங்க, வாழ்வியலின் ஒவ்வோர் கட்டத்தையும் அர்த்தமுள்ளதாக்கி, வாழ்ந்து கொண்டிருக்கும் ஐயா வின் வாழ்க்கை போற்றுதற்குரியது மட்டுமல்ல, எல்லோருக்கும் எடுத்துக்காட்டாதனதாகும். அந்தவகையில் வாழ்ந்து காட்டிக் கொண்டி ருக்கும் செம்மல்" என்று கூறிக் கொள்ளலாம்.

மனிதப்பிறவி சிறப்புடையது, ஆனால் எல்லோராலும் அதனைச் சிறப்புடையதாக்கி வாழ முடிவதில்லை. அப்படியும் இப்படியும் எப் படியோ வாழ்ந்து முடித்து விடுகிறார்கள். ஆனால் அறிவும், ஆன்மீக மும் இணைந்த மனிதர்கள் அருமையாக வாழ்ந்து காட்டிவிடுகிறார்கள்.

நல்ல சிந்தனைச் செல்வராகவும், நற்சிந்தனையை மற்றவரி டையே தூண்டிவிட வல்லவராகவும், மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணத் தூய்மை உடையவராகவும், உள்ளத்துயர்வுடன், தனக் கெனத் தனிப்பாணியை வகுத்து, வகுத்த வழி சைவநெறியுடன் இணைந்து வாழ்ந்து காட்டிக்கொண்டிருக்கும் பெருமையை ஐயா அவர்கள் இன்று பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

ஆழ்ந்த தமிழறிவு மட்டுமல்ல, ஊன்றிய சைவசித்தாந்த ஞானம் கொண்டவராகவும், ஆன்மா பற்றி அற்புதமாக விளக்கம் தர வல்ல வராகவும், சைவத்தைப் போதனையில் மட்டுமன்றி, சாதனையிலும் கடைப்பிடித்து வாழுபவராகவும் திகழ்கின்றார். அந்தவகையில் உயர்ந்த ஆசார அனுட்டானங்களைக் கடைப்பிடிக்கும் அனுபூதியாள ராகக் காணப்படுகின்றார்.

"நாம் சிவனை வழிபடும் சைவர்களே" என்ற உண்மையை எப்போதும் ஓங்கி உரைத்துக் கொண்டே இருப்பவர். நாவலர்பெரு மான் காட்டிய சைவப்பாரம்பரிய வழிநடந்து, எல்லோரும் சைவ சமய நெறிகளை வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்ற பெரு விருப்பம் கொண்டவராவார்.

"சைவத்தை இந்து" என்ற பதத்துடன் சேரவிடாது, அதன் தனித்துவத்தைப் பேணுபவர். நாயன்மார்கட்கும், நாவலருக்கும், குரு மகாசன்னிதானங்கட்கும் குருபூசை வைத்து, வழிபாடு செய்வதில் ஆர்வம் கொண்டவராக, மாணவராகிய எமக்கும் ஏனையோருக்கும் அந்த வழியைப் புகட்டுபவராக விளங்குபவராகும். எம் எல்லோரது வாழ்விலும் சைவமணம் கமழ வேண்டும் என்ற பெரு விருப்புக் கொண்டவர். சிறுதெய்வ வழிபாட்டை விரும்புவதில்லை. சைவத்திற்கு ஒவ்வாத வழிபாட்டு முறைகளைக் கண்டிப்பவர்.

இந்த உடம்புடன் கூடிய வாழ் நாளிலேயே எமது உடற்கருவி களாகிய இந்திரியங்களின் பயன்பாட்டைப் பற்றிச் சிந்தித்து எம்மை உணர்ந்து கொள்ளும் ஆன்மீகக் கல்விப் பயணத்தை இளவயதிலேயே ஆரம்பித்துவிட்ட எம் ஆசான். எம்முடன் எப்போதும் தெய்வீக சிந்த னையை எழுப்பவல்ல உரையாடலையே மேற்கொள்ளுவார்.

திருவாவடுதுறை ஆதீனக் கொழும்புப் பயிற்சி மையத்தில் எமது குருவிடம் திருமுறையும் சைவசித்தாந்தமும் படிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிட்டியது எமது தவப்பேறேயாகும். ஐயா அவர்கள் சாத்திர தோத்திர நூல்களைத் தான் கற்றலுடன் கற்பித்தும் தமது ஓய்வுகால வாழ்வை தவப்பொழுதாக்கிக் கொண்டிருப்பவராகும்.

எப்போதும் பொருள் நிறைந்த பேச்சு, பேச்சில் கண்டிப்பு, கட்டுப்பாடு, ஆனால் அன்பு, கனிவு, தெளிவு இருக்கும், மனதைப் பண்படுத்தும் கருத்துச் செறிவு மிளிரும், நடை, உடை, பாவனை பழக்க வழக்கம் எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக விளங்கும். எளிமை அன்பு அறிவுடன் கூடிய தூய அகவாழ்வு அவருக்கே உரிய பாணியாகும்.

**ஞானநூல் தனைஓதல் ஓதுவித்தல்**
**நல்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா**
**ஈனம்இலாப் பொருள் அதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவன் அடி அடைவிக்கும் எழில் ஞானபூசை**

(சிவஞானசித்தியார் – 275)

இவ்வாறு அருணந்தி சிவாசாரியார் கூறிய எழில் ஞான பூசையின் விளக்கத்தை தன்னகத்துள் அடக்கிக் கொண்ட ஐயா அவர்கள். தான் மட்டுமல்ல தன்னைத் தொடர்ந்து பின்பற்றுவோருக்கும், இறைவன் திருவடி அடைய ஞானவழிகாட்டி நிற்கும் ஆன்மீக சமய குருவானவர் என அவரை எம் மத்தியில் மதித்துக் கணிக்கின்றோம்.

அருள் நூல்களாகிய திருமுறைகள் அற்புதச் சூழ்நிலையில், அற்புத நிகழ்வுகளின் போது நாயன்மார்களாகிய அருளாளர்களால் பாடப்பட்டவையாகும். திருமுறைப் பயிற்சி வகுப்பு எமக்கு நடைபெறும் போது, பாடப்பட்ட வரலாறு பாடல் பெற்ற தலவரலாறு, பாடல்களின் கருத்து விளக்கங்கள், அருள் பெறும் வழிகள் என்பனவற்றைத் தெளிவாக்கி எமக்கு வழங்குவதுடன், பாடல்களை இசையுடன் பாடுவதற்குப் படிப்போரைத் தூண்டும் வகையில் மிக அற்புதமாக ஐயா அவர்கள் விளக்கம் வழங்குவது அருமையான பெருமையான அனுபவமாகும்.

இப்பிறவியில் நாம் பெற்ற அறிவு யாவற்றையும் ஆராய்ந்து நோக்குமிடத்து, சைவசித்தாந்த அறிவே, இறுதிவரை நின்று எமது ஈடேற்றத்திற்கு என்றும் உதவவல்லது என்பது புரியும். அதை நன்கு புரிந்து உணர்ந்து அனுபவமாக வாழ்ந்ததுடன், எம்போன்றோருக்கும்

ஏனையோருக்கும் அத்தகைய உணர்வை ஊட்டும் வல்லுநராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார் என்று கூறலாம்.

சமய நெறியில் துறைசார் புலமை மட்டுமல்ல, கணீர் என்ற குரலில் பேசும் ஆற்றல், புரிந்து கொள்ளும் வகையில் பேசும் தொனி, எளிமையாக, ஆழகாக விளக்கமளிக்கும் பாங்கு, மொழிநடை, தலைமை தாங்கி நிற்கும் திறன், மிடுக்கான ஆளுமை இவையாவும் சமயதத்துவ நெறி படிக்கும் மாணவர்களைக் கவர்ந்து பாடப் பொருளிலேயே இலயித்து இருக்க வைத்துவிடும்.

அறிவுத்திறன் போதிக்கும் திறன் மட்டுமல்ல, எழுதும் திறனும் மிக்கவர். அவரது கட்டுரைகள், நூல்கள், வானொலிப் பேச்சுக்கள் என்பவற்றினூடாக சமுதாயத்திற்கும் சமயக் கருத்துக்களை வழங்கும் நிலையை அவதானிக்க முடிகிறது.

இறைக்கின்ற கேணி தானே சுரக்கும். மேலும் தூய்மையான நீர் பெருகிக் கொண்டே இருக்கும். வற்றாத ஊற்றுக் கேணியாக வாரி வழங்கிக் கொண்டே இருப்பவர் எம் ஆசானாகும்.

நம் சமூகத்தில் அவர் நற்பணி தொடரவும், நானிலத்தில் நீளவே வாழவும் இறையருள் வேண்டி, இக்கட்டுரையை நிறைவு செய்கின் றேன்.

# அரங்கை ஆண்டவர்

கலாவித்தகர், கலாபூஷணம்
**திருமதி. கோகிலா மகேந்திரன்**
இளைப்பாறிய பிரதிக்கல்விப் பணிப்பாளர்

கலை என்பது ஒரு சமூக அழகியல் நிகழ்வு. சமூகத்தின் பண்பாட்டினுள் நிலை கொண்டு நிற்பது. பண்பாடு என்பது ஒரு சமூகத்தின் வாழ்க்கை முறை. ஆகவே கலை என்பது சமூகத்தினை எடுத்துணர்த்தும் உயிர்ப்பு மையம். கலை அழிந்தால் அந்தச் சமூகம் அழிந்து விடும். ஆகவேதான் ஒரு சமூகத்தில் கலைஞர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள்.

கலைஞரிடம் ஒரு படைப்பாக்கத்திறனும் உந்தலும் இருக்கும். கலையை ஆள்வதற்கு ஒரு சிறப்பு நுண்மதி தேவை. அந்த நுண்மதியுடன் கலைஞன் அதைச் செய்யும்போது ஒரு அழகியல் திருப்தி வரும். அதேநேரத்தில் கலை, பார்வையாளருக்கும் பங்காளருக்கும் ஒருசேர ஒரு சிறந்த சிகிச்சையாகிறது. ஒழுங்கான முறையில் கலைகளைச் செய்வோரின் உள ஆரோக்கியம் சிறப்படைகிறது.

நாடகம் என்பது கலைகளின் அரசன். எல்லாக் கலைகளையும் தன்னுள் அடக்கிய ஆற்றுகைக்கலை. பலர் முன்னே ஒருவர், இருவர் அல்லது சிலர் ஒரு குறிப்பிட்ட சூழலில் ஏதோ ஒன்றைச் செய்து காட்டுவது, ஆற்றுவது, அல்லது நிகழ்த்திக்காட்டுவது நாடகம் என வரைவிலக்கணப்படுத்தப்படலாம். ஆற்றப்படும் கணத்தில் நாடகம் நம்முன்னே பிரசன்னமாக இருக்கும்.

உலகத்தைக் கலை அழகோடு மேடையில் எறிவது என்று பேர்ரோல்ட் பிறெச்ற் (BERTOLD BRECHT) இனால் குறிப்பிடப்பட்ட நாடகத்தோடு 1953ம் ஆண்டு முதல் இன்றுவரை தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருப்பவர் கலாபூஷணம் சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்.

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் தனது பாட சாலைக் கல்வியை இளவாலை மெய்கண்டான் மகா வித்தியால யத்தில் பெற்றவர். 1954ம் ஆண்டு அப்பாடசாலையில் எஸ்.எஸ்.சி. முடித்து வெளியேறியவர். இவரது மாணவப் பருவத்தில் இப்பாடசாலை யின் அதிபர் பதவியை அலங்கரித்தவர் துன்னாலையைச்சேர்ந்த திரு. ச.சுப்பையா அவர்கள். சுப்பையா ஆசிரியர் நல்ல தமிழ் அறிஞர். இலக்கிய ரசிகர். மாணவர்களைப் புடம்போட்டுச் செம்மை யாக்குவதில் கைதேர்ந்த திறமைசாலி. அவர்தான் சு. செல்லத்துரை அவர்களுக்கு அழகான தமிழ்ப் பேச்சுக்களை எழுதிக்கொடுத்து முதன்முதலில் மேடையில் பேச வைத்தவர். இவர் திறமையாகச் செயற்படுவதைப் பார்த்து "புலவர்" என்று அழைத்து நேர் மீளவலியுறுத்தல் (Positive reinforcement) மூலம் இவரைச் சுயகணிப்பு நிறைந்த மாணவராக உருவாக்கினார். அன்று முதல் இன்றுவரை சு. செல்லத்துரை அவர் கள் மேடையில் சுத்தமான, அழகான, இனிமையான, உறுதியான தமிழைப் பேசுவதைப் பலரும் முன்னுதாரணமாகச் சுட்டி உரைக் கின்றனர். அது சுப்பையா ஆசிரியர் கொடுத்து இவர் கவனமாகப் பேணி இன்றும் பலருக்குக் கொடுக்கின்ற அள்ள அள்ளக் குறையாத 'முதுசொம்' எனலாம்.

நாடகத்தில் மொழி மிக முக்கியமான விடயம் என்பதால், இந்தப் பேச்சுப் பயிற்சி, நாடகக் கலையில் அவர் உள்வரப் பெரிதும் உதவியது. பாடசாலையில் இவர் முதல் நடித்த நாடகம் சோமசுந்தரப் புலவர் எழுதிய உயிரிளங்குமரன். ஆழ்ந்த சைவசித்தாந்தக் கருத்துக்களைப் பொதுமக்கள் இலகுவாக விளங்கிக் கொள்ள வேண்டி பதி, பசு, ஆணவம், கன்மம், மாயை போன்ற விடயங்களை உருவகப் பாத்திரங்களாக்கி எழுதப்பட்ட இந்த நாடகத்தில் இவர் 'உமை' பாத்திரம் ஏற்றார். தூய தமிழில் அமைந்த செம்மையான வசனங் களைக் கொண்டிருந்த இந்த நாடகத்தில் இசை, நடனம் ஆகிய கலைகளும் முக்கியம் பெற்றன. இந்த நாடகத்தின் நெறியாளரான சின்னையா தேசிகர் 1940களில் யாழ். நாடக உலகில் மிகப் புகழோடு உலாவந்த இசை நாடக நடிகர். நாடகத்தையே தன் முழுநேரத் தொழிலாகக் கொண்டிருந்த தேசிகர் நன்கு பாடக்கூடியவர். அவர் அட்சரசுத்தியுடன் பேசி நடிக்கவும் வல்லவர் என்பது முக்கியமானது. சரவணமுத்து அவர்களின் 'சாந்தி' நாடக மன்றத்தின் முக்கிய நடிகராயிருந்த தேசிகர், பொன்னுச்சாமி போன்ற நாடகப் பிரபலங்களின்

குழுவிலும் இருந்தார். நெறியாள்கைக்கான ஆரம்பக் குருவாகத் தேசிகர் அமைந்ததும், நல்லதோர் எழுத்துருவில் நடிக்கும் சந்தர்ப்பம் அமைந்ததும் திரு. சு. செல்லத்துரை அவர்களுக்குப் பலமான அத்தி வாரமாய் அமைந்தது.

மாணவராக இருந்த காலத்தில் சு. செல்லத்துரை அவர்கள் நடித்த மற்றொரு நாடகம் 'சுப்பிரீம் கோட்டில் திரௌபதி' இது அதிபர் ச. சுப்பையா அவர்களே எழுதி நெறிப்படுத்திய நாடகம். திரௌபதி வழக்குத் தொடுநராக அமையத் துரியோதனனும், துச்சாதனனும் எதிரிகளாக நிறுத்தப்படும் நீதிமன்றக் காட்சியைப் பிரதானமாகக் கொண்ட நாடகம். வழக்கை விசாரித்த நீதிபதி. துரியோதனனுக்கு ஆலய அறங்காவலர் பதவியும் துச்சாதனனுக்கு மடைப்பள்ளித் தலைவர் பதவியும் தண்டனையாகக் கொடுத்துத் தீர்ப்பளிக்கும் வித்தியாசமான சிந்தனை கொண்ட நாடகம். "சிவத்திரவியம் கவர்தல்" என்ற பாவத்தை இலகுவில் செய்ய வசதி யுள்ள இந்தப்பதவிகள் காரணமாக அவர்கள் விரைவிலேயே நரகத்தில் அமிழ்வர் என்பது விளக்கம். இந்த நாடகத்தில் திரௌபதியாக நடித்ததன் மூலம் தனது ஆன்மிக நாட்டம் அதிகரித்தது என்று சைவப்புலவர் அவர்கள் நினைவுகூருகிறார்.

ஆங்கிலப் பாடசாலைகளில் சமகாலத்தில் ஷேக்ஸ்பியரின் "வெனிஸ் நகர வாணிபன்" நாடகத்தின் இறுதிக் காட்சியான நீதிமன்றக் காட்சி நடிக்கும் வழக்கமிருந்ததும், பெண்பிள்ளைகள் நாடகத்தில் நடிப்பது அரிதாகவும் இருந்ததால் மென்மையான அழகிய தோற்றம் கொண்ட சு. செல்லத்துரை அவர்கள் பெண் பாத்திரங்கள் எடுக்க நேர்ந்ததும் கவனிக்கத்தக்கது.

பாடசாலையில் இவ்வாறான நாடக அனுபவத்தோடு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரப் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த இவர் ஓரிரு ஆண்டுகள் வீரகேசரிப் பத்திரிகையில் ஒப்பு நோக்குனராகப் பணிபுரிந்தார். வீரகேசரியில் 'ஹரன்' என்ற உயர்ந்த ஆளுமை மனிதர் பிரதம ஆசிரியராக இருந்த காலம். ஹரன் அவர்களுடைய உயர்ந்த ஆன்மிகப் பண்புகளும் சிறந்த வழிகாட்டலும் இவரை இன்னும் புடம்போட்டன. ஹரனுடைய ஆசீர்வாதத்தோடும் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளோடும் 1957 ஜனவரியில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குள் நுழைந்தார் திரு. சு.செல்லத்துரை.

"பத்திரிகைத் தொழிலைவிட ஆசிரியத் தொழில் உயர்ந்தது" என்று கூறித்தன்னை அன்புடன் அனுப்பிய ஹரனை நினைந்து இன்னும் மனம் நெகிழ்ந்து போகிறார் திரு. சு. செல்லத்துரை அவர்கள்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் அப்போதைய அதிபர் திரு. கந்தசாமி (நெடுவல்) அவர்கள், உளவியல்துறை வல்லுநர் கல்வியியல் கற்பித்த கந்தப்பு மாஸ்டர் எந்தப் பாடத்திலும் எதுவும் கற்பிக்கத்தக்க அறிவும் ஆற்றலும் மிக்கவர். ஒரு வகுப்பிற்குக் கற்பிக்கப் போகும்போது அங்கு கற்பிக்க வேண்டிய விடயத்தைவிடப் பத்து மடங்கு அதிகமான விடயம் ஆசிரியருக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்று கந்தப்பு மாஸ்டர் கூறுவாரம். மேடைக்குப் பேசப் போகும்போதும் இது பொருந்தும் மேடையில் நின்று "நான் கூறவந்தவற்றை எல்லாம் எனக்கு முன் பேசியவர்கள் கூறிவிட்டார்கள்" என்று "புலுடா" விடக்கூடாது. மற்றவர்கள் கூற முடியாத பல விடயங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று கூறி வாசிப்பை நன்கு ஊக்குவித்தார் அவர். இந்த விடயம் இன்றும் தெளிவாகத் திரு. சு.செல்லத்துரை அவர்களுக்கு நினைவிருப்பதை அவரது கற்பித்த லிலும் மேடைப் பேச்சிலும் அவதானிக்க முடியும்.

அப்போது ஆசிரியர் கலாசாலைக்குப் போகும் ஆண்கள் நாஷனல், சால்வை அணிவது கட்டாயம். அந்தத் தமிழ்க் கலாசார உடை ஒழுக்கத்தை இறுதிவரை எல்லோரும் பேணுவது இல்லை. சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் எந்தக் காரணத்திற்காகவும் அந்த உடை ஒழுங்கை மாற்றினாரில்லை. ஆசிரியர் கலாசாலையில் இவருக்குத் தமிழ், இலக்கியம், சமயம் ஆகிய பாடங்களைக் கற்பித்த விரிவுரையாளர் பண்டிதர் கிருஷ்ணபிள்ளை பெரிய ரசிகன். பலாலிக் காடுகளில் மாலை நேரத்தில் நடந்து திரியும் அவர் அங்கு காணப்படும் விலங்குகள், குருவிகள், தாவரங்கள், பூக்களைப் பற்றித் தமது மாணவர்களுக்கு நயத்துடன் எடுத்துக் கூறுவார். ஆசிரிய மாணவர்கள் அனைவரும் விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம். விரிவுரை யாளர்களும் பலர் அங்கு தங்கியிருப்பர். ஞாயிற்றுக்கிழமை காலை நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் செல்லும் பண்டிதர், தனது சைக்கிள் சாரதியாகத் தனக்குப் பிடித்த ஒரு ஆசிரிய மாணவரை அமர்த்துவார். 1957ம் ஆண்டில் அவருக்குச் சாரதி சு. செல்லத்துரை நல்லூரில் இறங்கியவுடன் மாணவருக்கு ஒரு கொழும்புச்சோடா வாங்கிக் கொடுப்பார். இவர் குடிக்க மறுத்தால் "கோயிலுக்கு வந்து உன்னை

வருத்திய பாவம் தேடக்கூடாது நீ களை ஆற வேண்டும்'' என்று வற்புறுத்திக் குடிக்கச் செய்வார். ஆலய வழிபாட்டில் பண்டிதருடன் திரு. சு. செல்லத்துரை அவர்களும் இணைந்து கொள்வார். ஒவ்வொரு சந்நிதானத்திலும் அவர் பாடிப்பாடி வணங்கும் அழகை ரசிப்பதோடு தானும் அதைப் பின்பற்றக் கற்றுக்கொண்டார் திரு. சு. செல்லத்துரை அவர்கள். பண்டிதருடைய பல நல்ல ஆளுமைக்கூறுகள் இந்தச் சிறந்த மாணவரிடம் ஒட்டிக் கொண்டன.

உயரமான தோற்றம் கொண்ட திரு. சு. செல்லத்துரை அவர்கள் கலாசாலையின் உதைபந்தாட்ட அணியிலும், கூடைப்பந்தாட்ட அணியிலும் விளையாடினார். கணிதமேதை சிவநாதனிடம் கணிதம் கற்றார். பொன் முத்துகுமாருவிடம் சங்கீதம் கற்றார். மொத்தத்தில் நல்ல ஆளுமைக் கூறுகளுடன் பின்னாளில் கலை ஈடுபாட்டை மெருகுபடுத்தத் தேவையான அறிவு, அனுபவம் ஆகியவற்றின் மொத்த வடிவமாகக் கலாசாலையில் இருந்து வெளியேறினார் இவர்.

ஆறுமாத காலம் மாளிகாவத்தையில் அமைந்த முஸ்லிம் பாடசாலை ஒன்றில் பணிபுரிந்த பின் 1960 ஜனவரியில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியில் முறையான நியமனம் பெற்றார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தனைத் தலைவராகக் கொண்டு இயங்கிய கலைக்கழகம் அப்போது நாடகப் போட்டிகளையும் நாடக விழாக்களையும் சிறப்பாக நடத்தி வந்தது.

மன்னார் ஒரு சிறிய நகரமாக இருந்ததால் அங்கு பணியாற்றிய அரச உத்தியோகத்தர்களிடையே ஒரு உறவு இருந்தது. அவர்களின் பிள்ளைகள் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் கற்றதால் பாடசாலையில் திரு. சு. செல்லத்துரை அவர்கள் மேடையேற்றிய நாடகங்களைப் பார்த்தபோது தாமும் நடிக்கலாம் என்ற ஆர்வம் உண்டாயிற்று. வேறு பொழுது போக்குகளுக்கும் அங்கு வசதி இருக்காததால் நாடக ஈடுபாடு அதிகமாயிற்று. பாடசாலை மேடை மாலை நேர ஒத்திகைக்கு வாய்ப்பாக அமைந்தது. அங்கு பணியாற்றிய வைத்தியர் அ. பவளத்துரை அவர்கள் (பின்னாளில் இணுவில் ஆஸ்பத்திரியில் மகப்பேற்று வைத்திய நிபுணராகப் பணி செய்தவர்) நன்றாகக் ஹார்மோனியம் வாசிக்கக் கூடிய வானொலிப் பாடகர். பண்பும் நேர்மையும் மிக்க ஆளுமை கொண்டவர். நாடகங் களில் இசை நெறியாளராகும் தகுதி பெற்றிருந்தார். கச்சேரியில்

பணியாற்றிய 'கரவைகிழான்' எனப்படும் கந்தசாமி நல்ல கவிஞரும் நாடக எழுத்தாளரும். இன்னும் திரு. க.இரத்தினசிங்கம், திரு.பொ.இலங்கநாதபிள்ளை இணுவில் த. சிதம்பரநாதன், நாக. பத்மநாதன் என்று பொருத்தமான கூட்டம் திரு. சு. செல்லத்துரை ஆசிரியருடன் இணைந்து கொண்டது.

முதலாவது நாடகம் 1963இல் 'சிதைந்தசிலை' என்ற தலைப்பில் திரு. சு. செல்லத்துரை அவர்களின் நெறியாள்கையில் கலைக்கழக விழாவில் மேடையேறியது. தஞ்சைப் பெருங்கோயிலில் அமைக்கப்பட்ட சிவதாண்டவச் சிலைகள் தொடர்பாகக் கலைஞர் கருணாநிதி எழுதிய கதையைக் கரவைகிழான் நாடக எழுத்துருவாக்கியிருந்தார். இந் நாடகம் பரந்த பாராட்டைப் பெற்றதால் தொடர்ந்து நாடகக் கலையில் ஈடுபடும் ஆர்வம் திரு. சு. செல்லத்துரை அவர்களிடம் ஏற்பட்டது. இதே விழாவில் பேராசிரியர் சு. வித்தியானந்தனின் செம்மைப் படுத்தப்பட்ட "இராவணேசன்" கூத்தும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். சிதைந்த சிலை அக்காலத்தில் பெரு வழக்காக இருந்த மனோரதியப் பாணியில் அமைந்திருந்தது.

அடுத்ததாக இவர் தானே எழுதி நெறியாள்கை செய்த நாடகம் வித்தியாசமானதாக இருந்தது. "ஐயோ அம்மான்" என்ற அந்த முழுநீள நகைச்சுவை நாடகத்தில் அம்மான் பாத்திரத்தில் நடித்து இவர் மன்னார் மாவட்டத்தில் சிறந்த நடிகருக்குரிய பரிசைப் பெற்றுக் கொண்டார். இது பேச்சுவழக்கு மொழியுடன் கூடிய ஒரு யதார்த்த நாடகமாக அக்காலத்தில் அமைந்தது விசேட அம்சமாகும்.

மன்னாரில் இருந்து நாடகப்பணி செய்த பயணத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஆதரவும் நட்பும் இவருக்குக் கிடைத்திருந்தன. நாடகக் குழுவினர் காரில் பயணம் செய்து கலையரசு அவர்களின் மானிப்பாய் வீட்டிற்குப்போய் அவருக்கு முன்னால் ஒத்திகை பார்த்து அவரது மேலான ஆலோசனையைப் பெறும் அளவிற்கு அந்த உறவு விரிந்தது. "நாடகத்தயாரிப்பின் பிற்பகுதியில் ஒத்திகையை வசனம், பாட்டு இன்றி நகர்த்தி மெய்ப்பாடுகளைக்காட்டப் பழகினால் நாடகம் தரமான ஆக்கம் ஆகும்" என்று கலையரசு அறிவுரை கூறியமை பற்றி ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் தமது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மன்னாரில் வளர்ந்து வந்த நாடகப் பணியின் மைல்கல் போல அமைந்தது "ஆதவனே மன்னிப்பாய்" என்ற நாடகம். கரவை கிழானின் எழுத்துருவை இவர் நெறியாள்கை செய்திருந்தார். டாக்டர் அ. பவளத்துரை க. இரத்தினசிங்கம் T.A. போன்ற பிரமுகர்கள் உட்படப் பலர் நடித்திருந்தனர். மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று, அகில இலங்கை மட்டத்தில் முதற்பரிசு பெற்ற இந்த நாடகம் பின்னர் மன்னார், காரைநகர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை போன்ற பல இடங்களில் மேடையிடப்பட்டு அதன் மூலம் திரண்ட பணம் மன்னார் இந்து சமய விருத்திச் சங்க கட்டிடம் அமைக்கப் பயன்பட்டது.

ஆதவனே மன்னிப்பாய் எனும் நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்தது. கருத்தாழம் மிக்க வசனங்கள், இனிய பாடல்கள், அருமையான கதை அமைப்பு இத்தனையும் கொண்ட நல்ல நாடகம் ஒன்றைப் பார்த்த நிறைவைப் பெற்றேன். என்று மட்டுநகர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரை அவர்கள் குறிப்பிட்டார். இந்த எழுத்துரு பின்னர் வானொலி நாடக வடிவமாக்கப்பட்டு வானொலியிலும் ஒலிபரப்பானது.

இக்காலப்பகுதியில் பிரபல எழுத்தாளர் "தேவன் - யாழ்ப்பாணம்" அவர்கள் எழுதிய "தென்னவன் பிரம்மராயன்" என்ற நாடகத்தில் திரு. சு. செல்லத்துரை அவர்கள் 'திருவாதவூரர்' பாத்திரமேற்று நடித்தார்.

1964ம் ஆண்டு மீண்டும் கரவை கிழான் எழுதி இவர் நெறியாள்கை செய்த "தீந்தமிழ்த்தீ" என்ற நாடகத்தில் பெரியவர்களுடன் இவரது மாணவர்களும் நடித்திருந்தனர். சன்மார்க்கசபை நடத்திய நாடகப்போட்டியில் பரிசுபெற்ற இந் நாடகத்தைக் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பெரிதும் பாராட்டினார்.

மன்னார்ப் பிரதேச வாழ்வின் உச்சப் படைப்பாக அமைந்தது "தணியாததாகம்" 1966இல் மேடையேறிய இந் நாடகம் பனங்காம மன்னன் 'கயிலை வன்னியன்' என்ற சரித்திரப் பாத்திரம் பற்றியது. "சிதைந்தசிலை, ஆதவனே மன்னிப்பாய், தீந்தமிழ்த்தீ" போன்ற நாடகங்கள் மன்னார் நாடக உலகில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதுடன் தமிழ்பேசும் இடமெல்லாம் உற்சாகத்துடன் வரவேற்கப்பட்டன. ஆயினும் உச்சத்தில் நிற்பது "தணியாததாகம்"

என்று கொள்ளலாம். என்பது அப்போது மன்னார் அரசஅதிபராக இருந்த தேவநேசன் நேசையா அவர்களின் கூற்று.

''கரவைகிழானால் இயற்றப்பட்டு மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்ட 'தணியாததாகம்' என்னும் நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந் நாடகத்தின் மூலம் கயிலைவன்னியன், வேல்நம்பி ஆகியோரின் நாட்டுப்பற்று, இனப்பற்று முதலியவை அந்நாளில் எத்தகையதாய் இருந்தது என்பதை நன்றாக அறியக் கூடியதாக இருந்தது. உண்மையாகவே கிழவனாகிய என்னுள்ளத்தில் எத்தகைய உணர்ச்சிகள் எழுந்தன என்பது பற்றி வார்த்தைகளில் சொல்ல முடியாதிருக்கிறது.'' என்று கலையரசு க. சொர்ணலிங்கம் குறித்துள்ளார்.

இந்நாடகத்தில் நடித்த "தபாலதிபர்" ஒருவர் கடுங்காய்ச்சல் காரணமாக மேடையேற்ற தினம் சமுகமளிக்க முடியாது போனதால் நெறியாளர் திரு. சு. செல்லத்துரை அவர்களே அப்பாத்திரம் ஏற்று நடிக்க நேர்ந்தது. கலைக்கழகப் பரிசினைத் தட்டிக்கொண்ட இந்த நாடகம் பின்னர் யாழ். மாநகரசபை மண்டபத்திலும் மேடையேறியது.

இக்காலத்தில் திரு. சு. செல்லத்துரை அவர்கள் சிவகாமசுந்தரி அவர்களைத் திருமணப் பதிவு செய்து கொண்டார். இவரது மனைவியார் பார்த்த இவரது முதல் நாடகம் "தணியாததாகம்" என்பது குறிப்பிடத்தக்கது. திருமதி. சிவகாமசுந்தரி அவர்களின் குடும்பத்தினர் எல்லோரும் இந்த நாடகத்தைப் பார்த்துவிட்டுத் திரு. சு. செல்லத்துரை அவர்களை மிகவும் பாராட்டியுள்ளனர்.

1969ம் ஆண்டு இவர் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியால யத்துக்கு இடமாற்றம் பெற்று வந்தார். சொந்த ஊரில் கலைப்பணி ஆற்றும் சந்தர்ப்பம் அதன் மூலம் உருவாகியது. முன்னரைவிட இன்னும் வேகத்தோடும் அர்ப்பணிப்போடும் பாடசாலை நாடகங்களும், மன்ற நாடகங்களும் தோன்றின.

கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் வறுமைக் கோட்டுக்குக் கீழ்ப்பட்ட குடும்பங்களில் இருந்து வரும் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை. நிதிவளம் பெற்றோர் ஒத்துழைப்பு ஆகியன குறைவு. இருந்தும் இவர் 1969ம் ஆண்டில் "கலையால் அழிந்த கர்வம்" என்ற நாடகத்தை எழுதித்தயாரித்தார். கலிங்கத்தில் இருந்த

சூரியன் கோயிலில் பணிபுரிந்த சிற்பாசாரியார் பற்றிய கதை. மாயாவி என்ற பிரபல இந்திய எழுத்தாளரின் கதையைத் தழுவி எழுந்த நாடக எழுத்துரு. கலை தொடர்பாக எழுந்த போட்டியும் பொறாமையும் தன் மகனையே கொலை செய்ய வைத்த சூழல் நாடக உச்சம். பெரிய கல்லூரிகளுடன் போட்டிக்கு வந்த இந்த நாடகம் அகில இலங்கை மட்டத்தில் இரண்டாம் பரிசு பெற்றது. கவிஞர் செ. கதிரேசபிள்ளை தயாரித்த மகாஜனாவின் "குருதட்சணை" அவ்வருடம் முதலிடத்திற்கு வந்தது. போட்டியின் பின்னர் "கலையால் அழிந்த கர்வம்" பாடசாலையில் மேடையேற்றப்பட்டு அதன் மூலம் சேர்ந்த நிதி பாடசாலைக் கிணறு அமைக்கப் பயன்படுத்தப்பட்டது.

இதே ஆண்டில் ஈழத்துச் சிதம்பர வரலாற்றை "மணியோசை" என்ற நாடகமாக எழுதி நெறியாள்கை செய்தார். இதில் சங்கீதபூஷணம் சு. கணபதிப்பிள்ளை, நல்லைக்குமரன் போன்றவர்களும் நடித்ததால் நாடகத்தின் இசை சிறப்பாக அமைந்தது பலரின் பாராட்டுக்களையும் தனதாக்கிக் கொண்டது இந்த நாடகம். இந்த நாடகத்தில் சு. செல்லத்துரை அவர்களின் பாத்திரம் பாரதியாராக அமைந்தது. காரைநகரிலும் கொழும்பு சரஸ்வதி மண்டபத்திலும் இந்த நாடகம் மேடையேற்றப்பட்டு அதில் சேகரிக்கப்பட்ட பெருமளவு பணம் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் திருப்பணிக்குப் பயன்பட்டது. நாடக நிறைவில் எழுத்தாளரும் நெறியாளருமாகிய இவர் பொற்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகி வந்து இளவாலையில் தன் இல்லறத்தைத் தொடக்கியதோடு இளவாலையில் "இளங்குமரன் கலாமன்றம்" உருவானது. இளவாலை, காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலைய இளைஞர்களின் கலையாற்றலை வெளிக்கொணரும் பொருட்டு உருவாக்கப்பட்ட இம் மன்றத்தின் ஸ்தாபகர் இவரே. ஏறத்தாழ பன்னிரண்டு ஆண்டுகள் துடிப்புடன் இயங்கிய இந்த மன்றத்துக்கென இவர் இருபத்தைந்து நாடகங்களை எழுதினார். சராசரியாக வருடத்துக்கு இரண்டு நாடகம் என்ற அளவில் மன்றத்தின் அறிக்கைகள் அமைந்தன. மேடை அமைப்புக்கு வேண்டிய பொருள்கள், ஒப்பனைப் பொருள்கள் ஆகியவற்றைத் தனது செலவிலே மன்றத்துக்கு அளித்த கா. தம்பு என்ற இளைஞர் மன்றத்தின் சிறந்ததோர் நடிகராகவும் இருந்தார். அவரே நடிகர்

களுக்கான ஒப்பனை செய்பவராகவும் திகழ்ந்தார். பிற்காலத்தில் சிறந்த ஓவியராக விளங்கிய லங்கா நாடகங்களில் மேடை அமைப்பாளராகவும், ஒப்பனையாளராகவும் மிளிர்ந்தார். இந்த இளைஞர்களோடு கூடவே தொழிற்பட்ட சு. செல்லத்துரை அவர்கள் நாடகத்துக்கு வேண்டிய ஒப்பனைக் கலை, மேடை அமைப்புக் கலை ஆகியவற்றையும் செயற்பாட்டு முறையில் பயின்று முழுமையான நாடகக் கலைஞர் ஆனார்.

இம்மன்றம் தயாரித்த நாடகங்களில் முக்கியமானது "மண்ணாசை" இவரால் எழுதி நெறியாள்கை செய்யப்பட்ட இந் நாடகம் மூன்று பாத்திரங்களை மட்டும் கொண்ட ஓரங்க இலக்கிய நாடகம். பல பரிசுகளைப் பெற்றுப் பல மேடைகளைக் கண்ட நாடகம். வாள்சண்டையை மேடைக்குக் கொணர்ந்து பார்வையாளரைப் பரவசப்படுத்திய நாடகம். இளவாலையில் நடந்த இவரது திருமண வரவேற்பு விழாவில் இந் நாடகம் மேடையேற்றப்பட்டதை அங்கு பிரசன்னமாக இருந்த கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, மாவிட்டபுரம் மகாராஜஸ்ரீ சு.து. சண்முகநாதக்குருக்கள், வித்துவான் செல்லையா போன்ற பிரமுகர்கள் பார்த்து ரசித்துப் பாராட்டினர். வாமதேவன், தம்பு, சூரியா ஆகியோரே நடிகர்கள்.

இளங்குமரன் கலாமன்றம் தயாரித்த வாழ்க்கைப்புயல் மூன்றுமணி நேரம் கொண்ட முழுநீள நாடகம் சி. வாமதேவன், கா. தம்பு, வே. தருமராஜசிங்கம், க. இராசேந்திரம், கனக. மகேந்திரா போன்றவர்கள் நடித்தனர். க. இராசேந்திரம் அவர்கள் இந்த நாடகத்தின் மூலம் சிறந்த நகைச்சுவை நடிகராக அறிமுகமானார். லங்காவின் மேடையமைப்பில் அவரது ஓவியத்தின் திறன் வெளிப்பட்டது. கண் தெரியாத ஒரு பெண்ணின் காதல் கதையை மையமாகக் கொண்டது இந்நாடகம்.

இவரது நாடக ஈடுபாட்டினால் உந்தப்பட்ட இவரது துணைவியாரும் இளவாலை, காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தினர் நடாத்தும் தனி நடிப்புப் போட்டியில் பங்கு பற்றினார். அவர் நடித்த புரோக்கர் பொன்னையா பாத்திரம் புகழ்பெற்றது.

1970ஆம் ஆண்டு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் படித்த பெண்கள் நடித்த "இன்னல் சுமந்த அண்ணல்" என்ற கே. எஸ். ஆனந்தன் அவர்களின் பிரதி. இராமாயணத்தைப்

பின்னணியாகக் கொண்ட இந்நாடகத்தின் நடன நெறியாள்கையைக் கலைஞர் வேல் ஆனந்தன் அவர்களும் இசை நெறியாள்கையை இசையாளர் திருமதி. அன்னலட்சுமி அவர்களும் கவனித்துக் கொண்டதாலும் பண்டிதர் இராசையா அவர்களின் உதவி இருந்ததாலும் இது இசை நடனச் சிறப்போடு இன்னொரு பரிமாணத்தில் வெற்றி பெற்றது. யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் மேடையேறிய இரண்டு 'ரிக்கற்'' காட்சிகளைக் கொண்டு கல்லூரிக்குப் பணம் சேர்த்துக் கொடுத்தார். மல்லாகம் தவமணி நாயகத்தின் (LIGHT EFFITE) சிறந்த ஒளியமைப்பு நாடகத்தின் தரத்தை உயர்த்திக் காட்டியது. சவரிமுத்து அடிகளார், நீதிபதி பரமகுரு போன்ற சமூக மேல்நிலையாளர் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர். உயர்கலைக் கல்லூரி அதிபர் பொன்னையா அவர்கள் நாடகத்துக்குத் தாராளமாகச் செலவு செய்ய ஆயத்தமாக இருந்ததால் நாடகத்தின் தரத்தை உயர்த்த முடிந்தது. நாடக நிறைவில் சைவப்புலவர் அவர்கள், நீதவான் குமரகுரு அவர்களால் பொன்னாடை போர்த்திப் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

திரு. தி. சி. சண்முகலிங்கம் அவர்களை முதல்வராகக் கொண்டிருந்த இணுவில் இசை நடன கிராமிய கலைக் கல்லூரி அகில இலங்கை ரீதியாக நாடகப் போட்டிகளை நடத்தி வந்தது. இளவாலை இளங்குமரன் கலாமன்றம் அதற்காகத் தயாரித்த "சுந்தரர்" நாடகத்தில் இவர் கிழப்பிராமணர் வேடமேற்று நடித்தார்.

1971ம் ஆண்டு இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி ஆசிரியராகப் பணியாற்றிய போது "மாயவன் செய்த மாயம்" என்ற இலக்கிய நாடகத்தை எழுதி நெறியாள்கை செய்தார். பொன்னுத்துரை, பாலகுமார் போன்ற மாணவர்கள் நடித்த நாடகம் இது.

1971ம் ஆண்டு சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் அதிபராகப் பதவி உயர்வுபெற்று மாங்குளம் அ.த.க. பாடசாலைக்குச் சென்றார். நான்கு ஆண்டுகள் அங்கு பணிபுரிந்த பின் 1975இல் இளவாலை மெய்கண்டான் ம.வி.க்கு இவர் அதிபராக மாற்றம் பெற்று வந்த காலத்துடன் மற்றுமொரு புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று.

அதிபர் என்ற வகிபாகத்தைத் தளரவிடாது நாடகத்துறையிலும் ஈடுபடுபவர்கள் மிகக்குறைவு. ஏனெனில் அது கடினமான பணி. ஆயினும் சைவப்புலவர் சு. செல்லத்துரை அந்தக் கடினமான பணியில்

வெற்றிகண்டார். 1976இல் இளவாலை மெய்கண்டானில் இவர் எழுதித் தயாரித்த "பாதுகைபெற்ற பரிசு" அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டியில் இரண்டாமிடம்பெற்றது. இராமாயணக் கதையை அடிப்படையாக் கொண்டெழுந்த இந்த நாடகத்தில் பரதனின் பாதுகை செய்த சிற்பிதான் கதாநாயகன். சிறபியின் மனைவி நாயகி "ஒருவன் தான் செய்யும் செயலை, அது மிகச் சிறிதேயாயினும் அன்புடனும் அர்ப்பணிப்புடனும் தூய்மையாகவும் செய்வானேயாயின் அதனால் விளையும் பயன் உயர்ந்ததாக இருக்கும்" என்ற செய்தியைக் கொண்டிருந்தது இந்நாடகம். இறுதிப் போட்டி அநுராதபுரத்தில் நடைபெற்றது. நடித்த மாணவர்கள் நேர் மீள வலியுறுத்தல் முறையில் பாராட்டப்படும் வகையில் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையின் பல்வேறு இடங்களுக்கும் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

1977இல் தயாரிக்கப்பட்ட "கர்வபங்கம்" அதைவிட ஒருபடி மேலே சென்று முதலாம் பரிசை வென்றது. இவரது மகன் செ. நாவரசன், உறவினர் உ. சந்திரகுமாரன் சந்திரமோகன் போன்றவர்களும் நடித்த நாடகம் இது. இந்நாடகத்தில் நடித்ததன் மூலம் கனிஷ்ட பிரிவில் அகில இலங்கைச் சிறந்த நடிகர் விருதை வென்ற உ. சந்திரகுமாரன் (கணக்காளர்) இன்று தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத்தின் பொருளாளராக இயங்குகின்றார். இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம் போன்ற ஒரு கிராமத்துப் பாடசாலை பெரும்பெரும் கல்லூரிகளைத் தோற்கடித்து முதலிடம் பெறுவது என்பது வியத்தகு சாதனை என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

இதுவரை மனோரதிய நாடகங்களிலும், யதார்த்த நாடகங்களிலும் ஈடுபட்டுவந்த சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் இந்த அதீத வெற்றியோடு மற்றொருவகை நாடகத்தினுள் கால் பதிக்கிறார். 1982இல் "பஞ்சவடி" என்ற இசை நாடகத்தைத் தயாரித்தார். இசையாசிரியை சிவரூபி கதிர்காமநாதன், பத்மா றோபேட் ஆகியோர் பக்கபலமாக இருந்தனர். சூழலில் இருந்தும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இருந்தும் இவர் பெற்றிருந்த இசை ஞானம் நல்ல துணையாக அமைந்தது. 1983இல் "பாசுபதம்" என்ற இசை நாடகத்தைத் தயாரித்தார். யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் அது இரண்டாம் இடத்தைப் பெற்றது.

பின்னர் இது நல்லை ஆதீனத்தில் மேடையேற்றப்பட்டு நல்லைக் குருமகாசன்னிதானம் அவர்களின் பாராட்டையும் பெற்றுக் கொண்டது.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் இவரது நாடகப்பணி வருடந்தோறும் தொடர்ந்து கொண்டே இருந்தது. நாடகங்கள் தமிழ்தினப் போட்டிக்காகவும், பாடசாலை விழாக்களுக்கா கவும் தயாரிக்கப்பட்டன.

இணுவில் இசைநடனக் கிராமியக் கலைக்கல்லூரி நாட்டிய நாடகங்களை மேடையேற்ற விரும்பியது. அதற்காக "சக்திகள் சபதம்" சியாமளன் சபதம்" ஆகிய நாடக எழுத்துருக்களை எழுதி உதவினார். அதன் மூலம் நாட்டிய நாடக அளிக்கையையும் வசமாக்கிக் கொண்டார்.

சிந்துநடைக்கூத்து எண்பதுகளில் குடாநாட்டில் புத்தெழுச்சி பெற்றது. நேரச்சுருக்கத்துடன் பொருத்தமான மாற்றங்கள் செய்து யாழ். பல்கலைக்கழகம் மேடையேற்றிய காத்தவராயன் கூத்து பெரு வெற்றி பெற்றுப் பல மேடைகளைக் கண்டது. இதன் தாக்கம் கல்வித்திணைக்களம் நடத்தும் தமிழ்த்தினப் போட்டியிலும் எதிரொலித்தது. இளவாலை மெய்கண்டான் ம.வி. 1990 முதல் நான்கு ஐந்து வருடங்கள் தொடர்ந்து காத்தவராயன் கூத்தைப் போட்டிக்கு அனுப்பியது. அளவெட்டி ஆசிரியர் திரு. விஜயபாஸ்கரன் அவர்கள் ஆரம்பத்தில் இந்தக்கூத்தினை மாணவர்கள் பயின்று கொள்ள உதவினார். 1991இல் இக் கூத்து மாகாண முதற் பரிசை வென்றது. அதனைத் தொடர்ந்து காத்தவராயன் கூத்துப் பாணியில் அமைந்த பரீட்சார்த்த நாடகங்களைச் சைவப்புலவர் அவர்கள் தயாரித்தார். இதன் மூலம் கூத்து வடிவங்களிலும் தன்னை ஆழ ஈடுபடுத்திக் கொண்டார்.

1986இல் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களம் தோற்றம் பெற்றது. இயல், இசை, நாடகம், ஓவியக் குழுக்கள் களத்தின் பிரிவுகளாய் இருந்தன. நாடகக் குழுவுக்கு ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் தலைமை ஏற்றார். களத்தின் ஒன்றுகூடல்களில் நாடகமும் அரங்கக்கலைகளும் பற்றிய புதிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. பாடசாலைகளிலும் பல்கலைக்கத்திலும் நாடகம் ஒரு பாடமாகப் பயிலப்படலாயிற்று. வடஇலங்கைச் சங்கீத சபையினர் நாடகப் பரீட்சைக்குக் களம் மாணவர்களைத் தயார் செய்து அனுப்பியது.

அதனூடாக இவரும் பல புதிய எண்ணக்கருக்களை உள்வாங்கிக் கொண்டார். 1993இல் கலை இலக்கியக்களம் வெளியிட்ட 'கோலங்கள் ஐந்து' என்ற நாடகத் தொகுப்பில் கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, அநு.வை. நாகராஜன், கோகிலா மகேந்திரன், பண்டிதர் சி. அப்புத்துரை ஆகியோரின் நாடகங்களோடு சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் "மெய்காணலும் மெய் உணர்தலும்" என்ற மெய்கண்ட தேவர் பற்றிய நாடக எழுத்துரு இடம்பெற்றது. இந்த நூல் யாழ். இலக்கியப் பேரவையின் பரிசை வென்றது.

1960களின் ஆரம்பத்தில் எழுதத் தொடங்கிய சைவப்புலவர் அவர்களின் நாடக எழுத்துருக்கள் யாவும் 1992 யூன் 11இல் இளவாலையில் இராணுவ வன்முறையில் சாம்பராயின. அதன்பிறகு எழுதியவற்றுள் சில 1995இல் குடாநாட்டின் மிகப்பெரும் இடப்பெயர்வோடு கைதவறிப்போயின என்ற தகவல் யுத்தம் என்ற அனர்த்தம் கலைப்பொக்கிசங்களை அழிப்பதில் எவ்வளவு தூரம் வெற்றிகொண்டிருக்கின்றது என்பதற்கு நல்ல சான்று. இதை நினைக்கும் போது நெஞ்சுக்குள் பூமி குலுங்கும் உணர்வு ஏற்படுகின்றது.

இவை எல்லாவற்றிலும் தப்பிய சில எழுத்துருக்களும் 1995க்குப் பின்னர் எழுதப்பட்ட சிலவும் 2007ம் ஆண்டு அரங்கப்படையல்கள் என்ற நூலாகத் தெல்லிப்பழைக் கலை இலக்கியக்கள வெளியீடாகக் கொழும்பில் வெளியிடப்பட்டது. அப்பொழுது கலாபூஷணம் பண்டிதர் சி. அப்புத்துரை அவர்கள் "நல்லன் செல்லத்துரை நன்றாம் நாடகநூல் நாட்டியுள்ளான்" என்றுரைத்தார்.

"தன் மண்ணின் நிலை கண்டு அவன்படும் வேதனை, தன் மண்ணுக்காய் அவன் காணும் கனவு. தன் மண்ணின் அவலங்கள் தீரவேண்டும் என்ற தவிப்பு, சத்திய உணர்வோடு வெளிவரும்போது நெஞ்சை நெகிழ வைக்கிறது." என்று ஏ.ஸீ.தாசீசியஸ் பதிவு செய்தார்.

"கற்பித்தலைக் கலையாக நிலைமாற்றும் செயற்பாடுகளில் தமது நீண்ட கால அநுபவச் சுவடுகளை நிரவல் செய்தமையின் பதிவுகளாக இந்நூலாக்கம் அமைந்துள்ளது." என்று பேராசிரியர் சபா. ஜெயராசா சுட்டி உரைத்தார்.

வலிகாமம் கல்வி வலயத்தின் பாடமேம்பாட்டுத் திட்டத்திற்கான மிகச்சிறந்த உதாரணங்களை இளவாலை மெய்கண்டான் ம.வி.

இன் மலரொழுங்கு, மாங்கனி, வலைப்பந்தாட்டம், நிறையுணவுச் சத்துக்கள், எண்கோலங்கள், வாயுக்கள் ஆகியவற்றில் காட்ட முடிந்தது என்று கட்டுரையாசிரியர் குறிப்பிட்டிருந்தார்.

இவர்கள் எல்லோரும் இவ்வாறு ஒருமித்துக்கூறும்படி அவர் மெய்கண்டானில் செய்தவை எவை?

இலக்கியக் கருப்பொருளைக் கொண்டு "புலவர்புகழ்" "பரதன்" "கண்ணகி வழக்குரைத்தமை" "மாயவன் செய்த மாயம்" "மண்ணாசை" "கர்வபங்கம்" "இராவணன்" போன்ற நாடகங்களை மனோரதியப் பாணியில் மேடையேற்றினார். இவற்றில் 'இராவணன்' பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலையிலும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் இவரால் மீண்டும் நெறியாள்கை செய்யப்பட்டது. மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் அந்த எழுத்துருவைப் பெற்று தாமும் தயாரித்து மகிழ்ந்தனர். இவரது நாடக எழுத்துருக்களுக்கு வேறு பாடசாலை களில் இருந்த மதிப்பை இது சுட்டுகிறது.

சமய விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு மனோரதிய முறையில் தயாரிக்கப்பட்ட நாடகங்களாகத் "தக்கன் யாகம்" "மெய்ப்பொருள்நாயனார்" "நாவலரானார்" "தருமத்தின்வழி" போன்றவை அமைந்தன. தெல்லிப்பழைக் கோட்டம் நடத்திய நாடக விழாவில் "நாவலரானார்" மேடையேற்றப்பட்டது. அப்போது கோட்டக்கல்விப் பணிப்பாளராயிருந்த திரு.பொ. சிவஞானசுந்தரம் பெரிதும் நயந்தார். இளவாலை மெய்கண்டான் ம.வி. இடம்பெயர்ந்து மானிப்பாயில் இயங்கியபோது "மெய்ப்பொருள் நாயனார்" மேடையேற்றப்பட்டது. "தருமத்தின் வழி" மனுநீதிகண்ட சோழன் கதையைச் சேக்கிழாரின் பாடல் வரிகளையே வசனமாக்கித் தயாரிக்கப்பட்டது.

"சுனாமியாம்" "வயோதிபர் விடுதியில்" "ஐயோ அம்மான்" "கண்ணீர்" "புதியதோர் உலகம்" போன்றவை சமூகப் பிரச்சினைகளைக் கருப்பொருளாகக் கொண்ட யதார்த்த நாடகங்கள். வயோதிபர் விடுதியில் என்ற நகைச்சுவை நாடகம் விவசாயபீட மாணவர்களால் நடிக்கப்பட்டது.

"அணுவின்கதை", "வாயுக்கள்", "எண்கோலங்கள்", "வள்ளிதிருமணம்", "சரஸ்வதியே சம்மதந்தா", "யாருக்குச்சொந்தம்"

போன்றவை நாட்டிய நாடகங்களாக நடிக்கப்பட்டவை. 1991ம் ஆண்டு கணித விஞ்ஞானக் கலைவிழாவில் மேடையேறிய எண்கோலங்கள் நாடகத்தை மிகவும் ரசித்த அப்போதைய கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் அவர் யாழ் வலயத்திலும் அதை மேடையேற்ற வைத்தமை குறிப்பிடத்தக்கது.

"பாசுபதாஸ்திரம்", "தேடிவரும் சான்றோர்", "எழுத்தறிவு" ஆகியவை இசை நாடகப் பாணியில் தயாரிக்கப்பட்டவை.

"வள்ளல் ஏழூர்", "மலரொழுங்கு", "வலைப்பந்தாட்டம்", "நிறையுணவுச் சத்துக்கள்" ஆகியவை சிந்து நடைக் கூத்துப் பாணியில் பரீட்சார்த்த மாகத்தயாரானவை.

சிங்கள மக்கள் மத்தியில் வரவேற்புப் பெற்ற ஒரு இலகுவான நாடக வடிவம் தாளலய நாடகம். ஒரேவிதமான ஓசையுடன் கூடிய பாட்டும் இலகுவான தாளநடையும் இதன் அம்சங்கள். "சேலையும் சுங்கானும்" "வேண்டும் எனக்கு மூன்று இலட்சம்" ஆகிய நாடகங்கள் தாளலய வடிவத்தில் எழுதப்பட்டன. "சேலையும் சுங்கானும்" என்ற நாடக எழுத்துரு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியால் பல தடவை மேடையேற்றப்பட்டது. பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் இதை அரங்கேற்றியது. இதே நாடகம் "மேலும் கீழும்" என்ற பெயரில் வசாவிளான் ம.ம.வி. இன் தற்காலிகக் கொட்டகை அமைப்பு நிதிக்காகப் பல இடங்களில் மேடையேறியது. அப்பாடசாலை அதிபர் ஆ.சி. நடராஜாவும் இதில் நடித்திருந்தார்.

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவர்களே மேற்குறிப்பிட்ட பெரும்பாலான நாடகங்களில் நடித்திருந்தாலும் அங்கு கற்பித்த ஆசிரியர்களும் அதிபரும் சேர்ந்து ஆசிரியர் தினங்களின் போது மேடையேறி நடித்தமை மாணவர்களைப் பெரிதும் கவர்ந்து அவர்களுக்கு முன்னுதாரணமாய் அமைந்தது. "சொர்க்கம்" "வலைப்பந்தாட்டம்" போன்ற நாடகங்கள் ஆசிரியர்களால் நடிக்கப்பட்டுப் பலரது பாராட்டைப் பெற்றன.

1991ம் ஆண்டு அதிபரும் ஆசிரியர்களும் சேர்ந்து "வள்ளல் ஏழூர்" என்றொரு நாடகம் செய்தனர். வள்ளல் ஏழூர் அவர்கள் காசு வறுமை, உணர்வு வறுமை, சுயமதிப்பீட்டு வறுமை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருந்த பிள்ளைகளை எல்லாம் ஒன்று சேர்த்து பாகுபாடு காட்டாமல் அறிவுச்சுடர் ஏற்றியமை பற்றிய நாடகம்

அது. ஆசிரியர் ஜோசேப் ஏழூரின் பாத்திரம் ஏற்றார். திருமதி. அப்புத்துரை ஏழூரரின் மனைவியாக நடித்தார். சைவப்புலவர் அவர்கள் ஒரு குடிமகனாக வந்தார். நாடக முடிவில் நடிகர்கள் எல்லோரும் பரிசு பெற்றனர். பரிசு என்ன தெரியுமா? அப்போது கிடைப்பதற்கு மிகவும் அரிதாக இருந்த ஒரு போத்தல் மண்ணெய்யும் ஒரு சவர்க்காரமும்.

இவ்வாறெல்லாம் செயற்பட்ட ஒரு அதிபருக்குப் பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டம் 1991இல் முதல் முறையாக நடைபெற்ற ஆசிரியர் தின விழாவில் "நல்லதிபர்" விருது வழங்கிக் கௌரவித்தமை ஆச்சரியப்படதக்கதல்ல.

"சொந்தமண்ணிலே மீண்டும் நாங்கள் துளிர்த்திட வேண்டும்" என்று "சரஸ்வதியே சம்மதந்தா" நாடகத்தில் புலவர் அவர்கள் இதயம் உருகி வேண்டிய வேண்டுதல் செவி மடுக்கப்பட்டு இளவாலை மெய்கண்டான் 1996 மேயில் மீண்டும் பழைய இடம் திரும்பியது மறக்க முடியாத வரலாறு.

1998ஆம் ஆண்டு இவர் அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். அப்போது வெளியிடப்பட்ட பவள மலரில் எண்கோலங்கள் நாடக எழுத்துரு உள்வாங்கப்பட்டது.

நாடகப் பணியில் இருந்து அவர் ஓய்வுபெறவில்லை. கொழும்பில் இருந்து பல நாடக எழுத்துருக்களை வில்லுப்பாட்டுகளை எழுதி வேண்டுவோர்க்கெல்லாம் ஈந்த வண்ணம் உள்ளார்.

கொழும்பு 07இல் அமைந்துள்ள கொழும்பு லேடீஸ் கல்லூரி 2008ம் ஆண்டு ஒரு இல்ல நாடகப் போட்டியையும், நாடக விழாவையும் நடத்தியது. நான்கு இல்லங்களுக்குமான நாடகங்களையும் இவரே எழுதி நெறியாள்கை செய்திருந்தார். சகுந்தலை, தமயந்தி, கைகேயி, அர்ச்சுனன் ஆகிய இலக்கியப் பாத்திரங்கள் நாடகங்களின் மையப்பொருளாயின. நெறியாளரின் உச்சரிப்பு நடிப்பு ஆகியவற்றைத் தமது கைத்தொலைபேசிகளில் பதிவு செய்த மாணவிகள் அதனைப் பின்பற்றி நன்கு நடித்தனர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மூலம் புகழீட்டிய செல்வி சற்சொருபவதி நாதன் உள்ளிட்ட ஐவர் நடுவர்களாக அமர்ந்தனர். எல்லோருமே நாடகங்களை நன்கு பாராட்டி நயந்தனர்.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற ஐந்திணை தொடர்பான ஒரு நாட்டிய நாடகத்தின் எழுத்துருவை இவர் எழுதிக் கொடுத்திருந்தார். அந்த நாடகத்தின் மேடையேற்றத்தின் போது கௌரவமும் பரிசும் பெற்றார்.

மொத்தத்தில் பார்த்தால் கடந்த அறுபது ஆண்டுகளாக அரங்கை ஆண்ட ஒரு அறிஞரின் பணியைத் துறைசார் அறிஞர்கள் முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும் என்று கோருவது நியாயமானது என எண்ணுகிறேன். ஆரம்பத்தில் இவர் செய்த மனோரதியப் பாணி நாடகங்களின் மொழி மிக அழகானது. "ஞாயிறுபோன்ற ஆண்மையும் திங்கள் போன்ற அருளும் கொண்ட பாரி" போன்ற வசனங்கள் இதற்குச் சிறந்த உதாரணங்கள்.

இவரது யதார்த்த நாடகங்களின் பேச்சுமொழி மிக இயல்பானது "ஐயையோ சுனாமி வருகுதெண்டு பயங்காட்டி ஓடோட விரட்டி னாங்களே நான் ஓடேக்கை நகைப்பையை எங்கையோ விட்டிட்டனே" என்ற இடத்தைக் காட்டலாம். ஆரம்ப கால நாடகங்கள் மூலம் திரட்டப்பட்ட நிதி பல நல்ல செயற்பாடுகளுக்கு உதவியுள்ளது என்பது கவனம் பெறும் விடயம்.

பிற்கால நாடகங்களின் கல்விப்பயன் மிகவும் பெறுமதி மிக்கது. "உள்ளுறுப்பைச்சுற்றிப் படித்திருப்பேன், வெப்பம் வெளியேறாமல் காத்து உதவிடுவேன், தோல் படையின் கீழே படிந்திருப்பேன் உடல் அழகு தந்து குளிரில் காத்திடுவேன்" என்று இப்பிலிட்டுப் பேசுகிறது. ஒரு விஞ்ஞான ஆசிரியர் கூட இவ்வாறு எழுதுவது கடினம்.

"நாடகத்தைப் பார்ப்பவர் மட்டுமல்ல நடிப்பவர்களும் குணப் படுத்தப்படுகிறார்கள் இயல்பாக" என்ற கருத்து மிக நீண்ட காலமாகவே நாடக உலகில் நிலவி வருகிறது. கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் ஏற்று நடித்த கிழப்பிராமணர், திரௌபதி, வாதவூரர், பாரதியார், உமை போன்ற பாத்திரங்கள் இவரது உள நலத்தை உயர்த்திப் பிற்காலத்தில் பல மாணவர்கள் பார்வையாளர் களின் உளநல மேம்பாட்டுக்கும் உதவி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இவரது நாடகங்கள் பலவற்றில் "கொஞ்சும் தெய்வீக நாதம் எங்கும் எப்போதும் இசைந்தொலிக்கும்" அரங்கை ஆண்ட செல்வர், செல்லத்துரை நீடு வாழ்ந்து இன்னும் அரங்கிற்கு நறுமணம் கொடுக்க இறை ஆசியை வேண்டி நிற்போம்.

# சொல்லும் வில்லும்
# சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுடனான செவ்வி

திருமதி. வானதி காண்டீபன்

வையத்துயர்ந்த யாழ்ப்பாண மண்ணுக்கென்று சில தனித்துவமான பண்புகள் உள்ளன. சைவத்தையும், தமிழையும் தம்மிரு கண்களெனப் போற்றியும், கந்தபுராணக் கலாசார நெறிமுறைப்படி ஒழுகியும், நாவலர் காட்டிய சைவத்தமிழ்த் தடம்பதித்து வாழ்ந்து வரும் மக்களின் வாழ்வியற் கோலங்கள் தனிச்சிறப்பு மிக்கவை. நாவலர் வழிநின்று இன்றும் சைவத்தமிழ்ப் பண்பாட்டை அடுத்த தலைமுறையினருக்குப் பக்குவமாகக் கையளிக்கும் செயன்முறையில் முழுமூச்சுடன் ஈடுபட்டுவருபவர் இளவாலையூர் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.

இந்த ஆக்கம் சொல்லும் செயலும் ஒன்றெனக் கொண்டு, தனித்த ஆளுமையை வெளிப்படுத்தி வாழ்ந்துவரும் ஐயா அவர்களின் பவளவிழாவுக்கு சமர்ப்பணமாக கட்டுரையாளரால் முன்வைக்கப் படுகின்றது.

ஐயா அவர்களின் ஆளுமை விருத்தியின் பின்புலம் குறிப்பாக சொற்பொழிவுக் கலை மீது இன்றைய இளஞ்சந்ததியினருக்கு உத்வேகத்தை நல்க வேண்டும் என்ற குறிக்கோளையும் தமிழர் பாரம்பரியக் கலைவடிவமான வில்லுப்பாட்டினை அடுத்துவரும் தலைமுறையினரும் போற்றிக்காக்க வேண்டும் என்ற குறிக்கோளையும் மனதிற்கொண்டு ஐயாவுடனான செவ்வி நிகழ்த்தப்பட்டது.

1. ***வணக்கம் ஐயா! நாடறிந்த பேச்சாளராகத் திகழும் தங்கள் ஆளுமை விருத்திக்கு - குறிப்பாக பேச்சாற்றல் வளர்ச்சிக்கு வித்திட்ட பின்னணி குறித்துப் பகிர்ந்து கொள்ள முடியுமா?***

   வணக்கம், இது ஒரு மிகப்பெரிய கேள்வி. எனது பாடசாலைப் பருவம் முதல் ஆசிரியனாகப் பணிபுரிந்த காலகட்டங்களை மீள்நோக்கிப் பார்ப்பதற்கு இந்தக் கேள்வி வாய்ப்பளிக்கிறது.

**பாடசாலை மாணவனாக.**

எந்த ஒரு குழந்தையின் வளர்ச்சியிலும் வீடும் பாடசாலையும் மிகமுக்கிய பங்காற்றுகின்றன. அந்த வகையில் எனது பாடசாலையும் மாணவப் பருவத்தில் என்னை, என்னுள் இருக்கும் ஆற்றலை இனங்கண்டு வளப்படுத்தியது. ஆரம்ப வகுப்புகளில் எனக்குத் தமிழ் கற்பித்த துன்னாலை சுப்பையா ஆசிரியர் எனது வளர்ச்சிக்கு அடித்தளமிட்டவர். தமிழ், சமய பாடங்களைப் போதித்த இவர், பேச்சுப் போட்டிகளுக்கு என்னைத் தயார் செய்து அனுப்புவார். அவரே எழுதிய பேச்சுக்களை மனனம் செய்து போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய என்னை அவர் செல்லமாக "புலவர்" என்று அழைப்பார். எமக்கு ஒரு முன்மாதிரியாக வாழ்ந்த அவ்வா சானின் அன்பும் கண்டிப்பும் எம்மை நல்வழிப்படுத்தின.

பன்னாலை பொன்னையா ஆசிரியர், தமிழ்மீதான ஆர்வத்தை என்னுள் வளர்த்தெடுத்த ஓராசான். சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசனார் ஆகியோரின் எழுத்து லகை எனக்கு அறிமுகஞ் செய்து வைத்தவர். சுயமாகப் புத்தகங்கள் வாங்க வீட்டுவசதி இடம்தராத போதும் ஆசிரியர் தானே தந்த நூல்களும் உற்சாகமும் ஊக்கமும் என்றும் மறக்கமுடியாதவை.

எனது நாடகப் பங்கு பற்றுதல்களும் பேச்சுக்கலை வளர்ச்சிக்கு உரமிட்டன என்றே சொல்ல வேண்டும். பாடசாலையில் முதல் நடித்த நாடகம் இன்றும் மனதில் பசுமையாக இருக்கிறது. சோமசுந்தரப் புலவரின் உயிரிளங்குமரன் நாடகத்தில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்தேன்.

உண்மையில் நாடகத்துறை மொழிவளர்ச்சிக்குப் பங்காற்று கின்ற ஒரு கலை ஆகும். அக்காலத்தில் பிரபல்யமான அளவெட்டி இசைநாடக நடிகர் சின்னையா தேசிகர் இந்நாட கத்தைப் பழக்கியிருந்தார். இயல்பாகவே நடிக்கும் ஆற்றலும், தெளிவான உச்சரிப்பும், தொனி ஏற்ற இறக்கத்துடன் பேசும் ஆற்றலும் என்னுள் குடிகொண்டிருந்ததை இனங்கண்டு அவற்றை முறைப்படி செம்மைப்படுத்தியது பாடசாலையே.

### ஆசிரியபயிற்சிக்கலாசாலை மாணவனாக

அடுத்து, பலாலி ஆசிரியர் கலாசாலையில் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் தமிழ்மீதான ஆர்வத்துக்கு உரமிட்டன. கற்கண்டுப் பண்டிதர் என்று செல்லமாக அழைக்கப்பெற்ற பொ. கிருஷ்ணபிள்ளை அருமையான ஒரு இரசிகன். கி.வா. ஜகநாதன், பண்டிதமணி ஆகியோரின் படைப்புக்களை இரசிக்கக் கற்றுத்தந்தவர். இவர் இலக்கிய இரசிகனாக மட்டுமன்றி இயற்கை இரசிகனாகவும் திகழ்ந்தவர். எதையும் இயல்போடு இரசிக்கும் ஆற்றலை எம்முள் வளர்த்தவர். இவர் ஆங்கில இலக்கியத்திலும் துறைபோந்தவர். ஒப்பீட்டு இலக்கியக் கல்வியை இவர் மூலம் பெற்றுக் கொண்டோம்.

குரும்பசிட்டி சன்மார்க்கசபை அக்காலத்தில் மிகவும் துடிப்புடன் இயங்கியது. இந்தியத் தமிழ் அறிஞர்கள் வந்து உரை நிகழ்த்துவர். ஆசிரியர் மாணவராக இருந்த எம்மை இவர் தன்னுடன் அங்கு அழைத்துச் செல்வார். உண்மையில் பேச்சுப்பணிக்கு தூண்டுதல் இடப்பட்டது இக்காலப் பகுதியிலேயே எனலாம்.

### பாடசாலை ஆசிரியராக

ஆசிரியராக மன்னார் சித்தி விநாயகர் வித்தியாலயத்திற்கு முதல் நியமனம் பெற்றேன். பாடசாலையில் மாணவர்களைப் போட்டிகளுக்குத் தயார் செய்தல், இணைப்பாடவிதான செயற்பாடுகளை முன்னெடுத்தல் என்று முழுநேரமும் பாடசாலையில் எனது பணி தொடங்கியது. மறுபுறம் மன்னாரில் இந்துசமய வளர்ச்சிச் சங்கச் செயலாளர் என்ற பதவியும் சேர்ந்து கொண்டது. தலைவராக விளங்கிய சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களுடனான தொடர்பு எனது பாதை இதுவென என்னை நானே உணரவைத்தது. அக்காலத்தில் தலைமன்னாரூடாகவே இந்தியாவில் இருந்து வரும் அறிஞர்கள் கொழும்புக்கு பயணம் செய்வார்கள். அதனால் பேச்சாளப் பெருமக்களைத் தலைமன்னாரில் வரவேற்கும் பொறுப்பும் அவர்களது சிறப்புரைகளை மன்னாரில் நிகழ்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொறுப்பும் எனக்கு வாய்க்கப்பெற்றன.

கி.வா. ஜகந்நாதன், கவியோகி சுத்தானந்த பாரதி, அ.ச. ஞானசம்பந்தன் பேரறிஞர்களின் சொற்பொழிவுகளினால் பெரிதும் ஈர்க்கப்பட்டேன். அந்த நிகழ்வுகளில் வரவேற்புரையோ அன்றி நன்றியுரையோ நிகழ்த்தும் பொறுப்பும் எனக்கு வாய்க்கப்பெற்றது. அவர்களது பேச்சைக் கிரகிப்பதற்கும் துறைசார்ந்த அறிவைப் பெருக்கிக் கொள்வதற்கும் இவ்வாறான சந்தர்ப்பங்கள் வாய்ப்பளித்தன.

1960 முதல் 1968 வரையான காலப்பகுதியில் மன்னார் நாட்டுப்புறக் கோயில்களில் சொற்பொழிவாற்றிய அனுபவம் குறிப்பிடப்பட வேண்டியது. எனது தேடலை வளர்த்தெடுத்த காலப்பகுதி இது.

2. *ஒரு காலத்தில் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்றுவந்த திருவாசக மாநாடு இலங்கை இந்திய அறிஞர்களின் கருத்தாடல்களுக்குக் களம் சமைத்ததுமட்டுமன்றி சைவத்தமிழ் மக்களின் செவிகளுக்கும் பெருவிருந்தளித்தது. இந்த மாநாடு குறித்து தங்கள் கருத்து?*

ஆம், அது ஒரு பொற்காலம் திருவாசக மடத்துக்குப் பொறுப்பாக இருந்த சரவணமுத்துச் சாமிகளின் தொண்டு காலத்தால் அழியாதது. அவரது பெரு முயற்சியின் பெறுபேறாகவே ஆண்டுதோறும் திருவாசக மாநாடு திருக்கேதீச்சரத்தில் நடைபெற்று வந்தது. எமக்கெல்லாம் இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்கு பெரிய வாய்ப்புக்கிட்டியது. ஈழத்து சைவத்தமிழ் வளர்ச்சிக்கு இம்மாநாடு பெரும் பங்காற்றியது. சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாகுட்டி போன்ற இலங்கைப் பேச்சாளர்களுடன் இந்தியாவின் தலைசிறந்த சமயச் சொற்பொழிவாளர்களும் இம்மாநாட்டில் பங்குகொள்வர். திருவாசகத்தில் மூழ்கி முத்தெடுப்பதற்கு களம் சமைத்துத்தந்தது இம்மாநாடே எனலாம்.

ஒரு முறை மாநாட்டுப் பெருந்தலைவராயிருந்த மெய்கண்டார் ஆதீன குருமகா சன்னிதானம் ஞானப்பிரகாச சுவாமிகள் பேச்சாளர் ஒவ்வொருவரினதும் பேச்சு நிறைவில் தரும்

குறிப்புரைகளைக் கேட்பதென்றால் அது மெய்சிலிர்க்கும் அனுபவம். ஒருமுறை நான் ஆனந்தக் குளிப்பு என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினேன். அதில் ஓரிடத்தில்

நினைத்தொறும், காண்தொறும் பேசுந்தொறெப்போதும் என்ற அடிக்கு ஈசனே உனை நினைக்கும் பொழுதும், காண்கின்ற பொழுதும், உன்புகழ் பேசும் பொழுதும் எப்பொழுதும் என்ற விளக்கத்தை நான் முன்வைத்திருந்தேன். மாணிக்கவாசகர் வார்த்தை ஒவ்வொன்றுக்கும் ஆழ்ந்த பொருளுண்டு. தேவையற்ற விதத்தில் சொல் இடம்பெறாது. இங்கு எப்பொழுதும் என்ற சொல்லை முன்னால் வரும் நினைத் தொறும், காண்தொறும், பேசுந்தொறும் என்ற ஒவ்வொரு இடத்திலும் கொண்டு கூட்டவேண்டும் என்ற அரியதொரு விளக்கத்தை தந்தவர் மெய்கண்டார் ஆதீன குருமகா சன்னிதானம். இவ்விடத்தில் இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாகுட்டி, ஏழாலை கந்தையா பண்டிதர், பண்டிதர் சச்சிதானந்தம், இலக்கண வித்தகர் நமசிவாய தேசிகர் ஆகியோருடன் நான் கொண்டி ருந்த தொடர்பு என்னை மென்மேலும் வளப்படுத்திக் கொள்ள உறுதுணையாயமைந்தது.

3. *மேடைச் சொற்பொழிவுக்கும் சமயப் பிரசங்கத்துக்கும் இடையில் உள்ள வேறுபாடுகள் பற்றிக் கூறமுடியுமா?*

பிரசங்கம் என்பது வடசொல் ஆலயங்களில் சமயக் கருத்துக்களை மக்களுக்கு வழங்குவதற்கான ஒரு கருவி. ஊர்மக்களின் இரசனை, கல்வியறிவு இவற்றிற்கு உகந்தாற் போல் சமயப் பிரசங்கங்கள் நிகழ்த்தப்படும். சுவைபடப் பேசுவறுதும் எல்லோருக்கும் விளங்கக்கூடிய வகையில் பேசுவதும் மிகவும் முக்கியம்.

மேடைச்சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும்போது குறித்த தலைப்பில் பத்துமடங்கு அறிவைத்திரட்டி ஆயத்தத்துடன் போகவேண்டும் என்று எனக்குச் சொல்லித்தந்தவர் பலாலி ஆசிரியகலாசாலையில் எமக்குக் கற்பித்தல் முறையியல்

போதித்த கம்பஹா கந்தப்பு ஆவார். மேடைச் சொற்பொழிவு களிலும் இரசனையுடன் பேச வேண்டும். கற்றோர் சபையில் நிகழ்த்தப்படுவதால் செம்மையான மொழியும் தர்க்க ரீதியான சிந்தனை வெளிப்பாடும் இங்கு முக்கியம்.

4. *சைவத்தையும் தமிழையும் வளர்த்தெடுப்பதில் சொற்பொழிவு மற்றும் பிரசங்கங்களுக்குப் பெரும்பங்குண்டு. அந்தவகையில் தாங்கள் நிகழ்த்துகின்ற பிரசங்கங்கள் மற்றும் சொற்பொழிவுகள் கொண்டுள்ள இலக்குகள் எவை?*

சமயப்பிரசங்ககங்கள் பிரதான நோக்கம் சமயவாழ்வுக்கு மக்களை வழிப்படுத்துவது. சமயக் கருத்துக்களை மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கு பிரசங்கம் கருவியாகப் பயன்படுகிறது.

மேடைச் சொற்பொழிவுகள் தூயதமிழில் நிகழ்த்தப்படும். இரசனையுடன் பேசுவதனூடாக மக்கள் மத்தியில் தமிழ்ப் பற்றை வளர்க்கமுடியும்.

5. *பாடசாலைகளில் ஆசிரியராக அதிபராகப் பணியாற்றிய காலங்களில் ஏராளமான மாணவர்களைப் பேச்சுத்துறைக்குத் தயார் செய்துள்ளீர்கள். அந்த அனுபவம் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?*

எனக்கு ஆத்ம திருப்தி தந்த தந்துகொண்டிருக்கின்ற தொழில் ஆசிரியத் தொழில். நான் விரும்பிய சில கலை வடிவங்களை முழுமையான ஈடுபாட்டுடன் பிள்ளைகளுக்குப் போதித்தேன். அதில் பேச்சு முக்கியமானது. அக்காலத்தில் பாடசாலை மட்ட, கோட்ட மட்ட, மாவட்ட மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்டப் போட்டிகளுக்கு மாணவர்கள் செல்லும்போது முழுநேரப் பயிற்சி வழங்கப்படும். பெற்றோர் மிகுந்த ஆர்வத்துடன் பிள்ளைகளை வீட்டுக்கும் அழைத்து வந்து பயிற்சி பெற வைப்பர்.

எனது மனைவி அமரர் சிவகாமசுந்தரி அவர்களின் முழு ஒத்துழைப்பு எனக்கு மட்டுமல்ல எனது மாணவர்களுக்கும் முழுமையாகக் கிடைத்தது. பிள்ளைகள் சோர்ந்து போகாத வண்ணம் அவர்களை எந்நேரமும் ஊக்கப்படுத்துவார்.

சிறந்த பேச்சாளர்களாக இன்று விளங்குகின்ற நாவரசன் (இலண்டன்) நித்தியதசீதரன் உ.சந்திரகுமாரன், முகுந்தன் கே.கே. அருந்தவராசா (மேழிக்குமரன்) இளலிங்கம் (ஈழலிங்கம், அவுஸ்திரேலியா) ஆகியோரின் வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிறேன் என்பதை நினைக்கும் பொழுது பெருமை யாக இருக்கிறது.

6. *தங்கள் பேச்சுத்திறனை கௌரவிப்பதற்காகத் தங்களுக்குத் தரப்பட்ட விருதுகள், பட்டங்கள் எவை?*

ஈழத்துச் சிதம்பரத்தைச் சார்ந்த அமரர் கலாநிதி க.வைத்தீஸ் வரக் குருக்கள், காரை வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியமையைப் பாராட்டி 2005இல் "சித்தாந்தச் செல்வர்" எனும் பட்டத்தை வழங்கினார்.

2010இல் இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்ட சேக் கிழார் மாநாட்டில் "சிவநெறிப்புரவலர்" என்ற பட்டம் அளிக்கப் பட்டது.

2002இல் யாழ்ப்பாணத்து மூத்த கலைஞர்களை இந்துகலாசார அமைச்சு கௌரவித்தது. அதில் "கலைஞானகேசரி" என்ற பட்டம் வழங்கப்பட்டது.

கலாசார அமைச்சினால் கலாபூஷண விருதும் 2002இல் வழங் கப்பட்டது.

7. ***தாங்கள் இலங்கை வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி இலண்டன் வானொலி தொலைக்காட்சி நிகழ்ச்சி களிலும் பங்குகொண்டிருக்கிறீர்கள் அதுபற்றிக் கூறமுடியுமா?***

1962 முதல் இலங்கை வானொலியில் நற்சிந்தனை இலக்கிய சமயச் சொற்பொழிவுகள் மற்றும் நேர்காணல் நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளேன். இலங்கை வானொலியில் பேச்சுக்களைத் தொகுத்து "வாக்கும் வாழ்வும்" (1998) "இன்பத்தமிழ்" (2014) என்ற நூல்களாக வெளியிட்டுள்ளேன். இவை மாணவர் பயனுற வேண்டும் என்ற நன்நோக்கில் வெளியிடப்பட்டவை.

நேத்ரா தொலைக்காட்சியிலும் நேர்காணல், கருத்தாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன்.

எனது மகன் நாவரசனின் இணையத்தளமான அகவெளி என்பதனூடாக எனது பேச்சுக்களைக் கேட்பதற்கு வழிவகுத் துள்ளார்.

இலண்டன் ஐபிசி இல் நற்சிந்தனை, இலக்கிய, சமயச் சொற் பொழிவுகள், கருத்தாடல்கள் பலவற்றை நிகழ்த்தி யுள்ளேன். அங்கு வியாழன் தோறும் கருத்தாடல் நிகழ்வில் குறித்த தலைப்பில் இருவர் கருத்துக்களைப் பரிமாறுவர். 2004இல் ஆய்வாளர் பற்றிமாகரனுடன் இணைந்து அந்த நிகழ்வில் கருத்துக்கள் வழங்கியிருக்கிறேன்.

இலண்டன் தமிழ் வானொலியில் நேர்காணல், இலண்டன் வெற்ரொன் (London Vetron) தொலைக்காட்சியில் நேர்காணல், மற்றும் கருத்தாடல் லண்டன் தீபம் தொலைக்காட்சியில் நேர்காணல், கருத்தாடல் நிகழ்வுகளில் பங்கு கொண்டமை இனிய அனுபவங்களைத் தந்தன.

இலங்கை வானொலியில் ஞாயிறுதோறும் இரவு 10 மணிக்கு திருமந்திர விளக்கம் நிகழ்த்தி வருகிறேன். பாடல்களை ஆசிரிய ஆலோசகர் சங்கீத வித்துவான் திரு. கணேசலிங்கம் அவர்கள் இசையுடன் பாட பொருள் விளக்கம் என்னால் ஆற்றப்படும்.

*8. தமிழர் பாரம்பரியக் கலைகளுள் ஒன்றான வில்லுப்பாட்டு மீது தங்களுக்கு இருக்கும் ஈடுபாட்டை நாமறிவோம். இக்கலைமீது தங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?*

கிராமியக் கலைகள் மீது இயல்பாகவே எனக்கு தனி ஈடுபாடுண்டு. அக்காலத்தில் இந்தியாவில் பிரபல்யமான என்.எஸ். கிருஷ்ணன் அவர்களின் வில்லுப்பாட்டுக்களை வானொலி மூலம் கேட்டு இரசிப்பேன்.

இலங்கையைச் சேர்ந்த திரு. சபா சதாசிவம் அவர்களுடனான நட்பும் என்னை இத்துறையில் ஊக்குவிக்கக் காரணமாயிற்று. அவர் இந்தியா சென்று இக்கலையில் பயிற்சி பெற்று இலங்கை வந்து வில்லுப்பாட்க்களை நிகழ்த்தியவர். அவர் இலங்கை வானொலியில் வில்லுப்பாட்டுக்களை நிகழ்த்துவதன் பொருட்டு பிரதியாக்கத்தை என் மூலம் எழுதுவிப்பார். அச் சமயங்களில்

எழுதப்பெற்றவையே கௌதம புத்தர், மகாத்மா காந்தி, கண்ணகி ஆகியன.

இக்கலைவடிவம் எல்லா மட்டத்தினரையும் இலகுவில் கவரக் கூடியது. பாடசாலைகளில் வில்லுப்பாட்டைப் பழக்கும் போது பெற்றோருடைய ஆதரவு பெரிதும் கிடைத்தது. இது ஒரு கூட்டுக்கலை வடிவம். ஐம்பது வீதம் கதாப்பிரசங்கபாணி கலந்திருக்கும். எனக்கு இசையிலும் ஈடுபாடு இருந்தமையால் வில்லுப்பாட்டை முழு ஈடுபாட்டுடன் பயிற்றுவித்து வந்தேன்.

*9. தங்களால் பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட வில்லுப்பாட்டுக்கள் குறித்துக் கூறுங்கள்.*

இணுவில் காரைக்கால் சிவன் கோயிலில் (1971) எனது மகன் நாவரசன் தனது மூன்றாம் வயதில் "பூம்பாவை" வில்லுப பாட்டை நிகழ்த்தியமை என்றும் மறக்க முடியாத அனுபவம். எனது மனைவியின் முயற்சி, பயிற்சி காரணமாக அன்று அது சாத்தியமானது.

இன்னும் ஏராமான வில்லுப்பாட்டுக்களை எழுதியுள்ளேன். 1991 இடப்பெயர்வுடன் அநேகமானவை அழிந்துபோயின. தற்சமயம் 26, 27 வில்லுப்பாட்டுக்கள் உள்ளன. சபா சதாசிவத்துக்காக எழுதிய மகாத்மா காந்தி, கௌதமபுத்தர் எனக்கு மிகவும் பிடித்த வில்லுப்பாட்டுக்கள். தற்சமயம் கொழும்பில் வசித்து வருவதால் வருடந்தோறும் நடைபெற்றுவரும் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிக்காக பாடசாலைகளுக்கு வில்லுப்பாட்டு எழுதி வழங்கிவருகின்றேன். இருவருடங்களுக்கு முன்பு நீர்கொழும்பு விஜயரத்தினம் கல்லூரி தேசிய மட்டத்தில் முதற்பரிசு பெற்றது. இவ்வருடம் (2015) "நன்றிகொன்றார்க் குய்வில்லை" என்ற தலைப்பில் முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலை முதற்பரிசு பெற்றது.

ஜேர்மனி தமிழிலக்கிய மன்றத்தின் வேண்டுகோளுக்காக "மாங்கனியின் மாண்பு" (2012) என்ற வில்லுப்பாட்டை எழுதியனுப்பினேன்.

அதுபோல இலண்டன் தமிழ்ப்பாடசாலை கேட்டுக்கொண்ட தற்கிணங்க "அன்னையர்தினம்" (2013) என்ற வில்லுப்பாட்டை அனுப்பிவைத்தேன்.

வருடந்தோறும் குறைந்தது ஒரு வில்லுப்பாட்டாவது எழுதும் வாய்ப்புக் கிடைத்துவருகிறது.

2013 இல் கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்திய மகளிர்தின விழாவில் நான் எழுதிய 'மங்கையர் மாண்பு' எனும் வில்லுப் பாட்டைச் சைவமங்கையர் வித்தியாலய மாணவிகள் செய்து பாராட்டுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

*10. மாணவரின் ஆளுமைவிருத்திக்கு இக்கலைவடிவம் வாய்ப்பளிக்கிறது என்று நினைக்கிறீர்களா?*

நிச்சயமாக. நான் ஏற்கனவே கூறியது போல இது ஒரு கூட்டுக் கலைவடிவம். ஆடல், பாடல், நாடகம், பேச்சு, கதாப் பிரசங்கம், பக்கவாத்தியங்கள், ஒத்திசைவு என்று பல கலைவடி வங்களை உள்வாங்கிய கலைவடிவமே வில்லுப்பாட்டு. மாணவர் மத்தியில் இதற்குப் பெரும் வரவேற்புண்டு. எல்லோ ரையும் இரசிக்க வைக்கவும் சிந்திக்க வைக்கவும் முடியும். மாணவர் சபைக் கூச்சம் களைந்து தமது முழு ஆளுமை யையும் வெளிக்கொணர இக்கலைவடிவம் பெரும் வாய்ப் பளிக்கிறது. இது ஒரு கௌரவமான கண்ணியமான கலை வடிவம் என்பதால் பெற்றோரும் தம்பிள்ளைகளை ஈடுபடுத்த ஆதரவு வழங்குகிறார்கள்.

பல்பரிமாண அளுமைகொண்டவரும் தன்னடக்கத்துடன் சமூக சமயப் பணிபுரிந்து வருபவருமான எனது ஆசான் மதிப்பிற்குரிய சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயாவுடன் நல்லதொரு பொழுதைக் கழித்த மனநிறைவுடன் செவ்வியை நிறைவு செய்தேன். ஐயா அவர்கள் நீடுழி காலம் தேக நலத்துடன் வாழ்ந்து மக்கள் பணியாற்றிட எல்லாம் வல்ல எம்பெருமானை மனதில் வழுத்தி நிற்கின்றேன்.

நன்றி வணக்கம்!

# மாண்புறு மனையாள் சிவகாமசுந்தரி

திருமதி இராஜி கெங்காதரன்
இளைப்பாறிய ஆசிரியை

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே.

என்பது ஔவை வாக்கு. எம்மோடு வாழ்ந்து கொண்டிருப் பவர்களின் நல்ல குணங்களை உரைப்பது மட்டுமல்ல. எம்மைப்பிரிந்து அமரர் உலகில் வாழ்ந்திருக்கும் நல்லவர்களை நினைவு கூர்ந்து அவர்கள் குணங்களை உரைப்பதுவும் மிக நன்மையானதே. நல்ல எண்ணங்கள் ஆக்க சக்தியாக உருவாகின்றன. எங்கள் கலை இலக்கியக் களத்தின் தலைவர் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயா அவர்களின் அன்புத்துணைவியார் அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நினைவு நாளில் அவரது உயர்குணங் களை எண்ணிப் பார்ப்பது உயர்வுடையதாகும்.

எங்கள் தமிழ் மக்கள் மனங்களிலே கறுப்புஜூலை என்று முத்திரை பொறிக்கப்பட்ட மாதம் இந்த ஜூலையாகும். இதுதான் எங்கள் அம்மையாரையும் அள்ளிக்கொண்ட மாதமாகிவிட்டது. 03.07.2010இல் எம்மைவிட்டுப்பிரிந்த அந்த நினைவு நாளையிட்டு அன்னாரது பெயரில் நூல்கள் வெளியிடுவதை, நூல்கள் மூலம் அம்மையாரை வாழ வைப்பதைத் தன் கடமையாகக் கொண்டு ஐயா செயற்படுகிறார். பொதுவாக 31ஆம் நாள் ஒரு நூலை வெளியிடு வது வழக்கமானது. ஆனால் ஆண்டுதோறும் நினைத்து அரும்பணி யாகக் கொண்டு வெளியிடுவதானால், அதன் மூலம் அந்த அம்மை யார் தன் கணவனாரின் மனதில் எவ்வளவு தூரம் ஆழ வேரூன்றி வாழ்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இது பேர் புகழை நாடிச் செய்யப்படுவதில்லை இது ஆழ்ந்த அன்பின் வெளிப்பாடாகும்.

இதற்கெல்லாம் காரணமான அம்மையாரின் பண்பட்ட வாழ்வு, எவரையும் புண்படுத்தாத பொன்னான வாழ்வாகும்.

மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா
பங்கையக் கைநலம் பார்த்தல்லவோ
இந்தப் பாரில் அறங்கள் வளருமம்மா

என்று பாடினார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. அத்தகைய மாதவத்தால் இறைவழிபாடு சிறந்து விளங்கும் இணுவையம்பதியில் சின்னையா தங்கச்சியம்மா தம்பதிகளுக்கு மகளாக 1944.03.24இல் சிவகாமசுந்தரி அம்மையார் பிறந்தார். அன்போடும் பண்போடும் வளர்க்கப்பட்டவர் 1967.08.31இல் இளவாலையைப் புகுந்த வீடாகக் கொண்டு நல்ல குலவிளக்காய் வாழ்ந்தார்.

ஒரு நல்ல மகள்தான் நல்ல மனைவியாகவும் வாழமுடியும். சிவகாமியம்மன் கோயிலடியில் வீடு, தோட்டந்துரவு என்று பயிர்களோடும் உயிர்களோடும் இயற்கையோடும் இணைந்த வாழ்வு, அண்ணன், அக்கா, தம்பி, தங்கை என்று சகோதரர்களோடு கூடிய நெருக்கம், இவை எல்லாமே பண்பட்ட நல்ல குணங்களோடும் கருணையோடும் புரிந்துணர்வுத் தன்மையோடும் அவரை உருவாக்கி யிருந்தன. "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பார்கள் அப்படியொரு வரத்தால் அவரைக் கரம் பற்றும் பாக்கியம் எங்கள் களத்தின் தலைவர் செல்லத்துரை ஐயா அவர்களுக்குக் கிடைத்தது.

காதலொருவனைக் கைப்பிடித்து அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சிபெறச் செய்து வாழ்வமடி

என்ற பாரதி கூற்றுப்படி, காரியம் யாவினும் கைகொடுக்கும் பெண்மணியாக வாழ்ந்திருக்கிறார். அந்தக் காலத்தில் பெண்கள் எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டு, வீட்டு வேலை பழகி இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு நடத்தினால் போதும் என்ற கருத்திருந்தது. பத்தாம் வகுப்புடன் படிப்பை நிறுத்தி வழக்கம் போல் தையல், சமையல், வீட்டுக்காரியங்கள் பழகிக் கொண்டால் போதும் என்றிருந்து விட்டார். ஆனால் அவர் ஒரு பட்டதாரிக்கும் மேலாகத் தன் ஆளுமையை வெளிப்படுத்தி வாழ்ந்தார் என்பதுதான் வியப்புக்குரியது.

சிறந்த ஒழுக்கமும், உயர் பண்பாடும் கொண்டவராய் அம்மையார் வாழ்ந்திருந்தார். சைவமரபு வழி வாழ்க்கையை மேற்கொண்டார். பத்தாவுக்கேற்ற பதிவிரதையாகத் திகழ்ந்திருக்கிறார். இராமனது மனைவி சீதையைக் கம்பர்

> **இற்பிறப்பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்**
> **கற்பெனப்படுவ தொன்றும் களிநடம் புரியக்கண்டேன்**

என்று அனுமன் கூற்றாகக் கூறுகிறார். செல்லத்துரை ஐயா அவர்கள் தனது கவிதையிலே

> **பண்பு தவழும் இன்பப் பைந்தமிழ்ப்பெண் குலத்தில்**
> **பக்குவமாய் வளர்ந்த பைங்கிளியே**
> **புண்ணியம் உன்னுருவில் பூத்துக்குலுங்கி வர**
> **என்ன தவம் செய்தேன் என்னுயிரே**

என்று பாடுகின்றார். ஒரு கைக்குழந்தையாய்த்தன் கணவனைப் பராமரித்தவர். தேநீரைக் கொடுக்கும் போதும் வைத்துவிட்டுப் போகாமல் அவர் வாங்கும்வரை காத்திருந்து கையில் கொடுத்து விட்டுச் செல்வார். அந்தளவு பொறுமையோடு இன்று எத்தனை பேரால் செய்யமுடியும்? தன்னுடைய கருமம் என்று கருதுவதைச் செய்து முடிக்கும் இல்லத்தரசியாக காலை நான்கு மணி முதல் இரவு வரை ஓயாது உழைப்பவராக அவர் வாழ்ந்திருக்கிறார்.

ஒரு சிறந்த தாயாக அவர் திகழ்ந்தார். ஐயாவிடம் கேட்டு, புதிதாகத் தாலாட்டு எழுதவைத்துப் பிள்ளைகளுக்காகப் பாடி உறங்க வைத்திருக்கிறார். பாடல்கள் மூலம் பண்பை ஊட்டியிருக்கிறார். மகன் மாவிரதன் விசர்நாய்க்கடிக்குள்ளானபோது நாட்டுச்சூழ் நிலையால் வைத்தியம் செய்ய முடியாத நிலையில் உண்ணாது உறங்காது திருமுறை பாடிக் கொண்டிருந்திருக்கிறார். அந்த தெய்வபக்தி துயர்தீர்க்கும் வழிகாட்டிற்று என்பர்.

பிள்ளைகளுக்கு மட்டுமல்ல, தனது கணவருக்கு நோய் வந்த போதெல்லாம் கண்ணுங் கருத்துமாய் பராமரிப்பதோடு திருமுறைகளை ஓதவும் தவறுவதில்லை. துன்பம் நேர்ந்தபோது மட்டுமன்றி நாள்தோறும் காலையும் மாலையும் திருமுறை ஓதுவதும், பூமாலை

கட்டிச் சூட்டுவதுமாகப் பக்தி வாழ்வு வாழ்ந்திருக்கிறார். "தேவாரங்கள் பயன்தராவிட்டால் அவை சக்தி இழந்துவிட்டன என்று அர்த்தமில்லை நமது பக்தியில் குறைபாடு என்பதுதான் பொருளாகும் என்று ஆன்மீகர் கூறுவார்.

இல்லக்கடமைகளைச் செவ்வனே இயற்றியதோடு கணவர் காரியம் யாவிலும் கைகொடுத்து வாழ்ந்தார். பொதுவாகத் தொழில் புரியாத பெண்கள் பெரும்பாலும் தமது வீட்டு வேலைகளுடனேயே பொழுதைக் கழிப்பது வழக்கம். ஆனால் இவ்வம்மையார் ஐயா கலந்துகொள்கின்ற எந்த வேலையிலும் எந்த விழாவிலும் தானும் பங்கு வகிப்பார். ஒருமுறை திருமதி கோகிலா மகேந்திரனுடன் இவரது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டபோது "நான் அவர்களோடு எத்தனையோ விழாக்களில் கலந்து கொண்டிருக்கிறேன். அவற்றில் தானும் ஒருவராக முழு உரிமையோடும் கலந்து செயற்படுவார். அதிபரின் மனைவி என்ற தோரணையில் நடந்து கொள்வதில்லை அவரைத் தெரியாதவர் யாரேனும் காணநேர்ந்தால் பாடசாலையின் உபதலைவரென்றோ பகுதித்தலைவரென்றோ தான் கருதுவார்கள். அந்தளவுக்கு ஈடுபாட்டோடு நடந்து கொள்வார். அப்படிக்காண்பது மிக அபூர்வம்" என்று கூறினார்.

இலக்கியம், நடனம், நாடகம், சங்கீதம் போன்றவற்றில் ஆர்வம் மிக்கவராக இருந்ததால் ஐயா ஈடுபடுகின்ற நிகழ்வுகளில் தானும் பங்கு கொள்ளும்வகையில் தன் வாழ்வை அமைத்துக் கொண்டார். நாடகங்களில் தானும் பங்கேற்று நடித்திருக்கிறார். செல்லத்துரை ஐயாவின் நாடகங்களில் மட்டுமல்லாமல் அவர் ஈடுபட்ட சமூகப் பொதுப்பணிகளிலும் தானும் முன்னின்று உழைத்திருக்கிறார். பாடசாலைத் திருத்த வேலைகள் நடைபெறும் போது தானே சமைத்துப் பரிமாறி வேலை செய்வோர் சோர்வடையாமல் உபசரிப்பார். யாழ். சமூகத்தில் வசதியடைத்தோரும் உத்தியோகத்தவரும் கூடத்தோட்ட வேலைகளில் ஈடுபாடு காட்டுவார்கள்.

நான் ஏர்கொண்டு வயல்போக
அவள் எருக்கொண்டு பின்வருவாள்

என்று ஐயா பாடியதன் மூலம் புலக்காட்சியாய்க் காண முடிகிறது.

ஒரு இல்லத்தரசியின் பண்புகளில் தன் உறவினரையும், புகுந்த வீட்டு உறவினரையும் சமனாகக்கருதி உறவு கொண்டாடுவதும்

ஒன்றாகும். அவ்வாறு இரு பகுதியினரையும் அன்போடு ஆதரித்து உதவிகள் செய்வதிலும் இவர் சளைக்காது வாழ்ந்தார். யாழ் மண்ணின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம் பெயர்ந்தபோது சிலர் ஊரிலேயே தங்கி விட்டனர். அன்புக்குரிய உறவினரையும் அழைத்து வந்துவிட வேண்டுமென்று துணிவோடு மிருசுவிலிருந்து இணுவிலுக்குச் சயிக்கிலில் சென்று குண்டு வீச்சுக்களுக்கும் ஷெல் அடிக்கும் மத்தியில் பாதுகாப்பாக அழைத்து வந்து வாழ வழி செய்தார். இத்தகைய செயல்களால் அவருக்கென்று அன்பு நிறைந்த சொந்தங்கள் பெருகின என்று கூறலாம்.

உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாட்டுப் பயணங்களிலும் அவருடன் இணைந்திருந்து அவருடைய நிகழ்ச்சிகளுக்கு ஆலோசகராகவும் முதற்தர இரசிகையாகவும் பங்கு கொண்டுள்ளார்.

எத்திறம் நான் நின்றேனோ
**அத்திறம் அவளும் நின்றாள்**

என்று ஐயாவின் கூற்று சான்றாக விளங்குகின்றது.

பெண்ணின் தெய்வமெனத் தகும் சீருடைய அம்மையாரோடு நான் நெருங்கிப் பழகிய சந்தர்ப்பங்கள் குறைவு. அவர் மறைவதற்குச் சில தினங்களுக்கு முன்பு நீர்கொழும்பு விஜயரத்தினம் மகா வித்தியாலயத்தில் சிறுகதைப்பட்டறை நடத்துவதற்கென்று தெல்லிப்பழைக் கலை இலக்கியக்களத்தின் குழுவாக நாம் சென்றிருந்தோம். தலைவர் செல்லத்துரை ஐயாவோடு அம்மையாரும் வந்திருந்தார். அவர் சங்கத்தின் அங்கத்தவரல்ல ஆனால் மத்திய குழு உறுப்பினரைப்போலச் செயலாற்றினார். நல்ல முறையில் முடித்துக் கொண்டு வீடுவந்து சேர்ந்தபோது வாகனத்திலிருந்து இறங்கிக் கையசைத்து விடைபெற்றேன். அவரும் புன்னகையோடு கையசைத்தார். அந்தக் காட்சி நிழற்படமாக நெஞ்சில் நிலைத்திருக்கிறது. அம்மையாரோடு கூடிய நட்புறவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணினேன். அது ஈடேறாமலே முடியாத கதையாகிப் போனதை நினைத்து வேதனையுறுவதுண்டு.

இப்படித்தான் வாழவேண்டும் என்ற எல்லை கடந்து எப்படியும் வாழலாம் என எண்ணுபவர் துன்பத்தையும் சிறுமையையுமே அடைவர். வாழ்வாங்கு வாழ்ந்து பெருமை பெற்றவர் அம்மையார். "வாழுகின்ற மக்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடமடா" என்ற பாடல் வரிகளுக்கேற்ப அமரர் சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் வாழ்வும் எமக்கு வழிகாட்டியாகின்றது.

அவரது நேர்மை, ஒழுக்கம், கருணையுள்ளம், இறைபக்தி அவர் மேற்கொண்ட கர்மயோகம், அன்புரிமை, கடமையுணர்வு இவற்றை யெல்லாம் ஒழுங்குறச் செயற்படுத்திய தன்னம்பிக்கை நேரமுகாமைத் துவம் அனைத்தும் வாழ்க்கை நெறியை வகுத்துக்காட்டுகின்றன.

சில இல்லங்களிலே பெண்களை அடக்கி, அவர்களது ஆற்றல்களை ஒடுக்கி வைப்பது தான் தமது ஆண்மைக்கு அழகு என்று தவறாகப் புரிந்து கொண்டு வாழ்வின் வசந்தத்தைத் தொலைத்து விடும் ஆண்களும் வாழ்கின்றனர். ஆனால் தனது மனைவியாருக்குப் பூரண உரிமை சுதந்திரம் என்ற சிறகுகளை வழங்கியதன் மூலம் வாழ்கைை வானில் உயர உயரப் பறப்பதற்குச் செல்லத்துரை ஐயா உறுதுணையாக இருந்திருக்கிறார் என்பது உண்மை.

தாயைப்போலப்பிள்ளை என்பதற்கேற்ப அவரின் மைந்தர்கள் நாவரசனும், மாவிரதனும் உலகம் உவக்கும் பண்பாளர்களாக வாழ்வது அவரின் பிள்ளை வளர்ப்புக்கு சான்றாகும்.

ஐயாவின் வாழ்வோடு இணைந்து, மனைத்தக்க மாண்புடை யவராகத் திகழ்ந்த அம்மையாரின் நெறிமுறையைக் கடைப்பிடித்து வாழ்வது எம்மை உயர்த்தும் எனலாம். அவரை மானசீகமாக வணங்கி அவரது ஆத்மசாந்திக்காய்ப பிரார்த்திப்போம்.

# வெல்லத் தமிழ்பேசும் செல்லத்துரை என்னும் சைவப்புலவன்

தமிழ்மணி கே.கே. அருந்தவராஜா
(மேழிக்குமரன்)

ஒரு மனிதனின் பன்முக ஆளுமை என்பது, அவனது இளமைக்காலத்தில் அவனது பிறந்த ஊரிலிருந்தே ஆரம்பிக்கின்றது. தான் பிறந்த ஊரில் உள்ள ஆலயம், சனசமூக நிலையம், பாடசாலை, ஊர்மக்கள், உறவுகள் என்று பல்வகைப்பட்ட தளங்கள் அவனது ஆளுமையை வெளிக்கொண்டுவரும் களங்களாக அமைந்து விடுகின்றன. இவ்வாறு பரிணமித்தவர்கள் பிற்காலத்தில் பெருந்தலைவர்களாகவும், சமூகத்தில் மதிக்கப்படுபவர்களாகவும், ஊர்மக்களால் போற்றப்படுபவர்களாகவும் ஆகியுள்ளதை வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இவற்றிலிருந்து ஒதுங்கி இருந்துவிட்டு பிற்காலத்தில் தனது ஆளுமையை வெளிப்படுத்துவது என்பது நடைமுறைச் சாத்தியமில்லாத ஒன்றாகவே போய்விடுகிறது.

அந்தவகையில் மேற்குறிப்பிட்ட அத்தனை தளங்களிலும் தனது ஆளுமைகளால் குன்றின் விளக்காய் திகழ்பவர் கலாபூஷணம் சைவப்புலவர் சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள்.

1938 :-
பத்தாவத்தையில் சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர், சைவப்புலவர், கலாபூஷணம் செல்லத்துரை அவர்கள்.

1954 :-
சிரேஷ்ட பாடசாலைத்தராதரப் பத்திரப் பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தபின் வீரகேசரி பத்திரிகையில் பிழைதிருத்துபவராகப் பணியாற்றியவர்.

1958 :-
ஆசிரியகலாசாலைப் பயிற்சி பெற்று ஆசிரியரானார்.

1963 :-
சைவப்புலவர் பட்டம் பெற்றார்.

1960 – 1968 :-
மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி ஆசிரியராகவும், பெற்றோர் ஆசிரியர் சங்கச் செயலாளராகவும், மன்னார் இந்துசமய வளர்ச்சிச் சங்கச் செயலாளராகவும், மன்னார்க் கலாமன்ற நாடக இயக்குநராகவும் பன்முகப்பணி புரிந்தார்.

1969 – 1970 :-
கீரிமலை நகுலேஸ்வரா வித்தியாலய ஆசிரியராகப் பணியாற்றினார். 'கர்வபங்கம்' எனும் நாடக மூலம் பாடசாலைக் கிணறு வெட்ட நிதிசேர்த்து உதவினார்.

1971 :-
தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 'மாயவன் செய்த மாயம்' எனும் நாடகத்தை மேடையேற்றிப் புகழ்பெற்றார்.

1971 – 1974 :-
முதலாந்தரத் தலைமையாசிரியராகப் பதவி உயர்வு பெற்று மாங்குளம் அ.த.க. வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்தார். முதல் முறையாக மாணவர்களை க.பொ.த. பரீட்சையில் தோற்றச் செய்தார்.

1975 – 1998 :-
இளவாலை மெய்கண்டானில் முதலாந்தர அதிபராகப் பணியாற்றினார். அங்கு 1980 இல் பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயரச் செய்தார். க.பொ.த. உயர்தர வகுப்பைத் தொடக்கி வைத்தார். மாடிக்கட்டடம், விளையாட்டுத்திடல், திறந்தவெளி அரங்கு, சரஸ்வதி தாமரைத்தடாகம், சிறுவர் பூங்கா ஏழூர் இராசரத்தினம் சிலை என்பவற்றை அமைத்தார். 1998.03.27இல் ஓய்வு பெற்றார்.

உரைநாடகம், இசை நாடகம், நாட்டிய நாடகம், தாளலய நாடகம், சிந்துநடைக் கூத்து, தெருக்கூத்து, வில்லுப்பாட்டு, கோலாட்டம் போன்ற கலைப்படைப்புகளை ஆக்கிப் பல போட்டிகளில் மாணவர்கள் பரிசு பெற வைத்தார்.

காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும், வாக்கும் வாழ்வும், கோமாதா, அரங்கப்படையல், ஆத்மவிமோசனம், மங்கல தரிசனம், கல்வளை அந்தாதி உரை விளக்கம், காரைநகர் ஆண்டிக்கேணி ஐயனார் புராண உரை, சிவநெறி, அண்ணா பொன் ஏடு ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

கலைஞானகேசரி, கலாபூஷணம், சித்தாந்தச்செல்வன், சிவநெறிப்புரவலர், கலைச்சுடர் முதலான கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ளார்.

தனது இளமைக்காலத்தில் இவரது ஆளுமை என்பது காடிவளையில் உள்ள வாசிகசாலையிலேயே தொடங்கியது எனலாம்.

காடிவளை ஒல்லுடை ஞானவைரவர் கோவிலுக்கு முன்னால் ஒரு பனந்தோப்பு. வலது பக்கத்தில் ஒரு தென்னந்தோப்பு, இடது பக்கத்தில் தரவைக் காற்றைச் சுவாசித்தபடி கம்பீரமாக நிற்பது எங்கள் இந்து இளைஞர் சனசமூக நிலையம்.

1952.10.04இல் ஆரம்பிக்கப்பட்டது. காடிவளையைச் சேர்ந்த க.இ. வேலுப்பிள்ளை அவர்களும், சிங்கப்பூர் கந்தையா அவர்களும் கொடுத்துதவிய காணியில் சனசமூக நிலையம் அமைக்கப்பட்டது.

மஞ்சமுண்ணாக் கப்புகளையும், கமுகமரச் சிலாகைகளையும் கொண்டு உருவாக்கப்பட்ட வாசிகசாலை தென்னை ஓலைக் கிடுகுகளால் வேயப்பட்டுப் பிரசவமானது.

திரு. சு. செல்லத்துரை தலைவராகவும், திரு. சி. வாமதேவன் செயலாளராகவும், திரு. வ. சுப்பிரமணியம் பொருளாளராகவும் முதலாவது நிர்வாகசபை உருவாக்கப்பட்டது. க. இ. வேலுப்பிள்ளை,

ஆனந்தத்துரை, மூ. கந்தையா ஆகியோர் போஷகர்களாக இருந்து வாசிகசாலையை வழிநடத்தினர்.

இச் சனசமூக நிலையத்தின் முதலாவது நிர்வாகசபையிலேயே தனது பதினான்கு வயதில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திலிருந்தே இவரிடமிருந்த திறமை வெளிக்கொணரப்பட்டது. இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர் என்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

ஆரம்பத்தில் வீரகேசரி, கல்கி, ஆனந்தவிகடன் ஆகியவை வாசிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அலைமகள், மலைமகள், கலைமகள் என்னும் இல்லங்கள் வைத்து விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன.

1959.09.26இல் வாசிகசாலைக்கான நிரந்தரக் கட்டிடடம் அமைக்கப்பட்டது. தீபாவளிக்கு விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப் பட்டன. நவராத்திரியில் கும்பபூசை நடாத்தப்பட்டது. திருவெம்பாவை யில் வீதிப்பஜனை இளைஞர்களால் செய்யப்பட்டது. இவற்றில் எல்லாம் செல்லத்துரை அண்ணர் முன்னின்று உழைத்தார்.

நீண்டகாலம் தலைவராக இருந்த செல்லத்துரை அவர்கள் பின்னர் போஷகராக இருந்து என்போன்ற அடுத்த தலைமுறை யினருக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

வாசிப்பதன் பயன், நிதிப்பயன்பாட்டுமுறை, நிர்வாக ஒழுங்குகள், சபைகளில் பேசும் முறை, கூட்டங்களின் அறிக்கைகளைத் தயாரிக்கும் முறை, தானும் வாழ்ந்து மற்றவர்களுக்காகவும் வாழும் வாழ்வியல் ஒழுங்கு, போட்டிகள், தூய்மையான நட்பு வெளிப்பாடு, ஒற்றுமை, நிறுவனமயப்படுதல் போன்ற பலவிடயங்களை எமக்குக் கற்றுத் தந்தவர். அன்றைய நாட்களில் யாழ். சனசமூக நிலையங்களின் சமாசம் நடாத்தும் போட்டிகளில் வில்லுப்பாட்டு, கிராமியப் பாடல் களைப் பழக்கித் தந்து பரிசுகள் வாங்க வைத்திருக்கிறார். "நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே" என்ற ஔவையின் கூற்றுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்பவர்.

அடுத்து இவரின் ஆளுமை வெளிப்படுத்தப்பட்ட களம் இளவாலை இளங்குமரன் கலாமன்றம் என்னும் நாடகமன்றமாகும். இந்து இளைஞர் சனசமூக நிலைய இளைஞர்களின் நடிப்புத்திறனை, கலையாற்றலை வெளிக்கொணர உருவாக்கப்பட்டதே இந்நாடக மன்றமாகும். இதன் ஸ்தாபகராகத் திகழ்ந்த செல்லத்துரை அவர்கள் பல வெற்றி பெற்ற நாடகங்களின் ஆசிரியராக, இயக்குனராகத் திகழ்ந்து பல நடிகர்களை வெளிக்கொணர்ந்தார்.

வாழ்க்கைப் புயல், மண்ணாசை, ஆதவனே மன்னிப்பாய் போன்ற நாடகங்களை அவர் இயக்கி வெற்றிகண்டார். இந்த நாடகங்கள் காலத்தால் அழியாதவை. ஆதவனே மன்னிப்பாய் என்ற நாடகம் இவருக்குப் புகழைத் தேடித்தந்தது. காரைநகர் சிவன் கோவிலில் நடந்த மணியோசை என்ற நாடகத்தில் பாரதியாராக நடித்திருக்கிறார். உடுவிலில் நடந்த நாடகப் போட்டி ஒன்றில் சுந்தரர் நாடகத்தில் கிழப்பிராமணராக நடித்துச் சிறப்புப் பெற்றவர்.

"மண்ணாசை" என்னும் ஓரங்க நாடகம் பார்ப்பவர்களுக்கு மிகுந்த விறுவிறுப்பை ஏற்படுத்திய நாடகம், யாழ்ப்பாணத்தில் பல மேடைகளைக் கண்டது. பல பரிசுகளைப் பெற்றது. இலங்கை வானொலியிலும் நடிக்கப்பட்டது. சி. வாமதேவன், கா. தம்பு என்ற நடிகர்களின் சிறந்த நடிப்பாற்றலை வெளிக்கொணர்ந்த பெருமை இவருக்கே உண்டு. எம்.ஜி.ஆர். வீரப்பாவின் சினிமா வாள்சண்டையை நாடகமேடையில் சிறப்பாகக் கொண்டு வந்து எமது கிராமத்து மக்களை ஆச்சரியப்பட வைத்தவர். ஓரங்க நாடகம் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது மண்ணாசை.

இவரது "வாழ்க்கைப்புயல்" என்ற நாடகம் எமக்குப் பல விடயங்களைக் கற்றுத்தந்தது. மூன்று மணிநேரம் கொண்ட இந்நாடகத்தில் வாமதேவன், தம்பு அவர்களுடன் லங்கா, தரும ராசசிங்கம் போன்றோரின் நடிப்புத்திறன் வெளிப்பட்டது. இந்நாடகத்தின் மூலம் க. இராசேந்திரம் சிறந்த நகைச்சுவை நடிகராக அறியப்பட்டார். லங்கா அவர்களின் கலைத்திறன் இந்நாடகத்தின் மேடையமைப்பு மூலம் எல்லோராலும் பாராட்டப்பட்டது. ஒவ்வொரு வரினதும் திறமை களை அறிந்து அதனை வெளிக்கொணர்வதில் வல்லவராக செல்லத்துரை அவர்கள் திகழ்ந்தார்.

அவரது ஆளுமையை வெளிப்படுத்தும் அடுத்த களமாக அமைந்தது எமது ஊரில் உள்ள ஒல்லுடை ஞானவைரவர் ஆலயம் ஆகும். அதன் தலைவராக, போஷகராகப் பணியாற்றியவர். இன்றும் போஷகராகவே இருந்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார். இவரது இளமைக் காலத்தில் ஆலயம் தொடர்பாக பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார். ஆலயத்தில் திருவிழாக் காலங்களில் பிரசங்கங்கள் நடைபெற வேண்டும் என்பதில் மிகவும் அக்கறையோடு செயற்பட்டார். அதற்கு முன்மாதிரியாக தானே பிரசங் கங்களைச் செய்து வந்தார்.

"நாநலம் என்னும் நலன்உடைமை அந்நலம்
யாநலத்து உள்ளதூஉம் அன்று"

என்ற வள்ளுவரின் திருக்குறளில் நாம் இவரைத்தான் காண்கிறோம். அந்நாட்களில் "கணீர்" என்ற குரலில் அவர் ஆற்றும் சைவப் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். எந்தப் பிசிறும் இல்லாமல் நேராக விடயத்தில் தொடங்கி விடயத்திலேயே முடிக்கும் அவரின் திறனை நான் வேறு யாரிடமும் காணவில்லை. ஒரு மேடையில் எப்படிப் பேசவேண்டும் என்பதெல்லாம் நாம் அவரிடம் கற்றுக் கொண்டதுதான்.

பின்னாட்களில் பல சைவப்பெரியார்களை ஆண்டு தோறும் கோயில் திருவிழாவின் பத்து நாட்களிலும் வரவழைத்து பிரசங்கம் செய்ய வைத்த பெருமை இவருக்கே உண்டு.

கூட்டுப்பிரார்த்தனை என்பது மனதை ஒரு நிலைப்படுத்தும் சக்தி என்பதனை எங்களுக்குப் புரியவைத்து, வைரவர் கோயிலில் அதனைப் பழக்கப்படுத்தியவர் செல்லத்துரை அண்ணை. வைரவர் கோயிலில் யோகாசனப் பயிற்சி வகுப்பு ஒன்றை ஒழுங்கு செய்து என்போன்ற இளைஞர்களைப் பழக வைத்தவர்.

இளவாலை, அளவெட்டி, தெல்லிப்பழை, மாவிட்டபுரம் என்று குடாநாட்டிலுள்ள எத்தனையோ கோயில்களில் அவர் பிரசங்கம் செய்திருக்கிறார். இந்த பிரசங்கங்களுக்காக நான் பலதடவை

அவருடன் ஈருருளியில் (சைக்கிளில்) சென்றிருக்கிறேன். சமயத்தைப் பற்றி, சமூகத்தைப் பற்றியெல்லாம் கதைகதையாகச் சொல்லிக் கொண்டு வருவார். அவற்றை உள்வாங்கி வைத்திருந்து நான் பல இடங்களில் பிரயோசனப்படுத்தியிருக்கிறேன்.

இவரது இளமைக்காலத்தில் கோயிலில் பத்துத் திருவிழாக்களில் ஊர் இளைஞர்களுக்கும் ஒரு திருவிழா ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்காக முன்னின்று உழைத்தவர். அதனால் ஒன்பதாம் திருவிழா இளைஞர்களுக்காகக் கொடுக்கப்பட்டது. இத்திருவிழா ஊரவர்களால் "பொடியள் திருவிழா" என்று அழைக்கப்பட்டது. அந்நாட்களில் திருவிழாக்களில் யாருடைய திருவிழா சிறப்பாக நடைபெற்றது என்பதனை ஊர்மக்கள் எதிர்பார்த்து நிற்பர். அப்போது பொடியள் திருவிழாவுக்கு ஒரு மவுசு இருந்தது.

அவரது உண்மை, நேர்மை, ஆளுமைத்திறன் இவற்றினால் ஊர்மக்கள் இவர் மீது மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பது இன்றுவரை தொடர்கிறது. தான் படித்த பாடசாலையான மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் நீண்டகாலம் பணிபுரிந்த காரணத்தால் ஊர் மக்கள் இவரை, இவரது சேவையை மதித்தனர். எமது ஊரில் கௌரவப்படுத்த வேண்டியவர்களை தானாகவே முன்வந்து கௌரவப்படுத்துவதில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

1980களில் தெல்லிப்பழை வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளராக இருந்து தலைவராயிருந்த ஓவசியர் தம்பிஐயா அவர்களுடன் சேர்ந்து மெய்கண்டான் பன்னாலை வீதியை அகட்டிப் பஸ் ஓடவும் செய்தார்.

நீதிமன்றங்கள் இயங்காது இருந்த காலகட்டத்தில் கிராம சேவையளராக இருந்த கே.கே. வேலாயுதபிள்ளை அவர்களுடன் சேர்ந்து சமாதான நீதிச்சபை அமைத்து அதன் செயலாளராயிருந்து

ஊர்ப்பிணக்குகளைச் சமாதானமாகத் தீர்த்து வைக்க முன்னின்று ழைத்தார்.

அடுத்து இவரது உறவுகளுடன் மிகவும் நெருக்கமாக அன்போடி ணைந்து சொந்தம் கொண்டாடுபவர். அவரது துணைவியாருடன் சேர்ந்து உறவுகளின் அத்தனை கொண்டாட்டங்களிலும் முன்னுக்கு நின்று ஆலோசனைகள் வழங்கி விழாக்களை நடாத்தி முடிப்பவர்.

தனது இளமைக் காலத்திலிருந்து ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வுபெறும்வரை இவர் ஒரு சிறந்த விவசாயியாகத் திகழ்ந்திருக்கிறார். ஆசிரியராக, அதிபராக இருந்த காலத்திலும் பாடசாலை முடிந்து, வீடுவந்து மாலையில் வயலுக்குச் சென்று உழைத்தவர். இவர் மண்வெட்டியுடன் வயலுக்குச் செல்லும் காட்சி, இப்போதும் மனதில் பசுமையாக உள்ளது.

பலர் உயர்ந்த இடத்திலிருப்பதற்கு இவர் ஏணியாகத் திகழ்ந்திருக்கிறார். இவர் ஐரோப்பாவில் உள்ள தொலைக்காட்சிகளில் நேர்காணல்களை வழங்கியபோது மிகப்பெரும் பதவிகளில் இருக்கும் இவரது மாணவர்கள் பலர் தொலைபேசியில் தொடர்புகொண்டு இவரிடம் ஆசிகளைப் பெற்றதை நான் கண்டிருக்கிறேன். சிறந்த ஆளுமை மிக்க செல்லத்துரை அவர்கள் எமது ஊருக்குக் கிடைத்த பெரும் பேறாகும்.

# ஊருக்கெல்லாம் உறவுக்காரர்

எஸ். யு. சந்திரகுமாரன்
பிரதம கணக்காளர்

எங்கள் ஒவ்வொருவரையும் வழிநடத்துபவர்களில் முதன்மை யானோர்கள் எங்களது பெற்றோர்கள் என்பதில் எவருக்கும் மாற்றுக்கருத்துக் கிடையாது என நம்புகின்றேன். ஆனாலும் பெற்றோருக்கு இணையாக எங்களை வழிநடத்தும் உறவினர்கள் கிடைப்பது என்பது மிக அரிதாகும். ஆனாலும் எங்கள் குடும்பத்தில் எங்களுக்கு இத்தகைய அரிய சந்தர்ப்பம் கிடைத்தமை எங்களது பாக்கியமாகும்.

எமது தாய் மாமன் எனக்கு ஆசானாக, அதிபராக, நாடகக் கலைஞராக, நல் ஆலோசகராக, நல்ல நட்பிற்கு இலக்கணமாக, உள்ள உறவினராக, ஐயம் தெளிவிக்கும் ஐயனாக, எங்கள் பெற் றோருக்கு ஆலோசகராக, எமக்கு அமையப் பெற்றமையை ஒரு வரப்பிரசாதமாகவே எண்ணுகின்றேன்.

எனது சிறு பராயத்திலிருந்து இன்று வரைக்கும் எங்களது மாமா ஏனையோருக்கு முன்னுதாரணமாக இருந்த விடயங்களில் சிலவற்றை இந்நூல் மூலம் மீட்டுப் பார்ப்பதற்கு இது ஒரு அரிய வாய்ப்பாகும்.

பன்முக ஆளுமையுள்ள பண்பாளர் என்பதை ஏனைய பல அறிஞர்களும் பெரியோர்களும் கூறுவதே மிகப் பொருத்தமாகும். ஆனாலும் எங்களது உறவினர் என்ற வகையில் அவரது பன்முக ஆளுமை என்பதற்கு மேலாகச் சொல்லுக்கேற்பச் செயலையும், வாழ்வையும் அமைத்து ஏனையோருக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து வருகிறார். ஏனெனில் பல மேடைகளிலும், ஆலயங்களிலும், சமயச் சொற்பொழிவுகளை ஆற்றி வருபவர். அதன்படி சமூக சமய சீலராக எங்கள் எல்லோருடனும் இனிமையாகவும் மிகவும் கனிவாகவும்

பழகுகின்ற எங்கள் அன்புக்குரிய மாமா, உறவுக்காரர்களுக்கு மட்டும் அதனை மட்டுப்படுத்தவில்லை. மாறாக பாடசாலையில் கடமை யாற்றியபொழுது எமது சக மாணவர்கள் மீதும் அன்பும் இரக்கமும் காட்டிய பல சந்தர்ப்பங்கள் உண்டு. குறிப்பாக வறுமையினால் எவரும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்கள் மீது மிகவும் கருணை காட்டி அவர்களது கல்வி முன்னேற்றத்திற்காக உதவியமை எனக்கு மிகவும் நினைவில் உள்ளது.

எனது பெற்றோர் இருவரும் அரச பணியாளர்களாக இருந்த மையால் பாலர் வகுப்பு முதல் க.பொ.த சாதாரண தரம் வரைக்கும் இளவாலையில் சிறிய தாயாருடனும், மாமா குடும்பத்தினருடனும் வாழக் கிடைத்ததுடன் மாமாவின் அன்பும் அரவணைப்பும் தாராள மாகக் கிடைத்தன.

இளமைக் காலத்தில் பாடசாலைக் கல்வியுடன், மாணவர் களுக்குச் சைவத்தையும் முத்தமிழான இயல், இசை, நாடகத்தையும் விளையாட்டு, சாரணியம் போன்ற சகல துறைகளையும் போதிக்க வேண்டும் என்று அவர் காட்டிய ஆர்வத்தினால் பல மாணவர்கள் பல்துறைக் கலைஞர்களாகவும், ஆளுமையுள்ளவர்களாகவும் இன்று விளங்குகின்றனர்.

இவ்வகையில் காவடி ஆட்டத்தை மரபு முறைப்படி பயிலும் சந்தர்ப்பம் எனக்கும் என் மைத்துனர் நாவரசனுக்கும் கிடைத்தது. அளவெட்டியைச் சேர்ந்த அண்ணாவியார் கந்தையா அவர்களிடம் நாம் இருவரும் முறைப்படி பயின்று, இளவாலை ஒல்லுடை ஞானவைரவர் ஆலய முன்றலில் அரங்கேற்றியதன் மூலம் முறைப்படி காவடியாட்டத்தைப் பயிலும் ஆர்வம் மேலெழ பலரும் அதனைப் பயின்றனர்.

எங்கள் அம்மா குடும்பத்தில் மூத்தவராக இருந்தபோதும் எப்போதும் முக்கியமான குடும்ப விடயங்களை தமது தம்பியுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கும் இயல்பானது எமது கூட்டுக் குடும்பத்தின் பண்பை உயர்த்தியது. ''நல்ல மனைவி நல்ல பிள்ளை நல்ல குடும்பம் தெய்வீகம்'' என்பார்கள். அம்மா, அப்பா, மாமா, மாமி, அம்மாவின் சகோதரர்களின் வாழ்க்கை முறைகூடத் தெய்வீகமானதாய் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாய் விளங்கியது.

எனது தந்தையாருக்கும், மாமாவுக்கும் இடையில் மிகவும் உயர்ந்த உறவு இருந்ததை நான் அறிவேன். இருவரும் தமிழறிவும், தமிழ்ப்பண்பாட்டில் பற்றும், இலக்கிய தாகமும், சைவநெறிப் பற்றும் கொண்டவர்களாய் இருந்ததால் இருவரும் உரையாடும் போது சுவாரஸ்யம் ததும்பும்; அன்பும், கனிவும், அன்னியோனியமும் நிறைந்திருக்கும். உடை நடையிலும் தமிழ்ப்பண்பாடு இருக்கும். ஊரவர்கள் மத்தியில் இருவருக்கும் இருக்கின்ற மதிப்பிலும் மரியாதையிலும் வேறுபாடு காண முடியாது.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் கிழக்குப் பகுதியான பலாலி, வயாவிளான் கிராமங்கள் மீது எனது தந்தையார் சமூக ஆர்வலராகச் செயற்பட்டது போல இளவாலைக் கிராமத்தில் மாமாவும் அதே வகையில் செயற்பட்டார். இருவரும் தங்கள் குடும்பம் என்ற வரையறைக்கப்பால் தங்கள் கிராமத்தின் வளர்ச்சிக்கும் நிறையவே பங்காற்றியுள்ளனர்.

மாமாவின் வாழ்க்கை மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாய் திகழ்வதற்குக் காரணமானவர் வேறுயாருமல்ல. அவரது அன்பு மனைவி; எங்கள் மாமி திருமதி. சிவகாமசுந்தரி அவர்கள் தான். மாமா பங்குபற்றும் பாடசாலை நிகழ்வுகள், ஆலயத் திருவிழாக்கள், சமயச் சொற்பொழிவுகள், சமயவிழாக்கள், உறவினர் நிகழ்வுகள் எல்லாவற்றிலும் தானும் பங்கு கொள்வார். மாமியின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளும், விமர்சனமும் மாமாவுக்குக் கிடைத்த பாக்கிய மாகும். ''ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு பெண் இருப்பாள்" என்பார்கள். அதைத் தன் வாழ்விலும் நிரூபித்தவர் எங்கள் மாமி என்றால் மிகையாகாது. ஒரு அரசனுக்கு மந்திரி போல் மாமி இருந்தார் என்று கூறலாம்.

எப்போதும் எங்கள் அனைவர் மீதும் மிகவும் பாசமாகப் பழகுவதில் அவருக்கு நிகர் அவர் தான். எப்போது அவரிடம் சென்றாலும் ஏதாவது உண்ணத் தருவதுடன், வீட்டுக்கும் எடுத்துச் செல்லுமாறு அன்பாக வேண்டுகின்ற பண்பை ஏனையோரிடம் காண்பது மிக அரிது.

ஒருவரது சிறப்பையும் பெருமையையும் சொந்த ஊரவர் கூறுவதை விடவும் பிற ஊரவர்கள் கூறுவது தான் மிகவும் ஏற்புடையதாகும். அந்த வகையில் எங்கள் மாமா தனது ஆரம்ப ஆசிரியப் பணியை மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியில் தான் ஆரம்பித்தார். சந்தர்ப்பவசமாக எனது தொழிலின் ஆரம்ப இடமாகவும் மன்னார் அமைந்தது. இதன்போது அவரது பழைய மாணவர்கள் பலர் எனது நண்பர்களாயினர்; அந்த நட்பு இன்றும் தொடர்கிறது. ''எங்களது வளர்ச்சிக்கும், நல்ல வாழ்க்கைக்கும், வாழும் நெறிக்கும் முழுமுதற் காரணமாக அமைந்தவர் எங்கள் ஆசான் சைவப்புலவர் சு. செல்லத்துரை ஐயாதான்" என்று எப்போதும் என்னிடம் கூறுவார்கள். இன்று கொழும்பிலிருந்து நான் மன்னார் செல்லும் வேளையில் அவர்கள் முதலில் கேட்பது ''சேர்'' எப்படி இருக்கிறார் என்பது தான். ஆகவே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற வாக்கிற்கு அமைய மாமா வாழ்ந்து வருகிறார் என நம்புகிறேன். ஏனெனில் மன்னாரில் மட்டுமல்ல மாங்குளத்தில் கடமையாற்றிய போதும், இன்று கொழும்பில் வாழ்கின்ற போதும் இதனை எங்களால் உணர முடிகின்றது.

நிறைவாக நோக்கும் போது எங்கள் மாமா தனது குடும்பத்துக்கு மட்டுமல்ல, தான் சார்ந்த சமூகம், கிராமம், வாழ்ந்த இடத்து உறவுகள் யாவருக்கும் நல்ல உறவினராக வாழ்ந்து சமூகத்துக்கு முன்னுதாரணமாக இருக்கிறார் என்பது எங்கள் எல்லோருக்கும் பெருமையாகும்.

# சைவப்புலவர் சங்கப் பணியில்
# சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்

சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை
தலைவர்
அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் 1960ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 30ஆந்திகதி விஜயதசமி நன்னாளில் மல்லாகம் இந்துக் கல்லூரியிலே சைவப்புலவர்களாய திரு. வ. செல்லையா, திரு. ச.சச்சிதானந்தம், செல்வி தங்கம்மா அப்பாகுட்டி, திரு. இ. திருநாவுக் கரசு, திரு. இ. செல்லத்துரை போன்றவர்களின் அயரா முயற்சியினால் ஆரம்பிக்கப்பெற்றது.

சங்கத்தின் முதற் தலைவராக இளவாலையைச் சேர்ந்த வித்துவான் சைவப்புலவர் திரு. வ. செல்லையா அவர்களும் செய லாளராக பண்டிதர், சைவப்புலவர் திரு. ச. சச்சிதானந்தம் அவர்களும், பொருளாளராக பண்டிதர், சைவப்புலவர் செல்வி. தங்கம்மா அப்பாகுட்டி அவர்களும் தேர்வுச் செயலாளராக பண்டிதர், சைவப் புலவர் திரு. இ. செல்லத்துரை அவர்களும் கடமை ஏற்றனர்.

இவர்களின் ஊக்கப்பணிகளால் சைவப்புலவர் தேர்வுக்குத் தோற்றுபவர்களும் சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களும் நமது பிரதேசத்தில் அதிகரித்தனர்.

இளவாலை சித்திரமேழியைச் சேர்ந்த தலைவர் திரு. வ. செல்லையா அவர்களின் ஊக்குதலான வழிகாட்டலில் இளவாலை பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட பயிற்றப்பட்ட ஆசிரியராகவும், சைவநெறியிலும் தமிழ்மொழியிலும் ஆழ்ந்த பற்றும் அறிவும் மிக்கவராய் விளங்கிய சுப்பிரமணியம் செல்லத்துரை அவர்கள் 1964ஆம் ஆண்டு சைவப்புலவர் தேர்வில் சித்திபெற்றார்.

இயல்பாகவே பொதுப்பணிகளிலும், சமூக முன்னேற்ற நிறுவனங் களிலும் ஈடுபாடு கொண்டிருந்த செல்லத்துரை அவர்கள் சைவப்புலவர் பட்டம் பெற்றதனால் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தில் சேர்க்கப்பட்டு நிருவாகசபை உறுப்பினராக உள்வாங்கப் பட்டமை சங்க வளர்ச்சிக்கு உதவியது.

சங்கத்தில் சேர்ந்தநாள் தொடக்கம் சங்கப்பணிகளில் மேலான ஈடுபாடுடையவராகச் செயற்பட்டார். சங்கம் ஆங்காங்கு அக்காலத்தில் நடத்திய சைவமாநாடுகளிலும் பட்டமளிப்பு விழாக்களிலும் முன்னின்று ழைத்தார்.

1965ம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற சென்னை சைவ சித்தாந்த மகாநாட்டில் பங்குபற்றிய இலங்கைச் சைவப்புலவர் சங்கப் பிரதிநிதிகளுள் ஒருவராய்ப் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் பண்டிதர் வ.கந்தசாமி அவர்கள் தேர்வுச் செயற்பாடுகளில் இருந்து ஓய்வுபெற 1996ம் ஆண்டிலிருந்து 2014ம் ஆண்டுவரை சங்கத்தின் தேர்வுச் செயலாள ராகச் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் கடமையாற்றியுள்ளார்.

சைவப்புலவர் சங்கத் தேர்வுகள் யாவும் ஆரம்பத்தில் வட பிராந்தியத்தில் மாத்திரம் நடைபெற்றது. பின்னர் படிப்படியாக ஏனைய பிரதேசங்களில் இருந்தும் தோற்றுபவர் தொகை அதிகரித்தது. அதனால் சங்கத்தின் தேர்வுச் செயற்பாடுகள் விரிவடைந்தன தேர்வுப் பொறுப்பும் வேலைப்பளுவும் கூடியது. இவற்றினைத்திறம்படவும், பொறுப்புணர்வுடனும் நம்பிக்கைத் தன்மையுடனும் நிறைவேற்றி வந்தவர் தேர்வுச் செயலாளராக விளங்கிய சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்.

இலங்கையில் யாழ்ப்பாணம், கொழும்பு, மட்டக்களப்பு, திரு கோணமலை, மலையகம் ஆகிய இடங்களில் தேர்வு நடத்த சகல பணிகளையும் ஆற்றியது மட்டுமல்லாது புலம்பெயர் சைவ ஆர்வலர்கள் சங்கத்தேர்வுக்குத் தோற்ற விரும்பிய போது லண்டனில் வசிக்கும் தமது மகன் நாவரசனை எமது சங்க இணைப்பாளராக நியமித்து கடந்த 2010, 2012ஆம் ஆண்டுகளில் லண்டன், ஜேர்மனி ஆகிய இடங்களிலும் நேர்மையாகத் தேர்வினை நடத்தி சித்திபெற்றவர்களுக்கான பட்டமளிப்பினையும் அங்கேயே நடத்திக் கௌரவிக்க ஏற்ற ஒழுங்கினை மேற்கொண்டார்.

சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவினை 2010ம் ஆண்டில் வெகு சிறப்பாக யாவரும் பாராட்டத்தக்க வகையில் பொன்விழா மலர் ஒன்றினையும் முதல் வெளியீடாக வெளியிட்டு கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்திலே திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிகர் முன்னிலையில் நடத்த சகல ஒழுங்குகளையும் நிறைவாகச் செய்து முடித்தபெருமை இவருக்கே உரியதாகும்.

அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும், அடக்கமும் ஒருங்கமைந்த சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமது மேலான, காத்திரமான பங்களிப்பு களைச் செய்து பணியாற்றியுள்ளார். உளத்தூய்மையுடன் விசுவாச மாகச் சைவநீதி விளங்கத் தொண்டாற்றிவருகின்றார்.

சைவசித்தாந்த நெறிவளரத் தற்போது சிறப்பாக கொழும்பில் திருவாவடுதுறை ஆதீன சித்தாந்தப் பயிற்சி மையத்தின் பிரதம விரிவுரையாளராக இருந்து பணிசெய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தமது உடல்நலம் காரணமாக தொடர்ந்தும் எமது சங்கத் தேர்வுப்பணிகளைத் தொய்வின்றி ஆற்றத் தம்மால் இயலா திருப்பதைத் தாமே எடுத்துக்கூறி இவ்வாண்டு தொடக்கம் தேர்வுச் செயலாளர் பதவியில் இருந்து ஓய்வு வேண்டிய போது சங்க உறுப்பினர் அவரை உபதலைவராகத் தெரிவு செய்து அவரின் வேண்டுதலைச் சங்கம் நிறைவேற்றியதுடன் அவரின் சேவையினைத் தொடர்ந்தும் சங்கம் தக்கவைத்துக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச்சான்றோர்களின் தொடர்பு யாவர்க்கும் இன்றியமையாததே. அவ்வகையில் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களுடைய தொடர்பும் சேவையும் என்றும் எம்மனோர்க்குக் கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

# இலக்கியக் களத்தினை இயக்கும் இணையற்ற தலைவர்

திருமதி. இராஜி கெங்காதரன்
ஓய்வு நிலை ஆசிரியர்.
தெல்லிப்பழை கலை இலக்கியகளம்
இணைச் செயலாளர்

வாழ்வின் பல்வேறு கூறுகளிலும் நடைமுறைத் தேவைகளுக்காய் மன்றங்கள் அமைத்துச் செயற்படுவது எமது வாழ்வியல் பண்பாக அமைகிறது. ''நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே'' என்றுரைத்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவர் நக்கீரர் காலத்திற்கு முன்பிருந்தே சங்கங்கள் இருந்தமைக்கான வரலாறு உண்டு. இன்று சமூகச்செயற்பாடு, ஆலயவழிபாடு, இலக்கிய வெளிப்பாடு, விளையாட்டுத் தொழிற்பாடு எனப் பல துறை சார்ந்ததாக மன்றங்கள் அமைகின்றன.

அறிவியலும் மனவியலும் சேர்ந்தே வளர வேண்டும் என்பது அறிஞர் கருத்தாகும். மனதைப் பண்படுத்தி நல்லுணர்வு நிலையை வளர்ப்பது இலக்கியம். மனிதம், மன வளத்தோடு மலர வேண்டுமெனில் இலக்கியத்துறை இலங்கித் திகழ வேண்டும். எனவே இலக்கியத்துறை சார்ந்தோர் இணைந்து மன்றங்களை அமைத்து அருஞ்சேவைகள் செய்து வருகின்றனர். அவ்வாறு அமைக்கப்பட்ட மன்றமே தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களமாகும்.

வலிகாமம் வடக்குத் தெல்லிப்பழைப் பிரதேசம் கலை வளமும் இலக்கியப் பாரம்பரியமும் கொண்டதாகும். அதனை மையமாகக் கொண்டு களம் ஒன்றை அமைக்கும் எண்ணம் கலைப் பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, இலக்கிய வித்தகர் அநு. வை. நாகராசன், இலக்கிய வித்தகர் திருமதி கோகிலா மகேந்திரன் போன்றோரின் உள்ளத்தில் உதித்தது. பிரதேசக் கலை இலக்கிய வாதிகளை ஒன்றிணைத்து 05.04.1986ல் இக்களத்திற்கு விதையூன்றப்பட்டது.

கலை இலக்கியத் துறைகளில் உயர்ந்த இரசனையைப் பேணுதல், தமிழ்மொழி, இலக்கியக் கலை ஆக்கத்திற்காக உழைத்தல், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் நடத்தல், கலை இலக்கிய வாதிகளைக் கௌரவித்தல், புதிய கலை இலக்கிய வாதிகளை வளர்த்தெடுத்தல் போன்ற நோக்கங்களை முன்வைத்துக் களம் இயங்கத் தொடங்கியது.

பேராசிரியர் சு. வித்தியானந்தன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞான சுந்தரம் ஆகிய மூவரையும் காப்பாளர்களாகக் கொண்டு உருவான கலை இலக்கியக் களத்தின் தலைவராக கலாநிதி. நா. சுப்பிரமணியன் அவர்கள் பதவி வகித்தார். இணைச் செயலாளர களாகக் கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களும், திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களும் செயலாற்றினர். பொருளாளர் பொறுப்பை அநு. வை. நாகராஜன் அவர்கள் ஏற்றிருந்தார். களத்தின் அப்போதைய மத்திய குழு உறுப்பினர்களில் ஒருவராகச் சைவப் புலவர், கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் அங்கம் வ்கித்தார்.

அவர் களத்தின் நிகழ்வுகளில் கலந்து கொண்டதோடு அதன் வளர்ச்சிக்காகவும் செயற்பட்டார். பண்மகள் என்ற சஞ்சிகையை அறிமுகம் செய்தார். 'பயணம் தொடர்கிறது" என்ற நாவலின் அறிமுக விழாவில் அறிமுகவுரையைச் சிறப்புற ஆற்றினார். காலஞ் சென்ற நடிகமணி வி. வி. வைரமுத்து நினைவுக் கலந்துரையாடலில் கேட்போர் மனம் நெகிழும் வகையில் நினைவுரையாற்றினார். களத்தின் சார்பில் சங்க நாதம் என்ற நிகழ்வு தொடங்கப்பட்டபோது இவரது மகன் நாவரசனும் பெரும் பங்கு வகித்தார்.

இயல், இசை, நாடகம், ஓவியம் போன்ற பல்வேறு கலைகளை உள்ளடக்கிய களத்தின் செயற்பாடுகளில் பன்முக ஆற்றல் வாய்ந்த இவரது பங்களிப்புச் சிறப்புற அமைந்தது. களத்தின் 27வது நிகழ்வாக ''அரங்கக் கலைஞர் ஐவர்" என்ற நூல் வெளியிடப்பட்டது. அந்த ஐவருள் ஒருவராகச் செல்லத்துரை ஐயா அவர்களும் இடம் பெற்றார். அந்நிகழ்வு அவரது மணிவிழாவாகவும் சிறப்புற நடத்தப்பட்டது.

இக்காலகட்டத்தில் தலைமைப் பதவியை அலங்கரித்த கலாநிதி நா. சுப்பிரமணியன் (விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)

வெளிநாடு சென்றுவிட்ட காரணத்தால் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் ஏகமனதாகத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதன் பின் அவர் ஆற்றிய பணிகள் ஏராளம்.

சைப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள் இயல், இசை, நாடகத் துறைகளில் ஈடுபாடு கொண்டவர். சிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும், பணிபுரிந்தவர்; நேர்மைத்திறத்தாலும். உயர்பண்பாலும், எல்லோரது மனங்களிலும் நிறைந்தவர்; தன்னுடைய கம்பீரமான பேச்சாற்றலால் மக்களைக் கவர்ந்தவர்; நாடகங்களை எழுதுபவராகவும் நடிப்பாற்றல் கொண்டவராகவும் நெறியாள்கை செய்பவராகவும் திகழ்ந்தவர்; நாடக நூல்களையும் சமயநூல்களையும் எழுதியவர்.

இளமை முதற் கொண்டே சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபட்டு உழைத்தவர் ஊரில் சனசமூக நிலையத்தை அமைத்துப் பதினான்கு வயதிலேயே அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றவர். வாசிகசாலை அமைத்து வாசிப்பை ஊக்குவித்ததோடு வீதிப்பஜனை, விளையாட்டுப் போட்டி, என்பவற்றில் இளைஞர்களை ஈடுபடுத்தி வழிநடத்தியவர். இளவாலை இளங்குமரன் கலாமன்றத்தின் தலைவராக இருந்ததோடு ஆலய மன்றங்களிலும் தலைவராகப் பணியாற்றி அவற்றின் வளர்ச்சிக்கு உதவியவர்; இத்தனை சிறப்புக்களும் கொண்ட செல்லத்துரை ஐயா அவர்கள் கலை இலக்கியக் களத்தின் தலைவராய் அமைந்தது பெரும் பேறாகும்.

பல்வேறு நிகழ்ச்சிகள் இவரது தலைமையில் நடந்தேறின. இவரது தலைமையுரைகள், கருத்தாழமும் தெளிவும் கொண்டன வாய்க்காத்திரமானவையாய் பலருக்கும் பயன்தருவனவாய் அமைந்திருப்பன.

**''இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்''**

என்ற குறள்மொழிக்கேற்ப ஏற்றவர்களிடம் தக்கபணிகளை ஒப்படைத்துச் சிறப்புறச் செயலாற்றினார். அவரது இல்லத்தரசியாரும் அவரோடு இணைந்து களத்தின் செயற்பாடுகளில் ஈடுபடுவார். ஐயாவின் கிரியா ஊக்கியாக அம்மையார் விளங்கினார். பல் துறை சார்ந்தோரும் களத்திற்குக் கைகொடுத்தனர்.

நாட்டில் போர் மேகம் சூழ்ந்ததால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், தடை போட்ட போதும், முடிந்த வரையில் களநிகழ்வுகள் நடத்தப்பட்ட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார். சில நிகழ்ச்சிகள் இணுவிலில் நடந்தன. கலை இலக்கியக் களத்தின் பொருளாளர் திரு அநு. வை. நாகராஜன் அவர்களது மணிவிழாவும், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்களது பவள விழாவும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவை.

களத்தின் உறுப்பினர் சிலர் கொழும்பை வந்தடைந்த காரணத்தால், கொழும்பை மையமாகக் கொண்டு களத்தின் நிகழ்வுகள் தொடர வேண்டுமென ஊக்கப்படுத்தினார். களத்தின் முப்பதாவது நிகழ்வாக (06.03.2008) திரு. பொ. கனகசபாபதி அவர்கள் எழுதிய ''மனம் எங்கே போகிறது'' என்ற உளவியற் கட்டுரைத் தொகுதியும், ''திறவுகோல்'' என்ற விஞ்ஞானக் கட்டுரைத் தொகுதியும் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் தலைமையில் வெளியிடப்பட்டன. இந்நூல்கள் காலத்தின் தேவைகள் எனக் கூறினார்.

அடுத்த நிகழ்வாக திருமதி. கோகிலா மகேந்திரன் ''மனம் எனும் தோணி'' என்ற நூல் வெளியீடும் அவரும் மகன் பிரவீணனும் சக்தி தொலைக்காட்சியில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பான ''புத்துணர்ச்சிப் பூங்கா'' என்ற இறுவட்டு வெளியீடும் நிகழ்ந்தன. மனதை ஆற்றுப்படுத்தலின் அவசியம் பற்றியும், வெளியீடுகளின் பயன்பாடு பற்றியும் தனது தலைமையுரையில் சிறப்பித்துக் கூறினார்.

20.12.2008ல் தெல்லிப்பழை சைவப் பிரகாச வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவு விழாவும் ''விழிசைச்சிவம்'' மலர் வெளியீடும் நிகழ்ந்தபோது செல்லத்துரை ஐயா அவர்களால் நினைவுப் பேருரை ஆற்றப்பட்டது. ''வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறியைக் கற்றுத் தந்தவர்'' என நினைவு கூர்ந்தார்.

களத்தின் தொடர் நிகழ்வுகளான அருணோதயா கல்லூரியின் முன்னாள் அதிபரும், களத்தின் மத்திய குழு உறுப்பினருமான திரு. கி. மகேந்திரராஜா அவர்களின் அகவை அறுபது நிகழவும், திருமதி

கோகிலா மகேந்திரனின் சீர்மியச் சிறுகதை நூல் வெளியீடு; இலக்கிய வித்தகர் அநு. வை. நாராசா அவர்களின் பவள விழா - ''கருத்தும் எழுத்தும்'' என்ற நூல் வெளியீடு; சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் நினைவஞ்சலி - சிவத்தமிழ்ச் செல்வம் நூல் அறிமுகம்; என்பவற்றைத் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்.

இன்றைய வாழ்க்கை எதிர்கொள்ளும் சவால்களும், நாட்டுப் பிரச்சினைகள் ஏற்படுத்திய தாக்கங்களும் உளவியல் சார்ந்த நடவடிக்கைகளின் அவசியத்தை உணர்த்தின. எனவே தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தின் மற்றொரு பிரிவாக ''சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையம்'' உருவாக்கப்பட்டது. திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் இம்மையத்தின் முக்கிய புள்ளியாகத் திகழ்ந்தார். மனநல வைத்திய நிபுணர் Dr. சிவதாஸ் அவர்களும் பெருந்துணை புரிந்தார்கள். தெரிவான ஒன்பது பேர் உளவளப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டனர். மையம் சிறப்புறச் செயற்பட ஏற்ற ஆலோசனைகளை வழங்கி ஊக்கமளித்ததோடு செல்லத்துரை ஐயா, தானும் கலந்து கொள்வார்.

தொடர்ந்து வந்த காலங்களில் மிக முக்கிய நிகழ்வுகள் நிகழ்ந்தன. எமது களத்தின் இணைச் செயலாளர் இலக்கிய வித்தகர் திருமதி. கோகிலா மகேந்திரன் ''கொடகே தேசிய இலக்கிய விருது'' பெற்றமைக்கான தேநீராடல் நிகழ்வு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தலைமைதாங்கிச் சிறப்பித்தார்.

களத்தின் ஆரம்ப காலம் முதல் இசை, இலக்கிய, ஓவியத் துறை சார்ந்த பயிற்சிகளைக் களம் நிகழ்த்தி வந்தது. அதன் தொடர்ச்சியாக மேல்மாகாண மாணவருக்கான சிறுகதைப் போட்டி நடத்துவதற்கான செயற்பாடுகளில் பங்குபற்றினார். 'தினக்குரல்' அனுசரணையுடன் நடந்த சிறுகதைப் போட்டியின் பரிசளிப்பு விழாவும், சிறுகதைப்பட்டறையும் 07.02.2010 அன்று நிகழ்ந்தது. பரிசளிப்புத் தொடர்பான ஆலோசனைகளை வழங்கித் தலைமைதாங்கி நடத்தினார். முதல் மூன்று இடங்களுக்கான பணப்பரிசுடன் ஆறுதல் பரிசும் வழங்கப்பட வேண்டும் என்று கூறி, அதன் மூலம் மாணவர் மகிழ வழி செய்தார்.

களத்தின் சிறப்பு நிகழ்வாகத் திருமதி. கோகிலா மகேந்திரன் அகவை அறுபது நிறைவு விழா சோலைக்குயில் ஆற்றுப்படுத்தல் மையத்தில் பயிற்சி பெற்றவர்களுக்கான பட்டமளிப்பு விழா, மனிதநேயச் சட்டத்தரணி மனிதநேயச் சீர்மியர் கௌரவிப்பு என்பன ஒன்றாக ஒரே விழாவாக நடத்தப்பட்டன. இவ்விழாக்களில் தலைமையுரை நிகழ்த்தியதோடு நிகழ்வு சிறப்புறப் பல வகையான உதவிகளைப் புரிந்தார்.

எங்களுடன் உடனிருந்து களத்தின் செயற்பாடுகளுக்கு ஊக்கமளித்த திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் திடீர் மறைவு செல்லத்துரை ஐயா அவர்களைப் பெரிதும் பாதித்தது. சில காலம் அவர் இயக்கம் குன்றியிருந்தார். எனினும் அம்மையாரின் முதலாம் ஆண்டு நினைவு ஒன்றுகூடலை ஏற்பாடு செய்து நிகழ்த்தினார். அன்று அந்நிகழ்வில் ''வாழ்வாங்கு வாழ்தல்'' என்ற நூலை மனைவியாரின் நினைவு நூலாக வெளியிட்டார். மனத்துயரம் வடியாதிருந்தபோதும், மனத்தை உறுதிப்படுத்திக் கொண்டு களத்தின் வெள்ளி விழாச் செயற்பாடுகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அந்நேரம் இணைச்செயலர் திருமதி. கோகிலா மகேந்திரனும் வெளிநாடு சென்று விட்டார். எனினும் வெள்ளிவிழா சிறப்பான முறையில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

வலிவடக்கைச் சேர்ந்த 18 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்குத் தனிப் பிரிவாகவும் ஏனைய யாவரும் கலந்து கொள்ளும் போட்டி வேறாகவும் நடத்தப்பட்டன. பரிசுகளுக்கான நிதி சேகரிப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

முதலாம் இடம் - 10000/-

இரண்டாம் இடம் - 7000/-

மூன்றாம் இடம் - 5000/-

சிறந்த பத்துக் கதைகளுக்கு ஆறுதல் பரிசு 1000/- வழங்கப்பட்டது.

சிறிய குழுவாக இயங்கும் எமது களம் இத்தொகையை பரிசளித்தமைக்கு ஐயாவும் காரணமாவார். யாழ்ப்பாணத்தில் வெள்ளிவிழா நடத்தியதில் ஐயாவின் வகிபாகம் மிகப் பெரிது. யாழ்

மண்ணில் வசிக்கும் களத்தின் உறுப்பினரும் அவரோடு இணைந்து செயற்பட்டனர். 21.07.2012ல் வெள்ளிவிழாவின் போது ஐம்பது வறுமைப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப் பட்டன. இதற்காகத் தலைவர் தானும் ஒரு செயலாளர் போலச் செயற்பட்டார் எனலாம்.

நாடு ஓரளவுக்கு இயல்பு நிலைக்குத் திரும்பியமையும், இணைச் செயலர் திருமதி. கோகிலா மகேந்திரன் நாடு திரும்பி யாழ்ப்பாணத்தில் வசிக்கத் தொடங்கியமையும், களத்திற்கு உத்வே கமாக அமைந்தன. மீண்டும் வடக்கில் களத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள முடிந்தது. 2014ல் நடந்த ஐந்து நிகழ்வுகளில் இரண்டு கொழும்பிலும் ஏனையவை இணுவிலிலும் நடத்தப்பட்டன.

24.03.2013ல் திரு. அருந்தவராஜா (மேழிக்குமரன்) அவர்கள் ஜேர்மனியில் வெளியிட்ட ஆறு நூல்களின் அறிமுகவிழா களத்திளால் நடத்தப்பட்டது. திருமதி. கோகிலா மகேந்திரன் எழுதிய ''புலச்சிதறல் நெஞ்சம்'' என்ற நூலும் கலாநிதி பிரவீணன் மகேந்திரராஜா எழுதிய ''ஏலியன் கதைகள்'' என்ற நூலும் கலை இலக்கியக் களத்தின் வெளியீடாக வெளியிடப்பட்டது.

அமரர் திருமதி. சிவகாமசுந்தரி செல்லத்துரை அவர்களின் நான்காம் ஆண்டு மலராக ஐயாவின் வானொலி உரைகளின் தொகுப்பாக ''இன்பத்தமிழ்'' என்ற நூல் 20.07.2014ல் வெளியிடப்பட்டது. சுமார் ஐம்பது நூல்கள் தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் வெளியீடாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. இவரது நூல்களும் அதில் அடங்குகின்றன.

வடக்கில் செயற்பாடுகளைத் தொடங்குவது என்ற அடிப் படையில் 13.09.2014ல் இணுவிலில் சிறுகதைப்பட்டறை நடத்தப்பட்டது. அதில் சிறுகதை எழுத்தாளர்களே தமது சிறுகதைகளை வாசித்தமை சிறப்பம்சமாக அமைந்தது. 27.12.2014ல் கவிதைப்பட்டறை நடத்தப்பட்டது. 28.12.2014ல் சிறுகதைப்பட்டறையில் நிகழ்த்தப்பட்ட உரைகள் தொகுக்கப்பட்டுச் ''சிறுகதை என்பது'' என்ற நூலாகவும் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்

திரு. செல்லையா சிவசுப்பிரமணியம் அவர்களின் ஜனன நூற்றாண்டு மலராக ''விழிசைச்சிவம்'' என்ற நூலும் வெளியிடப்பட்டன. இந்நிகழ்வுகளுக்கெல்லாம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்து கலந்துகொண்டதோடு, தலைமைதாங்கி தனது காத்திரமான தலைமையுரைகளையும் நிகழ்த்தினார். எல்லைமீறாது, எடுத்துக்கொண்ட பொருளைத் திறமையாக முன்வைக்கும் அவரது சொற்பொழிவுகள் பயனுடையவை; காதில் ரீங்காரமிடுபவை.

பெருமதிப்புக்குரிய சைவப்புலவர், கலாபூஷணம் சு. செல்லத்துரை அவர்கள் எமது தலைவராய் இருக்கும் காரணத்தால் எமது களம் தளர்வின்றி இயங்கும் 2009ம் ஆண்டு புதிய நிர்வாகக்குழு, மத்தியகுழு என்பன அமைக்கப்பட்டபோது இணைச் செயலாளர் ஆக நானும் இணைத்துக் கொள்ளப்பட்டேன். தலைவர் தனது உயர் பண்பின் காரணமாக இணைச் செயலாளர் இலக்கிய வித்தகர், கலாபூஷணம் திருமதி. கோகிலா மகேந்திரன் இங்கு இல்லாத காலங்களில், தானும் ஒரு செயலாளர் போலச் செயற்பட்டு எனக்குப் பல உதவிகள் புரிந்திருக்கிறார்; வழி நடத்தியிருக்கிறார். அதற்காக அவருக்கு நிறைய நன்றிக்கடன் பட்டிருக்கின்றேன். எனக்குப் பிடித்த அவரது கவிதை வரிகளாலேயே அவரை வாழ்த்துகிறேன்.

*'' எவரெவர் எதிலே வல்லார் எவர்க்கெது தகுமென்றாய்ந்து*
*அவரவர்க்கணுக்கராகி அற்புதப்பணிகளாற்றும்*
*இவர்க்கெவர் ஈடாவார்கள் என்று பல்லோரும் போற்றும்*
*தவத்தினிற் பெரியாய் வாழி! சந்ததி தழைக்க வாழி''*

ஆசிரிய மணி அ. பஞ்சாட்சரம் அவர்களுக்கெனச் செல்லத்துரை ஐயா அவர்கள் எழுதிய பாடல் அவருக்கும் பொருந்துகிறது. அவரைத் தலைவராகப் பெற என்ன தவம் செய்து விட்டோம் என நெகிழ்ந்து அவரது பவளவிழா நாளில் மனமார வாழ்த்துகிறோம்.

# ஆன்மீக அறிவு புகட்டும்

# நல்லாசான்

சைவப்புலவர்
செல்லையா நவநீதகுமார்
இயக்குனர்
திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை
சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம்
கொழும்பு.

உலகத்திலே எத்தனையோ பேர் தோன்றுகின்றார்கள். தோன்றிய அனைவரின் வரலாறுகளும் பதியப்படுவதில்லை. மக்கள் மனங்களில் இடம்பெறுவதில்லை. சிலரின் வரலாறுகளே மக்கள் மனங்களிலும், பதிவேடுகளிலும் பதியப்படுகின்றன. இது எப்படிச் சாத்தியமாகின்றது? அவர்களின் வாழ்வும் சொல்லும், செயலும் பலருக்குப் பயன்படும் வண்ணம் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தமையேயாகும்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதில்லார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று. (236)**

என்பார் திருவள்ளுவர்.

ஒருவர் தோன்றும் போதே அதாவது பிறக்கும் போதே புகழுடன் பிறக்க முடியுமா? இதற்கு பரிமேலழகர் தரும் விளக்கம் "புகழ் தோன்றுவதற்கு ஏதுவாகிய குணங்களோடு தோன்றுக" என்பதாகும். புகழ்தோன்றுவதற்கேதுவாகியகுணம் அறிவு இந்த அறிவைப்பிறன் பயன்படும் வண்ணம் பயன்படுத்தியோர் சிலராவர். அவர்களுள் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களும் ஒருவராவார்.

அறிவாகிய ஞானம் இருவழிகளில் பெறப்படும். ஒன்று கலை ஞானம் எனப்படும் நூலறிவு. மற்றயது அனுபவ வழியில் வரும் மெய்ஞானமாகிய அறிவு. இரண்டாவதாகச் சொல்லப்படும் அறிவு அறிஞர்களோடு சேர்ந்து பழகுவதால் ஏற்படும்.

சைவப்புலவர் அவர்கள் சைவசமய சாத்திர தோத்திர நூல்களைக் கற்றுப் பெற்ற அறிவோடு. ஆற்றல் மிக்க புலவர் பண்டிதர்களோடு உடனிருந்து பெற்ற அறிவும் கைவரப் பெற்றவர்.

1960களில் எமது தந்தையார் சைவப்புலவர்மணி, வித்துவான் வ. செல்லையா அவர்கள் சைவப்புலவர் சங்கத் தலைவராக இருந்தபோது சைவப்புலவர் செல்லத்துரை அவர்கள். பணிஅமைப்பாளராக இருந்து திறம்படப் பணியாற்றியவர் அவ்வமைப்பு மூலம் சைவமகாநாடு நடத்தியும், சைவ மகாநாடுகளில் பங்குபற்றியும் அதன்மூலம் பல சைவத் தமிழ் அறிஞர்களோடு கொண்ட தொடர்பாலும் பண்பும் பக்குவமும் வாய்க்கப்பெற்றவர். இவ்வாறு பெற்ற அறிவு, அனுபவ மூலம் இன்று திருவாவடுதுறை ஆதீன சைவத்திருமுறை, சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய (கொழும்பு) த்திலே சிறந்த ஒரு பேராசிரியராயிருந்து போதனை செய்கிறார்.

2010ஆம் ஆண்டு திருவாவடுதுறை ஆதீன 23ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் கொழும்பிலே சைவத்திருமுறை நேர்முகப் பயிற்சி மையத்தினை நடத்தவும், அடியேனை அப்பயிற்சி மைய இயக்குனராக இருக்கவும் பணித்தருளினார். இப் பணிக்குத் தன்னாலான முழு ஒத்துழைப்பையும் வழங்க முன்வந்தார் சைவப்புலவர் அவர்கள். 2010.03.21 அன்று பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்தோம் 24 வகுப்புக்கள் ஓராண்டில் நடத்திச் சான்றிதழும் குருமகா சந்நிதானத்தால் வழங்கப்பட்டது. இதிலே சைவப்புலவரின் பங்களிப்புத்திறம்பட அமைந்திருந்தது.

சைவத்திருமுறைப் பயிற்சியோடு 2011.02.27இல் சைவசித்தாந்தப் பயிற்சியும் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை இவ்விரு பயிற்சிகளும் திறம்பட நடத்தப்பெறுகின்றன. இவ்விரு பயிற்சி நெறியிலும் சைவப்புலவர் அவர்கள் போதனை செய்கின்றார். பயிலுனர் சலிப்படையாவண்ணம் விரும்பி ஆர்வத்தோடு இருந்து பயிலும் விதமாக இவரின் கற்பித்தல் முறை அமைந்திருக்கும். அறிவிலே புலமையுடையவர்களாயிருந்தாலும் தமது அறிவை பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் சொல்வதில் வல்லவராய் எல்லோரும் இருப்பதில்லை. சைவப்புலவர் அவர்கள் தான் பெற்ற அறிவை பிறர் புரிந்துகொள்ளும் - அவர்கள் மனதில் பதியும் வண்ணம் இலகுபடுத்திச்

சொல்வதில் வல்லவர். தன்னிடம் கற்பவர்கள் கற்றலோடு நின்று விடாது. கற்றவழியில் நிற்க வேண்டும் என்றும் கண்டிப்பாய்க் கூறுபவர்.

போதனையோடு சாதனையும் வேண்டும் என்பதற்கமைய பயிற்சி மையத்தால் திருத்தல யாத்திரை அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் என்பன நடத்தப்படுகின்றன.

இலங்கை இந்திய திருத்தல யாத்திரையின் போது இதில் பங்குகொள்வோர் இத்தலங்களைப் பற்றி முழுமையான அறிவு பெற வேண்டும் என ஆலய வரலாறுகளைச் சொல்லி தெளிவுபடுத்தியும், அவ்வாலயத்தின் மீது பாடப்பெற்ற பதிகங்களைத் தொகுத்து நூலாக்கி அவ்வத்தலங்களில் பாராயணம் செய்யும் வண்ணம் வழிகாட்டியும் சைவப்புலவர் செய்யும் பணி சிறந்ததொன்றாகும்.

சாதனாநெறியில் மற்றொன்று அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் சைவப்புலவரின் வழிகாட்டலில் ஒவ்வொரு மாதமும் வரும் பூரணை போயாதினத்தில் இரத்மலானை திருநந்தீஸ்வரம் சிவன் கோயிலிலே இந்நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இது பண்ணொன்ற இசை பாடலாக பங்குகொள்வோர் பயனடையும் விதத்தில் அமைந்துள்ளது.

ஒருவருடைய போதனை பிறருக்கு வழிகாட்டியாய் அவர்கள் ஏற்றுக் கொள்வதாய் அமைவதற்கு போதிப்பவரின் வாக்கும் வாழ்வும் மற்றும் சொல்லும் செயலும் ஒரு தன்மையாய் அமைய வேண்டும். இப் பண்பு சைவப்புலவரிடம் அமைந்திருத்தலால் அவருடைய போதனை, சொற்பொழிவு மக்களிடம் நன்கு பதிந்துள்ளது.

இவரது சேவை என்றும் சைவத்தமிழ் மக்களுக்குப் பயன்தர வேண்டும் என்றும் உடல் உள நலத்துடன் இன்னும் பல்லாண்டு இவர் சேவை தொடர வேண்டும் என்றும் திருவருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே''

## மங்கலமான மனைமாட்சி உடைய

## சைவப்புலவர் செல்லத்துரை சிவகாமசுந்தரி தம்பதியர்

கா. வைத்தீஸ்வரன்
கௌரவ செயலாளர்
சுகவாழ்க்கைப் பேரவை

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்*
*நன்கலம் நன்மக்கட்பேறு - திருக்குறள் 60.*

*கருத்துரை*

*மனையாளின் பெருமை குடும்பத்தின் பெருமை. அதற்கு அணிகலன் போன்றது நன்மக்களைப் பெறுதல் (புலவர் இரா. இளமுருகனார்)*

இக்குறளுக்கு இலக்கணம் வகுத்தாற்போல் கலாபூஷணம் சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்களின் வாழ்க்கை சகல துறைகளிலும் சிறப்பாக அமைந்தது எனக்குறிப்பிடல் சாலப்பொருந்தும்.

திருமதி. செல்லத்துரை அவர்கள் கணவனுக்குத் தகுந்த மந்திரியாகவும் வழிகாட்டியாகவும் வருவாய்க்குத் தக்கதாக நிறை வாழ்க்கையைக் கட்டமைத்துக் குடும்பத்திற்குத்தக்க பெருமையையும் தேடிக்கொடுத்தார். அதேபோலத் திருமதி. செல்லத்துரை அவர்கள் தலைசிறந்த கணவனைப் பெற்றதால் அவர்தம் குடும்ப உறவு தெய்வ வாழ்வினதாக அமைந்தது எனக் கூறுதல் பொருத்தமாகும். சைவப்புலவர் அவர்கள் தலைசிறந்த ஓய்வுபெற்ற அதிபர். கண்டிப்பான நிர்வாகி, ஆளுமைமிக்க சைவச்சான்றோன் மாத்திரமன்றி சிறந்த நாடக ஆசிரியர், தயாரிப்பாளர், நடிகர் எனப்பலவழிகளிலும் சிறந்து விளங்குகின்றார்.

இக்கடமைகள் யாவையும் சிறப்புற அமைத்துச் செயற்படுத்து வதற்குத் திருமதி. செல்லத்துரை பக்கபலமாக முன்நிற்பார். இவ்விதம் செயற்பட்டு இல்லற வாழ்வு செழிப்புற இல்லத்து அரசியாகவே வாழ்ந்தார். திரு. செல்லத்துரை அவர்களின் தலைமைத்துவப் பண்பு மிக உயர்வானது. யார் பிழைவிடினும் நயம்படச் சுட்டிக்காட்டி அதேநிலை மீண்டும் ஏற்படாது செயற்படுவார். அவர் பங்கு கொள்ளும்

சகல நிகழ்வுகளிலும் பேச்சைச் செவிமடுப்பதற்கு எனச் சிறப்பான சமூக அமைப்புக் காத்திருக்கும். இடம்பெயர்ந்து தலைநகர் கொழும்பில் சீவிக்கும் நிலமைக்குத்தள்ளப்பட்டோம்.

பிறந்தமண்ணில் பெருமைப்பட வாழ்ந்ததுபோலக் கொழும்பிலும் திருவாவடுதுறை ஆதீன சித்தாந்த வகுப்பு பண் இசை வகுப்பு கொழும்பு தமிழ்ச் சங்கப் பட்டயக்கற்கை நெறி முதலானவைகளைத் திறம்பட நடாத்தும் பெருமைக்குரியவராகச் சைவப்புலவர் திகழ்கின் றார். மேலும் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கச் பரீட்சைப் பொறுப்பாளராகவும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகச் செயற் பட்டுவருகிறார்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றாலும் தமது ஓய்வு நேரத்தை சமய, சமூக ஆரோக்கிய மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றுபவர் கலாபூஷணம் திரு. செல்லத்துரை அவர்களே யாவர் கடந்த வருடம் சுகவாழ்க்கைப் பேரவையை ஆரம்பித்தோம். அதன் தலைமைப் பொறுப்பை ஏற்றுப் பல சுகாதார அபிவிருத்தி முயற்சிகளை கொழும்பு மாவட்டத்தில் மாத்திரமல்ல. ஏனைய மாவட்டங்களிலும் திட்டமிட்டுச் செயலாற்றுவதற்கு வழிநடாத்தும் பெருமைக்குரியவராகத் திகழ்கிறார்.

அகில இலங்கை ரீதியான ஆரோக்கிய வாழ்வுக்கட்டுரைப் போட்டி, சமூகநலப்பணியாளர் பயிற்சிநெறி, மூத்தோர் பராமரிப்பு நிறை உணவு பெற வழிகாட்டல். இருக்கும் வசதிவளங்களுக்கமைய ஆற்றுப்படுத்தல் வழிகாட்டல் சேவையை முன்னெடுப்பதற்கு முன்நின்று உழைக்கும் பெருமைக்குரியவராவர். மேலும் சுகவாழ்க்கை காலாண்டுச் சஞ்சிகை வெளியிடுவதற்கு அதன் பிரதம வழிகாட்டியாக செயற்பட்டுவருகிறார்.

"நீர் யாருடன் சேர்கிறீர் அதுவாவீர்" என்பது முதுமொழி இவ்வாக்கி யத்திற்கு அமைய இக்குடும்பத்தாருடன் இணங்கிவாழும் பெருமைக்கு ரியவன் என்பதில் மட்டற்ற திருப்தியடைகிறேன்.

தனது துணைவியின் நினைவுநாளில் ஆண்டுதோறும் பயனுடைய நூல்களை வெளியிட்டு மனைவியைக் கௌரவப் படுத்திவரும் சைவப்புலவர் ஐந்தாவது ஆண்டிலும் இந்த நூலை அவருக்குக் காணிக்கையாக்குவது செயற்கரும் செயலே.

## நூலாக்கங்கள்

1. **கலைவாணி இசைப்பாடல் – 1968**

சரஸ்வதியின் மீது பாடப்பட்ட கீதங்களும், விருத்தங்களும் அடங்கிய நூல்

*– இணுவில் இசைநடன கிராமியகலைக்கல்லூரி வெளியீடு.*

2. **காரைக்கால் வரலாறும் திருவூஞ்சலும் – 1969**

இணுவில் காரைக்கால் சிவன்கோயிலின் வரலாறும் விசாலாட்சியம்பாள் சமேத விஸ்வநாதசிவன் மேல் பாடப்பட்ட திருவூஞ்சலும் அடங்கிய நூல்.

*– இணுவில் இசைநடன கிராமியகலைக்கல்லூரி வெளியீடு.*

3. **சித்திரத் தேரில் சிவகாமியம்மை – 1978**

இணுவில் கிழக்கு சிவகாமியம்மன் கோயில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டத்தின் போது தேர் மகத்துவத்தைப் பொருளாகக் கொண்டு தெம்மாங்கு நடையில் படைக்கப்பட்ட நூல்.

*– தேர்த்திருப்பணிச்சபை வெளியீடு.*

4. **கோலங்கள் ஐந்து – நாடகநூல். ஐவரில் ஒருவர் – 1993**

5. **வள்ளல் ஏழூர் – சிந்துநடைக்கூத்து –1997**

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய நிறுவுநர் ஏழூர் இராசரத்தினம் அவர்களது உண்மை வரலாற்றைச் சித்தரிக்கும் சிந்துநடைக் கூத்துநூல். ஆண்டுதோறும் நிறுவுநர் நினைவுநாளில் ஆடப்படுகிறது.

*– பாடசாலை வெளியீடு.*

6. **ஆனந்தமாலை –1999**

இளவாலை ஒல்லுடை ஞானவயிரவர் கோயில் கும்பாபிஷேகத்தின்போது சுவாமியை வலம்வந்து பாடி வழிபடும் வகையில் பாடப்பட்ட நூல்.

*– ஆலயபரிபாலன சபை வெளியீடு.*

7. **வாக்கும் வாழ்வும் – 1999**

இலங்கை வானொலியில் பேசப்பட்ட தமிழ் இலக்கிய, சைவசமயப் பேச்சுக்களும் நற்சிந்தனைகளும் அடங்கிய நூல்.

8. **மங்கல மனையறம் – 1999**

மூத்தமகன் நாவரசனின் திருமண நினைவு அன்பளிப்பாக திருக்குறளில் சொல்லப்பட்ட இல்லறவியல் கருத்துக்களை முன்வைத்து எழுதப்பட்டது.

## 9. கோமாதா – 1999,2005

பசுக்குலத்தைப் பற்றிய தகவல் தொகுப்பு நூல்.

– *தாயார் பத்தினிப்பிள்ளை சுப்பிரமணியம் நினைவாக வெளியிடப்பட்டது. 3 பதிப்புக் கண்டது.*

## 10. மங்கலத் திருமணம் – 2007

இளையமகன் மாவிரதனின் திருமண அன்பளிப்பாக திருமணச் சடங்குமுறைகளின் விளக்க நூலாக அமைந்தது.

## 11. அரங்கப்படையல் – 2007

உரை நாடகம், இசை நாடகம், லய நாடகம், நாட்டிய நாடகம், சிந்து நடைக்கூத்து, வில்லுப்பாட்டு முதலானவற்றைக்கொண்ட முத்தமிழ் நூல்.

– *தெல்லிப்பழைக் கலைஇலக்கியக்கள வெளியீடு*

## 12. அண்ணா பொன்னேடு – 2009

இணுவில் அண்ணா தொழிலகத்தின் ஐம்பதாண்டு வரலாற்றைக் கூறும் நூல்.

– *அண்ணா தொழிலகப் பொன்விழா வெளியீடு.*

## 13. சிவநெறி – சைவநெறிப் பாடநூல் – 2009

ஐரோப்பாவில் வாழும் முதலாம் வகுப்பு முதல் 12 வகுப்பு மாணவர்கள் வரை கற்பதற்குரிய சைவசமயப் பாடநூல்.

– *ஐரோப்பிய சிவநெறிக் கழக வெளியீடு.*

## 14. ஆன்மவிடுதலை வழிபாட்டு மலர் – 2010

துணைவியார் சிவகாமசுந்தரியின் அந்தியேட்டித் தினத்தில் திருமுறைகளில் நிலையாமை பற்றிக் கூறும் பாடல்களின் தொகுப்பாக வெளியிடப்பட்டது.

## 15. பண்பாட்டுக் கோலங்கள் – 2010

சைவத் தமிழ் மக்களின் பண்பாட்டுச் சடங்குகள் பற்றிய விளக்க நூல்.

– *வயாவிளான் செ.பத்மநாதன் நினைவாக வெளியிடப்பட்டது.*

## 16. வாழ்வாங்கு வாழ்தல் – 2011

வாழும்வழி, வாழ்ந்த வழி எனும் இருபகுதிகளைக் கொண்டநூல். துணைவியார் சிவகாமசுந்தரியின் முதலாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட அவரது வரலாற்றுடன் கூடிய நூல்.

## 17. சிவகாமி தமிழ் – 2012

துணைவி சிவகாமசுந்தரியின் இரண்டாவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட பன்முகக் கவிதைகள் கொண்ட நூல்.

## 18. இலக்கிய இன்பம் – 2013

துணைவியார் சிவகாமசுந்தரியின் மூன்றாவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்ட வானொலிப் பேச்சுகள் அடங்கிய நூல்.

## 19. இன்பத்தமிழ் –2014

துணைவியார் சிவகாமசுந்தரியின் நான்காம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது. வானொலி இலக்கிய சைவசமய, நற்சிந்தனைப் பேச்சுக்களின் தொகுப்பு.

## 20.வாடாமல்லிகை – 2015

இணுவில் அண்ணா தொழிலகத்தின் இன்னல்களும் எழுச்சியும் பற்றிய விவரண நூல்.

– *அண்ணா தொழிலக வெளியீடு.*

## 21. சைவப்புலவர் செல்லத்துரையின் கலையும் வாழ்வும்

துணைவியார் சிவகாமசுந்தரியின் ஐந்தாம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது. சைவப்புலவரின் கலைப்படைப்புகளுடன் அவரைப் பற்றிய பன்முகப் பார்வை நூல்.

– *தெல்லிப்பழைக் கலைஇலக்கியக்கள வெளியீடு.*

# *உரை எழுதிய நூல்கள்*

## 1. கல்வளை அந்தாதி உரைவிளக்கம் – 2002

நல்லூர்ச் சின்னத்தம்பிப் புலவரால் பாடப்பட்ட கல்வளை அந்தாதி எனும் யமக அந்தாதி நூலுக்கு முன்னே எழுதப்பட்ட உரைக்கு இலகு நடைவிளக்கமும், அருஞ்சொற் பொருளும் எழுதப்பட்டது.

– *ஆலய பரிபாலனசபை வெளியீடு.*

## 2. ஆண்டிகேணி ஐயனார் புராண உரை – 2008

பண்டிதர் க.மயில்வாகனம் அவர்களால் பாடப்பெற்ற காரைநகர் ஆண்டிகேணி ஐயனார் புராணத்துக்கு கலாநிதி. பண்டிதர் க.வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் விருப்பத்திற்கிணங்க உரை எழுதப்பட்டது.

– *காரைநகர் மணிவாசகர் சபையால் வெளியிடப்பட்டது.*

## 3. திருமுறை அமுதம் – 2011

பஞ்சபுராணத் தொகுப்புடன் கூடிய திருமுறைப் பாடல்களுக்கு எழுச்சி வேந்தர் ஆர்.எம்.நாகலிங்கம் அவர்களின் வேண்டுகோளின் பேரில் உரையெழுதி வெளியிடப் பட்டது.

## 4. பஞ்சபுராணத் தொகுப்பு – 2012

பஞ்சபுராணத் தொகுப்புக்கள் பத்தினைத் தெரிவு செய்து அவற்றுக்கு உரைவிளக்கம் எழுதப்பட்டது.

*–லேக்கவுஸ் இந்துமன்றம் வெளியிட்டது.(5000 பிரதிகள் நாடெங்கும் வழங்கப்பட்டன.)*

### 5. சைவசமய வாழ்வியல் பேணுவோம் – 2013

பல்வகைத் தோத்திரப்பாடல்களுக்கு எழுதப்பட்ட உரையுடன் பலகட்டுரைகளையும் எழுதித் தொகுக்கப்பட்ட நூல்.

– *எழுச்சிவேந்தர் ஆர்.எம். நாகலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது.*

## *பண்டிதர் சி.அப்புத்துரையுடன் சேர்ந்து எழுதிய நூல்கள்*

### 1. தொடக்கும் தொடர்பும் – 1998

சைவசமயத்தவர் வாழ்வில் பிறப்பு, இறப்புக் காரணமாக ஏற்படும் துடக்குப் பற்றிய விளக்க நூல்

### 2. அபரக்கிரியை விளக்கம் – 1999

மனிதர் இறந்த பின் செய்யப்பட வேண்டிய கருமங்கள் பற்றிய விளக்க நூல்

### 3. திருமணக்கிரியை விளக்கம் – 2000

சைவசமயத்தவரின் திருமணம் தொடர்பான கிரியைகளின் விளக்க நூல்.

### 4. மனித வாழ்வில் மங்கல கருமங்கள் – 2006

மனித வாழ்வில் நிகழும் குழந்தை பிறப்பு தொடக்கம் பல்வேறு காலகட்டங்களிலும் நிகழவேண்டிய மங்கல கருமங்கள் பற்றிய விளக்க நூல்.

## *மலராசிரியராக முக்கிய பங்கு கொண்டு உருவாக்கிய மலர்கள்*

### 1. மெய்கண்டான் பொன்மலர் – 1978

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயப் பொன்விழாவின் போது வெளியிடப்பட்டது. அதிபராயும் மலராசிரியராயும் பங்களிப்பு.

### 2. காங்கேயன் கல்வி மலர் – 1985

காங்கேசன்துறை வட்டாரத்திலுள்ள 51 பாடசாலைகளின் வரலாற்றையும் 13 ஆய்வுக்கட்டுரைகளையும் உள்ளடக்கிய மலர்.

வட்டாரக்கல்வி அதிகாரி பொ.சிவஞானசுந்தரம்பிள்ளை அவர்களின் வழிகாட்டலில் உருவான வரலாற்றுமலர்.

### 3. மெய்கண்டான் பவள மலர் – 1997

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலய பவளவிழாவின் போது வெளியிடப்பட்ட மலர்.

## 4. நகுலேஸ்வரகுரு மலர் – 2000

கீரிமலை நகுலேஸ்வரத்தின் ஆதீனகர்த்தாவும், பிரதம குருவுமான ராஜராஜசிறீ கு.நகுலேஸ்வரக் குருக்களின் பவளவிழாவில் வெளியிடப்பட்ட வரலாற்று மலர்.

## 5. சைவபுலவர் சங்க வரலாறும் – புலவர் வரலாறும் – 2000

## 6. நித்தியகல்யாணி பொன்மலர் – 2002

காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் பொன்விழாவில் வெளியிடப்பட்டது.

## 7. சித்தாந்த ஞானக்களஞ்சியம் – 2002

ஏழாலை இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு.கந்தையா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது.

## 8. வலிவடக்குப் பிரதேச மலர் – 2002

வலிகாமம் வடக்கிலுள்ள சகல வளங்களையும் புள்ளிவிபரங்களுடன் காட்டும் வரலாற்றுமலர். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டது.

## 9. கந்த பவள மலர் – 2005

யாழ்.சைவபரிபாலனசபைத் தலைவராயும் அ.இ.சைவப்புலவர்சங்கத் தேர்வுச் செயலாளராயுமிருந்த சைவப்புலவர் வ.கந்தசாமி அவர்களது பவளவிழாவில் வெளியிடப்பட்டது.

## 10. செந்தூர மலர் –2007

கலைநகர் சித்தங்கேணியைச் சேர்ந்த சிற்பாசாரியார் சீனிவாசகம் செந்தூர்ராசா அவர்கள் கலாபூஷண விருது பெற்றமையைப் பாராட்டி வெளியிடப்பட்டது.

## 11. சைவநாதம் பொன்மலர் – 2010

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவில் கொழும்பில் திருவாவடுதுறை ஆதீன 23வது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாசசுவாமிகள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

## 12. எழுச்சிப்பாதை – 2013 (தொகுப்பு நூல்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம் சார்பில் எழுச்சி வேந்தர் ஆர்.எம். நாகலிங்கம் அவர்களால் வெளியிடப்பட்டது.

## இணைந்து பணி செய்த சமய சமூக நிறுவனங்கள்

1. **இளவாலை - காடவளை இந்து இளைஞர் ச. ச. நிலையம் - 1952 - இன்று வரை**
   1952இல் ஸ்தாபகத் தலைவராகி பின் போஷகராகி 2002இல் பொன்விழாவும் கண்டமை

2. **மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கம்** - 1960 - 1968
   செயலாளராயிருந்து கூட்டுப்பிரார்த்தனை, குருபூசைகள், சமய விழாக்கள், நாடக மூலம் நிதி திரட்டிக் கட்டிடம் அமைத்தல்.

3. **இளவாலை இளங்குமரன் கலாமன்றம்** - 1960 - 1970
   மன்றத்தை ஸ்தாபித்து நெறியாளராய் நாடகங்கள் மேடையேற்றியமை

4. **அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம்** - 1964 - இன்று வரை
   செயற்குழு உறுப்பினராயும், பணி அமைப்பாளராயும், உபதலைவராயும், தேர்வுச் செயலாளராயும், தற்போது உபதலைவராயும் இருந்து பணி செய்தல்.

5. **தெல்லிப்பழை வடமேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம்** - 1974 - 1982
   செயலாளராயிருந்து மெய்கண்டான் வீதி அகட்டி பஸ் ஓடச் செய்தமை

6. **ஒல்லுடை ஞானவயிரவர் ஆலய பரிபாலன சபை** - 1980 - இன்று வரை
   செயலாளராயும், தலைவராயும் தற்போது போசகராயும் இருந்து திருப்பணி செய்து மகா கும்பாபிசேகம் கண்டமை.

7. **கீரிமலை சிவநெறிக் கழகம்** - 1975 - 1982
   பணி அமைப்பாளராயிருந்து தொண்டு பல செய்தமை

8. **தெல். வடமேற்கு சமாதான நீதிச்சபை** 1982 - 1990
   செயலாளாரயிருந்து ஊர்ப்பிணக்குகள் தீர்த்தமை.

9. **தெல்லிப்பழைக் கலை இலக்கியக் களம்** - 1986 - இன்று வரை
   மத்திய குழு உறுப்பினராயிருந்து தற்போது தலைவராகப் பணி

10. **வலிவடக்கு கலாசாரப் பேரவை** 1998 - 2007
    செயற்குழு உறுப்பினர், உபதலைவர்

11. **அகில இலங்கைத் திருமுறை மன்றம்** - 1997 - 2006
    செயற்குழு உறுப்பினர், உபதலைவர்

12. **கொழும்புத் தமிழ்ச்சங்கம்** - 1997 - இன்று வரை
சாதாரண உறுப்பினர், உபபோஷகர், பட்டயக்கற்கை நெறி விரிவுரையாளர்

13. **பசுக்கள் இடங்கள் பாதுகாப்புச் சபை** - 1999 - 2006
தலைவர்

14. **யாழ். சைவ பரிபாலனசபை** - 1998 - 2005
செயற்குழு உறுப்பினர், உபதலைவர், வளவாளர்

15. **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தர்ம பரிபாலன சபை** - 1998 - 2006
செயற்குழு உறுப்பினர்

16. **இந்து சமய கலாசாரத் திணைக்களம்** - 2007 - இன்று வரை
வளவாளர்

17. **திருவாவடுதுறை ஆதினக் கொழும்புப் பயிற்சி மையம்** - 2010 - இன்று வரை
திருமுறை, சைவசித்தார்ந்த விரிவுரையாளர்

18. **வெள்ளவத்தை ஓம் கிரியை பாபாஜி ஆரண்யம** - 2012 - இன்று வரை திருமந்திர விரிவுரையாளர்

19. **சுகவாழ்க்கைப் பேரவை** 2013 இன்று வரை - தலைவர்

20. **பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட அதிபர் சங்கம** - 1993 - 1998
தலைவர்

21. **யாழ். கல்வித் திணைக்கள வளவாளர** - 1975 - 2005

22. **ஏழாலை கலாநிதி பண்டிதர் மு. கந்தையா நூல் வெளியீட்டுக் கழகம்** செயலாளர் - 1999 - இன்று வரை

23. **யாழ். ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கம** - 2008 - இன்று
செயற்குழு உறுப்பினர் - கொழும்பு இணைப்பாளர்

## பங்குபற்றிய ஒலி, ஒளிபரப்புக்கள்

1. இலங்கை வானொலி - இலக்கியப் பேச்சு, சைவப்பேச்சு, நற்சிந்தனை - திருமந்திர விளக்கம்
2. இலங்கை நேத்திரா தொலைக்காட்சி - நேர்காணல், கருத்தாடல்
3. இலண்டன் ஐ.பி.சி - சொற்பொழிவு, கருத்தாடல், நற்சிந்தனை
4. இலண்டன் தமிழ் வானொலி - நேர்காணல்
5. இலண்டன் வெற்றோன் தொலைக்காட்சி - நேர்காணல்
6. இலண்டன் தீபம் தொலைக்காட்சி - நேர்காணல், கருத்தாடல்

சைவப்புலவர் செல்லத்துரை ஐயா அவர்களின்

கல்விப் பரிமாணங்களும்

கல்வி வகிபாகங்களும்

பன்மை நிலைகளைக் கொண்டுள்ளன.

என்றும் கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்

என்றும் கற்பித்தலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நல்லாசிரியர்,

தாம் பொறுப்பேற்ற கல்வி நிலையங்களை

உச்ச நிலைகளில் எழுச்சிபெறச் செய்த

ஆற்றல் மிக்க அதிபர்,

மாணவர்க்கு ஆற்றுப்படுத்தலை வழங்கும் சீர்மியர்,

சமூகநோக்கும் அழகியல் நோக்கும் கொண்ட

நாடக எழுத்துரு வழங்குனர்,

நெறியாள்கை செய்பவர்,

தயாரிப்பாளர், நடிகர்,

தமிழை வளஞ் செய்யும் பேச்சுக் கலைஞர்,

வானொலி உரைஞர், சைவப் பண்பாட்டை

வினையாற்றலுடன் நிலை நிறுத்தும்

சைவப்புலவர் சங்கத்தின்

செயற்பாடுகளை முன்னெடுப்பவர்,

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின்

பட்டயக் கற்கை நெறியின் விரிவுரையாளர்

என்றவாறு பன்முக ஆற்றல்களுடனும்

பரிமாணங்களுடனும்

தம்மை நிலை நிறுத்திக் கொண்டவர்.



பேராசிரியர் சபா.ஜெயராசா